குழந்தை இயேசுவின்

# புனித தெரேசாளின்

## அறிவுரைகளும நினைவலைகளும்



தமிழாக்கம் :

சகோதரி மரிகிரோசியா

கர்மேல் மடம், புதுவை.



REV. MOTHER. CAROLINE OF
JESUS MARY, O. C. D.

# காணிக்கை

இயற்கை எழில் கொஞ்சும் திருநகராம் பெல்ஜியத்தில் தோன்றிக் கர்மேல் கன்னியர் மடம் சேர்ந்து சப்பான் நாட்டில் சிலகாலம் மறைப்பணியாற்றி இந்தியநாடு போந்து, வெம்மை விரவிய வேதபுரியாம் புதுவைக் கர்மேல் கன்னியர் மடம் புகுந்து, தாய்மைப் பொறுப்பேற்று, கடமையுணர்ச்சியும், கருதியது முடிக்கும் பேராற்றலும் கொண்டு, எங்களை அன்பும் பாசமும் பின்னிப் பிணைந்த நட்புறவோடும், பரிவோடும் இறைவழி நடத்தி வந்த அன்புத் தாயார் அவர்களின் 50 ஆம் ஆண்டு நிறைவு விழா, பொன் விழாவின் நினைவாக இச்சிறு மலரை அவர்களுக்கு நன்றிக் காணிக்கையாக அர்ப்பணிப்பதில் பெருமையும் மகிழ்வும் கொள்கின்றோம்.

அன்னையே! நீவிர் நீடூழி வாழி

இங்ஙனம்

கர்மேல் தாயார் அவர்களும் கன்னியர்களும்

பாண்டிச்சேரி

16-7-90

# முன்னுரை

குழந்தை இயேசுவின் புனித தெரேசாள் உள்ளங்களை ஈர்க்கும் புனிதை. "உலகிற்கு நன்மை செய்வதிலேயே என் விண்ணைக் கழிப்பேன்" என்று வாக்குறுதி கூறிய தெரேசாள், ஓயாமல் மக்களுக்கு நன்மை செய்து கொண்டே வருகின்றாள்.

தெரேசாள் திருச்சபையில் மிகுந்த அன்பும் செல்வாக்கும் பெற்று விளங்குவதன் முக்கியக் காரணம் அந்த இளம் கன்னிகையின் உள்ளம் இறைவனுக்குத் தன்னையே முற்றும் உரிமையாக்கிக் கொண்ட உள்ளம் என்ற உண்மைதான். அவளுடைய உள்ளம் இறைவனோடு ஒன்றியிருந்ததை அவளோடு உரையாடினவர்களும் தொடர்பு கொண்டவர்களும் நன்கு உணர்ந்தார்கள். "எம்முடன் உரையாடுகையில் பன்முறை அவள் தன் உள்ளத்தை இறைவன்பால் எழுப்புவாள். இந்த அக எழுச்சியை நான் பன்முறை கண்ணுற்றிருக்கிறேன்" என்று அவளைக்குறித்து ஒரு கன்னிகை சான்று கூறியிருப்பதை இந்த நூலில் படிக்கலாம். இந்த "அக எழுச்சி" அவள் இறைவனின் சன்னிதான உணர்வில் இடையறாது வாழ்ந்து வந்தாளென்பதை நமக்குக் காட்டுகின்றது. இன்றைய நாகரீக உலகின் பராக்குகளில் மூழ்கித் திளைத்து வாழ்பவர்களுக்கு அவளுடைய வாழ்க்கை ஒரு சவாலும் எடுத்துக்காட்டுமாகும்.

"தந்தையே விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவர்க்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் போற்றுகிறேன்" என்ற (மத். 11:25) இயேசுவின் மன்றாட்டுக்கு ஏற்றவாறு இறைவன் தம் அன்பின் மறைபொருளைக் குழந்தை

இயேசுவின் தெரேசாளுக்கு வெளிப்படுத்தியதை இந்த நூலில் பரக்கக் காணலாம். அவளிடம் விளங்கிய தாழ்ச்சி, மன எளிமை, நம்பிக்கை, குழந்தைக்குரிய நேர்மை ஆகிய பண்புகளை எடுத்துக்காட்டும் நிகழ்ச்சிகளை, இந்த நூலில் படிக்கும் பொழுது நாம் மனநெகிழ்வு அடைகிறோம்.

"ஓர் ஆன்மாவின் வரலாறு" என்னும் அவளது வாழ்க்கை வரலாற்றை நாம் வாசிக்கும் பொழுது, தெரேசாளின் உள்ளத்தின் துறவுணர்வையும், தியாக ஆர்வத்தையும், ஆன்ம ஈடேற்ற ஆவலையும் கண்டு நாம் வியப்படைவோம். இன்னும் 24 வயது அடையாத அந்த இளம் பெண் உலகை முற்றும் துறந்து, தம் தெய்வீக மணாளனின் அன்பில் தோய்ந்து திளைக்கும் காட்சி நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். அந்த நூலில் விடப்பட்ட பற்பல இனிய நிகழ்ச்சிகள் அறிவுரைகள் தெரேசாளின் அன்புக்குரியவர்களின் மனதில் நீங்காத நினைவாகக் காட்சியளித்தன. அவர்கள் இந்நூலின் வாயிலாக அவற்றை நம்மோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

இந்த நூலை நாம் வாசித்துத் தியானிக்கும்பொழுது, நம் ஆன்மா இறை அனுபவம் பெற்று இன்புறும். இந்த வாய்ப்பு தெரேசாளின் பக்தர்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தாகுக.

**அருந்தமிழடிகள் மறைத்திரு. பி.பி. சேவியர்**

**புதுவை**

**14-7-1990**

# 1

# ஆயத்த மடத்துத் தலைவி

1893 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் நாள், லிசியே கர்மேல் மடத்தில் தலைவியாகப் பதவியேற்ற இயேசுவின் சங்.ஆக்னேஸ் தாயார் இதுவரை தலைவி பொறுப்பை வகித்த மரி கொன்சாகா தாயாரை ஆயத்த மடத்துத் தலைவியாக நியமித்தார். சில நாட்களுக்குப்பின், 20 வயதே நிரம்பிய குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரியின் அறிவையும் புண்ணியங்களையும் நற்பண்புகளையும் மற்றனைவரையும் விட நன்கு அறிந்திருந்த ஆக்னேஸ் தாயார், தன் உடன் வாழும் சகோதரிகளை மறைமுகமாகக் கவனித்து, அவர்களது உளப்பாங்கை அறிந்து தக்க ஆலோசனைகள் வழங்கி, துறவற வாழ்விற்கு அவர்களை உருவாக்குமாறு அவளைக் கேட்டுக்கொண்டார்.

அவ்வமயம், ஆயத்த மடத்தில் இயேசுவின் மார்த்தாள் சகோதரியும், சற்பிரசாதத்தின் மரிமதலேன் சகோதரியுமாக இரு துணை சகோதரிகள் மட்டுமே புனிதையுடன் இருந்தனர். பின் திரித்துவத்தின் மரி சகோதரியும் (16 ஜூன் 1894) திருமுகத்தின் ஜெனவியேவ் சகோதரியும் (14 செப்டம்பர் 1894) மாமன் மகளாகிய சற்பிரசாத மரி சகோதரியும் (15 ஆகஸ்ட் 1895) அடுத்தடுத்து லிசியே கர்மேலுக்கு வந்து இவர்களுடன் இணைந்து கொண்டனர்.

1896 ஆம் ஆண்டு மார்ச் 21 ஆம் நாள் கொன்சாகா மரிதாயார் மீண்டும் மடத்துத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இப்பொறுப்புடன் ஆயத்த மடத்துத் தலைவியின்

பொறுப்பையும் இணைத்துக் கொள்வதெனத் தீர்மானித்தார். 3 ஆண்டுகளாக தன்னிடம் ஒப்படைத்த பணியைச் சிறந்த முறையில் ஆற்றி வந்த குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரியை இயன்ற மட்டும் இந்த அலுவலில் உதவியாகக் கொள்ளுமாறு ஆக்னேஸ் தாயார் கொன்சாகா மரி தாயாரிடம் ஆலோசனை கூறவே, அவரும் எளிதில் இதை ஏற்றுக் கொண்டார். இவ்வாறு, நடைமுறையில், ஆயத்த மடத்தைக் கண்காணிக்கும் பொறுப்பு முழுவதும் குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரிக்கு அளிக்கப் பட்டது. தலைவி என்ற பெயரைத் தாங்காமலேயே, தான் இறக்கும்வரை அதாவது 1897 ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் நாள்வரை தலைவியாகப் பணியாற்றினாள் குழந்தை தெரேசாள்.

இவ்வாறு, ஆயத்த மடத்தில், கொன்சாகா மரி தாயாருக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட பின்னரே அதாவது 1896 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் தொடங்கி, நாடோறும் மாலைத் திருப்புகழ்மாலைக்குப் பின், 2.30 மணியிலிருந்து 3 மணிவரை நவகன்னியர்களை ஒன்று கூட்டுவாள். அவர்களுக்கு மறையுரை ஒன்றும் அவள் ஆற்றவில்லை. அவளுடைய போதனை முறைப்படி அமைந்ததன்று, திட்டங்களின், மடத்து ஒழுங்குகளின் சில பகுதிகளை வாசிப்பாள், வாசிக்கச் செய்வாள். தேவையான விரிவுரை அல்லது விளக்கம் தருவாள், சிறிய சகோதரிகள் விடுக்கும் வினாக்களுக்கு விடைபகர்வாள், தவறுகள் செய்திருப்பின் எடுத்துக்கூறி அவர்களைக் கண்டிப்பாள். ஆன்ம வாழ்வையும் இன்னும் அப்போதைய வேலையையும் சார்ந்தவை பற்றியும் அவ்வமயம் அவர்களிடம் மனம் விட்டுத் தாராளமாய்ப் பேசுவாள்.



நவகன்னியர்களுடன் தனித்து உரையாடுகையில், ஒவ்வொருவருக்கும் ஏற்ற முறையில் நம் புனிதை, அறிவுரை வழங்குவாள். அவரவர் நாட்டம், தேவை, அப்போதைய சோதனை அல்லது மகிழ்ச்சி இவற்றிற்கேற்றவாறு, அவர்கள் மனத்தைத் தெளிவித்து, பிரச்சனைகட்கு முடிவு காணச் செய்வாள். ஒரு சகோதரிக்கு அளிக்கும் அறிவுரைகள் மற்றொருத்திக்குப் பொருந்தாது போகலாம். இதைப் புனிதையே இங்குக் குறிப்பிடுகின்றாள். (நவகன்னியர்களிடம் பணியாற்றிய சமயம், இயல்பைக் கடந்த வகையில் உள்ளங்களை ஆய்ந்தறியும் அரிய கொடை அவளிடம் விளங்கினதைப் பின்வரும் பகுதியில் காணலாம்) "எல்லா ஆன்மாக்களுக்கும் ஏறக்குறைய ஒரே வகையான போராட்டங்கள் தான் உண்டு எனினும், இவற்றிற்குள் பல வேறுபாடுகளும் உள்ளன. என்பதை முதலில் கண்டுணர்ந்தேன். "எவ்வாறு முகச்சாயல்களில் வேறுபாடுகள் உண்டோ, அவ்வாறே ஆன்மாக்களிலும் வேறுபாடு உண்டு என்ற பிஷோன் அடிகளின் கூற்றை நான் எளிதில் புரிந்துகொண்டேன். இதனால் அனைவரிடமும் ஒரே வகையாய் செயல்படுவது இயலாத காரியம். தன் சொந்த வழியில் ஆன்மாக்களை நடத்திச் செல்லத் தேடாது, இயேசு அவர்களுக்காக வகுத்த வழியில் அவர்களைக் கூட்டிச்செல்ல, தன் சொந்த விருப்பங்களையும் கருத்துக்களையும் அறவே மறந்துவிட வேண்டுமென்பதைக் கண்டுணர்ந்தேன்.

"...திறமையற்ற தோட்டக்காரன் ஒருவன் தன் செடிகளை நன்முறையில் பதிவு செய்யாவிடில், என்ன நேரிடும்? ஒவ்வொன்றின் தன்மையைக் கண்டுணராது (peach) "பிச்" பழ மரத்தில் ரோஜாப்பூவை மலரச் செய்ய விரும்பினால் என்ன நேரிடும்? இவ்வாறே, இறைவன்

ஆன்மாக்களிடம் எதிர்பார்ப்பது யாது என்பதை, சிறுவயது தொடங்கியே கண்டு கொள்ள அறிந்திருக்க வேண்டும். அருள் ஆற்றும் செயலைத் துரிதப்படுத்தவோ, மட்டுப் படுத்தவோ முயலாது, அதனுடன் இணைந்து செல்ல வேண்டும்!

குழந்தைகளின் வளர்ப்புப் பற்றிய செய்தியில் புனிதை இத்துணை அறிவு செறிந்த கருத்துக்களை வெளியிட்டுள்ளாள். ஆயத்த மடத்தில் அளிக்கப்படும் பயிற்சியாகிய ஆன்மாக்களை உருவாக்குவதிலும் அவள் இதே முறையைத் தான் கையாண்டுள்ளாள்! இக்கருத்துக்களின் ஒளியில் "அறிவுரைகளும், நினைவு அலைகளும்" என்ற இந்நூலில் ஒவ்வொருவரும் தம் தேவைக்கேற்றதைத் தேர்ந்தெடுக்கட்டும். ஏனெனில், இந்நூலிற் கூறப்படும் அறிவுரைகள் அனைத்தும் அனைவரின் ஒப்புதலுக்கும் ஏற்றதாக இல்லாமற் போகலாம். அனைத்தும் எவ்வித பாகுபாடு மின்றி ஒவ்வொரு வாசகருக்கும் ஏற்றதாக இருக்க முடியாது.

எங்கள் புனித தலைவியிடம் அன்பு மிகுதியாக இருந்தாலும், அதே சமயத்தில் உறுதியான மனத்திடனும் இருந்தது. இதனால் எங்களிடையே காணப்பட்ட குறை எதையும் அவள் விட்டு வைத்தவள் அல்லள். குற்றம் ஏதேனும் கண்டவுடனேயே, அக்குற்றம் புரிந்தவளை நாடிச் செல்வாள். இவ்வாறு செய்வது அவளுக்குக் கடினமாக இருந்தாலும், தன் கடமையைச் செய்ய அவள் என்றுமே தவறியதில்லை.

ஒருநாள் என்னுடன் மகிழ்ச்சியாக உரையாடிக் கொண்டிருக்கையில் அவள் கூறியது: "நவகன்னியர்களைக் கவனித்து வந்த காலம் எனக்குப் போராட்ட மிக்க காலமாக



இருந்தது. இறைவன் எனக்குப் பதிலாகச் செயல் புரிந்தார். நான் அவருக்காக உழைத்தேன். என்றுமே என் ஆன்மா அத்துணை முன்னேற்றம் கண்டதில்லை. அயலார் அன்பைப் பெற நான் தேடவில்லை. என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள், என்ன பேசுவார்கள் என்பதில் நான் கவனஞ் செலுத்தவில்லை. இறைவனுக்கு மகிழ்ச்சி அளிப்பதொன்றையே நான் தேடினேன். என் உழைப்பிற்குப் பலன் கிட்ட வேண்டும். என்று நான் விரும்பியதில்லை. ஆம், நம்மைச் சுற்றிலும் நன்மையை விதைக்க வேண்டும். அது முளைத்தெழுகின்றதா என்று கவலை கொள்ள வேண்டியதில்லை. உழைப்பு நமக்கு, வெற்றி இயேசுவுக்கு. அயலாரின் நன்மையைச் சார்ந்தவற்றில் போரிட அஞ்சவேண்டாம். நவகன்னியர்களின் தவறை எடுத்துக் காட்டுவதை விட இறைவனுக்குப் பணிபுரியும் நோக்கமே மேலோங்கி நிற்க, அமைதியை நாடும் நம் இயல்பினூடே அவர்களைக் கண்டிக்கத் தவறலாகாது. பலன் தருமுறையில் கண்டிப்பதற்கு, உள்ளத்தில் சினத்தின் நிழல்கூட இருத்தலாகாது. கண்டிப்பதை ஒரு கடமையாகக் கருத வேண்டும்" இச்சான்று உண்மையே. எத்தகைய மகிழ்ச்சியையும் பராக்கையும் தேடாது, எங்களுக்குச் செவிமடுப்பதிலும் போதிப்பத்திலும் அவள் காட்டிய பொறுமையையும் தன்னல மறுப்பையும் நான் கவனித்து வந்தேன். திறமைக் குறைவுள்ள நவகன்னியர்களைக் கண்காணிப்பதில் அவளிடம் விளங்கின ஆர்வத்தையும் தன்னலங் கருதா தன்மையையும் நான் காணத் தவறவில்லை. அவர்கள் மீது மிகுதியான அன்பைப் பொழிந்தாள். ஆன்மாக்கள் எத்தகையவையாயினும் அவைகளைப் பெரிதும் மதித்து வந்தாள்.

நாங்கள் அவளிடம் கேட்கும் கேள்விகள் அனைத்துக்கும் அவள் விடையளிக்கத் தவறியது

கிடையாது. தான் கூறுவதைத் தெளிய வைக்கும் பொருட்டு மறைநூலின் சில பகுதிகளைச் சான்றாக எடுத்துரைப்பாள். எங்களுக்கு ஊட்ட விரும்பும் உண்மையை, நினைவில் பதியச் செய்யும் வகையில் கதைகளும் கூறுவாள்.

எங்கள் ஆன்மாவின் பல்வகை எழுச்சிகளையும், இயல்பு கையாளும் சூழ்ச்சிகளையும் கண்டுபிடித்த அவளது அறிவுத் திறனைக் கண்டு வியந்தேன். எங்கள் எண்ணங்களை ஏட்டில் வாசிப்பது போல் ஆய்ந்தறியும் விண்ணக நுண்மதி அவளிடம் விளங்கியது. அவள் இறைதூண்டுதல் பெற்றவளாகத் தோன்றினாள். புனித ஆவியானவரே அவள் வாய்மொழியாகப் பேசியதால் அவள் தவறமுடியாது என்ற நம்பிக்கையில், என் பிரச்சனைகளில் அவளைக் கலந்து முடிவு செய்தேன். இருப்பினும், அருள் தன்னுள் செயல்படுவதை உணராதவள் போல், அவள் அனைத்திலும் சாதாரணமாகவே தோன்றினாள்.

தன் வாழ்க்கைச் சரிதையையோ, தன் ஆன்மீக சகோதரர்களில் ஒருவருக்கு மடலோ எழுதிக் கொண்டிருந்த சமயம், அவளது நவகன்னியர் நேரம் காலம் எதுவுமின்றி, அவளிடம் சென்று, அவள் என்ன எழுதுகிறாள் என்பதை அறிந்துகொள்ள மறைமுகமான வினாக்களைத் தொடுத்து அவளுக்குத் தொல்லை பல கொடுத்தனர். இருப்பினும், பொறுமையற்ற தனமாகவோ, விரைந்தோ, புண்படுத்தும் வகையிலோ அவள் என்றுமே பதில் அளித்ததில்லை. என்றுமே அவளிடம் அமைதியும் சாந்தமும் தவழ்ந்தன.

அவளே சான்று பகர்வது போல், உண்மையைக் கூறுவதில் அவள் எதற்கும் பின்வாங்கியதில்லை, போருக்கும் அஞ்சியதில்லை. எங்களைக் கண்டிப்பதில் தன் உடல் நலனையும் அவள் பொருட்படுத்தியதில்லை. வாழ்வின்



இறுதி மாதங்களில், காய்ச்சலால் உடல் நடுங்க, தொண்டை பற்றி எரிவது போல் வருத்த, தன் முழுப்பலத்தையும் ஒன்று திரட்டி, ஒரு நவகன்னிகையின் தவறை எடுத்துக்கூறிக் கண்டித்த காட்சி, இன்னும் என் கண்முன்னே நிற்கின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில் அவள் ஒருமுறை என்னிடம் கூறினாள். "கையில் போர்க் கருவிகளைத் தாங்கி, கடவுளின் சொல்லைத் தேவ ஆவி தரும் போர்வாளாக வாயில் ஏந்தி நான் உயிர் துறக்க வேண்டும்".

## அவளுடைய முன்மதி:

ஆயத்த மடத்துப் பொறுப்பை ஏற்ற தொடக்கத்தில், எங்கள் உள்ளப் போராட்டங்களை அவளிடம் கூறின போதெல்லாம், எங்கள் அன்புச் சகோதரி, நியாயத்தை விளக்கியோ, எங்கள் உடன் சகோதரிகளிடம் தவறு இல்லை என்பதைத் தெளிவாய் எடுத்துக் காட்டியோ எங்களைச் சாந்தப்படுத்த முயன்றாள். இருப்பினும், எதிர்பார்த்த முடிவு கிடைக்காமல் நீண்ட வாதங்கள் எழுந்தன. இவை எங்கள் ஆன்மாவிற்கு எத்தகைய பயனும் தராதவை. இதை விரைவில் கண்ணுறும் அவள் வேறு முறையைக் கையாளுவாள். எங்கள் உளப்போராட்டத்தின் காரணங்களை நிர்மூலமாக்குவதன் மூலம் அப்போராட்டங்களை அகற்றுவதற்கு மாறாக, அவைகளை நாங்கள் நேருக்கு நேர் காணச் செய்வாள்.

## எடுத்துக்காட்டாக:

"பாருங்கள், இன்று சனிக்கிழமை. இவ்வாரத்தில் விறகுத் தட்டில் விறகை நிரப்பி வைக்கவேண்டியது என்னுடன் பணிபுரியும் சகோதரியின் கடமையல்லவா? அதைச் செய்ய

அவள் மறந்துவிட்டாள். என்முறையில் நான் எத்துணை கவனத்துடன் அவ்வேலையைச் செய்கிறேன்" என அவளிடம் சென்று கூறினால், எனக்கு எரிச்சல் மூட்டும் அச்செயலோடு நான் பழகிக் கொள்ள அவள் ஆவன செய்வாள். நான் 'கூறும் நிகழ்ச்சியை மறைக்கவோ தெளிவுபடுத்தவோ தேடாது. அதை நான் ஆய்ந்து பார்க்க வேண்டுமெனத் தூண்டுவாள். நான் கூறுவதை ஆமோதிப்பதுபோல் காணப்படும் அவள் கூறுவாள். "சரி, உங்கள் உடன் சகோதரியிடம் நீங்கள் கூறும் அத்தனை குறைகளும் இருப்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன் அவள் இவ்வாறு கூறுவது, என்னைத் தேற்றுவதற்காகவே. ஆனால், இதையே அடித்தளமாகக் கொண்டு தன் காரியத்தைச் சாதித்துவிடுவாள். சிறிது சிறிதாக என் நிலைமை எத்தகையது என்பதை நான் உணர்ந்து கொள்ளச் செய்வாள். சகோதரிகள் என்மேல் அன்பும் பரிவும் காட்டாமலிருப்பதையும், என் உடன்சகோதரிகள் அரைகுறையாகத் தம் கடமைகளை ஆற்றுவதையும், அவர்கட்குப் பதில், நான் கண்டிக்கப்படுவதையும், என்னைச் சாராத வேலைகளை நான் சரிவரச் செய்யாததற்குக் குறைகூறப்படுவதையும் விரும்பி ஏற்றுக் கொள்ளுமாறு செய்வாள். இவ்வாறு என் உள்ளக் கழிவுகளை நீக்கி, அதனை உயரிய தோரிடத்தில் நிறுத்திவிடுவாள். இதில் வெற்றிகண்ட பின்னர், நான் குற்றம் சாட்டிய நவகன்னிகையின் அறியப்படாத நற்பண்புகளை எடுத்துக் காட்டுகளுடன் என் கண் முன்னும் கொணர்வாள். விரைவில் வெறுப்பு வியப்பாக மாற, அயலார் என்னை "விடச் சிறந்தவரே என்ற எண்ணம் என்னிடம் மேலோங்கி நிற்கும்.

நான் சென்று பார்த்துவிட்டு வந்த பின், விறகுத்தட்டில் அச்சகோதரி விறகை அடுக்கிவிட்டாள் என்றறிந்த அவள்



அதைக்கூறினால் முதலடியிலே என் போராட்டம் முடிவு கண்டு விடும் என்றாலும், அதை என்னிடம் கூறமாட்டாள். நான் மேலே கூறியது போல், என்னில் சிறந்த மனநிலையை எழுப்பிய பின்னரே, மிகச் சாதாரணமாக, "தட்டில் விறகு அடுக்கப்பட்டது என்று எனக்குத் தெரியும்" என்று கூறுவாள்.

சில வேளைகளில், நாங்களே அதைக் கண்டு பிடிக்கும்படி விட்டுவிடுவாள். இச்சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தி, நம் உள்ளங்களில் எழும் போராட்டங்கள் பெரும் பாலும் பொருளற்றவை என்றும், வெறும் கற்பனையின் விளைவே என்றும் எங்களுக்கு எடுத்துக்காட்டுவாள்.

இந்நிகழ்ச்சியிலும், இன்னும் இந்நூலின் வேறு பல பகுதிகளில் காணப்படும் நிகழ்ச்சிகளிலும், சொந்த இயல்பிற்கு எதிராக, கன்னியர் இவ்வாறு போராட வேண்டியுள்ளதே என வியக்கலாம். என் கர்மேல் வாழ்வின் தொடக்கத்திலும் இத்தகைய வியப்பே எனக்குக் காத்திருந்தது என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

உலகை முற்றும் துறப்பதுடன், குடும்பத்தை விட்டுப் பிரியும் தியாகத்தையும் மேற்கொண்டபின், பொதுவாழ்வில் காணப்படும் ஆயிரக்கணக்கான சிறு மோதல்களைச் சமாளிப்பது எளிதே என எண்ணியிருந்தேன். ஆனால் என் பட்டறிவு, விரைவில் இத்தவறான எண்ணத்திலிருந்து என்னை மீட்டது.

புண்பட்ட உள்ளத்திற்கு வேதனையை மறக்கச் செய்யும் பல்வகை பொழுது போக்குகளை, அடைபட்ட மடம் அறிந்ததில்லை. இதனால் குணவியல்பு, வளர்ப்பு முறை, பண்பு இவற்றின் வேறுபாடுகளால் எழும் தவிர்க்க வியலா சிறு மோதல்கள் உள்ளத்தைப் பெரிதும்

தாக்குகின்றன. பெருந் தியாகச் செயல்களைப் புரிந்த வீரஞ்செறிந்த ஆன்மா, சிறு நிகழ்ச்சிகள் காரணமாக, கடினமாகப் போராட வேண்டியிருப்பதைக் காணலாம். தொடர்ந்து கூறப்போகும் நிகழ்ச்சிகளைச் சான்றாகக் கொண்டு, சகோதரி தெரேசாள் எனக்குச் சீரியதோர் பாடம் புகட்டினாள்.

ஒவ்வொரு கணத்திலும் எழும் இத்தகைய போராட்டத்திற்குத் தனிப்பட்ட மதிப்பு உண்டு. "கூட்டு வாழ்வே என் கசப்பு மிக்க கிண்ணம்" எனக் கூறினார் அனுபவஞ் செறிந்த துறவினியொருத்தி. அடிக்கடி கூறப்படும்இக்கூற்றை மெய்ப்பிப்பது இப்போராட்டம். அடைப்பட்ட மடங்களில் மலரும் அன்பிற்கு முழு மதிப்பு அளிப்பதும் இதுவே. இத்தகைய இன்னல்களை வெற்றியுடன் மேற்கொண்டு, ஆன்மாவை அமைதியில் நிலை நாட்டிய எங்கள் புனித சகோதரி, இத்தடைகளைக் கடந்து செல்ல எங்களுக்கு உதவி புரிவதில் முழுமூச்சுடன் இறங்கினாள். அவளுடைய சிறிய வழியும் சிறிய கோட்பாடும் இப்பணியைத் திறம்படச் செய்து முடித்தன.

அவளுடைய சகோதரியும் நவகன்னிகையுமான என்னை, ஆயத்த மடத்தில் வழிநடத்த, பொறுப்பேற்ற குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரிக்கு, அனுமதி இருந்ததால் என்னுடன் பேசுவாள்; ஆயினும், சொந்த பந்தங்களைப் பற்றி மனந்திறந்து என்னிடம் பேசுவதை அவள் விலக்கினாள். யாதெனில், ஒரு தலைவி, தன்னை முற்றிலும் மறக்க வேண்டும். யாராவது தன் மன வேதனையையோ உடல் நலமின்மையையோ அவளிடம் எடுத்துரைக்கும்போது,தானும் அதே துன்பத்தில் வாடுவதை வெளிப்படுத்தலாகாது என்பது அவள் தத்துவம். இவ்வாறு



தனக்கென ஆறுதலையோ நன்மையையோ தேடாமல் எமக்கு நன்மை புரிந்தாள்.

புகுமுகத் துறவு இல்லத்தின் பொறுப்பை ஏற்றதும், முதற்கண் அவள் இறைவனிடம் வேண்டிக் கேட்டது யாதெனில், மனித இயல்புக்குரிய அன்பு தனக்கு என்றுமே கிடைக்கக் கூடாதென்பதே. அவளுடைய மன்றாட்டு ஏற்கப்பட்டது. இதை அவளே என்னிடம் கூறினாள். அவள் மீது நாங்கள் மிகுதியான அன்பு கொண்டிருந்தோம். ஆயினும், இளமைத் துடிப்பில் தோன்றும் அறிவீனமான எழுச்சி மிக்க அன்பை, அவள்மேல் பொழிய வேண்டுமென்ற எண்ணம் எங்களில் ஒருவர்க்கும் எழுந்ததில்லை.

அவளது தெய்வீக அறிவு நுட்பத்தைக் கண்ணுற்ற சில மூத்த சகோதரிகள் மறைவில் அவளை நாடி ஆலோசனை கேட்டனர். முழுத் தன்னல மறுப்பு, செபம், இவற்றைச் செயல்படும் கருவிகளாகக் கொண்டு, ஆன்மாக்களை இறைவன் பால் ஈர்த்துச் செல்ல அவளுக்கிருந்த ஆவலும், அவளுடைய புண்ணிய வாழ்வுமே இந்தத் தகுதியை அவளுக்குத் தேடித் தந்தன. எம்முடன் உரையாடுகையில் பன்முறை அவள், தன் உள்ளத்தை இறைவன் பால் எழுப்புவாள். இந்த அக எழுச்சியை நான் பலமுறைகளில் கண்ணுற்றிருக்கிறேன்.

# 2

# தாழ்ச்சி, மன எளிமை, குழந்தை உள்ளம், நம்பிக்கை.

## தாழ்ச்சி

குழந்தை இயேசுவின் புனித தெரேசாளிடம், புண்ணியங்கள் அனைத்திலும், மேலோங்கி நின்றது தாழ்ச்சியே. தாழ்ச்சி மிக்கவளாகவும் சின்னஞ் சிறியவளாகவும் இருப்பதற்கே அவள் "ஞானக் குழந்தைமை" வழியைப் பின்பற்றினாள். சுருங்கக்கூறின், உண்மையோடு அவள்கடைப்பிடித்த இவ்வழியே அவளைச் சிறு குழந்தை போன்று, எளியவளாகவும், சிறியவளாகவும் மாற்றியது.

துறவற வாழ்வில் 9 ஆண்டுகளைக் கழித்த பின்னும், மடத்துச் சங்கத்தில் இடம் பெறாது, சிறியவளாகவே கருதப்பட்டு, நவதுறவு இல்லத்திலேயே தங்கியிருப்பதை அவள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டாள்(அன்றைய வழக்குப்படி, அவளுடைய வார்த்தைப்பாட்டிற்கு 3 ஆண்டு கட்குப் பின், அதாவது 1893 ஆம் ஆண்டு செப்டம்பரில் நவதுறவு இல்லத்தைவிட்டு அவள் வந்திருக்கலாம். ஆனால் அன்றைய சட்ட விளக்கம், ஒரே குடும்பத்தைச் சார்ந்த இரு கன்னியருக்கு மேற்பட்ட சகோதரிக்கு மடத்துச் சங்கத்தின் உறுப்பினராகும் உரிமையை அளிக்கவில்லை. ஆக்னேஸ் [illegible]ரும்மரி சகோதரியும் அதில் உறுப்பினராக இருந்ததால், சட்டப்படி கிடைக்க வேண்டிய இடம் அவர்களது சிறிய



சகோதரிக்கு என்றுமே கிடைக்காமற் போனது. வாக்காள ராகவோ, பார்வையாளராகவோ அவள் இருந்தது கிடையாது. பெயரளவில் மட்டுமே ஆயத்தமடத்துத் தலைவியாய் இருந்தவரின் அதிகாரத்தின் கீழ் நவகன்னி யர்களின் பயிற்சிப் பொறுப்பை ஏற்ற இவள், அவர்களின் மூத்த சகோதரியாக மரணம் வரை அவர்களுடனேயே தங்கியிருந்தாள்)

## ஆண்டவரே, துன்பமும் வெறுப்பும் வேண்டும்

எங்கள் மதிப்பிற்குரிய தந்தையினுடைய நோயின் விளைவாக பொறுத்தற்கரிய துன்பம் அவளை வருத்திய போது, துன்பத்தின் மீது அவளுக்கிருந்த ஆவல் உண்மை என்பதை மெய்ப்பித்தாள்.

"ஆண்டவரே, உம் பொருட்டு நான் துன்புறவும், நிந்திக்கப்படவும் வேண்டும்" என்ற புனித சிலுவை அருளப்பரின் இக்கூற்றை, இளமை தொட்டே அவள் பன்முறை கூறி வந்துள்ளாள். மாடி சாளரத்தின் அருகில், நித்திய வாழ்வைப்பற்றி நாங்கள் மனம்விட்டுப் பேசும் போதெல்லாம் இக்கருத்தே எங்கள் உள்ளத்தில் நிறைந்து நின்றது.

## ஆணையிடப்படவும் குற்றச்சாட்டுப் பெறவும் விரும்புங்கள்

"இதயத் தாழ்ச்சி கொண்டிருத்தலே அவசியம், அனைவரும் உங்களுக்குக் கட்டளையிடுவதை, நீங்கள் விரும்பாதவரை, உம்மிடம் இத்தாழ்ச்சி சிறிதும் இராது.

எல்லாம் வெற்றிகரமாக நடக்கும் வரை நீர் நன்றாக இருக்கிறீர். ஆனால் உம் விருப்பத்திற்கு மாறாக ஏதாவது நிகழத் தொடங்கியதும், உம்முகம் கருத்துவிடுகின்றது. புண்ணியம் அடங்கியிருப்பது இதிலன்று. அனைவருக்கும் தாழ்ச்சியுடன் பணிந்திருத்தல், உம்மைப் பிறர் குறை கூறுவதில் மகிழ்ச்சி காணுதல், இதுவன்றோ புண்ணியம்.

நீங்கள் முதலில் முயற்சி செய்த போதிலும், உள்ளப் போராட்டத்தை உம் வெளித்தோற்றம் எடுத்துக்காட்டி விடும். இதனால் நீங்கள் குறையுள்ளவள் என அயலார் தீர்மானிக்கலாம். ஆனால் இங்குத் தான் வேடிக்கை அடங்கியுள்ளது. எப்படியெனில், உம்மிடம் சில குறைகள் உண்டென நீங்கள் நினைப்பதிலும் கூறுவதிலும் தாழ்ச்சி அடங்கிவிடுவதில்லை. ஆனால் அடுத்தவர் அவ்வாறு கூறுவதிலும் நினைப்பதிலும் மகிழ்ச்சி கொள்கிறீர்களே, அதில் தான் நீங்கள் உண்மையான தாழ்ச்சியைக் கடைப் பிடிக்கிறீர்கள்".

"சில சமயங்களில், அயலார் நம்மை மட்டந்தட்டி, மதிப்புக் குறைவாகப் பேசும் போது நாம் பெருமகிழ்ச்சி கொள்ளவேண்டும். ஏனெனில், யாருமே இப்படிக்குறை கூறாவிடில், நம் கதி என்னவாகும்? இது நமக்குச்சிறு ஆதாயந்தான்". இவ்வாறு அவள் என்னிடம் கூறினாள்.

மடத்தின் பொதுவிழாவை முன்னிட்டு, தான் தயாரித்த பக்தி நாடகமொன்றை உல்லாச நேரத்தில் அவள் நடித்துக் காட்டியபோது, நீண்டு விட்டதாகக் குறைகூறி நிறுத்தச்சொல்லிவிட்டனர். மேடைக்குப் பின்புறத்தில், அவள் மறைவில் தன் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளக் கண்டேன். பின், தன்னைச் சமாளித்துக்கொண்டு, அவமானத்தை ஏற்று அமைதியோடும் சாந்தத்தோடும் காணப்பட்டாள். பெரியோர் மட்டுமன்று, சிறியோரும் குறைகூறுவதை தெரேசாள் சகோதரி விண்ணக மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாள். நவகன்னியர்கள் தன்னைப் பற்றிக் குறைவாகப் பேசுவதையும் ஏற்றுக் கொண்டாள். அவ்வமயங்களில், அவள் என்றுமே அவர்களைக் கடிந்து கொண்டதில்லை.



**நான் அவளிடம் கூறினேன்:**

"என்னைப் பற்றிக் கூறும் குறைகள் நியாயமானதாயின், அவற்றை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளுவேன். நான் தவறு செய்தவுடனேயே அதை ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் தவறு செய்யாத போது என்னைக் கண்டிப்பதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது"

**இதற்கு அவள் அளித்த விடை:**

"நான் உமக்கு நேர்மாறாகச் செய்வேன். அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்படுவதையே நான் பெரிதும் விரும்புகிறேன். ஏனெனில் எனக்கு இடித்துக் காட்ட, என்னிடம் எதுவுமில்லை. இதை மகிழ்வுடன் இறைவனுக்கு ஒப்புக் கொடுக்கிறேன். பிறர் என்னைப் பற்றிக் கூறும் குறையை நான் செய்யக் கூடியவள் என்ற நினைவு என்னைத் தாழ்ச்சியில் நிறுத்துகிறது".

"உண்மையே தாழ்ச்சி என்று எனக்குத் தோன்றுகிறது. என்னிடம் தாழ்ச்சி உண்டா என நானறியேன்". ஆனால் அனைத்திலும் உண்மையையே நான் காண்கிறேன் என நானறிவேன்".

சிறியவர்களின் அணியிலே தன்னைச் சேர்த்துக் கொள்வது அவளது வழக்கம். இதனாலன்றோ "சிறிய ஆன்மாக்கள்" என்ற பெயர் வழங்கலாயிற்று.

ஒவ்வொரு நவகன்னிகைக்கும் அவள் கூறும் தனிப்பட்ட அறிவுரைகளில் தாழ்ச்சி என்றும் இடம்பெறும். பலவீனமே உருவானவர்களாய் எங்களைக் காண்பதில் கலக்கங் கொள்ளாது, மாறாக 'வறுமையில் பெருமை கொள்ள எமக்குக் கற்றுத் தருவதே அவளது போதனையின் அடித்தளமாக இருந்தது. "பலவீனத்திலும் எளிமையிலும் நம்மைக் காண்பது எத்துணை இனிமையானது" என அவள் கூறுவாள்.

## நாய்க்குட்டி ஒன்று உம்மிடம் உள்ளது:

ஒரு முறை, குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி என்னிடமுள்ள குறைகள் அனைத்தையும் எடுத்துக் கூறினாள். இதனால் வருத்தமுற்ற நான், செய்வதறியாது சிறிது கலங்கினேன். "அறச் செயல் புரிய ஆவல் கொள்ளும் நான், அதற்கு எத்துணை தொலைவில் உள்ளேன். சாந்தம், பொறுமை, தாழ்ச்சி, பிறரன்பு அனைத்தையும் கடைப்பிடிக்க எவ்வளவோ விழைகிறேன். ஆனால் அவை என்றுமே எனக்குக் கிட்டாமற்போய் விடுமோ" என எண்ணி வருந்தினேன். புனித ஜெர்த்துருத்தம்மாள் இதே ஆவலை நமதாண்டவரிடம் வெளிப்படுத்த, அதற்கு அவர் அளித்த விடையை அன்று மாலை தியான நேரத்தில் நான் வாசிக்க நேர்ந்தது. "அனைத்திலும், அனைத்திற்கும் மேலாக, நல்ல மனதைக் கொண்டிரு. எல்லாப் புண்ணியங்களுக்கும் உரிய தனிப்பட்ட பேறுபலனையும், மாட்சிமையையும் உன் ஆன்மாவுக்கு அளிக்கக்கூடிய உயரியபண்பு இதுவேயாம். எனக்கு மகிமையைப் பெற்றுத்தரவும், நன்றி கூறவும், என் வேதனைகளில் என்னுடன் ஒன்றிக்கவும், படைப்பனைத்தும் சேர்ந்து செய்யும் அளவாக எனக்கு அன்பு செய்து பணி புரியவும் யாருக்கு உண்மையான ஆவல், "நல்ல மனது"



உண்டோ, ஐயமற அவர்களுக்கு என் தாராள சிந்தைக்கேற்ப பேறுபலன்களை வழங்குவேன். இன்னும், தம் நற் செயல்களினால் பிறர் பெறக்கூடிய நன்மையைவிட, இவர்களுடைய ஆவல் சில சமயங்களில் மிகுதியான நன்மையை இவர்கட்குப் பெற்றுத்தரும்". இவ்வினிய கூற்றினால் மகிழ்ச்சியுற்ற நான், என் அன்புக்குரிய சிறிய தலைவியிடம் இதை எடுத்துக்கூறினேன். அவள் எனக்கு உற்சாகமூட்டிப் பகர்ந்ததாவது": அருட்திரு சூரின் தந்தையின் வாழ்க்கையில் கூறப்பட்டுள்ளதை வாசித்தீர்களா? அவர் பேய்களை ஓட்டிக் கொண்டிருந்த சமயம், அவை "நாங்கள் அனைத்தையும் சமாளித்து விடுவோம். ஆனால், நல்ல மனது என்னும் இந்த நாயை மட்டும் எங்களால் என்றுமே எதிர்த்து நிற்க முடிவதில்லை" என அவரிடம் கூறினவாம்.

ஆம், உம்மிடம் புண்ணியம் இல்லாது போனாலும், துன்பம் அனைத்திலுமிருந்து உம்மை விடுவிக்கக்கூடிய 'நாய்க்குட்டி' ஒன்று உம்மிடம் உள்ளது. மனதைத் தேற்றிக் கொள்ளுங்கள். அது உம்மை விண்ணிற்குக் கூட்டிச் செல்லும்! - ஆ! புண்ணியத்தைக் கொண்டிருக்க விரும்பாத ஆன்மாவும் உண்டோ? இது எல்லாருக்கும் உரிய வழி! ஆனால், வலுவற்றவராய்த் தரையில் விழுந்து கிடக்கவும், பிறர் தம்மை இந்நிலையில் காணவும் சம்மதிக்கும் ஆன்மாக்கள் எத்துணை குறைவு!

ஒரு நாள் தைரியமிழந்த நிலையிலிருந்த நான்,என் உடற்களைப்பையே இம் மந்த நிலைக்குக் காரணமாகக் காட்டியபோது கூறினாள்:

"நீங்கள் அறநெறியில் நில்லாதபோது (புண்ணியத்தை அனுசரியாத போது) நோயோ,காலமோ, மனவருத்தமோ இதற்குக் காரணம் என்று எண்ண வேண்டாம். இத்துணை

குறைவாகவே நீர் புண்ணியத்தைப் அனுசரிப்பதால், உம்மைத் தாழ்த்திக் கொண்டு, சிறிய ஆன்மாக்களின் வரிசையில் இடம் பெற்றுவிட வேண்டும். வீரத்தனமான புண்ணியங்களை உரிமையாக்கிக் கொள்வதல்ல, மாறாக, தாழ்ச்சியைப் பெறுதலே இவ்வமயம் உமக்குத் தேவை. இதற்கு உம் வெற்றிகளோடு சில தோல்விகளும் என்றும் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். இவ்வாறு பெருமை யான எண்ணங்கள் உமக்குத் தோன்ற வழியில்லை. மாறாக, நீங்கள் ஓர் உயர்ந்த ஆன்மா அல்ல என்பதை இத் தோல்விகள் நினைவூட்டி உம்மைத் தாழ்த்தும். உலகில் உள்ளவரை, மனிதர்களின் பாராட்டுதல்களைப் பெறும் மகிழ்ச்சியை அறியாத ஆன்மாக்களும் உள. இதனால், அயலாரில் கண்டு வியக்கும் புண்ணியங்கள் தம்மிடம் உள்ளன என்ற எ்ண்ணம் நமக்குத் தோன்றுவதில்லை."

## சிறிய உபாயம்:

"அண்மையில், ஒரு சகோதரி மீது எனக்கு எரிச்சல் தோன்றியது. போராட்டம், உள்ளத்தில் நடைபெற்றதால் அவள் அதை அறியவில்லை என எண்ணுகிறேன். இருப்பினும் என் குணக்குறையை அவள் கண்டு விட்டாள் என்ற எண்ணத்தைப் புகுத்திக் கொண்டேன் இவ்வாறு என்னையே நான் காண்பதில் மன நிறைவு கொண்டேன்". என அவள் என்னிடம் கூறினாள்.

மற்றொரு முறை, இதையொத்த நிகழ்ச்சியின்போது அவள் என்னிடம் உரைத்ததாவது: "குறையுள்ளவளா யிருந்தது பற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இறைவன் இன்று உயரிய அருட்கொடைகளை எனக்கு வழங்கினார். இன்று எனக்கு ஒரு நன்னாள்."



"இத்தகைய எண்ணங்கள் எவ்வாறு எழமுடியும்" என்ற என் வினாவிற்கு அவள்: "வெற்றியைப் போலவே தோல்வியிலும் என்றும் புன்னகை புரிந்து மகிழ்ச்சியா யிருப்பதே நான் கையாளும் சிறிய உபாயம்" என விடை பகர்ந்தாள்.

இத்துணை ஆன்ம பலமிக்க இவள், தான் மாபெரும் பாவங்களைப் புரியக் கூடியவள் எனக் கருதிக் கொள்ளும் அளவிற்குத் தன்னையே நம்பாமல் வாழ்ந்தாள். சிலுவையில் தொங்கும் இயேசுவைச் சித்தரிக்கும் படத்தின் கீழ், அவளது மனநிலையை எடுத்துக் காட்டும் பின் வரும் வசனங்களை எழுதினாள்: "ஆண்டவரே, நான் உமக்கு அன்பு செய்கிறேன் என நீர் அறிவீர்; ஆனால் என் மேல் இரக்கமாயிரும்.

யாருமே தவிர்க்க முடியாத மானிட அற்ப மகிழ்ச்சியில், தானும் ஈடுபட்டதாக அவள் சிறு நிகழ்ச்சியொன்றை எனக்குக் கூறினாள்: 1887 ஆம் ஆண்டில் மடம் புக விரும்பின அவளுக்கு அந்த ஆண்டு கிறிஸ்துமஸ் இரவு பெரும் வேதனையைத் தந்தது. பல வழிகளில் முயன்றும் இன்னும் உலகிலேயே இருப்பதைக் கண்ட அவளது ஆன்மா மரணவேதனையில் மூழ்கியிருந்தபோதிலும், வெண் புறாவின் சிறகுகளினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய நீல வண்ணத் தொப்பியை விழாப்பரிசாகப் பெற்றது பற்றி பெரிதும் மகிழ்வுற்றேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா? இயல்பு நாட்டங்களுக்கு மீண்டும் திரும்பி வருதல் எத்துணை வேடிக்கையானது" என்று என்னை நோக்கிக் கூறினாள்.

## உண்மை மகிழ்ச்சி :

இன்ப நினைவு, ஏன் பக்தியூட்டும் நினைவு கூட நமக்கு மகிழ்ச்சி அளிப்பதெல்லாம், பற்றுடன் நாடிச் செல்லு

கையில் நம் இதயத்தில் இறுதியில் களைப்பையே புகுத்தி விடுகின்றன என்றும், சிறிது நீடிக்கும் மகிழ்ச்சி இறுதியில் வருத்தமாக மாறிவிடுகிறது என்றும் கண்டேன், என்று நான் கூறியதற்கு அவள் கூறினாள்: இறைவனில் மட்டுமே அமைதி உண்டு. களைப்பு தராத உண்மை மகிழ்ச்சி சுயவெறுப்பில் தான் ஊற்றெடுக்கிறது. இவ்வாறு, நேற்று இரவு,உம்மிடம் தோன்றிய பலவீனத்தைக் கண்ணுற்ற சகோதரி, உம்மைப் பண்பற்றவள் எனத் தீர்மானித்திருந்து, அவ்வாறே நீரும் முழுமனதோடு உம்மை எண்ணியிருந்தால், அதுவே உண்மையான மகிழ்ச்சியாகும்".(களைத்துப் போயிருந்த எனக்கு நள்ளிரவு புகழ்மாலைக்குப் பின் நோயுற்ற சகோதரிகளைக் கவனிக்கச் செல்வது கடினமா யிருந்ததால் கண்ணீர் விட்டு அழுதேன். இதை ஒரு சகோதரி கவனித்து விட்டாள். இந்த என் பலவீனத்தைத் தான் தெரேசாள் மேலே குறிப்பிட்டுள்ளாள்)

-- நீர் கூறுவது உண்மை தான். நான் செய்ய வேண்டியது யாது என்பதை நன்றாகக் கண்டுணர்கிறேன். ஆனால் அவ்வாறு என்னால் செய்ய முடிவதில்லை. நான் என்றுமே நற்பண்புடையவளாக மாற மாட்டேன்.

-- இல்லை, நீர் இந்நிலையை வந்தடைவீர், இறைவன் உம்மை இந்நிலைக்கு வரச்செய்வார்.

-- உண்மை தான், ஆனால் மனிதர்கள் என்றுமே இதை அறிய மாட்டார்கள், நான் தவறும் போதெல்லாம் என்னைக் குறையுள்ளவளாக என்றும் நோக்குவர். ஆனால் உம்மையோ பண்புள்ளவள் என ஏற்றுக்கொள்கின்றனர்.

-- ஏனெனில் நான் அதை என்றுமே விரும்பியதில்லை. பிறர் உம்மைக் குறையுள்ளவளாகவே என்றும் காணட்டும்.



இது தான் தேவை. இதுவே உம் ஆதாயம். தன்னைக் குறையுள்ளவளாய்க் கருதி, பிறரை நிறைவுள்ளவராய்க் காணுதலே பேரின்பமாகும். பிறர் உம்மைப் பண்பற்றவளாய் நோக்குவதால், நீர் எதையும் இழந்துவிடப்போவதில்லை. எளிமை மிக்கவளாகப் போவதுமில்லை. இவ்வாறு பிறரை நினைப்பதால் அவர்கள் தான் அகமகிழ்ச்சியை இழந்து போவார்கள், ஏனெனில் பிறரைப்பற்றி நன்மையாக நினைப்பதை விட, இனிமை மிக்கது எதுவுமில்லை. அவர்கள் உம்மைத் தவறாகத் தீர்மானித்துகொண்டால் போகட்டும் என்று விட்டுவிடுங்கள். இதை முன்னிட்டு இறையன்பிற்காக நீர் உம்மைத் தாழ்த்தினால் உமக்குத் தானே நன்மை!

நினைக்கவே முடியாத நிலையில் இருப்பதாக நான் அவளிடம் கூறினேன்.

-- "பரவாயில்லை, இறைவன் உம் கருத்துக்களை அறிவார்". என்று பதிலளித்த அவள் என்னைப் புன்னகைக்க வைக்கும் எண்ணத்தில், எம் இருவருக்கும் மட்டுமே பொருள் விளங்கக் கூடிய சிறு, விளங்கா மொழியைக் கூறி மீண்டும் தொடர்வாள்: "எத்துணைக்குத் தாழ்ச்சியுள்ளவராயிருப் பீரோ அத்துணைக்கும் மகிழ்ச்சியுள்ளவராயிருப்பீர்".

-- "ஆ, நான் இன்னும் பெற வேண்டியதனைத்தையும் நினைக்கும்போது"

என அவளிடம் கூறியபோது -"அவ்வாறு கூறாமல், இழக்க வேண்டியதனைத்தையும் எனக் கூறுங்கள். உம் ஆன்மாவின் குறைகளைச் சிறிது சிறிதாக நீர் அகற்ற இயேசுவே அதை மாட்சியால் நிரப்புவார்".

"நீர் புண்ணியத்தைக் கடைப்பிடிக்கப் போவதில்லை" என அடிக்கடி அவள் என்னிடம் கூறுவாள்:நீர் மலையைக் கடந்து செல்ல விரும்புகிறீர். ஆனால் இறைவனோ சுயவெறுப்பை நீங்கள் கற்றுக் கொள்ளும் பொருட்டு உம்மைச் செழுமை மிக்க சமவெளியில் வழி நடத்திச்செல்ல விரும்புகிறார்".

## ஊஞ்சலில்விளையாடின புனிதர்:

"மனிதர் அனைவர் முன்னிலையிலும் நன்மதிப்பை இழக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" எனக் கூறும் புனித சின்னப்பரின் அறிவுரையை அப்படியே ஒன்றுவிடாமல் செயலாற்ற விரும்பிய நான், என்னைச் சுற்றிலும் நன்மாதிரிகையையே அளிக்க ஏங்கினேன். நவகன்னியர்கள் என்னைக் கண்டு பாவிக்க வேண்டும் என்பது என் நாட்டமாக இருந்தது. இதனால் ஏதோ தவறு செய்ய நேர்ந்து விட்டால், அனைத்துப் புண்ணியங்களையும் இழந்து விட்டதாக வருந்தினேன்.

அப்போது அவள் கூறினாள், "இவ்வாறு செய்வது தன்னையே தேடுதலாகும். இது உண்மையான ஆர்வமன்று, வெளித் தோற்றமே. புகழ் வாய்ந்த புனிதர் ஒருவரைக் காண விரும்பி ஆயர் ஒருவர் உயர்ந்த மனிதர்கள் புடை சூழ அவரை நாடிச் சென்றார்.

அணியுடன் வரும் தலைமை ஆயரைத் தொலைவிலே கண்ட புனிதருக்குத் தன்னைப் பற்றி பெருமையான நினைவு ஏற்பட்டது. இதை எதிர்த்துப் போராட வேண்டி, அண்மையில் மரத்தில் ஊஞ்சல் கட்டி விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைக் கண்ட அவர் விரைவில் ஒருவனைக் கீழே இறக்கி விட்டு அவன் இடத்தில் தன்னை



அமர்த்திக் கொண்டார். இதைக் கண்ட ஆயர் அவரை அறிவிலி என்று எண்ணி, வேறொன்றும் கேளாமல் திரும்பிச் சென்றுவிட்டார் எனக் கூறப்படுகிறது.

இவ்வாறு, புகழ்ச்சியைத் தாங்கிக் கொள்ள பெரும் பாலும் ஆன்மா பலமற்றிருக்கின்றது. அவ்வமயம், சில வேளைகளில் தன் புனிதத்தைக் காக்க, வெளிப்படையான நன்மையை முதலாய்ப் பலியிட வேண்டியிருக்கிறது. விழு வதில் நீங்கள் மகிழ்வெய்த வேண்டும். இவ்வாறு உம் வீழ்ச்சியால் இறைவனுக்கு நிந்தை ஏற்படாதாயின், தன்னைத் தாழ்த்துவதற்கென்றே இவ்வாறு செய்ய வேண்டும்".

## புனித கன்னிமரியாளைப் பின்பற்று

தன்னைப் பற்றி பிறர் கொள்ளும் கருத்தில் அவள் கவனஞ் செலுத்தவில்லை. தன் வெளித் தோற்றத்தால் பிறர் இடறல் அடைந்த போதும் அவள் வாளாவிருந்தாள். நோய் அவளைப் பற்றின தொடக்கத்தில், உணவருந்த சில நிமிடங்களுக்கு முன் மருந்து சாப்பிடச் செல்ல வேண்டியிருந்தது. இதைக் கவனித்த மூத்த சகோதரி ஒருத்தி, அவள் காலந் தாழ்த்தி வருவதாகக் குறை கூறினாள். தன்னை மன்னித்துக் கொள்ளவும், அச்சகோதரியைச் சாந்தப் படுத்தவும் அவள் ஒரு சொல் கூறியிருந்தால் போதும். ஆனால் அவளோ அவ்வாறு செய்யவில்லை. புனித வளனாரிடம் தன்னை மன்னித்துக் கொள்ளவேண்டுவதை விட, தன் நற்பெயரையே இழக்க விரும்பிய புனித கன்னிமரியாளைப் பின்பற்றி அவள் மௌனங் காத்தாள். இத்தகைய எளிய, வீரத் தனமான செயலைப் பற்றி அவள் அடிக்கடி என்னிடம் பேசுவாள்.

மரியாளைப் போன்று அவள் கையாண்ட வழி, மௌனமே. தன் மகிழ்ச்சி துன்பம் அனைத்தையும் அவள் இதயத்தில் வைத்துக் காக்க விரும்பினாள். இதுவே அவளது பலமாகவும், புனிதத்தனத்தின் தொடக்கமாகவும், வெளித் தோற்றத்தின் முத்திரையாகவும் விளங்கியது. அமைதியில். சமநிலையில் அவள் சிறந்து விளங்கினாள்.

## எளிய மனம்

"இழப்பவரே பெற்றுக் கொள்வர்" என்ற விருது வாக்கை அடிப்படையாகக் கொண்டு நான் உருவாக்கிய படைக்கலச் சின்னங்களை **(armorial bearings)** என் அன்பு நிறை சிறிய சகோதரி என் வார்த்தைப் பாட்டின் நினைவாக எனக்கு வண்ண ஓவியமாக வரைந்து தந்தாள். இதன் மூலமாக, எளிய மனதையடைய இவ்வுலகில், அனைத்தையும் இழக்க வேண்டும், அனைத்தையும் எடுத்துக்கொள்ள, விட்டு விடவேண்டும் என்று எனக்கு விளக்கினாள்.

தன்னைவிட அயலார் ஆன்மீக அருட்கொடைகள் பெற்றுக் கொள்வதை அவள் பெரிதும் விரும்பினாள். தனக்குப் பெரிதும் நன்மை பயக்கும் நூலொன்றை வாசித்து முடிக்காமலேயே சகோதரிகட்குக் கொடுத்துவிட்டதை நான் ஒருமுறை கண்டேன். இவ்வாறு அவள் என்றுமே தன் வாசகத்தை முடிக்க இயலாமற் போய்விட்டது.

இறைவன் அவளுக்கு ஞான ஒளியை அருளும்போது தன்னால் இயன்றமட்டும் அதை எங்களுடன் பகிர்ந்து கொள்வாள். ஆனால் சில வேளைகளில், எத்தகைய சுவடும் விட்டு வைக்காமல், ஆழ்ந்த ஒளி திடீரெனத் தோன்றி மறைந்துவிடும். "உடனே அதைப் பிடித்து வைத்துக் கொள்ள



விரும்பினேன். ஆனால் முடியவில்லை. என் ஆன்மாவில் இம்மகிழ்ச்சியைப் புகுத்திய அதைத் தேடிக் களைப்புறுவதற்கு மாறாக, அது எவ்வாறு வந்தது என்று அறியத் தேடாமல், அது விட்டுச் சென்ற சுகந்தத்தைச் சுகிப்பதோடு நிறுத்திக் கொள்வேன். இத்தகைய எளிமை எனக்கு மனநிறைவைத் தருகிறது" என்று அவள் என்னிடம் கூறினாள். தமக்கென எதையும் கொண்டிராது முற்றிலும் தம் பெற்றோர்களையே சார்ந்து வாழும் சிறு குழந்தைகளைப் போன்று, ஞான சேமிப்பு எதுவும் வைக்காமல், ஒவ்வொரு நாளும் வாழ வேண்டுமென அவள் விரும்பினாள்.

இறைவனுக்கு அழகிய சிந்தனைகளும் உயரிய உணர்ச்சிகளும் தேவை என்றால் அவருக்குத்தான் வானதூதர்கள் உள்ளனரே. நம் இயல்பின் பலவீனங்களில் ஒன்றைக்கூட அறியாத நிறைவுள்ள ஆன்மாக்களையே அவர் படைத்திருக்கலாமே. ஆனால் அப்படியன்று. எளிய, வறிய, சிறிய படைப்புக்களில் தான் அவர் பேரின்பம் காண்கிறார். இதுவே அவருக்கு மிகவும் பிடித்தது என்பதில் ஐயமில்லை.

## எதிலும் ஊன்றி நில்லாமை

தன் பக்தியை ஊட்டி வளர்க்க, தெரேசாள் சகோதரி மறைநூலின் வசனங்களையும் பகுதிகளையும் நினைவூட்டிக் கொள்வாள்.

"நானும் இவ்வாறு செய்ய விரும்புகிறேன். ஆனால் எனக்கோ போதிய நினைவாற்றல் இல்லை" ,என்றேன் அவளிடம்.

-- ஆ, நீங்கள் செல்வங்களை, உடைமைகளைக் கொண்டிருக்க விரும்புகிறீர்கள். அவற்றின் மீது ஊன்றியிருப்பது, பழுக்கக் காய்ச்சின இரும்பின் மீது ஊன்றியிருப்பதாகும். இதனால் சிறிய வடு ஒன்று ஏற்படும். எதன் மீதும், ஏன் பக்தியை வளர்க்கக் கூடியதின் மீது முதலாய் ஊன்றாது நிற்றல் அவசியம். ஒன்றுமில்லாமையே உண்மையாகும். ஆசையோ, மகிழ்ச்சியின் நம்பிக்கையோ இல்லாதிருத்தலாகும். அப்போது எத்துணை மகிழ்ச்சியாயிருப்போம்! "உண்மையான எளிய மனத்தவனை எங்குத் தேடிக் கண்டுபிடிப்பது? மிகத் தொலைவில் உலகின் இறுதி எல்லை வரை தேடவேண்டும்" (கிறிஸ்து. வழி வாழ்வு) வெகு தொலைவில், அதாவது மிகவும் தாழ்ந்த, தன் சுய மதிப்பில் மிகவும் தாழ்ந்த, தாழ்ச்சியினால் மிகவும் தாழ்ந்த-ஆம், மிகவும் தாழ்ந்த அதாவது மிகச் சிறியவனைத் தேடவேண்டும்.

## அனைவரும் குறிசொல்லை நாடுகின்றனர்

**அவள் கூறுவாள்:**

"நீர் செய்யும் ஒவ்வொரு செயலும் உம் இறுதி நோக்கம் என்பது போல் அவற்றிற்கு உம்மை முற்றிலும் கையளித்துவிடுகிறீர். என்றும் வெற்றியையே எதிர் பார்க்கிறீர். வீழ்ச்சி உமக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. விழுவதை என்றும் எதிர்நோக்கியிருக்க வேண்டும். நீர் தான் எதிர்காலத்தைக் கணிக்க வேண்டியவர் போல் எண்ணி கவலை கொள்கிறீர். உம் கவலையை நான் புரிந்து கொள்கிறேன். "இறைவா! என் கைகளிலிருந்து உருவாகப் போவது யாதோ" என்று பெரும்பாலும் உம்மையே கேட்டுக் கொள்கிறீர். இவ்வாறு, எல்லாரும் குறிசொல்லை



நாடுகின்றனர். இது பொது வழியே. இதைத் தேடாதவர் மட்டுமே எளிய மனத்தோர் ஆவர்".

## மனிதர் பாராட்டுதலில் பெருமை கொள்ளல்

மனிதர்கள் என் முயற்சியைக் காணவும், என் முன்னேற்றத்தை நோக்கவும் வேண்டுமென்ற ஏன் ஆவலை வெளிப்படுத்தினேன். இதற்குத் தெரேசாள் சகோதரி சட்டென்று பதில் கூறினாள்:

"இவ்வாறு செய்தல், முட்டையிட்டவுடனேயே வழியில் செல்வோருக்குக் கூவி அறிவிக்கும் கோழியைக் கண்டுபாவிப்பதாகும். நற்செயல் புரிந்தவுடனேயே உம் கருத்தில் குறை சொல்லுக்கு இடமில்லை என்றோ, அனைவரும் அதையறிந்து பாராட்ட வேண்டுமென்றோ கோழியைப் போன்று நீங்களும் விரும்புகிறீர்கள். நம்மோடு வாழும் இருபது பேர்களின் பாராட்டுதல்களைப் பெற விரும்புதல் எத்தகைய வீண் பெருமை! இவர்கள் ஒவ்வொருவரும் தம்மையே மையமாகக் கொண்டு, தத்தம் சொந்த கருத்துக்கள், உடல் நலன், குடும்பம், ஞான முன்னேற்றம் அல்லது சொந்த நலன்கள் இவற்றைக் கவனித்து வருகின்றனர். உலகப் போக்கிற்கான சொற்களும் இவர்களிடமிருந்து வெளிவருகின்றன. ஆனால் புனிதர்களை நோக்குங்கால், அவர்களிலும் சில பலவீனங்கள் காணப்பட்டன என்றும், அவர்கள் வாயினின்றும் மனித இயல்பிற்குரியதும் சிலமுறை தாழ்ந்ததுமான சொற்கள் வெளிவந்தன என்றும் கூறிக் கொள்கிறேன். அப்போதெல்லாம் என்எண்ணத்தில் தோன்றுவது இதுவே: விண்ணில் மட்டுமே அன்பையும்

பாராட்டுதலையும் பெற விரும்ப வேண்டும். ஏனெனில், அங்குத்தான் எல்லாம் நிறைவுள்ளதாயிருக்கும்.

விண்ணில் மட்டுமே அவள் அன்பைப் பெறவும் போற்றப்படவும் ஆசித்தாள் என்பது முற்றிலும் உண்மையே. ஏனெனில், இவ்வுலகில் ஒன்றுமில்லாமையாய்க் கருதப் படவே அவள் என்றும் விழைந்தாள். "அறிந்தால் மட்டுமே வெறுக்கமுடியும். ஆகவே வெறுக்கப்படுதலில் மகிமை கலந்திருப்பதால், மறக்கப்படுதலையே அவள் விரும்பித் தேர்ந்து கொண்டதாகப் பன்முறை என்னிடம் கூறியுள்ளாள்.

என் அன்புக்குரிய சிறிய சகோதரிக்கு முற்றிலும் மாறாக, என்றும் வீண் பெருமையால் ஈர்க்கப்பட்ட நான், என் சிறு தியாகச் செயல்களில் பிறர் கவனத்தை இழுக்க முயன்றேன். அப்போது அவள் என்னிடம் கூறினாள்.

"நீர் இலாபம் பெறுவதிலேயே இருக்கிறீர் பலர் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். போதிய அளவிற்குக் கிடைக்காமற் போய்விடுமோ என்று அஞ்சி நான் இவ்வாறு செய்தலை முற்றிலும் விலக்குகிறேன். மாறாக, இயன்ற வரை நான் செய்வதையெல்லாம் மறைத்துவிடுகிறேன். வட்டி கிடைக்குமோ இல்லையோ என்ற கவலை ஏதுமின்றி கடவுளின் வங்கியில் அவற்றைப் போட்டு வைக்கிறேன்.

ஒருமுறை சிரித்துக் கொண்டே, என் கையை நீட்டுமாறு வற்புறுத்தி, அங்கு ஒரு விரலில் "வட்டி ஆசை"என மசியில் எழுதி, சிறிது நாட்களுக்கு இதை அழிக்காமல் வைத்திருக்குமாறு என்னை வற்புறுத்தினாள்.



## கிழிந்த போர்வைகளும் தன்னலமும்

நாங்கள் போர்வைகளைத் தட்டிக் கொண்டிருந்தோம். அவை மோசமான நிலையில் இருந்ததால், அதிக கவனமாய்ச் செய்யுமாறு சிறிது ஆத்திரத்துடன் நான் கூறும்படி நேரிட்டது.

அப்போது குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி எனக்கு எடுத்துக் கூறுவாள்:

"இப்போர்வைகளைப் பழுதுபார்க்கும் பொறுப்பு உமக்கு இல்லாதிருந்தால் என்ன செய்திருப்பீர்? எத்துணை விடுபட்ட உள்ளத்துடன் செயல் புரிந்திருப்பீர்? அவை ,விரைவில் கிழியக் கூடும் என்று எடுத்துக் கூறுவதிலும் எத்தகைய பற்றின்மை காணப்பட்டிருக்கும். இவ்வாறு, உம் செயல்கள் அனைத்திலும், சொந்த நலனின் மிகச் சிறிய நிழல்கூட என்றுமே விழாமல் இருக்கக்கடவது"

## செலீன் மோதிரம் தொலைந்துவிட்டது

தன் கையெழுத்துப் பிரதியில் அவளே கூறியுள்ள குழந்தைப் பருவ நிகழ்ச்சி இது: மினவுதல் சபையிலிருந்த எங்கள் பெரியம்மாவிடம் காட்டுவதற்கு அவளை மான்ஸ் (Mans) நகரத்திற்கு இட்டுச் சென்ற போது, அவளுக்கு ஈராண்டும் நான்கு மாதங்களும் நிரம்பியிருந்தன. பெரியம்மா அவளுக்கு இனிப்புகள் அடங்கிய சிறிய கூடையொன்றை அளித்தாள். மணிகளாற் பின்னப்பட்ட இக் கூடையில் சர்க்கரையாலான இரு மோதிரங்களும் காணப்பட்டன. உடனே குழந்தை "ஆ, என்ன இன்பம்! செலீனுக்கு ஒருமோதிரம் உள்ளது" எனக் குரல் எழுப்பினாள். ஆனால் அலான்சோனுக்குத் திரும்பிவர

புகைவண்டி நிலையத்திற்குச் செல்லும் வழியில், இனிப்புகள் எல்லாம் சிந்திவிட்டதையும், அவளது விலையுயர்ந்த மோதிரங்களில் ஒன்று மறைந்து விட்டதையும் கண்ட அவள் செலீனுக்குக் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லையே என்று மிகவும் கலங்கினாள். கண்ணீர் சிந்தி அழுதாள். பிறகு, கர்மேலில் இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகையில் "தன்னலம் நம்மில் எத்துணைக்கு வேரூன்றியுள்ளது பார்த்தீர்களா? காணாமற்போனது செலீன் மோதிரமாகத்தான் இருக்க வேண்டுமா? என்னுடையதாக இருக்கக் கூடாதா"? என்று என்னிடம் கூறினாள்.

## பலனைக் காணாத் தியாகம்

ஒருமுறை அவள் என்னிடம் மனம் திறந்து கூறினாள்: "14 வயது வரை, புண்ணியத்தின் இனிமையை உணராமலேயே அதை கடைப்பிடித்தேன். என்றுமே அதன் கனிகளை நான் கண்டதில்லை. பூக்கள் மலர மலர விழுந்து கொண்டேயிருக்கும் மரத்தை ஒத்திருந்தது என் ஆன்மா. "இறைவனுக்காக என்றுமே கனி கொய்யாமலிருக்கும் தியாகத்தைச் செய்யுங்கள், அதாவது, வாழ்நாள் முழுவதும் துன்பத்தில் வெறுப்பைக் காணுதலையும், அவமானப்படு தலையும், நல்ல ஆசைகளும் நல்ல மனதுமான அனைத்து மலர்களும் எத்தகைய பலனும் தராது தரையில் விழுவதைக் காணுதலையும் தியாகமாக ஏற்றுக் கொள்ளுங்கள். உங்கள் இறுதி வேளையில், கண்ணிமைப் பொழுதில் உம் ஆன்மாவெனும் மரத்தில் அழகு செறிந்த முதிர்ந்த கனிகளை அவர் தோன்றச் செய்வார்". என்று தெரேசாள் கூறியது எத்துணை உண்மை என்பதை இறைவன் எனக்குக் காட்டத் திருவுளமானார். சீராக் ஆகமத்தில் பின்வரும் இப்பகுதியை



வாசித்த நான், அவளிடம் அதைக் காட்டிய போது அவள் பெரிதும் மகிழ்ந்தாள்.

"ஒருவன் தைரியமில்லாதவனாகவும் பரம ஏழையாகவும் இருக்கிறான். கடவுளுடைய கண்கள் தயவாய் அவனை நோக்கின. அவன் தாழ்மையினின்று அவனைத் தூக்கி, அவனை உயர்த்தின. பலர் அவனைப் பற்றி வியப்படைந்து கடவுளைப் போற்றினார்கள்.

கடவுள் மீது உன் நம்பிக்கையை வைத்து, மனவுறுதியில் நிலைத்திரு. ஏனெனில், வறியவனை ஒரே நிமிடத்தில் செல்வனாக்குவது கடவுளுக்கு எளிதான காரியமாகும். கடவுள் நீதிமானை ஆசீர்வதித்து, அவனுக்குக் கூடிய விரைவில் வெகுமதி அளிப்பார். வெகு விரைவில் அவன் பலனடைவான்."

# குழந்தை உள்ளம்

விசாரணை நீதிமன்றத்தில், விசுவாச ஊக்குவிப்பாளர், குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரிக்கு, முக்தை பட்டம் அளித்தலை எதற்காக விரும்புகிறேன் என்று என்னை வினவியபோது,

--"அவளது "சிறிய வழி"யை அறியச் செய்வதற்காக மட்டுமே" எனப் பதிலளித்தேன். (இறைவனிடம் செல்லத் தான் கையாண்ட வழியை, தன் ஆன்மீக வழியை, அவள் இவ்வாறு தான் அழைத்தாள்)

--"நீங்கள் "வழி" யைப் பற்றிப்பேசினால், நிச்சயமாக வழக்கு தோற்று விடும். முன்னரே இது போன்ற பல

சந்தர்ப்பங்களில் இவ்வாறு தான் நிகழ்ந்துள்ளது" என்று அவர் என்னைக் கண்டித்தார். ஆனால் நானோ

--"பரவாயில்லை; சிறிய வழியை எவ்வகையிலாவது மாட்சிமை பெறச் செய்வதில் தான் என் முழு கவனமும் இருப்பதால், தெரேசாள் சகோதரியின் வழக்கு நின்று விடுமோ என்று அஞ்சி அதற்காக இதை நான் வெளிப்படுத்தாமல் இருக்கப் போவதில்லை" என்று விடை பகர்ந்தேன். உறுதியாய் நின்றேன்; வழக்கும் நின்று விடவில்லை. இதனால் தான் எங்கள் புனிதைக்கு முக்தை, புனிதை பட்டங்கள் அளிக்கப்பட்ட நாட்களை விட, 15 ஆம் ஆசிர்வாதப்பர் ஞானப் பாலத்துவத்தைப் போற்றிப் புகழும் வகையில் ஆற்றிய திருவுரையின் நாளன்றே நான் மிகுதியான மகிழ்ச்சி எய்தினேன். அன்றுதான், அதாவது 1921ஆம் ஆண்டு ஆகஸ்டு 14 ஆம் நாளில், என் இலட்சியம் நிறைவேறினது. இயல்பைக் கடந்த கொடைகளைப் பற்றி நான் அளித்த பின் வரும் விடையை, விடைத் தொகுப்பு ஏடு பதிவு செய்தது: "இக் கொடைகள் நம் இறையடியாளின் வாழ்வில் மிக்க அபூர்வமாகவே இருந்தன. என் மனச் சான்றிற்கு ஏற்றபடி அவளது உண்மையான தோற்றத்தைக் கூறாமலிருப்பதைவிட, அவள் முக்தை பட்டம் பெறா மலிருப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்."

...சிறிய ஆன்மாக்களுக்கு எடுத்துக் காட்டாக அமையும் பொருட்டு, அவளது வாழ்வு எளிமையாய் இருக்க வேண்டியிருந்தது. அனைத்திலும் எங்கள் அன்புத் தலைவி எங்களுக்குத் தன் "சிறிய வழி"யையே காட்டினாள் என்பது உண்மை. "அதில் நடந்து செல்ல, தாழ்ச்சியையும், எளிய மனத்தையும் எளிமையையும் கொண்டிருத்தல் வேண்டும்" என அவள் கூறினாள். "என் வாழ்வை நான் மீண்டும்



தொடங்கக் கூடுமாயின், குழந்தை இயேசுவோடு இடைவிடாது கை குலுக்கும் மிகச் சிறிய குழந்தையாகவே இருக்க விரும்புவேன்." என மாபெரும் மேதையான போசுவே தன் இறுதி வேளையில் கூறிய இச் சொற்களை, தெரேசாள் அறிந்திருந்தால் தனதாக்கிக் கொண்டிருப்பாள். சிறியோர்க்கு வெளிப்படுத்தப்பட்ட ஒளியில், தெரேசாள் வியத்தகு முறையில் மீட்பின் இவ்வாயிலைக் கண்டுபிடித்து பிறர்க்கும் இதைக் காட்டினாள். தெய்வீக ஞானமும் மனித ஞானமும் இக்குழந்தை உள்ளத்தில், ஆன்மாவின் உண்மையான மேன்மையைக் காட்டவில்லையா?

புகழ் பெற்ற சீனத்தத்துவ ஞானிகள் இதற்குச் சிறந்த வரையறைகள் தந்துள்ளனர். "புண்ணியத்தின் முதிர்ந்த நிலை குழந்தை உள்ளத்தில் தான் முடிவடைகிறது" (லா ஓத்சே. கி.மு. VII நூற்றாண்டு)

"குழந்தை உள்ளத்தை இழந்து விடாதவனே உயரிய மனிதன்" (மெங்க்த்சே. கி.மு.IV நூ) "அறநெறியில் ஒழுகி, குழந்தை உள்ளத்தை மீண்டும் பெறுதலே வீரிய புண்ணியத்தைப் பயிற்சித்தலாகும்." (தலூத்தா ஷின்ங்) நான் முன்னரே கூறியதுபோல், நம் புனிதைக்கு இச்சிறிய வழி, தாழ்ச்சியில் தான் அடங்கும். ஆனால் குழந்தை உள்ளத்தால் தான் நன்கு வெளிப்படுத்தப்படுகிறது. நற்செய்தியிலிருந்து தான் சேகரித்த பின் வரும் வசனங்களைப் பற்றி என்னிடம் பேசுவதில் அவளுக்குத் தனி இன்பம்:

"குழந்தைகள் என்னிடம் வருவதைத் தடுக்க வேண்டாம், விடுங்கள். ஏனெனில் விண்ணரசு இத்தகையோரதே"

"அவர்களுடைய விண்ணுலகத் தூதர் வானகத்திலுள்ள என் தந்தையின் முகத்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்"



3

"இக் குழந்தையைப் போல் தன்னைத் தாழ்த்திக் கொள்ளுகிறவன் எவனோ, அவனே விண்ணரசில் பெரியவன்"

"இயேசு குழந்தைகளை அரவணைத்து, கைகளை அவர்கள் மேல் வைத்து ஆசீர்வதித்தார்"

சிறு வயதில் விண்ணிற்குப் பறந்து சென்றுவிட்ட எம் சகோதர சகோதரிகள் நால்வரின் புகைப்படங்கள் பதிக்கப்பட்ட படத்தின் பின்புறத்தில் இவ்வசனங்களை எழுதிவைத்தாள். திருப்புகழ்மாலை ஏட்டில் தான் ஒன்று வைத்துக் கொண்டு எனக்கு ஒன்று கொடுத்தாள். கால ஓட்டத்தில் இப்புகைப்படங்கள் பொலிவிழந்து இப்போது சற்று மங்கலாக உள்ளன. இந் நற்செய்தி வசனங்களுக்கு அடியில், குழந்தை உள்ளத்தோடு தொடர்பு கொண்ட வேறு சிலவற்றையும் சேர்த்து அவள் எழுதியுள்ளாள்;இவளுக்கு மிகவும் பிடித்தமான இவை மறைநூலிலிருந்து எடுக்கப்பட்டவை. "செயல்கள் இன்றியே, தமக்கு ஏற்புடையவன் எனக் கடவுள் மதிக்கும் மனிதன் பேறுபெற்றவன்; ஏனெனில், வேலை செய்தவன் வாங்கும்" கூலி, நன்கொடை என்று மதிக்கப்படுவதில்லை, உரிமை என்றே மதிக்கப்படும்".(உரோமையர்) "ஆயனைப்போல் அவர் தமது மந்தையை மேய்ப்பார், ஆட்டுக்குட்டிகளைத் தம் கையால் கூட்டிச் சேர்ப்பார், அவற்றை அன்போடு எடுத்து அரவணைப்பார்(இசை.40.11) மற்றொரு பெரிய படத்தின் பின்புறத்தில், பின்வரும் மறைநூல் வாக்கியங்களைக் குறித்து வைத்திருந்தாள். எந்த அளவில் அவளது "வழி"க்கு இவை ஒளியூட்டின எனக் காணுதல் சுவையாக இருக்கும்.

"சிறுவனாய் இருப்பவன் எவனும் என்னிடம் வருவானாக" "தாயானவள் தன் மகவைச்



சீராட்டுவதுபோல, நாம் உங்களுக்கு ஆறுதல் தருவோம். மார்போடணைக்கப்படுவீர்கள்; மடிமேல் சீராட்டப் பெறுவீர்கள்"

"தந்தை தம் மக்களுக்கு அன்பு காட்டுவதுபோல, ஆண்டவர் நமக்கு இரக்கம் காட்டுகிறார்;கீழ்த் திசைக்கும் மேற்றிசைக்குமிடையே எவ்வளவு தொலையுள்ளதோ, அவ்வளவு தொலைவுக்கு அவர் நம் பாவங்களை நம்மிடமிருந்து அகற்றிவிடுகிறார்; ஆண்டவர் அன்பும் அருளும் மிக்கவர்; சினங்கொள்ளத் தாமதிப்பவர்; சாந்தமுடையவர்". "இக்குழந்தையைப் போல் தன்னைத் தாழ்த்திக் கொள்கிறவன் எவனோ, அவனே விண்ணரசில் பெரியவன்". "தந்தாய், நீர் என்பால் அன்புகூர்ந்ததுபோல் அவர்கள் மீதும் அன்புகூர்ந்தீர்". நமதாண்டவர் மடிமீது அமர்ந்து, அவரது தெய்வீக வதனத்தை முத்தமிட முயலும் குழந்தையைச் சித்தரிக்கும் படத்தின் மீது அவள் தனிப்பிரியம் கொண்டிருந்தாள்.

சிறு வயதிலேயே இறந்து விட்ட ஒரு பெண் குழந்தையின் நினைவுப் படத்தை நான் அவளிடம் காட்டினேன். "இவர்கள் அனைவரும் என் ஆதிக்கத்தின் கீழ் உள்ளனர்" என்று அவள் தன் விரலைக் குழந்தையின் முகத்தில் வைத்து கனிவோடும் பெருமையோடும் கூறினாள். "குழந்தைகளின் அரசி" என்ற தன் பட்டத்தை முன் கூட்டியே அறிவிப்பது போலிருந்தது அவளது இச்செயல்

* * * *

இயேசுவின் குழந்தை தெரேசாள் உயரமான தோற்ற முடையவள். அவளது உயரம் 1 மீ. 62 செ.மீ. இயேசுவின்

ஆக்னேஸ் தாயாரோ மிகவும் சிறிய உருவத்தினர். ஒரு நாள் நான் அவளிடம்:

"உங்களையே தேர்ந்தெடுக்கச் சொன்னால் எதை விரும்புவீர்? உயரிய தோற்றத்தையா? சிறிய தோற்றத்தையா?" என வினவினேன்.

அவள் எத்தகைய தயக்கமுமின்றி, "அனைத்திலும் சிறியவளாயிருக்க சிறிய தோற்றத்தையே நான் விரும்பி யிருப்பேன்" எனப் பகர்ந்தாள்.

1937 ஜூலை 11 இல், 12ஆம் பத்திநாதர் லிசியே பேராலயத்திறப்பு விழாவின்போது, 11ஆம் பத்திநாதரின் முகவராக வந்திருந்த போது மொழிந்த சான்றை மட்டும் யான் ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

"குழந்தை இயேசுவின் புனித தெரேசாளுக்கு ஒரு பணி உண்டு;போதனையும் உண்டு ஆனால் அவளது போதனை அவளைப் போலவே தாழ்ச்சியும் எளிமையும் கொண்டது. "ஞானப்பாலத்துவம்" என்ற இரு சொற்களிலோ அதையொத்த "சிறிய வழி" என்ற வேறு இரு சொற்களிலோ இதி அடங்கும்".

## மனுவுருவெடுப்பின் மறைபொருள் மீதும் குடிலின் மீதும் உள்ள பக்தி:

ஆண்டுதோறும் மார்ச் 25ஆம் நாளை அவள் மாபெரும் பக்தியுடன் கொண்டாடுவாள். ஏனெனில் அவள் கூற்றுப்படி, இந்நாளில் தான் மரியாளின் வயிற்றில் இயேசு மிகச் சிறியவராய் இருந்தார்.



குடிலின் மறைபொருள் மீது அவளுக்குத் தனி அன்பு உண்டு. அங்குத்தான் குழந்தை இயேசு எளிமையையும் கையளித்தலையும் பற்றிய தம் இரகசியங்கள் அனைத்தையும் அவளிடம் கூறுகிறார்.

"ஓர் இறைவனுக்குத் தகுதியற்ற இக்குடிலையும் கந்தைத் துணிகளையும் அகற்றிப் போடுங்கள்" என வெறுப்புடன் கூறினான் பதிதன் மார்சியான். அவனுக்கு மாறாக, நம் மீதுள்ள அன்பின் பொருட்டு மிகச் சிறியவரான நமது ஆண்டவரின் தாழ்மையில் காதல் கொண்டாள் தெரேசாள்.

-"இயேசுவே, உம்மை இத்துணைச் சிறியவராக்கியது யார்?"

-"அன்புதான்" என்ற புனித பெர்நார்தின் இவ் வசனங்களை, தான் வரைந்த கர்த்தர் பிறப்புப்படங்களில் அவள் மகிழ்ச்சியோடு எழுதினாள்.

கர்மேல் கன்னிகையாக வேண்டுமென தனக்குள்ள ஆவலை 9 வயதில் அவள் வெளியிட்டபோது, தனதாக்கிக் கொண்ட 'குழந்தை இயேசுவின் 'என்ற பெயர் என்றும் அவளுக்குப் பொருத்தமாகவே விளங்கியது. அப்பெயருக் கேற்ப வாழ அவள் இடைவிடாது முயன்றாள். "சிறிய பாலனே!, எனக்குள்ள செல்வமெல்லாம் நீயே! உன் தெய்வீக விளையாடலுக்கு என்னைக் கையளிக்கிறேன். உன்னில் புன்னகை மலரச் செய்வதையன்றி வேறு மகிழ்ச்சியை யான் விரும்பேன். உன் அருட்கொடை களையும், பாலத்துவ புண்ணியங்களையும் என்னில் பதியச் செய்யும். இதனால், நான் விண்ணில் பிறக்கும் நாளன்று, தூதர்களும் புனிதர்களும் உம் சிறிய மணமகள் "குழந்தை இயேசுவின் தெரேசாளைக் கண்டு கொள்வர்". அவள்

ஆவலுடன் விரும்பிய இப்பாலத்துவ புண்ணியங்கள் இவளுக்கு முன், தபசியான புனித ஜெரோமின் வியப்பைப் பெற்றுவிட்டன. ஆனால் இதற்காக, சிறுபிள்ளைத்தனம் என, அவர் குற்றம் சாட்டப்படவில்லை.

## விண்ணைக் களவாடியவர்கள்:

"மாசில்லாக் குழந்தைகளைப் போன்றும் நல்ல கள்ளனைப் போன்றும் விண்ணைக் களவாடியவர்களே என் விண்ணகப் பாதுகாவலரும், என் தனி அன்புக்கு உரிய வருமாவர். பெரிய புனிதர்கள் தம் உழைப்பினால் விண்ணைப் பெற்றனர். நானோ கள்ளர்களைப் பின்பற்ற விரும்புகிறேன். சூழ்ச்சியினால் அதைப் பெற விரும்புகிறேன். ஆம், எனக்கும், எளிய பாவிகட்கும் விண்ணக வாயிலைத் திறந்துவிடும் அன்பின் சூழ்ச்சி இது. இந்தச் சூழ்ச்சியைக் கையாள, புனித ஆவியானவர் எனக்கு ஊக்கமூட்டுகிறார். ஏனெனில், "சிறுவர்களே, வாருங்கள், என்னிடமிருந்து சூட்சத்தைக் கற்றுக் கொள்ளுங்கள்" என பழமொழி ஆகமத்தில் அவரே கூறியுள்ளாரே"

## சிறுகுழந்தைகளின் இல்லம்:

புனிதர்களின் ஒறுத்தல்களைப் பற்றி அவளிடம் கூறியபோது அவள் பகர்ந்த விடையாவது;

"தம் தந்தையரின் வீட்டில் பல இல்லங்கள் உள்ளன என நமதாண்டவர்" முன் கூட்டியே நமக்கு அறிவித்தது எத்துணை நலமாயுள்ளது! நிறை வாழ்விற்கு அழைப்புப் பெற்றவர் அனைவரும் விண்ணில் நுழைய இவ்வுடல் ஒறுத்தல்களைச் செய்து தான் ஆகவேண்டு மென்றிருந்தால், அவரே நமக்கு இதைக் கூறியிருப்பார். நாமும் தாராள



சிந்தையோடு அவற்றைச் செய்திருப்போம். ஆனால் அவரோ, தம் வீட்டில் இல்லங்கள் பல உள்ளன என்று அறிவிக்கிறார். வனத்துறவிகளும் தபோதனர்களும் போன்ற உயரிய ஆன்மாக்களுக்கு இல்லம் உண்டு என்றால், சிறு குழந்தைகளுக்குரிய இல்லமும் அங்கு இருக்கத்தான் வேண்டும். நாம் அவருக்கு மிகுதியாக அன்பு செய்வோமானால், அதாவது அவருக்கும், நம் விண்ணகத் தந்தைக்கும், அன்பின் ஆவியானவருக்கும் அன்பு செய்வோமானால் நமது இடம் அங்கே ஒதுக்கப்பட்டிருக்கும்".

இதிலிருந்து குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி சாதாரண வழி வகைகள் மூலம் தன்னைப் புனிதப்படுத்திக் கொண்ட ஓர் எளிமை மிக்க ஆன்மா என்பதைக் காணலாம்.

நூதனக் கொடைகளைத் தன் வாழ்வில் அவள் அடிக்கடி பெற்றிருந்தால், இது அவளில் கடவுள் வகுத்த திட்டத்திற்கு முரணாக அமைந்திருக்கும். அவளது வாழ்வு சிறிய ஆன்மாக்களுக்கு மேல் வரிச் சட்டமாக விளங்கியது.

## சிறிய குழந்தைகள் தீர்ப்புப் பெறுவதில்லை.

-- உமது துறவற வாழ்வை மீண்டும் தொடங்கக் கூடுமானால் என்ன செய்திருப் பீர்கள்? இது என் கேள்வி.

-- நான் செய்ததையே தான் செய்திருப்பேன் என நினைக்கிறேன். இது அவள் அளித்த பதில்.

"பல்லாண்டுகளைத் தபத்தில் கழித்த போதிலும், இறக்கக் கால் மணி நேரம் இருக்கும் போதும், அழிவிற்குச் சென்று விடுவேனோ என்ற அச்சம் என்னுள் இருக்கவே செய்யும்" என்று அறுதியிட்டுக் கூறிய வனத்துறவி ஒருவரின் உளப்பாங்கு உம்மிடம் இல்லையா?

-- இல்லை, இந்த அச்சத்தை என்னால் பகிர்ந்து கொள்ள முடியாது. தீர்ப்புப் பெற நான் மிகவும் சிறியவள். சிறு குழந்தைகள் தீர்ப்புப் பெறுவதில்லை .

## குதிரையின் அடியில்புகுந்துசெல்லல்:

மேற்கொள்ள முடியாததெனத் தோன்றிய போராட்டம் ஒன்றினால் வருத்தமும் அவதைரியமும் மேலிட அவளையணுகி நான் முறையிட்டேன்: இம்முறை இது முடியாத செயல். என்னால் இதை மேற்கொள்ள முடியாது".

**அவள் கூறினாள்:**

-- இதில் எனக்கு வியப்பொன்றுமில்லை . பிரச்சனைகளுக்கு மேலாக உயர்ந்து நிற்க நாம் மிகச்சிறியவர்களாய் உள்ளோம். இதனால் நாம் கீழே புகுந்து போக வேண்டியதுதான்". சிறுவயதில் நடந்த நிகழ்ச்சியொன்றை எனக்கு நினைவு படுத்தினாள்: அலான்சோன் நகரில் அண்டை வீட்டில் இருந்த சமயம், குதிரையொன்று தோட்டத்திற்குச் செல்லும் வழியை அடைத்துக் கொண்டு நின்றது. பெரியவர்கள் அனைவரும் வேறு வழியாகச் செல்ல முயன்று கொண்டிருந்தனர். எங்கள் சிறிய தோழியோ (ஏறக்குறைய 7 வயது நிரம்பிய தெரேஸ் லெஹு, என் வயதினள்) குதிரையின் கீழ்ப்புகுந்து செல்வதைவிட எளிதான வழி வேறு ஒன்றுமில்லை எனக்கண்டு, தான் முதலில் நுழைந்தாள். பின் எனக்குக் கைகொடுக்க, நான் தெரேசாளை இழுத்துக் கொண்டே அவளைப் பின்பற்றிச் சென்றேன். இவ்வாறு, எங்கள் சிறிய உடலை அதிகம் வளைக்காமலேயே குறித்த இடத்தை அடைந்துவிட்டோம்.



"சிறியவராயிருப்பதால் கிடைக்கும் ஆதாயம் இதுதான். சிறியவருக்குத் தடையேதும் கிடையாது. எங்கும் அவர்கள் நுழைந்துவிடுவர். உயரிய ஆன்மாக்கள் பிரச்சனைகளைக் கடந்து போகலாம்; திருப்பி மாற்றலாம்; நியாயத்தினாலோ புண்ணியத்தினாலோ அவற்றை மேற்கொள்ளலாம். ஆனால் மிகச் சிறியவரான நாமோ, அவ்வாறு செய்யாதிருக்க விழிப்பாயிருக்க வேண்டும். புகுந்து செல்வோம். பிரச்சினைகளில் புகுந்து செல்லுதல் எனில், அவற்றை நுணுக்கமாக ஆராயாமலும் நியாயம் தேடாமலும் இருத்தலே ஆகும்". (பெரும் பிரச்சினைகளின் பொறுப் பேற்காது அவற்றிலிருந்து விலகியிருக்க வேண்டிய நவகன்னியர்களிடம் தான், புனிதை இவ்வாறு கூறினாள். ஆனால் இப்பிரச்சினைகளைத் தீர்த்து முடிவு காண வேண்டியவர்களிடம் அவள் வேறுசொற்களைக் கையாண்டிருப்பாள். இவர்களிடம் தேவையற்ற ஆய்வுகளை விலக்க மட்டும் அறிவுரை கூறியிருப்பாள்)

## கருத்தின் நோக்கம்

நோயுற்றிருந்த சமயம், எத்தகைய பயனும் கிட்டாது என்று அறிந்தும், வெறுப்பூட்டும் மருந்துகளையும், வேதனை தரும் சிகிச்சை முறைகளையும் மாறாத பொறுமையுடன் அவள் ஏற்றுக் கொண்டாள். இதனால் அவளுக்கு ஏற்பட்ட களைப்பைக் காரணமாகக் கொண்டு, அவள் என்றுமே மறுத்துப் பேசியது கிடையாது. இப்பயன் தராத பராமரிப்பு, தன்னைக் குணப்படுத்திக் கொள்ள நேரமோ, வழியோ கிடைக்கப் பெறாத மறைபோதகர் ஒருவருக்குப் பயனுள்ளதாய் அமையும்படி இறைவனுக்கு இதை ஒப்புக்கொடுத்து மன்றாடியதாக என்னிடம் மனந்திறந்து கூறினாள். இத்தகைய சிந்தனைகள் எனக்குத் தோன்றுவதில்லையே

என்று என் வருத்தத்தை வெளிப்படுத்திய போது அவள் கூறினாள்.

"தன்னையே முற்றிலும் கடவுளுக்கு அளித்துவிட்ட ஆன்மாவிற்கு இந்தத் தெளிவான கருத்து தேவையற்றது. தாயின் மார்பில் பால்குடிக்கும் குழந்தை, தன் செயலின் தேவையை உணராது, இயந்திரம் போன்று இயங்குகின்றது. இருந்த போதிலும் அது உயிர் வாழ்ந்து வளர்ச்சியடைகின்றது. இருப்பினும் அதன் கருத்து இதுவன்று. தன் தலைவனுக்காக படம் வரையும் ஓவியன் ஒருவன் தூரிகையைக் கையாளும் ஒவ்வொரு முறையும் திருவாளர்.... அவர்களுக்காக எனக் கூறத் தேவையில்லை. தன் தலைவனுக்காக வேலை செய்யும் குறிக்கோளோடு செயல்பட்டால் அது போதும். அடிக்கடி தன் சிந்தனையில் புகுந்து, கருத்துக்களைத் திருப்பி விடுவது நல்லது தான். ஆனால் எத்தகைய மனக் கட்டாயத்தினாலுமன்று; நாம் கொள்ள விரும்பும் அழகிய எண்ணங்களையும் திறமிக்க கருத்துக்களையும் கடவுள் உய்த்துணர்கிறார். அவர் தந்தை; நாம் அவரது சிறிய குழந்தைகள்".

## இயேசு நமது ஏற்பாடுகளில் வருத்தம் கொள்ள முடியாது

-- "நான் உழைக்க வேண்டும், இல்லாவிடில் இயேசு வருத்தமடைவார்" என அவளிடம் கூறினேன்

-- இல்லை, நீங்கள் தான் வருத்தமடைவீர்கள், நமது சிறு தவறுகளால் அவர் வருத்தம் கொள்ளமுடியாது. ஆனால் நம்மால் இயன்ற அளவிற்கு நாம் அவருக்கு அளிக்காதது நமக்கு எத்தகைய வேதனை!



*(சிறு தவறுகள் என்று கூறும்போது, புனிதை குழந்தை உள்ளத்தைப் பற்றியே பேசுகிறாள். அவரில் நம்பிக்கை கொண்டு, அவரை அன்பு செய்யும் தாழ்ச்சியுள்ள ஆன்மாக்களின் பலவீனத்தையும் மீறி வெளிப்படும், மனம் பொருந்திச் செய்யாத சிறு குற்றங்களால் இயேசு வருத்தமடைய முடியாது.)

## வளராமலேயே புனிதையாயிருத்தல்

தெரேசாள் சகோதரி ஆழ்ந்த தாழ்ச்சியுள்ளவள். இதனால் தான் நிறையன்பின் கடின, உயர்ந்த பாதையைக் கடக்கத் தான் தகுதியற்றவள் எனக் கருதினாள். குடும்பங்களில் சிறு குழந்தைகட்கு ஏற்படுவது போன்று, இறைவன் அவளைச் சார்ந்தவற்றில் முழு பொறுப்பேற்று அவளைத் தம் கைகளில் சுமந்து செல்லும் பொருட்டு அவள் மிக மிகச் சிறியவளாய் மாறுவதில் கவனஞ் செலுத்தினாள்.

அவள் வளராமலேயே புனிதையாயிருக்க விரும்பினாள். ஏனெனில், குழந்தைகளின் சிறு பிழைகள் பெற்றோருக்கு வருத்தம் தருவதில்லை. இவ்வாறு, தாழ்ச்சியுள்ள ஆன்மாக்களின் சிறுகுற்றங்கள் இறைவனுக்கு மிகுதியான வருத்தம் தரமாட்டா.

'எளியவன் 'இரக்கம் பெற்று மன்னிக்கப்படலாம்'என மறைநூலில் கூறியுள்ளதுபோல் அவர்கள் குற்றங்களைப் பெரிதாகக் கருதமாட்டார். இதனால் தான் தன்னை நிறைவுள்ளவளாய்க் கருதவும், பிறரும் அவ்வாறே அவளை நோக்கவும் விரும்பாமல் விழிப்பாய் நடந்து கொண்டாள். இல்லாவிடில் அவள் வளர்ந்திருப்பாள்; இறைவனும் அவளைத் தனியே நடந்து செல்ல விட்டிருப்பார்.

"குழந்தைகள் பதவி வகிக்க உழைப்பதில்லை. அவர்கள் நல்ல பிள்ளைகளாக இருப்பது பெற்றோருக்கு மகிழ்ச்சி யளிக்கும் பொருட்டே. இவ்வாறு, புனிதையாக மாறுவதற்கு அன்று. ஆனால் இறைவனுக்கு மகிழ்ச்சி அளிக்கவே உழைக்க வேண்டும்.

## பாடுபட்ட சுரூபத்திற்கு எவ்வாறு முத்தமளிப்பது?

அவள் நோயுற்றிருந்த சமயம், ஒருமுறை நான் தவறு செய்துவிட்டதால் அதற்காக மிகவும் மனம் வருந்தினேன்.

-- "சரி, இப்போது உம் பாடுபட்ட சுரூபத்திற்கு முத்தம் கொடுங்கள்"

என அவள் என்னிடம் கூறினாள். நான் இயேசுவின் கால்களை முத்தம் செய்தேன்.

-- "இப்படித்தான் ஒரு குழந்தை தன் தந்தைக்கு முத்தம் அளிப்பதா? ம்- சீக்கிரம், சீக்கிரம் முகத்தில் முத்தம் தர வேண்டும்"

நான் அவ்வாறே செய்தேன்.

"இப்போது முத்தம் பெற்றுக் கொள்ளவேண்டும்."

இதற்கு, பாடுபட்ட சுரூபத்தை என் கன்னத்தில் நான் வைக்க வேண்டியதாயிற்று.

அப்போது அவள் என்னிடம் கூறினாள்:

"நல்லது. இம்முறை எல்லாவற்றையும் மறந்தாகி விட்டது".



## சிறுகுழந்தைகளின் பங்கு:

"என் வலப்பக்கமோ, இடப்பக்கமோ அமர யாருக்கு என் தந்தை ஏற்பாடு செய்திருக்கிறாரோ அவர்களுக்கே அது கிடைக்கும்" என நமதாண்டவர் அன்று செபெதேயு மக்களின் தாயிடம் மொழிந்தார். மாபெரும் புனிதர்கட்கும் மறை சாட்சிகட்கும் மறுக்கப்பட்ட இவ்வுயரிய இடத்தைச் சிறு குழந்தைகள் வகிப்பார்கள்" என நான் நினைக்கிறேன்.

சங் 67:28 "இளையவன் பெஞ்சமின், தலைவர்கள் கூட்டத்தில் முன் நடந்து செல்வான்" என சங்கீதத்தில் கூறியபோது தாவீது இதையே முன்னுரைக்கவில்லையா?" விண்ணில் நாங்கள் அவளை எப்பெயரால் அழைத்து மன்றாடுவோம் என்று வினவியபோது "சிறிய தெரேசாள் என்று அழையுங்கள்" எனத் தாழ்ச்சியுடன் பதிலுரைத்தாள்.

# நம்பிக்கை

இறைவனின் அன்பையும் இரக்கத்தையும் பற்றிய அவளது உரையாடல்கள் வற்றாத ஊற்று போன்றவை. அவளது நம்பிக்கை வெல்ல முடியாததொன்று. தன் வாழ்க்கைச் சரிதையின் 4 ஆம் அதிகாரத்தில் அவள் கூறுவது போல், புனிதையாக, பெரும் புனிதையாக சிறுவந்தொட்டே அவள் விழைந்தாள் எனில், "தனது உடைமை" என அவளே கூறும் இயேசுவினுடைய பேறுபலன்களின் எல்லையில்லா செல்வத்தோடு அவளது ஆவல் இரண்டறக் கலந்ததால் தான். இவ்வாறு, உயர்ந்த அளவில் நம்பிக்கை கொள்வது துணிவு மிக்கதாக அவளுக்குத் தோன்றவில்லை.

**அவள் உறுதியாகக் கூறுவாள்:**

"எவ்வகையிலேனும் அழைப்புப் பெற்றுக் கொள்பவரும், எங்கும் நுழைந்து விடுபவரும் இவ்வுலகில் உளர். இறைவன் நமக்குக் கொடுக்க எண்ணியிராத எதையாவது நாம் அவரிடம் கேட்கும்போது, அவர் எத்துனை வல்லமையும் செல்வமும் உள்ளவர் எனில், நமக்கு அதை மறுப்பது, அவரது மகத்துவத்திற்கு ஏற்றதாயிராது என்று அவர் அதைக் கொடுத்தே தீருவார்..."

ஆனால் ஆறுதல் பெறுவதற்கோ, தன் வருத்தங்களைக் குறைப்பதற்காகவோ இப்புனிதத்துணிச்சலை அவள் என்றுமே கையாண்டதில்லை. உலக நன்மைகளைக் கேட்பதில் அவள் மிக்க எச்சரிக்கையுடன் நடந்து கொண்டாள். கடவுள் எதையும் மறுக்கமாட்டார் என நம்பியிருந்தாள். இதனால் தன் மன்றாட்டை நிறைவேற்ற அவரைத் தொல்லைப்படுத்துவோமோ என்று அஞ்சி விவேகத்தை மிகுதியாகக் கையாண்டதாக அவள் கூறியுள்ளாள். அவள் ஆறுதலோ சலுகையோ கேட்டாள் எனில், மகிழ்ச்சி அளிக்கும் பொருட்டுத்தான். இன்னும் மரியாளின் வழியாகவே அவள் தன் மன்றாட்டை இயேசுவுக்கு அனுப்பினாள்.

**இதைப் பற்றி அவள் விளக்குகிறாள்:**

மரியாளிடம் கேட்பது இறைவனிடம் கேட்பது போலன்று; என் சிறிய ஆசைகளை நான் என்ன செய்யவேண்டும்; கூறலாமா, கூடாதா என்று அவளுக்கு நன்கு தெரியும். இன்னும், என் மன்றாட்டை நிறைவேற்ற இறைவனைக் கட்டாயப்படுத்தாமலிருக்கவும், அனைத்திலும் அவரது விருப்பத்தையே நிறைவேற்ற விட்டு விடவேண்டும் என்பதும் அவளைச் சார்ந்த கடமையாகும்.



தான் இறந்தபின் உலகிற்கு நன்மை செய்ய, தனக்குள்ள ஆவலை வெளிப்படுத்தியபோது, அங்கும் இவ்வாறு செய்வது இறைவனது திருவுளமாகுமா என அறிந்து கொள்ள அவரது கண்களை ஊடுருவிப் பார்க்கப் போவதாக ஒரு நிபந்தனையிட்டாள். இவ்வாறு கையளித்து விடும் போது, "இவர்களுக்கு ரசமில்லை" எனக்கூறுவதோடு நிறுத்திக் கொண்ட மரியாளின் மன்றாட்டைப் பின்பற்றுகிறோம் என்று எமக்கு எடுத்துரைத்தாள். "நீர் நேசிக்கிறவன் பிணியுற்றுள்ளான்" என்று மட்டும்தான் மார்த்தாளும் மரியாளும் கூறினர். கோரிக்கை ஏதுமின்றி தங்கள் ஆவலை வெளிப்படுத்தி, இயேசுவை அவரது விருப்பம் போல் செய்ய விட்டு விட்டனர்.

இத்தகைய, முழு நம்பிக்கையின் பாதையில் தான் அவள் நடந்து சென்றாள். இதையே "தன் சிறிய வழி என்றும் "ஆன்மீக பாலத்துவத்தின் பாதை" என்றும் அவள் அழைக்கிறாள். இருப்பினும், தன் சொந்த முயற்சியின்மூலம் ஒத்துழைப்பதை அவள் என்றுமே பொருட்படுத்தாது விட்டதில்லை. மாறாக அதைப் பெரிதும் போற்றினாள். இதனால் அவளது வாழ்வில், தாராள சிந்தையும் விடா முயற்சியும் கலந்த செயல்கள் நிறைந்து காணப்பட்டன. சிறிய வழியை அவள் இவ்வாறு தான் நோக்கினாள், எமக்கும் ஆயத்த மடத்தில் இடைவிடாது இவ்வாறுதான் கற்பித்தாள்.

"இரக்கத்தின் செயல்கள் அனைத்தும் ஒவ்வொருவனையும், அவனவனுடைய செயல்களின் பேறுபலனுக்குத் தக்க வண்ணமும், அவன் தன் வாழ்க்கைப் பயணத்தில்

காண்பிக்கும் அறிவுடைமைக்குத் தக்க வண்ணமும் அவனை வரிசை முறையில் நிறுத்தும்" என்று சீராக் ஆகமத்தில் (16:15) ஒருநாள் வாசித்தேன். உயர்ந்த அறிவோடு தன் வாழ்க்கைப் படகைச் செலுத்தியதன் விளைவாக அவளுக்குச் சிறந்த இடம் கிடைக்கும் என்று அவளிடம் கூறிய நான், ஏன் அவனவன் செயல்களின் பேறுபலனுக்குத் தக்க வண்ணம் என்று வினவினேன்.

கையளித்தலும் இறை நம்பிக்கையும் தியாகத்தினால் ஊட்டம் பெறுகின்றன என்று ஆர்வத்துடன் எனக்கு விளக்கிக் காட்டி அவள் கூறினாள்: தன்னால் இயன்றதை யெல்லாம் செய்யவேண்டும்; கணக்கின்றித் தரவேண்டும்; இடைவிடாது தன்னை மறக்க வேண்டும். ஒரே சொல்லிற் கூறின், தன்னால் கூடுமான நற்செயல்கள் அனைத்தாலும் தன் அன்பை எண்பிக்க வேண்டும். ஆனால் இவை எல்லாம் எத்துணை சொற்பம். நாம் செய்ய வேண்டியதையெல்லாம் செய்த பின், நாம் ஆவலுடன் விரும்பும் அனைத்தையும் இறைவன் கொடையாக வழங்குவார் என்று நம்பிக்கை கொண்டு நம்மைப் பயனற்ற ஊழியர்கள் எனக் கருதிக் கொள்வது அவசியம். பாலத்துவ வழியில் ஓடும் சிறிய ஆன்மாக்கள் இவ்வாறு தான் நம்பிக்கை கொள்கின்றனர். ஆன்மாக்கள் எனக்கூறுகிறேன்; இளைப்பாறும் ஓடும் ஆன்மாக்கள் எனக் கூறவில்லை".

## உத்தரிப்புத் தலத்திற்குப் போவதில்லை

நம்பிக்கையின் இந்த ஆவலைக் கைக்கொண்டு தாழ்மையுடனும் ஆர்வமுடனும் வாழ்ந்து வந்த என் அன்புச் சிறிய சகோதரி அதை ஒவ்வொரு கணத்திலும் எனக்கு ஊட்டினாள். காற்றைச் சுவாசிப்பது போன்று அதை நான்



உட்கொண்டேன். 1894 ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழா இரவின்போது என் காலணியில் கவிதை ஒன்று வைக்கப்பட்டிருந்தது. ஆயத்த நிலையில் இருந்த எனக்காக தெரேசாள் மரியாளின் பெயரால் இயற்றிய கவிதை இது. அதில் நான் கண்டது என்ன?

"இயேசுவின் அன்பை மட்டும் நீ விரும்பினால்
அவர் உன் முடியை ஆயத்தம் செய்வார்.
உன் இதயத்தை அவருக்குக் கையளித்து விட்டால்
ஒரு நாள் அவர் உன்னை அரசாளச் செய்வார்
இவ்வுலக வாழ்வெனும் இரவிற்குப் பின்
அவர் தம் இனிமை மிக்க பார்வையை நீ காண்பாய்
களிப்பெய்தும் உன்னுடைய ஆன்மா
எவ்வித தாமதமுமின்றி மேலே பறந்து செல்லும்."

இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைக் கையளிக்கும் செபத்தில் அவள் இவ்வாறு கூறி முடிக்கின்றாள். "அன்பின் வேத சாட்சியாக இவ்வுலகை விட்டுப் பிரிந்து, உமது சமூகத்தில் வந்து, தாமதமின்றி என் ஆன்மா உம் இரக்கமிகு அன்பு அரவணைப்பினுள் பறந்து செல்வதாக!" இந்த எண்ணம் அவள் உள்ளத்தில் என்றும் பதிந்திருந்தது. இதைச் செயல் படுத்துவதில் அவள் ஐயுறவில்லை. ஏனெனில், "எவ்வளவிற்கு இறைவன் நமக்கு வழங்க விரும்புகிறாரோ, அவ்வளவிற்கும் நாம் அதை ஆவலுடன் விரும்பச் செய்கின்றார்." என்ற நம் புனித தந்தை சிலுவை அருளப்பரின் இக் கூற்றைத் தனதாக்கிக் கொண்டாள்.

உத்தரிப்புத் தலத்தைச் சார்ந்த தன் நம்பிக்கைக்கு, அன்பையும் கையளித்தலையும் இன்னும் பாலத்துவத்தின்

சிறப்புப் புண்ணியமான அவளது அன்புக்குரிய தாழ்ச்சியையும் அடித்தளமாக அமைத்தாள். குழந்தை தன் பெற்றோர்களுக்கு அன்பு செய்கிறது. தான் வலுவற்று, சக்தியற்று இருப்பதை உணர்வதால், அவர்களிடம் தன்னை முழுதும் ஒப்படைத்து விடுவதிலன்றி, வேறெதிலும் அது பெருமை கொள்வதில்லை.

அவள் கேட்டாள்: "குழந்தை தன் குற்றத்தைத் தானே எடுத்துக் கூறும்போது தந்தை அதைக் கடிந்து கொள்வாரா? தண்டனை வழங்குவாரா? இல்லை, நிச்சயமாக இல்லை. மாறாக, அதைத் தன் நெஞ்சோடு சேர்த்து அணைத்துக் கொள்வார்."

இக்கருத்தை ஆதாரமாகக் கொண்டு, சிறுவயதில் நாங்கள் வாசித்த கதையொன்றை எனக்கு நினைவு படுத்தினாள். வேட்டைக்குச் சென்ற அரசன் ஒருவன் வெண்முயல் ஒன்றை துரத்திச் சென்றான். அவனுடைய நாய்கள் அதை விரைவில் பிடித்துவிடும் சமயத்தில், முயற்குட்டி தனக்கு நேரப்போகும் ஆபத்தை உணர்ந்து, வந்த வழியிலேயே மீண்டும் ஓடி, அரசனின் கைகளில் தாவி விழுந்தது. முயலின் நம்பிக்கையைக் கண்டு உள்ளம் உருகினான் மன்னன். அதை விட்டுப் பிரிய அவனுக்கு மனம் வரவில்லை. யாருமே அதைத் தொட அனுமதியாது தானே அதை வளர்க்கும் பொறுப்பை ஏற்றான்.

"நாய்கள் உருவகப்படுத்தும் நீதி நம்மைப்பின் தொடர, நமது நீதிபதியாம் இறைவனின் கைகளிலேயே நாம் அடைக்கலம் புகும்போது, அவரும் இவ்வாறுதான் நம்மை நடத்துவார்." என்று அவள் என்னிடம் கூறினாள்.



ஞானபாலத்துவத்தின் வழியில் நடக்கும் சிறிய ஆன்மாக்களைக் கருத்தில் கொண்டு இதைக் கூறினாலும், மாபெரும் பாவிகளையும் இத்துணிகர நம்பிக்கையிலிருந்து அவள் அகற்றிவிடவில்லை.

இதனால் தான் தன் கையெழுத்துப் பிரதியில் அவள் பின்வருமாறு எழுத முடிந்தது: "ஆம், செய்யக் கூடுமான அத்தனைப் பாவங்களையும் செய்ததாக என் மனச் சான்று கூறினாலும் கூட, வருத்தத்தால் நொறுங்கிய உள்ளத்துடன் இயேசுவின் கைகளில் நான் போய் விழுவேன். ஏனெனில், தம்மிடம் திரும்பி வரும் ஊதாரிப் பிள்ளையின் மீது அவர் எத்துணை அன்பைப் பொழிகிறார் என நானறிவேன். நான் அன்பிலும் நம்பிக்கையிலும் அவரை நோக்கித் தாவுகிறேன் என்றால் தம் முன்கூட்டிய இரக்கத்தினால் என் ஆன்மாவைச் சாவான பாவத்திலிருந்து அவர் காத்ததினாலன்று."

நான் மடத்தில் சேர்ந்த புதிதில், வனத்துறவிகளின் சரிதையை வாசிக்க விரும்பிக் கேட்டேன். அதிலிருந்து சில குறிப்புகள் எடுத்து வைத்திருந்தேன். அவற்றிலொன்று என் அன்புக்குரிய சிறிய சகோதரியை எத்துணைக்குக் கவர்ந்தது எனில், தன் ஆன்ம வரலாற்றில் அதை எழுதாதது பற்றி வருந்தினாள்; அதில் சேர்த்து விடுமாறு விடாது தூண்டினாள். அது பின்வருமாறு:

பயேசியாள் என்ற பாவியொருத்தி தன தீய நடத்தையால் நாட்டில் 'ஊறு விளைவித்துக் கொண்டு வந்தாள். குள்ள அருளப்பர் என்ற வனத்துறவி ஒருவர் அவளை அணுகி, அவள் புரிந்த பெரும் பாவங்களுக்காகத் தபம் புரியுமாறு அறிவுரை வழங்கினார். அதற்கு அவள் "எனக்கும் தபம் ஒன்று உண்டா" என்று வினவ, அதற்குப்

புனிதர்: "ஆம், நிச்சயம் உண்டு" எனப் பதில் உரைத்தார். "இதற்கு எங்குச் சென்றால் நலமோ அங்கு என்னை அழைத்துச் செல்லும்" என்று அவள் அவரை மன்றாடினாள். உடனே அவள் எழுந்து, வீட்டில் யாரிடமும் ஒன்றுங் கூறாமல், அவரைப் பின் தொடர்ந்து சென்றாள்.

அவர்கள் பாலைவனத்திற்கு வந்தபோது இரவு நெருங்கி விட்டது. அருளப்பர் அங்கு மணலைக் கூட்டி, தலையணையைப் போன்று சிறிது மேடாக அமைத்தார் . அதில் சிலுவை அடையாளம் வரைந்து அங்குப் படுத்துக் கொள்ளுமாறு பயேசியாளிடம் கூறினார். தானும் வெகு தொலைவில் சென்று, செபித்து முடித்தப்பின் படுத்துக் கொண்டார். நடுநிசியில் கண்விழித்த இவர், விண்ணி லிருந்து பயேசியாள் மீது ஒளிக் கற்றை ஒன்று இறங்குவதைக் கண்டார். அவ்வொளியில் வானதூதர் பலர் அவளது ஆன்மாவை விண்ணிற்கு அழைத்துச் சென்றனர். இக் காட்சியைக் கண்டதும் வியப்பு மேலிட்டவராய் அருளப்பர் பயேசியாளிடம் வந்தார். அவள் இறந்து விட்டாளா என்று அறிந்து கொள்ள அவளைத் தன் காலால் தள்ளிப் பார்த்தார். அவள் உயிர் நீத்திருப்பதைக் கண்டார். அச்சமயம் அதிசய குரலொன்று கேட்டது: "அவளது ஒரு மணி நேர தபம் மற்றவர்களின் நீண்டகால தபத்தை விட இறைவனுக்கு உகந்ததாய் இருந்தது. ஏனெனில், அவாகள் இவளைப்போன்று அத்துணை ஆர்வத்துடன் தபம் செய்வ தில்லை".

அன்பைப் பொருளாகக் கொண்டிருப்பின், மிகச்சிறிய செயலும் இறைவனின் நீதியைத் தணிக்க வல்லது என்றும், அவர் அன்பே உருவானவராதலால், பாவத்தின் தண்டனையை அளவு கடந்த வகையில் குறைக்கின்றார்



என்றும் தெரேசாள் சகோதரி பன்முறை நான் கண்டுணரச் செய்தாள்.

"மிகச் சிறிய பற்றுறுதி குறைவிற்குப் பின்னும், ஆன்மா சிறிது நேரத்திற்கு ஒரு வித மனக்குத்தல் அனுபவித்துத் தான் ஆக வேண்டும் என்பதை என் பட்டறிவு எனக்குக் காட்டியது. "மகளே, உன் தவறுக்குப் பிராயச்சித்தம் இது" என்று என்னுள் அவ்வமயம் கூறிக் கொண்டு சிறிய கடன் தீரும் வரை பொறுமையுடன் தாங்கிக் கொண்டேன்" என அவள் என்னிடம் மனம்திறந்து கூறினாள்.

தாழ்ச்சியோடும் அன்போடும் தம்மை இறைவனுக்குக் கையளிக்கும் ஆன்மாக்களுக்கு, நீதி விரும்பும் பிராயச்சித்தம் இதில்தான் அடங்கியுள்ளது என்பது அவள் தம் நம்பிக்கை. உத்தரிப்புத் தலத்தின் வாயில் இவர்களுக்குத் திறக்கப்படாது. மாறாக, இவர்களது நம்பிக்கைக்குக் கைம்மாறாக, இறுதி வேளையில் தம் ஞான வறுமை நிலையைக் கண்டுணரத்தக்க தெய்வீக ஒளியை அவர்களுக்கு அளிப்பார். எக்கடனையும் தீர்க்க வல்ல உத்தம மனஸ்தாப உணர்வை இந்த ஆன் மாக்களில் தோன்றச் செய்வார்.

# 3

# இறையன்பு - நன்றி - இறைஒன்றிப்பு - பக்தி

## இறையன்பு

அன்பை அடையும் பொருட்டு, ஞானிகள் புனித வாழ்வில் இடையறாப் பயிற்சி பெறுகின்றனர். மாறாக, தெரேசாள் சகோதரியோ புனித வாழ்வின் வழியாக, அன்பையே பற்றி நின்றாள். அன்பே அவளது வாழ்வின் இலக்காகவும், அனைத்துச் செயல்களின் முதற்காரண மாகவும் விளங்கியது.

### கடவுளுக்குக்களிப்பூட்டுதல்:

"பெரும் புனிதர்கள் இறைவனின் மகிமையை இலக் காகக் கொண்டு உழைத்தனர். மிகச்சிறிய ஆன்மாவாகிய நானோ அவரது மகிழ்ச்சிக்காக, சிறு விருப்பங்களுக்காக உழைக்கிறேன். கூடுமானால், அவர் கூட அறியா வண்ணம், மாபெருந் துன்பங்களையும் தாங்குவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இதன் மூலம் அவரது இதழ்களில் புன்முறுவல் தோன்றக்கூடுமானால்..... பலர் பயனுள்ள வர்களாயிருக்க விரும்புகின்றனர். ஆனால் நானோ குழந்தை இயேசுவின் கைகளில் பயனற்ற விளையாட்டுப்பொருளாக இருக்கவே ஏங்குகிறேன்."



நோயுற்றிருந்த சமயம் அவள் என்னிடம் கூறியதாவது:

"இறைவனுக்கு மகிழ்ச்சியளிக்கவே நான் என்றும் தேடினேன். பேறுபலன் ஈட்டத்தேடியிருப்பேனானால் நான் அவநம்பிக்கைக்கு ஆளாகியிருப்பேன்"

ஆம், "நம் நீதியின் செயல்கள் யாவும் இறைவன் முன் கறையுள்ளவையே" (இசை 65:5) என நன்கு அறிந்த தாலன்றோ தாழ்ச்சி நிரம்பிய அவள், தான் ஆற்றிய செயல்களை ஒன்றுமில்லாமையாகக் கருதினாள். அச் செயல்களுக்கு ஆக்கம் அளித்த அன்பை மட்டுமே அவள் மதித்துப் போற்றினாள்.

"நம் சோதனைக் காலத்தை, இவ்வுலகில் முடிக்க விட்டுவைக்கும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது பற்றி, நம்மை அன்பு செய்யும் இறைவன், போதிய வேதனை அடைகிறார். நாம் வேறு துன்புறுவதாக விடாது அவரிடம் கூறிக் கொண்டிருக்கிறோம். நாம் துன்பப்படுவதாகக் காட்டி கொள்ளக் கூடாது." என்று அவள் கூறுவாள்.

கடினவெப்பத்தில் வியர்க்கும் போதோ, குளிர் காலத்தில் வாட்டும் குளிரினால் வருந்தும் போதோ, இறைவனுக்கு இதைக் காண வாய்ப்பு அளிக்காதது போல் மறைவில் மட்டுமே முகத்தைத் துடைத்துக் கொள்வாள்; அல்லது கைகளைத் தேய்த்துக் கொள்வாள்.

"இவ்வாறே, சட்டம் விதித்துள்ள சாட்டையடித் தபமுயற்சியைச் (discipline) செய்யும் போது, நான் புன்னகை பூக்க முயலுகிறேன். என் முகத் தோற்றத்தைக் கண்டு ஏமாந்தது போல், இறைவன் நான் படும் வேதனையை அறியாதிருக்கும் பொருட்டே இவ்வாறு செய்கிறேன்." எனக் கூறினாள்.

"நான் விண்ணில் வந்து சேர்ந்தபின் நான் ஆசித்தது எல்லாம் எனக்குக் கிடைக்காமற் போனால், நான் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் கவனமாயிருப்பேன். இறைவனும் என் ஏமாற்றத்தை அறிந்து கொள்ள மாட்டார்" எனக் கபடற்ற வகையில் அவள் கூறினாள்.

## மென்மையான உணர்ச்சி எதுவும் கொண்டிராதது பற்றி மகிழ்தல்

-- நீங்கள் இறைவனோடு எத்துணை மென்மையாக நடந்து கொள்கிறீர்கள். நானோ அங்ஙனம் செய்வதில்லை. இருப்பினும் உம்மைப் போலிருக்க நான் எவ்வளவோ விரும்புகிறேன். ஒரு வேளை என் ஆசையே அக்குறையை நீக்கும் என நினைக்கிறேன்.

-- உண்மை தான். ஆனால் இக்குறையை நீங்கள் தாழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ளவேண்டும். இன்னும் இதில் மகிழ்ச்சி காண்பீராகில், நீங்கள் என்றுமே மென்மை தவறாது நடந்து கொள்வதைவிடப் பின் வருமாறு செபிப்பது இயேசுவுக்கு மிகவும் விருப்பமாயிருக்கும். "இறைவா, மென்மையான உணர்ச்சி எதையும் கொண்டிராதது பற்றி உமக்கு நன்றி கூறுகிறேன். அயலாரிடம் இதைக் காணும் போது அகமகிழ்கிறேன். ஆண்டவரே, உம் செயல்களால் எனக்கு மகிழ்ச்சியூட்டுகிறீர் என்று கூறுங்கள்.

## வாசித்ததுபற்றிவருந்துதல்

அவள் கொண்டிருந்த அன்புத் தீ, என்றும் தூய, ஆர்வக் கனல் வீசும் அன்பாக விளங்கியது; காரணம், படைப்பில் பற்றுகொள்ளாது, அதைப்பிரித்துத் தியாகமென்னும்



உரமிட்டு விழிப்புடன் வளர்த்ததேயாகும். ஒரு நாள் நூல்நிலையத்தில் இருந்தோம்.

-- "ஆ, இந்நூற்களை வாசித்திருந்தால் எவ்வளவு வருந்தியிருப்பேன்" எனத் தன் வாடிக்கையான மகிழ்ச்சியுடன் அவள் கூறினாள். "ஏன் வாசித்திருந்தால் ஆதாயம் தானே? வாசித்திருந்தால் என்பதற்கு பதிலாக வாசிக்க வேண்டியிருந்தால் என்று கூறினாலும் நான் ஏற்றுக் கொள்வேன்" என நான் மறுத்துப் பேசினேன்.

-- அவற்றை வாசித்து மண்டையை உடைத்துக் கொண்டிருப்பேன். இறைவனுக்கு அன்பு செய்வதில் கழித்திருக்கும் பொன்னான நேரத்தை வீணாக்கி யிருப்பேன்" என்றாள்.

## தாராளசிந்தை

பிறரை நோக்க இறைவன் என்னிடம் மிகுதியாகக் கேட்கிறார். நான் மட்டும் சில காரியங்களை விட்டுக் கொடுக்கிறேன். ஆனால் சகோதரிகள் சிலர் பயனடைகிறார்கள் என அவளிடம் எடுத்துக் கூறினதற்கு அவள் அளித்த விடை: "இறைவன் என்னிடம் கேட்பதில் நான் என்றும் மனநிறைவு கொள்கிறேன். அயலாரிடம் அவர் கேட்பதைப் பற்றி நான் கவலை கொள்வதில்லை. அவர் என்னிடம் மிகுதியாகக் கேட்பதால் நான் மிக்க பேறுடையவள் எனவும் கருதுவதில்லை. இறைவன் என்னிடம் விரும்புவதே எனக்குப் பிடித்தமானது. தேர்ந்து கொள்ள வாய்ப்பிருப்பின் நான் அதையே தேர்ந்து கொள்வேன். என் பங்கை என்றுமே சிறந்ததாகக் காண்கிறேன். குறைவாக அளித்து மற்றவர் மிகுதியான பேற்றைப் பெற்றுக் கொண்டாலும் கூட, மிகுதியாக

அளித்து குறைவான பேற்றைப் பெற்றுக் கொள்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன். ஏனெனில், இவ்வாறு செய்வதில் தான் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றியவள் ஆவேன்."

அவருடன் செல்வதில் அவளுக்கு மிக்க மகிழ்ச்சி இருக்கும் என நான் கூறினேன். ஆனால் அவளோ: "பேரின்பத்தை நுகர்வதற்கன்று நான் செல்ல விரும்புவது. விண்ணை விடத் துன்பத்தைப் பெரிதும் விரும்பும் அளவுக்கு அது என்னைக் கவர்ந்துள்ளது. இறை திருவுளத்தை நிறைவேற்றும் உறுதி மட்டுமே என்னில் சாவை நாடச் செய்கிறது. இல்லையெனில், வாழவும் வேதசாட்சியாகத் துன்புறவுமே நான் பெரிதும் விழைகிறேன்"

துறவற மடங்களுக்கு எதிராக இழைக்கும் தீங்குகளினால் மனம் வருந்தினாலும், நாம் ஒரு வேளை குருதி சிந்த வேண்டியிருக்கலாம் என்ற நினைவு எழுந்த போது, அவளது பார்வையில் ஆர்வக் கனல் தெறித்தது. அவ் வமயம் அவள் கூறின உணர்ச்சி மிக்க சொற்கள், அவள் இதயத்தில் பொங்கி எழுந்த அன்பின் துடிப்பை எடுத்துக் காட்டின.

"நான் கட்டிலில் இறக்கிறேன் என நினைக்கும்போது... கொலைக்களத்தில் இறக்க நான் எவ்வளவோ ஆசைப் பட்டேன்" என்று தன் இறுதி நோயின்போது அவள் கூறக் கேட்டேன்.

## திருவாளர் மார்ட்டினால் அளிக்கப்பட்ட பீடம்

லிசியேவிலுள்ள புனித இராயப்பர் பேராலயத்திற்கு நடுப்பீடம் அளித்தது பற்றி என் தந்தையைக் குடும்பத்



தினரில் சிலர் (கெரின் மாமா) குறை கூறினர். அவர் நிலைக்கும் மேலான அன்பளிப்பாயிருப்பதால், பிள்ளைகள் இதனால் பாதிக்கப்படுவர் என்பதே அவர்களது குற்றச்சாட்டின் பொருள். ஆனால் தெரேசாளோ, "எம் அனைவரையும் இறைவனுக்கு அளித்துவிட்டவர் தன்னையும், எம்மையும் பலியாக்கப் பீடம் ஒன்றையும் அளிப்பது இயற்கை தானே" எனக் கூறி மகிழ்ந்தாள்.

## பழமரங்களின் மலர்களைக் கொய்தல்

என் அன்பு சிறிய சகோதரியிடம் மனந்திறந்து பேசுகையில் கூறினேன்: "திருப்புகழ் மாலையின் போது இறைவனுக்கு மலர் தெளிப்பதாக நினைத்துக் கொள்வேன். அடிகளை மாறி மாறி ஓதுகையில், மலர் மாரி பொழிவதைக் கண்டேன். லில்லி மலர்களும் ரோசா மலர்களுமாக ஒவ்வொரு சங்கீதத்திற்கும் மலர்கள் மாறின. என் சிந்தையில் உருவான மலர்கள் அனைத்தும் அங்குத் தோன்றின. இறுதியில் என் பூங்கா வெறுமையாகிவிட்டது. ஒரு கணம் தயங்கினேன்; பின் கொய்யா, மா, ஆப்பில் பழ மரங்களின் மலர்களைக் கொய்யத் தொடங்கினேன். திருப்புகழ் மாலையின் முடிவில் எந்தப் பூவுமே இல்லாமற் போய்விட்டது."

பழமரங்களின் மலர்களைக் கொய்யும் இக்கருத்து என் சிறிய புனித தெரேசாளைக் கவர்ந்தது. அனைத்தையும் அளிப்பது, இங்கும் அங்கும் கொடுத்து வீணாக்குதல், கனிகள் உருவாகுதலையே அழித்தல் போன்றவை அறிவின்றிச் செயல்படுதலாகும். கணக்கிடாது அளவின்றி வாரி வழங்குவது: இவை தான் அன்பின் பண்பாகும் என்று அவள் எடுத்துக் கூறினாள். "ஆ! மகிழ்ச்சிக்குரிய

கவலையின்மையே, அன்பின் இனிய போதையே!" எனத் தொடங்கி அவள் மீண்டும் கூறுவாள் "அனைத்தையும் ஈந்து தன்னையும் கையளிப்பதே அன்பு. ஆனால் நாமோ பெரும்பாலும் தீர ஆலோசித்த பின்னரே தருகின்றோம். நம் உலக, ஞான நன்மைகளைப் பலியிடத் தயங்குகின்றோம். இதுவன்று அன்பு. கண்மூடித்தனமானது அன்பு. தன் வழியில் விட்டு வைக்காது அடித்துச் செல்லும் நீரோடையைப் போன்றது.

## அன்பில் மட்டுமே கவனஞ் செலுத்துதல்:

வேறொரு முறை நான் அவளிடம் கூறினேன்: "உம்மில் நான் பெரிதும் விரும்புவது உமது செயல்களையே. நானும் நன்மை செய்ய விரும்புகிறேன். இறைவனை அன்பு செய்யத் தூண்டும், அழகிய செயல்களைச் செய்ய விரும்புகிறேன்.

அதற்கு அவள் அளித்த விடை: "உங்கள் இதயம் இதில் பற்று கொள்ள விடக் கூடாது. நூல் எழுதுதல், கவிதை இயற்றுதல், கலை நுட்பம் போன்ற இவற்றின் மூலம் நன்மை புரிய ஆசித்தல் கூடாது. நம்மால் இவை இயலாமற்போகும் போது, அயலாரின் செயல்களையே அர்ப்பணிக்கலாம். புனிதர்களின் உறவினால் ஏற்படும் நன்மை இதுவே. நம் இயலாமையைக் கண்டு, என்றுமே வருந்தாது, அன்பில் மட்டுமே கவனஞ் செலுத்த வேண்டும்.

"அயலான் தன்னிடமுள்ள நன்மையை விரும்புவதற்கும் மேலாக, நான் அதை நாடும் போது, இந்நன்மைக்கு அவனை விட நானே உரிமை மிக்கவனாகிறேன். இறைவன் புனித சின்னப்பருக்கு அருளிய அனைத்துக் கொடைகளையும் நான் அன்பு செய்வதால் அவருக்குரியதைப் போன்றே எனக்கும் அவை சொந்தமாகின்றன. இந்த உறவின் மூலம்,



Fr. JEYARAJU, OCD,
Cell: 9080974848

விண்ணிலும் மண்ணிலும், வானதூதர் புனிதர் இன்னும் இறைவனுக்கு அன்பு செய்யும் அனைவரிலும் உள்ள நன்மை அனைத்தையும் எனதாக்கிக் கொண்டு நான் செல்வமிக்க வனாகலாம்" என **Tauler** தோலர் கூறுகிறார்.

"விண்ணில் தேர்ந்தெடுக்கப்பட்டோர் அனைவரையும் இணைக்கும் அன்பு எத்துணை பெரியது எனில், ஒவ்வொரு வரும், தான் மட்டுமே விண்ணகப் பேரின்பம் முழுவதையும் பெற்று, உவகை கொள்வது போல் காணப் படுவர் என மறைவல்லுநர்கள் நமக்குப் போதிக்கின்றனர்."

"மிகக் கடினமாகத் தோன்றும் சிறிய உதவியொன்றைச் செய்தல் போன்று, அன்பினால் தூண்டப்பட்டு, ஆற்றும் மிக மறைவான செயலினாலும், நன்மை செய்வதில் உள்ள ஆவலினாலும் நீங்கள் என்னைப் போன்று, ஏன், மிகுதி யாகக்கூட நன்மை செய்வீர்கள். நான் ஏழை என நீங்கள் அறிவீர்கள். ஆனால் கடவுள் தான் எனக்குத் தேவை யானதையெல்லாம் அவ்வப்போது அளிக்கிறார்."

## அன்பும் கீழ்ப்படிதலும் மட்டுமே முக்கியமானவை:

1896-97 ஆண்டு குளிர்காலத்தின்போது, எங்கள் வண. தாயார் (கொன்சாகா தாயார்) தெரேசாள் சகோதரி கால்கள் குளிரினால் வருந்தாதபடி, அவளது காலணிகளை உஷ்ணப்படுத்திக் கொள்ள நெருப்புத் தணல் கொண்ட சிறு அடுப்பு ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனப் பணித்தார்கள். ஆனால் தெரேசாளோ கீழ்ப்படிதலின் நிமித்தம் முக்கிய தேவைக்கென மட்டும் பயன்படுத்தினாள். போதிய குளிர் இல்லை எனக் கண்டபோதெல்லாம் என விருப்பத்திற்கு மாறாக தணல் பூத்துப் போக

விட்டுவிடுவாள். அப்போதெல்லாம் அவள் கூறியது: "மற்றவர்கள் தம் தபக் கருவிகளோடு விண்ணிற்குச் செல்ல நானோ என் அடுப்போடு தான் செல்வேன். ஆனால், அன்பும் கீழ்ப்படிதலும் மட்டுமே முக்கியமானவை."

## ஆலயம் எழுப்பினவள்:

தெரேசாள் சகோதரி தான் வாசித்த கதையொன்றை எங்களுக்குக் கூறினாள்:

ஆலயம் எழுப்ப விரும்பிய மாபெரும் பிரபு ஒருவர் தான் மட்டுமே அப்புகழுக்கு முற்றிலும் உரிமையாளராகத் திகழ விரும்பி, இக் கருத்திற்காக மிகச் சிறிய தருமம் முதலாய் யாரும் செய்யக்கூடாதென தம் மக்களுக்கு ஆணை பிறப்பித்தார். ஆலயம் எழும்பிக் கொண்டிருந்தது.

ஒரு நாள், கல் சுமந்து செல்லும் குதிரைகள் மிக்க சிரமத்துடன் குன்றிலேறிச் செல்வதைக் கண்ணுற்றாள் வயது சென்ற ஏழைப் பெண்ணொருத்தி. "ஆண்டவருக்கு ஆலயம் எழுப்ப உதவிசெய்வதில் நான் எத்துணை மகிழ்ச்சி கொள்வேன். ஆனால் பண உதவி செய்யலாகாது என விதிக்கப்பட்டுள்ளதே. இம்மாபெரும் பணியில் அறியாது உழைக்கும் குதிரைகளுக்கு நான் உதவி செய்தால் ஒரு வேளை இறைவன் மகிழ்ச்சி கொள்வார்" எனத் தனக்குள் கூறிக் கொண்டே தன்னிடமுள்ள இறுதி காசுகளைக் கொடுத்து ஒரு கட்டு வைக்கோல் வாங்கி, குதிரைகளுக்கு உணவாகக் கொடுத்தாள்.

ஆலயம் கட்டி முடிந்ததும், அதன் அபிஷேக விழாவைச் சிறப்புடன் கொண்டாட விரும்பிய பிரபு, தன் தாராள சிந்தையின் அழியா நினைவுச் சின்னமாக, ஒரு கல்லில் தன்



Fr. JEYARAJU, OCD,
Cell: 9080974848

பெயரையும் குடும்பத்தின் பெயரையும் பொறிக்கச் செய்தார். ஆனால் மறுநாளோ அவர் பெயர் அழிக்கப்பட்டு, அறியப்படாத பெண்ணொருத்தியின் பெயர் பதிக்கப் பட்டிருந்தது.

சினமுற்ற பிரபு, பன்முறை தன் பெயரையே பொறிக்கச் செய்தார். ஆனால் புதுமையோ தொடர்ந்து நடந்தேறி வந்தது. இறுதியாக, அப்பெண்ணைத் தேடும்படி பணித்தார். தேடிக் கண்டு பிடிக்கப்பட்ட அந்த எளிய பெண்ணிடம் கோவில் கட்ட அவள் ஏதாவது கொடுத்தாளா என வினவினார். அவளோ நடுங்கிக் கொண்டே "இல்லை" என பதிலிறுத்தாள். ஆனால் கேள்வி பல கேட்டு வற்புறுத்தவே, தான் வைக்கோல் கட்டு ஒன்று கொடுத்தது அவள் நினைவிற்கு வந்தது. கட்டளைப்படி தான் பணஉதவி செய்யவில்லை என்றும், குதிரைகளுக்குச் சிறிது வைக்கோல் உண்ணக் கொடுத்ததன் மூலம் உதவி செய்ததாகவும் அவள் கூறினாள். எதற்காக அவளது பெயர் பொறிக்கப்பட்டது என்பதை அவ்வமயம்தான் அறிந்து கொண்டனர். இதனால் யாருமே அப்பெயரை அழிக்கத் துணியவில்லை.

## தெரேசாள் கூறிய முடிவு இது தான்:

"பார்த்தீர்களா, அன்பினால் தூண்டப்பட்டு, ஆற்றும் மிகச்சிறியதும் மறைவானதுமான எச்செயலும், மாபெரும் சாதனைகளை விட மதிப்பு மிக்கது. செயல்களின் மதிப்போ, புனிதத் தோற்றமோ முக்கியமன்று. ஆனால் எத்தகைய அன்போடு செய்யப்படுகின்றதோ அது தான் முக்கியம். இச்சிறு செயல்களை இறைவனுக்கு அளிக்க வியலாது என யாருமே கூறமுடியாது; ஏனெனில், இவை யாவும் அனைவராலும் செய்யக் கூடியவையே."

## சிறகடிப்பு :

"என் வெண்புறாவே திரும்பி வா, ஏனெனில் காயமுற்ற கலைமான் குன்றின் உச்சியில் தோன்றியுள்ளது. உன் சிறகடிப்பில் உருவான தென்றலால் கவரப்பட்டு அதில் அது இனிமை காண்கிறது" நம் புனித தந்தை சிலுவை அருளப்பரின் ஞான கீதாகமத்தில் உள்ள இந்த அழகிய அடியை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் பார்த்தீர்களா, காயமுற்ற கலைமானை அதாவது மணாளரைக் கவர்ந்தது உயரிய சிகரமன்று அதாவது பெருமையான செயல்களல்ல, ஆனால் சிறகடிப்பினால் ஏற்பட்ட தென்றலே. ஆம், இந்த அன்புத் தென்றலைத் தோற்றுவிக்க உண்மையான பிறரன்புச் செயல் ஒன்று போதும்".

## இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைக் கையளித்தல்:

1985 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் நாள் செவ்வா யன்று 40 மணி நேர நற்கருணை ஆராதனையின்போது "அன்பினில் வாழ்தல்" என்ற பாடலை முழுவதும் தெரே சாள் இயற்றி முடித்தாள். மனிதர்களுக்கு இறைவன் தம் அன்பை வழங்க விரும்புகிறார். ஆனால் அவர்களோ. அதை வெறுத்துத் தள்ளுகின்றனர். இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட அன்பு முழுவதையும் தன் இதயத்தில் ஏற்று இறைவனின் இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைத் தகனபலியாகக் கையளிக்க 1895 ஆம் ஆண்டு சூன் 9ஆம் நாள் ஞாயிறு, பரிசுத்த திரித்துவ நாளன்று அவள் தூண்டப்பட்டாள். திருப்பலி முடிந்தவுடன், உணர்ச்சி மேலிட்டவளாய், என்னைத் தன்னுடன் அழைத்துச் சென்றாள். இவ்வாறு செல்வதன் காரணம் எனக்கு விளங்கவில்லை. மடத்தின்



வாயிற்படி நோக்கிச் சென்று கொண்டிருந்த எங்கள தலைமை அன்னையிடம் (ஆக்னேஸ் தாயார்) வந்து சேர்ந்தோம். தன் விண்ணப்பத்தைத் தெரிவிக்க தெரேசாள் சிறிது தயங்கினதாகத் தோன்றியது. என்னுடன் சேர்ந்து இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைக் கையளிக்க அனுமதி கோரி அவள் ஏதோ சில வார்த்தைகளை முணுமுணுத்தாள். பலி என்ற சொல்லை அவள் உச்சரித்தாளா என்பதை நானறியேன். முக்கிய செய்தியாகத் தோன்றியமையால் தாயார் சம்மதித்துவிட்டார்கள்.

என்னுடன் தனியாக இருந்தபோது, தான் செய்ய விரும்புவதைச் சுருக்கமாக எனக்கு விளக்கினாள். அவளது பார்வையில் ஆர்வக் கனல் தெரித்தது. தன் கருத்துக்களை எழுத்தில் வடித்து, கையளித்தல் முயற்சியொன்று தயாரிக்கப் போவதாகக் கூறினாள். இருநாட்களுக்குப் பின், அவளது சிற்றறைக்கு அண்மையில் உள்ள அலுவலறையில் இருந்த புதுமை புரி புன்னகை மாதா சுரூபத்தின்முன் முழங் காலிட்டு எங்கள் இருவருக்குமாகச் சேர்த்து அர்ப்பண செபத்தைச் சொன்னாள். அன்று சூன் 11 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை." தெரேசாள் சகோதரி தன் கையளித்தல் செபத்தை, திரு இதயத்தின் மரி சகோதரிக்கும் திரித்துவத்தின் மரி சகோதரிக்கும் பிறகு கொடுத்தாள். தன் கையெழுத்துப் பிரதியிலும் இதைப் பற்றிக் கூறியுள்ளாள். சிறிய ஆன் மாக்கள் அனைவரையும் இதில் பங்கு பெற அழைக்கிறாள். அவளது கருத்து தனிப்பட்ட துன்பங்களுக்குத் தன்னைக் கையளித்தல் அன்று; ஆனால் முழு நம்பிக்கையுடன் இரக்க முள்ள அன்பிற்குத் தன்னை முற்றும் அளித்தலேயாகும்.

மிகுதியான துன்பங்கள் தன்னை அண்டி வருமோ என்று அஞ்சிய எங்கள் மூத்த சகோதரியான மரி சகோதரி, முதலில் இக் கையளித்தலைச் செய்ய மறுத்தாள். இதைப்

பற்றி அவளைக் கவனித்துக் கொண்ட சகோதரி இங்குக் கூறுகிறாள்; "1934 ஆம் ஆண்டு ஜூன் 6 ஆம் நாளாகிய இன்று இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைக் கையளித்தல் முயற்சியைப் பற்றி திரு இதயத்தின் மரி சகோதரியோடு உரையாடிக் கொண்டிருந்தேன். வைக்கோற்போர் அடிக்கும் போது தன் அண்மையிலிருந்த தெரேசாள் இறைவனின் இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைக் கையளிக்க விருப்பமா என்று தன்னிடம் கேட்டதாகவும், அதற்கு மறுமொழியாக "பலியாக என்னை ஒப்புக்கொடுக்க எனக்குச் சிறிதும் விருப்பமில்லை, ஏனெனில் இறைவன் என் சொல்லை அப்படியே எடுத்துக் கொள்வார். துன்பமோ எனக்கு மிகுந்த அச்சத்தைத் தருகிறது. முதலில் பலி என்ற இச்சொல்லே எனக்குச் சற்றும் பிடிக்கவில்லை" என்று தான் கூறியதாகவும் என்னிடம் உரைத்தாள்.

அவள் கருத்தைப் புரிந்து கொள்வதாகக் கூறிய தெரேசாள் இறைவனின் அன்பிற்குக் கையளித்தல் என்பது, நீதிக்குக் கையளித்தல் போலன்று, இதனால் மிகுதியான துன்பம் ஏதும் வராது என்றும், இறைவனுக்கு அன்பு செய்ய விரும்பாதவர்களை முன்னிட்டு அவரை மிகுதியாக அன்பு செய்வதே இதன் நோக்கம் என்றும் விளக்கினாள்.

திருஇதயத்தின் மரி சகோதரி தொடர்ந்து கூறினாள்: " அவள் எத்தகைய சொல்வன்மை மிக்கவளாய் இருந்தாள் என்றால் தன் பேச்சால் என்னை வென்றுவிட்டாள். ஆனால் இதற்காக நான் வருந்தவில்லை".

பின்னர் திரு இதயத்தின் மரி சகோதரி தன் எல்லா நண்பர்களிடமும், யாருடன் அவள் எழுத்துத் தொடர்பு கொண்டாளோ அவர்கள் அனைவரிடமும் இப்பக்தி



முயற்சியைப் பரப்புவதில் முனைந்தாள். நான் அறிந்த வரை, ஒருவர் மட்டுமே அவள் பரிந்துரைக்கு எதிர்த்து நின்றார்".

இறுதியில், தாழ்ந்த குரலில், ஆனால் சொற்களைத் தெளிவாக நிறுத்தி உச்சரித்துக்கொண்டே, 1940 ஆம் ஆண்டு ஜனவரி 19 ஆம் நாள் காலை 2-20 மணிக்கு மரி சகோதரி இறைவனடி சேர்ந்தாள்.

என் ஆயத்த மடத்துத் தோழியாகிய திரித்துவத்தின் மரி சகோதரி என்னிடம் உள்ளம் திறந்து கூறியதை இங்குத் தருகிறேன்: "1895 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் நாளில் தான், தெரேசாள் சகோதரி இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னைத் தகன பலியாகக் கையளித்தலைப் பற்றி எனக்குக் கூறினாள். அவளைப் பின்பற்ற விரும்புவதாக உடனே என் ஆவலை அவளிடம் தெரிவித்தேன். அடுத்த நாள் நான் அர்ப்பணம் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. தனிமையில் என் தகுதியின்மையைப் பற்றி சிந்தித்த நான் இத்துணை முக்கியம் வாய்ந்த செயலுக்கு நீண்ட தயாரிப்பு தேவை என முடிவு கட்டினேன். தெரேசாள் சகோதரியிடம் திரும்பி வந்து என் கையளித்தலைத் தள்ளி வைக்க விரும்புவதன் காரணங்களை விளக்கிக் கூறினேன். அவள் வதனத்தில் மாபெரும் மகிழ்ச்சியின் குறிகள் தோன்றின. அவள் என்னை நோக்கி:

"ஆம், இக் கையளித்தல் முக்கியம் வாய்ந்ததுதான்; நாம் நினைப்பதற்கும் மேலாக உயர்ந்ததுதான். ஆனால் இறைவன் நம்மிடம் கேட்கும் ஒரே ஆயத்தம் யாது என அறிவீர்களா? நமது தகுதியின்மையைத் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்வது தான் இதற்குத் தயாரிப்பு. அவர் உமக்கு இந்த அருளை வழங்குவதால் அச்சமின்றி உம்மை அவருக்குக் கையளியுங்கள். திவ்விய நற்கருணை ஸ்தாபகம் செய்யப்பட்டுள்ள செபக்கூடத்தில் நாளை நன்றியறிதல் தோத்திரத்திற்குப்

பிறகு நான் உம்மருகில் இருப்பேன் நீங்கள் செபத்தைச் சொல்லும் போது, இயேசுவுக்கு நான் தயார் செய்த சிறிய பலிப் பொருளாக உம்மை அவருக்கு ஒப்புக்கொடுப்பேன்" எனக்கூறினாள்.

எம் அன்புத் தலைவி எமக்கு மிகுதியான துன்பங்களைப் பெற்றுத்தருவதாக நினைத்திருந்தால், இவ்வாறு எங்கள் கையளித்தலை விரைவுபடுத்தியிருக்கமாட்டாள். ஆனால் மாறாக, தெய்வீக நீதிக்குப் பலியாகக் கையளித்தலிலிருந்து முற்றிலும்இது மாறுபட்டது என்பதை எமக்கு விளக்கிக் கூறினாள். இரக்கமுள்ள அன்பிற்குக் கையளித்தலைப் பற்றி, எதற்கும் அஞ்சவேண்டியதில்லை; ஏனெனில் இந்த அன்பிலிருந்து இரக்கத்தை மட்டுமே எதிர்பார்க்க முடியும் என அவள் அறுதியிட்டு உறுதி கூறினாள்.

நல்ல மனதும் தாராள மனப்பான்மையுமே இக்கை யளித்தலுக்குத் தேவை என்று அவள் கூறத்தவறவில்லை. அவ்வப்போதைய அருளினால் ஊட்டம் பெறும் நல்ல மனதும் தாராள மனப்பான்மையும் தேவை. அன்பிற்குக் கையளித்தலின் விளைவு யாதெனில், இந்த அருள் சீரிய முறையில் உறுதிபெறுகின்றது. அர்ப்பணம் நிறைவுள்ள தாய் இருப்பதன் அளவாக இறை உதவி சக்தி மிக்கதும் விரைவில் செயல்படுவதுமாய் உள்ளது.

## பல் வண்ணக்காட்சிக் கருவி:

இக்கருவியின் முனையில் பல்வகை வண்ணங்களில் அழகிய சித்திரங்களைக் காணலாம். கருவியைத் திருப்பத் திருப்ப, இச்சித்திரங்களும் பலவித கோணங்களில் மாறி அழகிய காட்சியைத் தரும். சிறு வயதில் நாங்கள் வைத்து விளையாடிய இக்கருவியைப் பற்றி அவள் ஒருமுறை



என்னிடம் கூறினாள்: "இப்பொருள் எனக்கு வியப்பைத் தருகிறது. இத்துணை அழகு மிக்க காட்சியை உருவாக்க வல்லது எதுவாயிருக்கலாம் என்று என்னையே கேட்டுக் கொண்டேன். இஷ்டம் போல் வெட்டி இங்கும் அங்கும் போடப்பட்ட கம்பளி துண்டு தாள்கள் தான் அங்கு உள்ளன என்பதை ஒரு நாள் ஆழ்ந்த ஆய்வுக்குப் பிறகு கண்டு பிடித்தேன். என் ஆய்வைத் தொடர்ந்ததன் விளைவாக குழையினுள் 3 கண்ணாடிகளைக் கண்டேன். சிக்கலின் முடிவு தெரிய வந்தது. இது எனக்குப் பெரும் இரகசியத்தின் உருவகமாயிருந்தது.

நம்செயல்கள், மிகச் சிறியதாயினும் கூட, அன்பெனும் தளத்தை விட்டு வெளியேறாதவரை, ஒன்று கூடும் இம் மூன்று கண்ணாடிகள் உருவகப்படுத்தும் மூவொரு கடவுள் அவற்றிற்கு, வியத்தகு ஒளியையும் அழகையும் தருகின்றார். ஆம், நம் உள்ளத்தில் அன்பு உள்ளவரை, அதன் மையத்தை விட்டு நாம் விலகிச் செல்லாதவரை, எல்லாம் நன்மையாக உள்ளன. புனித சிலுவை அருளப்பர் கூறுவதுபோல், அன்பு அனைத்திலும், என்னில் காணும் நன்மை தீமை அனைத்திலும், நலன் பெறுகிறது; அனைத்தையும் தானாக மாற்றிக் கொள்கிறது. சிறு கண்ணாடியின் வழியாக அதாவது, தம் வழியாகவே நம்மைப் பார்க்கும் இறைவன், நம் எளிய, மதிப்பற்ற சிறிய செயல்களை எப்போதும் அழகு மிக்கதாகக் காண்கிறார். ஆனால், இதற்கு சிறிய மையத்தை விட்டு விலகிப் போகலாகாது. ஏனெனில், அப்போது அவர் காணக் கூடியதெல்லாம் மெல்லிய கம்பளித் துண்டுகளும், சிறு துண்டுத் தாள்களும் தான்."

## நான் அன்பின் வங்கியில் பெற்றுக் கொள்கிறேன்:

"நான் அங்காடிப் பெண்ணாக இருக்க விரும்பவில்லை; ஏனெனில், இத்தொழிலில் அதிக வருமானம் இல்லை. காசுகளாகத் தான் கிடைக்கும். இருப்பினும், இச் சிறிய அளவில் வாழ்க்கை நடத்துவோரும் உளர். வேறு சிலர் அவ்வப்போது பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால் நானோ, அன்பெனும் வங்கியில் மொத்தமாகப் பெற்றுக் கொள்கிறேன். நஷ்டம் ஏற்பட்டால் எனக்குத் தெரியவரும். என்பொருட்டு இயேசுவே அதைக் கவனித்துக் கொள்கிறார். நான் ஏழையா செல்வமுள்ளவளா என நானறியேன். இதைப் பிறகு தான் அறிந்து கொள்வேன்."

## இறைவன் பற்றியெரியும் தீச்சுவாலையானவர்:

ஒருமுறை புனித சின்னப்பரின் திருமுகங்களைக் கையில் வைத்திருந்த தெரேசாள் சகோதரி என்னை அழைத்து ஆர்வம் பொங்கக் கூறினாள்: "அப்போஸ்தலர் கூறுவதைப் பார்த்தீர்களா? "நீங்கள் வந்தடைந்திருப்பது சீனாய் மலையன்று: அங்கே எரிகின்ற நெருப்பும், இருண்ட மேகமும் காரிருளும் சூழ்ந்திருந்தன. நீங்கள் வந்தடைந்திருப்பதோ சீயோன்மலை, உயிருள்ள கடவுளின் நகர், வானக யெருசலேம். அங்கே எண்ணற்ற வானதூதர் சூழ்ந்துள்ளனர். வானகத்தில் பெயர் எழுதியுள்ள தலைப்பேறானவர்களின் திருச்சபை அங்கே விழாக் கூட்டமெனக் கூடியுள்ளது..... ஏனெனில், நம் கடவுள் சுட்டெரிக்கும் நெருப்பாக



இருக்கிறார்." இந்த இறுதி வாக்கியத்தைப் பற்றி அவள் உணர்ச்சி ததும்ப விளக்கம் தந்தாள்.

# நன்றி கூர்தல்

"இறைவனின் அருட்கொடைகளை மிகுதியாகப் பெறச் செய்வது நன்றி கூர்தலேயாம். நன்மை யொன்றிற்கு நன்றி கூறும்போது, அவர் உள்ளம் உருகி, வேறு பத்து நன்மைகளை நமக்கு வழங்க விரைந்து வருகின்றார். இன்னும் அதே நன்றிப் பெருக்கை அவருக்குச் செலுத்தும் போது, எத்துணை எண்ணிலடங்கா அருட்கொடைகள் பொழியப்படுகின்றன.

இது என் அனுபவத்தில் அறிந்த உண்மை. நீங்களும் முயன்று பாருங்கள். அவர் எனக்கு அளிக்கும் அனைத்திற்கும் என் உள்ளம் எல்லையில்லா நன்றி பாராட்டுகின்றது. இந் நன்றியுணர்ச்சியைப் பல்வேறு வழிகளில் அவருக்குத் தெரிவிக்கிறேன்" என என் அன்புச் சிறிய சகோதரி என்னிடம் கூறினாள்.

இவ்வாறே, தான் பெற்றுக் கொண்ட மிகச் சிறிய உதவிக்கும், சிறப்பாக, ஆன்மீகத் துறையில் இறைவனின் பிரதிநிதிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட நன்மைக்கும் அவள் நன்றி பாராட்டினாள்.

## இறைவன் மீது ஐயங்கொள்ளாதிருத்தல்:

இறைவன் என்னைக் கைவிட்டது போல் தோன்றுவதைப் பற்றி நான் முறையிட்டுப் புலம்பினேன். தெரேசாள் சகோதரி கண்டித்துக் கூறினாள்: "இப்படியெல்லாம் கூறாதீர்கள். பாருங்கள், இறையுணர்வு எழும் சமயங்களில்

எனக்கு ஒன்றுமே விளங்காமற் போனாலுங்கூட, நான் புன்னகைக்கிறேன்; நன்றி கூறுகிறேன். இறைவன் முன் என்றும் மகிழ்ச்சியுள்ளவள்போல் தோன்றுகிறேன். இறைவன் மீது ஐயங்கொள்ளலாகாது. இது மென்மையற்ற தனம். தேவ பராமரிக்கைக்கு எதிராக ஆத்திரம் கொண்டு புலம்பலாகாது; ஆனால் என்றும் நன்றியே காட்ட வேண்டும்.

## நினைவு கூரும்

இயேசுவிற்கு அதிகமாய் அளித்துவிட்ட எண்ணத்தில் நான் கர்மேல் மடம் புகுந்தேன். "நினைவு கூரும்" என்ற மெட்டில், நான் அவருக்குச் செய்ததாக நினைக்கும் எல்லாத் தியாகங்களையும், எம் குடும்பம் அடைந்த துன்பம் அனைத்தையும் இயேசுவிற்கு நினைவூட்டும் வகையில், கவிதையொன்று இயற்றும்படி என் சிறிய தெரேசாளிடம் கேட்டேன். எனக்கு நல்ல பாடம் புகட்டத் தக்க சமயம் என்று எண்ணி என் வேண்டுகோளை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டாள். அவள் இயற்றிய பல அடிகளிலும் நான் இயேசுவுக்காகச் செய்ததையன்று, அவர் எனக்குச் செய்ததையே குறிப்பிட்டிருந்தாள்.

பரிசேயன் ஆயக்காரன் உவமை அப்போது என் நினைவிற்கு வந்தது. தன் வருவாயில் பத்திலொரு பகுதியைக் கொடுப்பதாகப் பெருமை பாராட்டிய பரிசேயனைப் போன்று நடந்து கொள்ளவில்லையா?

அன்பிலும் நன்றியறிதலிலும் வாழும் பொருட்டு என்னையே முற்றிலும் மறந்துவிட தெரேசாள் எனக்குக் கற்றுத்தர விரும்பினாள்.



# இறைவனோடு ஒன்றிப்பு

## நம்மைச் சார்ந்ததெல்லாம் இறைவனோடு ஒன்றிப்பதே.

மடங்களுக்கு எதிராக ஏற்படுத்தின நியாயமற்ற சட்டங்களை ஏற்றுக் கொண்ட சில மடங்கள் மீது நான் ஒரு நாள் சீற்றங் கொண்டெழுந்தேன். "இம் மடங்களில் ஒன்றைச் சேர்ந்தவளாயிருப்பின், நான் எத்துணை பரிதாபத்துக் குரியவளாய் இருந்திருப்பேன். ஆ! இதை நினைக்கும்போது என் உள்ளம் குமுறுகிறது. மிகுதியாக விட்டுக் கொடுப்பதை விட, கண்ட துண்டமாக வெட்டப்படுவதையே பெரிதும் விரும்புகிறேன்." என நான் கூறியதற்கு, அவள் மறுமொழி பகர்ந்தாள்: "இது உம்மைச் சார்ந்ததன்று. நானும் உம்மைப் போன்று தான் நினைக்கிறேன். இக்கட்டளைகளை அனுசரிப்பதில், நான் பொறுப்பேற்றிருந்தால் நானும் உம்மைப் போன்றே செய்திருப்பேன். ஆனால் இதில் நான் பொறுப்பேற்கவில்லை. நம்மைச் சார்ந்தெல்லாம் இறைவ னோடு இணைந்து வாழ்வதே. கோழைத்தனச் செயல் எனச் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ள இம்மடங்களில் ஒன்றை நாம் சேர்ந்தவர்களாயினும் கூட, நாம் கவலை கொள்ளலாகாது. (செலீன் அவ்வமயம் நவ கன்னிகையாயிருந்ததால் இதில் கவனம் செலுத்தக் கூடாது என்று தெரேசாள் அறிவுரை கூறுகின்றாள். ஆனால் ஒரு பெரிய சகோதரியிடம் இவ்வாறு கூறியிருக்க மாட்டாள்.)

## படபடப்பும் வேண்டாம் இழு இழுப்பும் வேண்டாம்

வேலைகளில் நான் காட்டிய பரபரப்பையும், மிக நன்றாய்ச் செய்ய விரும்பும் ஆவலையும், என் விருப்பப்படி

வெற்றி கிடைக்காவிடின் நான் பட்ட வருத்தத்தையும், ஒரே சொல்லிற் கூறின், வேலையை முன்னிட்டு நான் செய்த ஆர்ப்பாட்டத்தை எதிர்த்துப் போரிட முயன்றாள் தெரேசாள். "நிறைய வெட்டிச் சாய்க்க நீங்கள் இங்கு வரவில்லை. வெற்றி பெற வேண்டுமென உழைத்தலும் கூடாது. மற்ற கர்மேல் மடங்களில் இப்போது நடப்பது என்ன? கன்னியர்கள் பரபரப்பாயுள்ளார்களா இல்லையா என நீங்கள் கவனிக்கிறீர்களா? அவர்களது வேலை உங்கள் செபத்திற்கு, தியானத்திற்குத் தடையாயுள்ளதா? அப்படியானால், உங்கள் சொந்த வேலையிலும் வீண் கவலை கொள்ளாது, நேரிய உள்ளத்தோடு, ஆனால் சுதந்தரமான உள்ளத்தோடு, குறிப்பிட்ட நேரத்தை அதில் செலவிடுங்கள்.

"இஸ்ரேயல் மக்கள் ஒரு கையில் வாளேந்தியும் மற்றொரு கையால் வேலை செய்து கொண்டுமே யெருசலேம் மதிற் சுவர்களைக் கட்டி எழுப்பினர். (எஸ்ரா ஆகமம்) என முன்னர் வாசித்துள்ளேன். இதுவே நாம் செய்ய வேண்டிய தற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ஆம், ஒரு கையால் வேலை செய்து கொண்டு, மற்றொன்றால், இறைவனோடு ஒன்றிக்கத் தடையாயுள்ள வெளியுலகச் சிந்தனையினின்று நம் ஆன்மாவை விடுவிக்கப் போராட வேண்டும்".

எனக்கு எதிரான மனப்போக்குடையவர்களிடம் அவள் இவ்வாறு கூறமாட்டாள் என நான் அறிவேன். "நன்றாக இருந்தால், அல்லது, நான் முடித்து விட்டால், நல்லது தான்; தவறாக இருந்தால், அல்லது, நான் முடிக்காவிட்டால், போனாற் போகிறது" என்று தனக்குள் கூறிக் கொண்டு கவனமின்றி வேலை செய்வதை அவளால் தாங்கிக் கொள்ள முடியாது. நாங்கள் முழு உள்ளத்தோடு வேலை செய்ய வேண்டுமென அவள் விரும்பினாலும், இறைபிரசன்னத்தில்



நிலைத்து நிற்க தடையாயுள்ள மித மிஞ்சிய கவனமும், இதே பிரசன்னத்திற்கு ஊறு விளைவிக்கும் கவனக்குறைவும் என்றுமே கூடாது என அவள் கூறியிருந்தாள். அன்பு செய்யும் இதயம் அன்போடு, அதாவது ஆர்வத்தோடு செயல்படுகிறது. அது ஓடுகிறது, பறக்கிறது. அதற்கு எதுவும் இயலாதது அன்று; எதுவுமே அதைத் தடுத்து நிறுத்த முடியாது (கிறிஸ்து வழி வாழ்வு).

## திருப்புகழ் மாலை:

செபக் கூடத்தில், அடக்கமே உருவான அவளது தோற்றம் எனக்கு எத்துணை நன்மாதிரிகையாயிருந்ததெனில், திருப்புகழ் மாலை ஓதும் வேளை அவள் எதைப் பற்றி நினைப்பாள் என அவளை வினவினேன்.

குறிப்பிட்ட முறை எதுவும் இல்லையென்றும், ஆனால் பெரும்பாலும் பரந்த வெளியில் கற்பாறை மீது உலகை விட்டு உயர்ந்து, இயேசுவுடன் தனிமையில் நின்று, படைப்புகளனைத்தையும் மறந்த நிலையில், தனக்குப் புரியாத சொற்களாயினும் அவருக்கு மகிழ்ச்சியளிப்பதொன்றே போதும் என்ற மனநிறைவில், தன் அன்பை அவரிடம் எடுத்துக் கூறுவது போல் கற்பனை செய்து கொள்வதாக எனக்கு அவள் விடை பகர்ந்தாள்.

திருப்பலியில் குருக்கள் சொல்வதைப் போன்று தானும் உரத்த குரலில் மன்றாட்டுக்களைக் கூறுவதற்காக அவள் செபத் தலைவியாக இருக்க ஆசித்தாள்.

தன் மரணப்படுக்கையில் அவள் தனக்கே பின்வரும் சான்று பகர்ந்தாள்: "நான் இதுவரை, தவறுகள் செய்யாது நல்ல முறையில் திருப்புகழ்மாலையை ஓதி வந்ததைவிட,

இன்னும் சீரிய முறையில் இதைச் செய்ய எனக்கு விருப்பம் ஏற்பட முடியும் என்று நான் நினைக்கவில்லை."

தன்னைப் பிள்ளையாக ஏற்றுக் கொள்ளுமாறு விண்ணில் வாழ் புனிதர்களிடம் கெஞ்சி மன்றாடிய திலிருந்து, அன்புப் பெற்றோரின் பெயரைக் கேட்பதில் மகிழ்ச்சி கொண்டவளாய் காலைதோறும் புனிதர்களின் பட்டியலை (Martyrologe) வாசிக்கும்போது பக்தியோடு அதற்குச் செவிமடுப்பாள்.

பராக்கு தருவதைத் தவிர்க்கும் பொருட்டு, சரியாகத் திருப்புகழ்மாலை செபத்திற்கு முன், சகோதரிகளிடம் வேடிக்கையாக அல்லது கவலைதரக்கூடிய எதையும் கூறாது, முடியும்வரை காத்திருந்து பின் கூறும்படி அவள் எனக்கு அறிவுரை வழங்கினாள். தானும் இதை மிக்க கவனமாய்க் கடைப்பிடித்து வந்தாள்.

## தியான நேரம் கடவுளுக்குரிய நேரம்:

அவள் வாழ்வு முழுவதும் விசுவாசத்தில் தான் கழிந்தது. அவளை விட செபத்தில் மிகக் குறைவான ஆறுதல் பெற்ற ஆன்மாக்கள் இருந்ததில்லை. வறட்சிமிக்க செபத்தியானத்தில் ஏழு ஆண்டுகளைக் கழித்ததாக என்னிடம் ஒரு முறை அவள் மனந்திறந்து கூறினாள்; மாத ஒடுக்கம், ஆண்டுத் தியானம் எல்லாம் அவளுக்குக் கொடிய வேதனையாக இருந்தன. இருப்பினும், ஞான ஆறுதலில் மூழ்கித் திளைத்தவளாகவே அவளை அனைவரும் கருதினர். அவ்வளவிற்கு அவளது சொல்லிலும் செயலிலும் நறுமணம் வீசியது. அவ்வளவிற்கு அவள் இறைவனோடு இணைந் திருந்தாள். இத்தகைய வறட்சி நிலையில் இருந்தும், தியானத்தில் அவள் விடா முயற்சி மிக்கவளாகவே



இருந்தாள். இதன் மூலமாவது கடவுளுக்கு மிகுதியாகத் தருவதில் மகிழ்ச்சி கொண்டாள். இப் புனிதமிக்க பக்தி முயற்சியின் போது ஒரு வினாடியையும் வீணாக்குவதை அவளால் தாங்க முடியவில்லை. தன் நவகன்னியர்களையும் இதே மனப்பான்மையில் தான் உருவாக்கினாள்.

ஒரு நாள் கன்னியர் அனைவரும் துவையல் வேலையில் ஈடுபட்டிருந்த வேளை தியானத்திற்கு மணி அடித்தது. இருப்பினும், வேலையைத் தொடர்ந்து செய்ய வேண்டி யிருந்தது. ஆர்வமுடன் வேலை செய்து கொண்டிருந்த என்னைக் கண்ணுற்ற தெரேசாள் சகோதரி "என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்" என என்னிடம் வினவினாள். "துவைக்கிறேன்" எனப் பதில் மொழிந்தேன். "நல்லது தான்; ஆனால் உள்ளத்தில் நீங்கள் தியானம் செய்ய வேண்டும். இது கடவுளுக்குரிய நேரம். அவரிடமிருந்து இதைப் பறித்துக் கொள்ளக் கூடாது" எனக் கூறினாள்.

தெரேசாள் சகோதரி இறைவனோடு கொண்டிருந்த ஒன்றிப்பு இயற்கையானது. அவரைப் பற்றி அவள் உரையாடும் விதமும் இவ்வாறே அமைந்திருந்தது.

இறை சன்னிதானத்தைச் சில சமயங்களில் இழக்க நேரிடுகிறதா என அவளிடம் கேட்டதற்கு அவள் மிகச் சாதாரணமாகக் கூறினாள்: "இல்லை; 3 நிமிடமாவது கடவுளை நினையாது நான் என்றுமே இருந்ததில்லை என நினைக்கிறேன்". இத்தகைய கவனத்துடன் இருக்க முடியுமா என்று வியப்பை வெளிப்படுத்திய என்னிடம், " நாம் அன்பு செய்யும் ஒருவரை நினைத்துக்" கொண்டேயிருப்பது இயற்கையே" என மறுமொழி கூறினாள்.

நற்செய்தியும், அவ்வமயம் பழைய ஏற்பாட்டில் வாசகத்திற்கென அனுமதிக்கப்பட்ட மிகக் குறைவான பகுதிகளுமே அவளது தியானத்தின் பொருளாய் அமைந்தன. இன்னும் சிறப்பாக, அவளது வாழ்வின் இறுதியில், அவளுக்கு மிகுந்த நன்மை புரிந்த நூல்கள் எதுவுமே (மேற்கூறியவற்றைத் தவிர) அவளது உள்ளத்தைத் தட்டியெழுப்ப முடியவில்லை.

இந்நூல்களில், "இறைவனில் மறைந்த வாழ்வு" பற்றி போசுவே ஆற்றிய மறையுரையில் அவள் தனிமதிப்புக் கொண்டிருந்தாள். நான் கர்மேலில் சேர்ந்த புதிதில், அதை வாசிக்குமாறு அவள் என்னைத் தூண்டினாள்.

அவளது துறவற வாழ்வின் தொடக்கத்தில், நான் வெளியுலகில் இருந்த சமயம் "இயேசுவில் நமது மேன்மை" என்ற தலைப்பில் செகூர் ஆண்டகை எழுதின நூலை, வாங்குமாறு என்னைக் கேட்டாள். "இயேசுவில் தனது மேன்மையைப் பற்றி அவள் தியானித்தாலும், தன் எளிமையைப் பற்றிய அறிவை அவள் எத்துணை ஆழப் பெருக்கிக் கொள்ள விரும்பினாள் எனில், விசுவாசத்தைப் பற்றிய ஞான ஒளி பெறுவதைவிட தன் ஒன்றுமில்லாமையைப் பற்றிய ஒளியைப் பெற விரும்புவதாக அவளே கூறியுள்ளாள். அவ்வமயத்திலும், பின்னரும், புனித சிலுவை அருளப்பரின் நூல்களை அவள் பெரிதும் விரும்பிச் சுவைத்தாள்.

நான் மடம் வந்து சேர்ந்த பின், "கர்மேலின் ஏற்றம்" என்ற நூலில் நமது புனித தந்தை வரைந்த சித்திரத்தின் முன் என்னை நிறுத்தி, "இங்கு வழியே கிடையாது, ஏனெனில் நீதிமானுக்குச் சட்டம் ஏதுமில்லை" என்ற வரியை என்னிடம் சுட்டிக்காட்டியபோது, அவளிடம் காணப்பட்ட ஆர்வத்தை என்னென்பது? அவ்வமயம், உணர்ச்சி வசப்பட்ட



அவளுக்குத் தன் பெருமகிழ்ச்சியை எடுத்துரைக்க நா எழவில்லை. இந்த அன்பை வந்தடையும் பொருட்டு, ஞானக் குழந்தைமை என்ற புத்தம் புதிய வழியைக் கண்டுபிடிக்க இந்த வாக்கியம் அவளைத் தூண்டியது. இவ்வழி எத்துணை சிறியதும் நேரியதும் எனில், ஒரே பாய்ச்சலில் இறைவனின் இதயத்தையே எட்டிப் பிடித்து விடுகிறது!

# பக்தி

## மறைநூலின் மீது தனிப் பற்று:

இறைவனையும் ஆன்மீக வாழ்வையும் சார்ந்த அவளது அறிவு உயர்ந்த நிலையிலிருந்தது. சிறந்த நினைவாற்றல் கொண்டிருந்த அவள், வாசிப்பதையோ, கேட்பதையோ எளிதாக நினைவில் நிறுத்திவிடுவாள்.

தக்க சமயத்தில், சிறு கதைகளையும் நல்லொழுக்கக் கருத்துகளையும் கையாளுவதில் தேர்ச்சி பெற்றவள். கர்மேலில் அவளது மாபெரும் செல்வமாக விளங்கியது மறைநூல். இதில் சில பகுதிகளை நுண்ணறிவோடு விரைவில் கிரகித்து, அவற்றில் மறைந்துள்ள பொருளைக் கண்டு பிடித்து வியத்தகுமுறையில் செயலுக்குக் கொணர்ந்தாள்.

பழைய ஏற்பாட்டிலிருந்து சில பகுதிகளைப் பெயர்த்தெழுதி அவளுக்குத் தந்தேன். இச்சில பக்கங்கள் அவளது தியானத்திற்குச் சுவைமிக்க உணவாக விளங்கின.

இறைவனை அறியவும், அவரது "குணத்தை"க் கண்டு பிடிக்கவும் முயன்ற அவள், மறைநூல்களில், சிறப்பாக நற்செய்திகளில் அன்றி வேறு எவ்வாறு அவரை அவள்

நன்கு அறிந்து கொள்ளமுடியும்? இதனால் மொழிபெயர்ப்
புகளின் வேறுபாடு அவளுக்கு மிக்க வேதனையைத் தந்தது.
"நான் குருவாக இருந்திருந்தால், எபிரேய, கிரேக்க
மொழிகளைப் பயின்றிருப்பேன். இவ்வாறு, இறைவாக்கை
மனித மொழியில் அவர் வெளிப்படுத்தியருளினவாறே
புரிந்து கொண்டிருப்பேன்" எனக் கூறி வருந்தினாள். இரவும்
பகலும் பரிசுத்த நற்செய்தியைத் தன் நெஞ்சிலே வைத்துக்
காத்தாள்.

## புனித மிக்க மூவொரு கடவுளின் மீது அன்பு:

புனித மிக்க மூவொரு கடவுளின் மீது அவள் மாபெரும் பக்தி கொண்டிருந்தாள். இவர்களது திருவிழா பெரு விழாவாக உயர்த்தப்பட வேண்டுமென அவள் விரும் பினாள்.

கர்மேலில் சில மாதங்கள் வரை, திருமுகத்தின் மரி என்ற
பெயரை நான் பூண்டிருந்தேன். இப்பெயரைத் தேர்ந்தெடுக்கு
முன், நான் வெளியுலகில் இருந்தபோதே, திரித்துவத்தின் மரி
என்ற பெயரை எனக்கு அளிக்க அவள் கருதியிருந்தாள்.
ஆனால் இப்பெயர் வேறு ஒரு நவகன்னிகைக்கு அளிக்கப்
பட்டுவிட்டதால் அவள் மிக்க ஆறுதல் அடைந்தாள்.

1895 ஆம் ஆண்டு தூன் 9 நாள், புனித மிக்க மூவொரு கடவுளின் திருநாளன்று இறைவனின் இரக்கமுள்ள அன்பிற்குத் தன்னை தகன பலியாகக் கையளிக்கத் தெய்வீக தூண்டுதல் பெற்றாள்.



## இறைவனை "எம் தந்தை" என்று அழைத்தல்:

ஒரு நாள், எங்கள் அன்புக்குரிய சிறிய சகோதரியின் சிற்றறையில் நுழைந்தபோது, அவளது ஆழ்ந்த அடக்கமான தோற்றம் என் கவனத்தை ஈர்த்தது. ஆர்வத்துடன் தைத்துக் கொண்டிருந்தாலும் ஆழ்ந்த காட்சித் தியானத்தில் திளைத்தவளாய் அவள் தோன்றினாள். அவளை நோக்கி, "எதைப் பற்றிச் சிந்திக்கிறீர்கள்" என வினவினேன். அவளோ, "பரலோகத்து மந்திரத்தைப் பற்றித் தியானிக் கிறேன். இறைவனை நம் தந்தை என அழைப்பது எத்துணை இனிமையானது." என விடை பகர்ந்தாள்.

## கண்களில் கண்ணீர்த் துளிகள் மின்னின.

"குழந்தை தன் தந்தையின் மீதுள்ள அன்பைப்பல வியத்தகு முறையில் வெளிப் படுத்தி அவரைக் கொஞ்சுவது போல், அவள் இறைவனுக்கு அன்பு செய்தாள். நோயுற்ற சமயம், இறைவனைப் பற்றிப் பேசும்போது, சொல் தவறி, அவரை அப்பா என்று அழைத்துவிட்டாள். நாங்கள் அனைவரும் சிரிக்கத் தொடங்கினோம். ஆனால் அவளோ, உணர்ச்சி வசப்பட்டவளாய், "ஆம் அவர் என் அப்பா தான், அவருக்கு இப்பெயர் அளிப்பது எனக்கு எத்துணை இனிமையாயுள்ளது" என்றாள்.

## இயேசுவோடு நெருங்கிய உறவு

"இயேசு அவள் இதயத்திற்கு எல்லாமாக விளங்கினார். நமதாண்டவர் இயேசுகிறிஸ்துவைப் பற்றி எழுதும் போது, அவரது ஆராதனைக்குரிய தன்மைக்கு வணக்கத்துக்குரிய

வகையாய் அவருக்கு - அவர் என்ற சொற்களின் முதல் எழுத்தை, பெரிய எழுத்தில் (capital letter) என்றும் எழுதுவது வழக்கம்.

"இயேசுவிடம் செபிக்கும்போது, நீ அல்லது நீர் என்ற சொற்களில் எதைக் கூற விரும்புகிறீர்கள்" என என்னிடம் அவள் கேட்டாள். "நீ" என்று அழைக்கத்தான் விரும்புகிறேன் என்று நான் விடையளித்ததும் ஆறுதலடைந்தவளாய்த் தொடர்ந்து கூறினாள்: "நானும் அப்படித்தான்; இயேசு விடம் "நீ" என்று கூறத்தான் பெரிதும் விரும்புகிறேன். இதுவே என் அன்பை நன்கு வெளிப்படுத்துகிறது. அவரிடம் தனிமையில் பேசும் போது இவ்வாறு கூற என்றுமே தவறியதில்லை. ஆனால் பிறரால் வாசிக்கப்படும் என் கவிதைகளிலும் செபங்களிலும் இவ்வாறு செய்யத் துணிவதில்லை.

## திருமுகத்தின் மீது பக்தி

இயேசுவின் புனித மனிதத்துவத்தின்பால் அவள் கொண்டிருந்த அன்பின் மலர்ச்சியும் கொடுமுடியுமாய் விளங்கியது இப்பக்தி. திருமுகம் ஒரு கண்ணாடி. அதில் தன் அன்பரின் ஆன்மாவையும் இதயத்தையும் கண்டாள் அவள். அங்கு அவரை முழுதும் கண்டு தியானித்தாள். அன்புக் குரியவரின் முகச்சாயலை மட்டும் கொண்ட புகைப்படம் அவரை நம்மருகில் இருக்கச் செய்யப் போதுமானது அல்லவா?

திருமுகத்துப்பக்தி தெரேசாள் சகோதரியின் ஆன்மீக வாழ்வை வழி நடத்தியது.



இயேசுவின் காயமுற்ற வதனத்தை உற்று நோக்கி, அவரது அவமானங்களைப் பற்றி தியானித்ததில் தான், தாழ்ச்சி, துன்பத்தின் மீது அன்பு, தியாகத்தில் தாராள சிந்தை, ஆன்ம தாகம், படைப்புகளில் பற்றின்மை இன்னும் அவளது வாழ்வில் நாங்கள் கண்ட வீரம் செறிந்த அனைத்துப் புண்ணியங்களையும் பெற்றுக் கொண்டாள். நமதாண்டவர் ஜெர்த்துருத்தம்மாளுக்குக் கூறிய பின் வரும் நிறை வாழ்வின் அறிவுரையை அவள்அறியாமலேயே கடைப்பிடித்தாள்: "அறத்தில் முன்னேற விழையும் ஆன்மா என் மடியில் பறந்து வரட்டும்; ஆன்றால் ஆசை எனும் சிறகு கொண்டு இன்னும் மேலே உயர்ந்து மிகத் தொலைவில் பறக்க விரும்பினால், கழுகின் வேகத்தில் அது உயர்ந்து செல்லட்டும்; தாராள அன்பு எனும் இறக்கை கொண்ட பக்தி நெறியாளரைப் போன்று தாங்கப்பட்டு, அது என் வதனத்தைச் சுற்றிப் பறக்கட்டும்".

இதைத் தான் சிறுமலர்த் தெரேசாளும் செய்தாள். இவ்வெழுச்சியின் விளைவு? வீரஞ் செறிந்த தாராள சிந்தை மலரும் பக்தி நெறியாளர்களின் தூய அன்பு. அன்பின் அறிவை, அறத்தின் கலையைத் தனக்குக் கற்றுத் தந்த சுவடி, இயேசுவின் திரு வதனமே எனத் தன் இளங்கன்னியருக்குச் சுட்டிக்காட்டினாள். "அன்பிற்கு அன்பே ஈடு செய்யும்" என்ற விருதுவாக்கைத் தன் ஞான சின்னத்திலுள்ள திருமுகத்தின் அருகில் எழுதி வைத்தாள். இத்திரு வதனத்தின் மீதுள்ள அன்பு அவளது மடல்கள், கவிதைகள், ஓர் ஆன்மாவின் வரலாறு என்ற அவளது நூல் ஆகியவற்றில் பொதிந் திருப்பதைக் காணலாம்.

தூரின் நகரிலுள்ள திருவுடலின் துணியின் சாயலைக் கொண்டு திருமுகத்தை ஓவியமாகத் தீட்டும் என் திட்டத் திற்கு உரு கொடுத்தவள் என் அன்புமிக்க சிறிய சகோதரியே

என்பது உறுதி. அவள் மறைந்த 7 ஆண்டுகட்குப்பின், அதாவது 1904 ஆம் ஆண்டில் நான் தீட்டிய ஓவியத்திற்கு வெற்றி கிடைத்ததும் அவளால் தான்.

## நற்கருணைப் பக்தி

திருப்பலியும் நற்கருணை விருந்தும் அவளுக்கு எல்லையற்ற மகிழ்ச்சியின் பொருளாய்த் துலங்கின. முக்கியம் வாய்ந்த எச்செயலையும் தொடங்கு முன், அக்கருத்திற்காக திருப்பலி நிறைவேற்றி வைக்கத் தவறியதில்லை. கர்மேலில் அவளது விழாக்களையும் ஆண்டு நிறைவு விழாக்களையும் முன்னிட்டு எங்கள் அத்தை அவளுக்குப் பணம் தரும் போதெல்லாம் அதைக் கொண்டு திருப்பலி நிறைவேற்றி வைக்க அவள் அனுமதி கேட்பது வழக்கம். "இது எனது பிள்ளை பிரான் ஜீனிக்கு. இப்போது நான் அவனுக்கு உதவி செய்ய வேண்டுமல்லவா?" என சில சமயங்களில் என்னிடம் தாழ்ந்த குரலில் கூறுவாள்.

அவளது வார்த்தைப்பாட்டிற்கு முன், எங்கள் வணக்கத்திற்குரிய தந்தை நோயுற்றிருந்தார். அவ்வமயம், அவளது கைப்பணமாகிய நூறு பிராங்குகளைக் கொண்டு அவரது கருத்திற்காகத் திருப்பலி நிறைவேற்றி வைத்தாள். இயேசுவின் திரு இரத்தத்தை விட உலகில் எதுவுமே தன் தந்தைக்கு எல்லையில்லா அருட்கொடைகளைப் பெற்றுத் தரவியலாது என அவள் திருப்பலியில் உயரிய மதிப்புக் கொண்டிருந்தாள்.

அவள் நாடோறும் நன்மை உட்கொள்ள பெரிதும் விழைந்தாள். ஆனால் அன்றைய வழக்கம் இதற்கு இடந் தரவில்லை. இதனால் இவள் கர்மேலில் பெரிதும் வேதனையுற்றாள். இவ்வழக்கத்தில் ஒரு மாறுதல் ஏற்பட



வேண்டுமென புனித வளனாரை மன்றாடினாள். அவளது ஆர்வமிக்க வேண்டுதலுக்குப் பதில் அளிப்பது போன்று 13 ஆம் சிங்கராயரின் சட்டம் இது விஷயத்தில் மாபெரும் சுதந்திரம் அளித்தது.

* குறிப்பு [அடிக்கடியோ நாள்தோறுமா நன்மை உட்கொள்ள பாவசங்கீர்த்தன குரு அனுமதித்தால் போதும். மடத்துத் தலைவிக்கு இதில் தலையிட எவ்வித உரிமையுமில்லை. ஆனால், லிசியே மடத்துக் குருவாயிருந்த யூஃப் (Youf) சுவாமிகள், மடத்துப் பழக்க வழக்கங்களை, கொன்சாகா தாயாருக்கு அஞ்சி மாற்றத்துணியவில்லை. ஆனால் மடத்தில் ப்ளு காய்ச்சல் பரவியிருந்த காலத்தில் மட்டும் இச்சட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டார். இதனால் அவ்வமயம், தெரேசாள் தினமும் நன்மை வாங்கும் வாய்ப்புப் பெற்றாள்.]

இதனால் அவள் புனித வளனாருக்கு என்றும் நன்றிக் கடப்பாடுள்ளவளாய், தோட்டத்தில் அவரது திருவுரு முன் செல்லும் போதெல்லாம் அன்போடு அவர் மீது மலர் தூவுவாள்.

தன் சாவிற்குப்பின் "அன்றாட உணவு" எமக்குக் குறைவுபடாது என முன் கூட்டியே அவள் உரைத்த வாக்கு முற்றிலும் நிறைவேறியது (புனிதை மறைந்த சில நாட்களில் Youf அடிகளும் இறந்துவிடவே, அவருக்குப்பின் வந்த ஓதியேர்னே அடிகள் 13 ஆம் சிங்கராயரின் சட்டப்படி, லிசியே கர்மேலில் அன்றாட நன்மை உட்கொள்ளும் பழக்கத்தைப் புகுத்தினார்.)

பரிசுத்த நற்கருணை மீது அவள் கொண்டிருந்த அன்பு, மிக்க ஆர்வமுடன் தன் sacristine அலுவலை ஆற்றத்

தூண்டியது. பூசைத் திருத்தட்டிலோ துணியிலோ திரு அப்பத்துண்டு ஒன்றைக் கண்டு விட்டால் அவள் மகிழ்ச்சிக்கு எல்லையே இராது. ஒரு நாள் திருப் பாத்திரம் தக்க விதத்தில் சுத்தம் செய்யப்படாததைக் கண்ட அவள், அதைத் திருக் கூடத்தில் வைக்கும் பொருட்டு, சொல்லரிய மகிழ்ச்சியுடனும் வணக்கத்துடனும் எடுத்துச் செல்லும் போது தனக்குத் துணையாக வரும்படி நவகன்னியர் பலரை அழைத்தாள்.

ஒரு முறை, நன்மை வாங்கும்போது, திரு அப்பம் குருவின் கையிலிருந்து விழும்வேளை உடனே தன் உத்தரியத்தை நீட்டி அதைப் பெற்றுக் கொண்டதாகப் பேருவகையுடன் என்னிடம் கூறினாள். குழந்தை இயேசுவைத் தன் கைகளில் தாங்கிய கன்னிமரியாளைப் போன்று, தானும் அதே பேற்றை அடைந்ததாக எண்ணி மகிழ்ந்தாள்.

திருப்பலிக்கான திருப்பாத்திரங்களைத் தயார் செய்கையில், திருத்தட்டிலும் திருப் பாத்திரத்திலும் தன் சாயலைக் காண விரும்புவாள். தன் சாயல் பொன்னில் பிரதி பலிப்பதால், தன் மீதே திரு அப்பங்கள் அடுக்கப்படுவதாக எண்ணி மகிழ்வாள்.

திருக்கூடத்திலுள்ள திவ்விய நற்கருணைப் பேழையைச் சுற்றிலும் எத்துணைப்பக்தியோடு அவள் வண்ண ஓவியம் தீட்டினாள்! அவ்ளது கீழ்ப்படிதலுக்கு இது ஒரு சான்றாக விளங்குகிறது. ஏனெனில், ஓவியக்கலையில் போதிய தேர்ச்சி பெறாத இவள், வண்ண ஓவியந்தீட்டுவதிலோ சிறிதும் பயிற்சி பெறாதவள். கை தேர்ந்த கலைஞனும் செம்மையாய்த் தீட்ட இயலாத நிலையில் போதிய ஒளியின்றி, ஏணிமேல் ஏறி நின்று இவ்வேலையை அவள்



செய்ய வேண்டியிருந்தது. இருப்பினும் மிகத் திறமையுடன் அதைச் செய்து முடித்தாள். அவளது கைத்திறத்தினால் உருவான சிறிய வானதூதர்களின் முகத்தில் குழந்தையின் பாலொளியும் விண்ணக ஒளியும் கலந்து வீசுவதைக் காணலாம்.

## குருத்துவத்திற்கு அவள் காட்டின வணக்கம்

மாட்சி மிக்க குருத்துவத்தால் போர்த்தப்பட்டுள்ள குருக்கள் மேல் மாபெரும் வணக்கம் காட்டத்தூண்டியது அவளது விசுவாச மனப்பான்மை. தான் குருவாக இருக்க இயலாமை பற்றி, வாழ்வில் பல முறைகளில் அவள் வருந்தி இருக்கிறாள். 1897 ஆம்ஆண்டு சூன் திங்களில், தன் நோயின் கடுமையை உணர்ந்த அவள் என்னிடம் "இறைவன் என்னை எடுத்துக் கொள்ளப் போகிறார். குருவாகும் பேறு எனக்குக் கிடைத்தாலுங் கூட இவ்வயதில் நான் குருவாக ஆகியிருக்க முடியாது" எனக் கூறினாள்.

புனித ஸ்தனிஸ்லாசுக்கு புனிதை பார்பராள் திவ்விய நற்கருணை கொண்டு வந்ததை எண்ணி அவள் பேருவகை எய்தினாள். அவள் என்னிடம் கூறினாள்: "வானதூதரோ குருவோ கொண்டு வராது, ஏன் ஒரு கன்னி கொண்டு வர வேண்டும்? ஆ! விண்ணில் நாம் அதிசயம் பல காணலாம். இவ்வுலகில் குருத்துவத்தை ஆவலுடன் விரும்பினவர்கள், விண்ணில் அதன் உரிமைகளைப் பெற்று மகிழ்வர் என்பது என் கருத்து".

## குழந்தை இயேசுவின் திரு உருவச்சிலைக்கு மலர்கள்:

தாழ்வாரத்தில் அமைக்கப்பட்டிருந்த குழந்தை இயேசுவின் திரு உருவச்சிலையை அலங்கரிக்கும் பணி தனக்குக் கிடைத்தது பற்றி மகிழ்ந்தாள் என் சிறிய தெரேசாள். மிக்க பொறுப்புணர்வுடன் கவனித்து வந்த அவள், சுரூபத்திற்கு ரோஸ் வண்ணந்தீட்டி, அதைச் சுற்றிலும் அழகான மலர்களும், பன்னிறப் பகட்டான சிறகுகளுடைய சிறு பறவைகளும் (பஞ்சு திணித்தவை) அமையுமாறு செய்தாள்.

கோடையில், பகல் 12 மணியிலிருந்து 1 மணி வரை மௌன நேரத்தில் இளைப்பாற அனுமதியுண்டு. ஆனால் அவளோ ஓய்வு நேரத்தின் ஒரு பகுதியைத் தன் சிறிய இயேசுவை அலங்கரிப்பதில் கழித்து விடுவாள். ஆனால் அக்காலத்தில், கார்மேலில் பூக்கள் கிடைப்பது அரிது. வயல்வெளியில் உலவி வராது, கிண்ண வடிவப் பொன்னிற மலரொன்றையும் கொய்யாது இருத்தல் 15 வயதில் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்ட அவளது இயல்பிற்கு மிகக் கடினமாக இருந்தது. இருப்பினும், தன் சிறிய காதலிக்கு வேண்டியதை அளிக்க இயேசுவே முன் வந்தார்; அவளே பின் வரும் நிகழ்ச்சிக் குறிப்பை என்னிடம் கூறினாள்:

கார்மேலில் புகுந்த முதலாண்டுக் கோடையில் ஒரு நாள் நீல மலர்களையும் டெய்சி பூக்களையும், புல்லரிசிக்கதிர், கோதுமைக் கதிர்ப்பூக்களையும் இனி என்றுமே பார்க்க முடியாது என வருத்தத்துடன் தனக்குள் தெரேசாள் கூறிக் கொண்டாள். என்ன விந்தை! அதே சமயத்தில் வாயிற்படி சகோதரி தெரேசாள் விரும்பிய வயல்வெளி மலர்களும் கதிர்களும் கொண்ட மாபெரும் மலர்க்கொத்தொன்றைத்



தாயாரிடம் கொண்டு வந்து நீட்டினாள். விளக்கம் ஏதுமின்றி, சன்னல் ஓரத்தில் இது வைக்கப்பட்டிருந்ததை வெளியில் உள்ள சகோதரி கண்டு எடுத்ததாகக் கூறினாள். தெரேசாளின் வருத்தத்தை அறியாத தாயார் குழந்தை இயேசுவின் சுரூபத்திற்கு இம்மலர்க் கொத்தை வைக்குமாறு அவளிடமே தந்தாள். அன்றிலிருந்து வயல்வெளிப்பூக்கள் அவளுக்கு என்றுமே குறைவுபடாமல் கிடைத்துக் கொண்டிருந்தன.

## பாடுபட்ட சிலுவைக்கு ரோசா மலர்கள்:

நடுத்தோட்டத்திலுள்ள பெரிய பாடுபட்ட சிலுவைக்கு மலர் தெளிப்பதில் அவளுக்குத் தனிப்பெரும் பக்தியுண்டு. நோயுற்ற சமயத்தில், தன் பாடுபட்ட சிலுவைக்கு ரோசா மலர்களைச் சூட்டி வாடின இதழ்களைக் கவனமுடன் அகற்றிவிடுவாள். ஒரு நாள், தன் இயேசுவின் ஆணிகளையும் முள்முடியையும் விரல்நுனியால் மெதுவாக அவள் தொடுவதைக் கண்ணுற்ற நான் "என்ன செய்கிறீர்கள்"? என வினவினேன். தன் செயலைப் பார்த்துவிட்டார்களே என்ற வியப்பு தோன்ற அவள் கூறினாள்: "நான் அவரது ஆணிகளை அகற்றி முள்முடியை எடுத்துக் கொண்டிருக்கிறேன்".

மனிதர்களுக்கு மலர் தூவி, தன் அன்பை வெளிப்படுத்த அவள் விரும்பியது கிடையாது. ஒரு நாள் அவள் கையில் ரோசா மலர்களைத் திணித்து அன்பின் சான்றாக அவற்றை ஒரு சகோதரியின் மீது தெளிக்குமாறு கேட்டேன். ஆனால் அவளோ மறுத்து விட்டாள்.

## மரியாளின் பக்தி

அவள் புதுமையாய்க் குணமடைந்த வேளை அவளை நோக்கிப் புன்னகை புரிந்த மரியாளின் சுரூபம் ஆறுதலாய்

விளங்கியது. நான் கர்மேலில் சேர்ந்தபோது இச்சுரூ பத்தையும் எடுத்துக் கொண்டு வந்தேன். இதைப் பெற்றுக் கொள்ள தெரேசாள் •சகோதரி மடத்து வாயிற்படிக்கு வந்திருந்தாள். இதை வேகமாய்க் கைப்பற்றி, அன்புடன் அணைத்துக் கொண்டு அது பாரமிக்கதாய் இருந்தும், ஏதோ சிறகொன்றைத் தூக்குவது போன்று அத்துணை எளிதாகத் தூக்கிச் சென்று விட்டாள். அங்கிருந்த சகோதரிகள் இதைக் கண்டு வியப்பும் திகைப்பும் அடைந்தனர்.

அதன் அடியில் முழந்தாளிட்டு, பக்தி உருக்கத்துடன் வேண்டுவதை நான் பன்முறை கண்டிருக்கிறேன். அவளது இறுதி நோயின்போது • படுக்கைக்கு எதிரே இச்சுரூபம் வைக்கப்பட்டிருந்தது. இடைவிடாது அவளது பார்வை அதன்மீது சென்றது.

மாதா சுரூபங்களின் வல்லமையில் நம்பிக்கை கொண்டிருந்த தெரேசாள், பிறருக்கு அவற்றை வழங்குவதில் மகிழ்ச்சி கண்டாள். வெளி உலகில் இருந்தபோது, தான் மறைக்கல்வி புகட்டிய இரு ஏழைச்சிறுமியர் நெஞ்சில் இச்சுரூபத்தை அணிவித்தாள். தான் கொடுப்பதை அணிந்து கொள்ளுமாறு விசுவாசமில்லாத ஒரு பணிப் பெண்ணை அவள் தூண்டினாள். "மிகவும் இரக்கமுள்ள தாயே" என்ற செபத்தை நாடோறும் செபிப்பதாக, தன் புதுநன்மை நாளன்று உறுதி பூண்டாள். வாழ்நாள் வரை இதைப் பிரமாணிக்கமாய்க் கடைப்பிடித்தாள். பிறகு, புய்சோனே வில் (Bussionets)* தினமும் செபமாலை செபித்து வந்தாள். ஆனால், இந்த வெளிப்பக்தி முயற்சிகள் எல்லாம், மரியாளை "அம்மா" (Maman) என்று அழைத்த அவள் தன் அன்பு மிக்க தாயோடு கொண்டிருந்த நெருங்கிய ஒன்றிப்பின் மங்கலான பிரதிபலிப்பாக மட்டுமே விளங்கின.

* லிசியேவில் உள்ள தெரேசாளின் வீடு



மரியாளை மன்றாடுவதன் . மூலமே மனமாற்றங்கள் யாவும் நிகழ்கின்றன என்பது அவளது கருத்து. தன் கருத்துக்கள் அனைத்தையும் கன்னிமரியிடம் ஒப்படைத்து விடுவாள். ஒரு நாள் பிற்பகல் 3 மணிக்கு அவள் செபிப் பதைக் கண்ணுற்ற நான் அவளிடம் இதன் காரணத்தை வினவினேன். ஒரு "அருள் நிறை மரியே" சொல்லி கன்னிமரிக்கு என் வேலையை ஒப்புக்கொடுக் கிறேன். வேலையை மீண்டும் தொடங்கும்போதெல்லாம் இவ்வாறு சொல்லப் பழகிக் கொண்டேன்" என்றாள். இரவில், எங்கள் கழுத்தில் செபமாலையைப் போடச் செய்வாள்.

"ஓ மரியே, நான் உமக்கு அன்பு செய்வது ஏன்" என்ற பாடலை எங்கள் அன்புத் தலைவி கடின நோயுற்றிருந்த போது இயற்றினாள். இப் பாடலில் அவள் தன் அன்பு முழுவதையும் கொட்டியிருந்தாள். இறப்பதற்கு முன் கன்னி மரியாளைப் பற்றி தன் சிந்தையில் தோன்றுவதனைத்தையும் கவிதையுருவில் வடித்துத் தர விரும்புவதாக அவள் என்னிடம் கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

# 4

## பிறரன்பும் ஆன்மதாகமும்

## பிறரன்பு

### இசையாஸ் இறைவாக்கை வாசிக்கையில்:

அன்பில் எங்கள் சிறிய புனித சகோதரி ஒரு வற்றாத ஊற்று; இசையாசின் பின் வரும் பகுதியை வாசிக்கையில் அவள் பெற்ற ஞான ஒளியை எனக்குப் பரிமாறினாள்: "மனிதன் தன்னையே நாள் முழுவதும் வதைத்துக் கொள்வது தான் நமக்கு விருப்பமான நோன்பா? கோணி ஆடையை உடுப்பதும், சாம்பலில் உட்காருவதுந்தான் நமக்கேற்ற நோன்பா? இதைத் தான் நோன்பென்றும், ஆண்டவருக் குகந்த நாளென்றும் சொல்லுகிறாயோ? அக்கிரமத்தின் சங்கிலிகளை அறுத்து விடு, அழுத்தியிறுத்தும் நுகத்தடிகளை இறக்கு; ஒடுக்கப்பட்டவர்களை உரிமை மக்களாய் விடுதலை செய்; சுமையானதையெல்லாம் உடைத்தெறி; பசித்திருப் பவனுக்கு உன் அப்பத்தைப் பகிர்ந்துகொடு, ஏழைகளுக்கும் அந்நியருக்கும் உன் வீட்டில் தங்குவதற்கு இடங்கொடு; ஆடையில்லாதவனைக் கண்டால் அவனைப் போர்த்து; உன் இனத்தானை அவமதிக்காதே. இதுவன்றோ நாம் விரும்பும் மேலான நோன்பு"

ஒவ்வொரு வசனமாக எடுத்து எனக்கு விளக்கினாள்.

"உடலை விட உள்ளத்தைச் சார்ந்த செயல்களில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய பிறரன்பு மிகப்பெரியது. வறி



யோர் எங்கும் உள்ளனர். ஆம், வலுவற்ற ஆன்மாக்கள், நோயுற்ற, நலிவுற்ற, நசுக்குண்ட ஆன்மாக்கள் உலகெங்கும் உள்ளனர். அவர்களுக்குச் சுமையானதையெல்லாம் உடைத் தெறித்து, உரிமை மக்களாய் விடுதலை செய்யுங்கள், அதாவது, உங்கள் சகோதரிகளின் குறைகளை உங்கள் முன் யாராவது எடுத்துக் கூறும் போது, நீங்களும் என்றுமே கூடச் சேர்ந்து பேசவேண்டாம். சிலசமயங்களில் அவர்களது கூற்றுக்கு மறுத்துப் பேச முடியாத நிலை ஏற்படலாம். அவ்வமயம், விவேகத்துடன் அவர்களது புண்ணியங்களை எடுத்துக் காட்டுங்கள். இவ்வாறு ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்யுங்கள். உங்கள் அப்பத்தைப் பகிர்ந்து கொடுங்கள்; அதாவது உங்களையே தியாகத்தின் மூலம் பிறர்க்குக் கொடுங்கள். உங்கள் வீட்டில் தங்குவதற்கு இடம் கொடுங்கள். (தன்னால் செய்யமுடியாமல் உங்கள் உதவியை நாடும் எவரும் ஏழை எனக் கருதப்படுவதால்) அவர்களுக்கு உம் செல்வத்தை வாரி வழங்குங்கள்; அதாவது உம் நேரத்தை, அமைதியை அவர்களுக்காகச் செலவிடுங்கள்".

## மீண்டும் இசையாசைத் தொடர்ந்து வாசித்தாள்:

"அப்போது, உன் ஒளி காலைக் கதிரவன் போலத் தோன்றும், விரைவில் உனக்கு நலம் கிடைக்கும்; உன் நீதி உனக்கு முன் நடக்கும், ஆண்டவருடைய மகிமை உன்னைப் பின்தொடரும். அப்போது ஆண்டவரைக் கூவியழைப்பாய், அவரும் உம் மன்றாட்டைக் கேட்டருள்வார்; அவரைக் நோக்கிக் கூக்குரலிடுவாய், அவரும் "இதோ இருக்கிறோம்" என்பார். உன் நடுவிலிருந்து நுகத்தடியைத் தள்ளிவிட்டு, உன் அயலானுக்கு எதிராய்க் கையோங்காமல், சொல்லத் தகாததொன்றையும் சொல்லாமல் இருந்தால், பசித்திருப்

பவனுக்கு உன் உணவைப்பகிர்ந்து, துன்புற்றவன் விருப்பத்தை நிறைவு செய்தால், உன் வெளிச்சம் இருள் நடுவில் உதயமாகும், உன் காரிருள் பட்டப்பகல் போல் இருக்கும். ஆண்டவர் என்றென்றும் உன்னை வழிநடத்துவார், பாலை நிலத்தில் உன் உள்ளம் நிறைவு பெறச் செய்வார், உன் எலும்புகளை உறுதிப்படுத்துவார், நீர் வளமிக்க தோட்டம் போலும் வற்றாத நீரூற்றுப் போலும் விளங்கச்செய்வார். பல்லாண்டுகளாய்ப் பாழடைந்து கிடந்த உன் இடங்கள் கட்டப்படும். தலைமுறை தலைமுறையாய்க் கிடந்த அடிப்படைகளை நீ கட்டியெழுப்புவாய், மதிற்சுவர் உடைப்புகளைக் கட்டுகிறவன் என்றும் மக்கள் குடியேறும்படி தெருக்களை அமைக்கிறவன் என்றும் நீ பெயர் பெறுவாய்"

அவள் தொடர்ந்து விளக்கினாள்:

கிடைக்கப் போகும் சம்பாவனையைப் பார்த்தீர்களா? பிறரன்புக்கு ஒவ்வாத சொற்களைக் கூறுவதை நிறுத்தும் போது, உங்கள் இனிமையாலும் அன்புக்கனிவினாலும் சிறைப்பட்ட ஆன்மாக்களின் நுகத்தடியை தள்ளிவிடுகிறீர்கள். எளியோர்க்கும் கைவிடப்பட்டோர்க்கும் அன்போடும் பரிவோடும் தன்னலமற்ற நோக்கத்தோடும் உதவி செய்யும் போதும், துன்புறுகிறவர்களைத் தேற்றும் போதும் உங்களுக்கு ஆன்ம நலன் கிடைக்கும். உங்கள் ஆன்மா மெலிந்து சோர்வுறாது. உம் நீதி உம்முன் நடக்கும். ஆனால் இச்செயல்கள் பலன் தர வேண்டுமாயின், மறைவில் செய்யப்பட வேண்டும். எளிய ஊதா நிறப்பூவைப் போன்று இனிய நறுமணம் எங்கிருந்து வருகிறது என மக்கள் அறியா வண்ணம் மணம் வீசும் தன்மையுடையது புண்ணியச் செயல். ஆண்ட்வருடைய மகிமை உம்மைப் பின் தொடரும், உம் மகிமையன்று, ஆனால் ஆண்டவருடைய மகிமை.



ஆண்டவர் உம் மன்றாட்டைக் கேட்டருள்வார். உமக்கு அமைதியை அளிப்பார்; உம் வெளிச்சம் இருள் நடுவில் உதயமாகும், உம் காரிருள் பட்டப்பகல் போல் இருக்கும். உம் காரிருள் மறைந்துவிடாது ஏனெனில் துன்பங்கள் ஆன்மாவிற்குக் குறைவுபடாது; ஆனால், உம் காரிருள் ஒளிமயமாகும். உமக்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும். உள்ளத்தின் இருளிலும் கூட உம் வெளிச்சம் உதயமாகும். நீர் வளமிக்க தோட்டம் போலும், வற்றாத நீரூற்றுப் போலும் நீங்கள் விளங்குவீர்கள். தொல்லை தராத வண்ணம் படைப்புக்கள் அனைத்தும் இந்த ஊற்றில் நீர் முகந்து கொள்ளும். ஆனால், இத்துடன் முடிந்து விடவில்லை. இறுதி கைம்மாறைக் கவனியுங்கள்: பல்லாண்டுகளாய்ப் பாழடைந்து கிடந்த இடங்கள் கட்டப்படும். அடிப்படைகளை நீர் கட்டியெழுப்புவீர். இதன் பொருள் என்ன? பிறரன்பைக் கடைப்பிடிப்பதன் மூலம் எவ்வாறு நான் கட்டி எழுப்ப முடியும்? இரண்டிற்கும் தொடர்பு இல்லாதது போல் இல்லையா? இருப்பினும், நீங்கள் மதிற்சுவர் உடைப்புகளைக் கட்டுகிறீர்கள் என்றும் தெருக்களை அமைக்கிறீர்கள் என்றும் விண்ணில் தூதர்கள் உம்மைப் பற்றிக் கூறுவர்".

இவ்வாறு கூறின அவள் என்னை உற்சாகத்தோடு நோக்கினாள்: "என்ன விந்தை! நமது சிறிய அறச் செயல்களினால், மறைவில் ஆற்றிய பிறரன்புச் செயல்களினால் தொலைவிலுள்ள ஆன்மாக்களை நாம் மனந்திருப்புகிறோம்; மறைபோதர்களுக்கு உதவி புரிகிறோம். இன்னும், இயேசுவுக்கு இல்லங்களை எழுப்பி அவருடைய வழிகளை, ஆயத்தம் செய்தோம் என்றும் இறுதி நாளில் ஒரு வேளை கூறப்படும்"

## கனிவு மிக்க பிறரன்பு:

என் அன்புமிக்க சிறிய சகோதரி ஆற்றியதாக நான் கண்ட பிறரன்புச் செயல்கள் எண்ணற்றவை; பல வகைப் பட்டவை. எந்த வாய்ப்பையும் அவள் கைநெகிழ விட்டவள் அல்லள்.

எடுத்துக்காட்டாக, ஞாயிற்றுக்கிழமைகளிலும் விழா நாட்களிலும் அவளுக்குக் கிடைத்த மிகக் குறைவான ஓய்வு நேரத்தையும் பிறரை மகிழ்விப்பதில் செலவிட்டாள். சகோதரிகளின் விருப்பத்திற்கிணங்கி, பாடல்கள் இயற்றி னாள். என்றுமே அவள் எதையும் மறுத்ததில்லை. இதனால் தன் விருப்பத்திற்கேற்ப பாடல் இயற்ற அவளுக்கு நேரங் கிடைக்காமற்போனது. தன் சொந்தப் பக்திக்காக, பாடல் களைத் தனக்கென எழுதி வைத்துக்கொள்ளப் பெரிதும் விரும்பினாலும் என்றுமே ஒரு பாடலையும் பெயர்த்து எழுதியதில்லை. இவ்வாறே, தன் வாசகத்தில் கிடைக்கும் சிறந்த பகுதிகளைக் குறித்து வைக்கவுமில்லை. இருப்பினும், தன் விருப்பத்தை எந்த நவகன்னிகையிடம் வெளிப் படுத்தினாளோ, அவள் இவளுக்குத் தெரியாமலேயே குறிப்பு எடுக்கும் பொறுப்பை ஏற்று இவளது விருப்பத்தை நிறை வேற்றி வைத்தாள்.

## சிறந்த இடத்தைப் பிறர்க்குவிட்டுவிடல்:

அவள் ஒரு முறை என்னிடம் கூறினாள்: "மாலையில் ஒன்று கூடிப் பேசி முடிந்த பின், இரவு திருப்புகழ்மாலை செபத்திற்குச் செல்லுமுன் என் தையல் கூடையைத் திருக் கூடத்தின் முன் அண்மையிலுள்ள ஒரு பெஞ்சின்மீது வைப்பது வழக்கம். தரையில் வைத்தால் சில வேளைகளில் சிலந்திப் பூச்சிகள் கூடையில் வந்து தங்கக் கூடும். இதனால் மேலே வைப்பது எனக்கு வசதியாக இருந்தது. ஆனால் எனக்கு முன் செல்லும் சகோதரி ஒருத்தி தன் கூடையை அவ்விடத்தில் வைப்பதை விரைவில் கண்ணுற்றேன். குனிய வேண்டியிராததால் ஒரு வேளை பிறர்க்கும் இது வசதியாக இருக்கக்கூடும் என்று எண்ணி அவர்களுக்கு இடத்தை விட்டுக் கொடுத்துவிட்டேன்"

## சிறியதொரு வெற்றியைத் தியாகம் செய்தல்:

பிறரன்பைக் கடைப்பிடிப்பதில் எனக்கு ஊக்கமளிக்க விரும்பிய அவள் தனக்கு ஒரு முறை நேர்ந்ததைத் கூறினாள்:

"இள நவகன்னிகையாயிருந்த சமயம், தாழ்வாரத் திலுள்ள குழந்தை இயேசுவின் திருவுருவை அலங்கரிப்பதில் அவள் பேருவகை எய்துவாள். மலரின் மணம் நம் மூத்த அன்னையர்களில் ஒருவர்க்கு ஒத்துக்கொள்ளாததால், மணங்கமழும் மலர்களையும் சிறிய நீல வண்ணப் பூக் களையும், என்றுமே அவள் வைப்பது கிடையாது.

ஒரு நாள், குழந்தை இயேசுவின் மலரடியில் தெரேசாள் அழகிய ரோசாப்பூவொன்றை வைப்பதைக் கண்ணுற்ற அம்முதிய தாயார், அதை அகற்றச்செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தெரேசாளைக் கூப்பிட்டார். "தவறாக எண்ணிவிட்டார் என்றறிந்த நான் அங்குள்ள ரோசா செயற்கை மலரானதால் அவரே தன் தவறை உணர்ந்து கொள்ளட்டும் என்று விட்டுவிடத் துடித்தேன். ஆனால் இச்சிறிய வெற்றியையும் தியாகம் செய்ய இயேசு விரும்பினார். இதனால் அவள் அறிவுரை கூறத் தொடங்கு முன்னரே, மலரை எடுத்துக்காட்டி, "அம்மா, பார்த்தீர்களா, இயற்கை மலர் போன்று எத்துணை நன்றாகச் செய்

திருக்கிறார்கள். இன்று தோட்டத்திலிருந்து பறித்து வந்த மலர் என்று சொல்லலாம் இல்லையா?" எனக் கூறினேன். ஆ! இப்பிறரன்புச் செயல் எனக்கு எத்துணை இனிமையையும் மனவலிமையையும் தந்தது என நீங்கள் அறிய முடியாது."

## மென்மையான அன்போடு ஆன்மாக்களை நடத்துங்கள்:

நோயுற்றிருந்த சமயம், நோயாளிகளைக் கவனிக்கும் ஸ்தனிஸ்லாசு சகோதரி, தனக்குச் சிறிது ஆறுதல் அளிக்கும் எண்ணத்தில், மென்மை கலந்த கவனத்துடன் மிருதுவான துணிகளையே தெரிந்தெடுத்துத் தனக்கு வைப்பதை எனக்குச் சுட்டிக் காட்டித் தெரேசாள் கூறுவாள்:

"கவனித்தீர்களா! ஆன்மாக்களுக்கும் இதே கவனம் தேவை. ஆனால் பெரும்பாலும் இதைப்பற்றி நினையாது அவற்றைப் புண்படுத்துகிறோம். ஏன் இவ்வாறு செய்ய வேண்டும்? உடலுக்கு அளிக்கும் இதே மென்மையான கவனத்தோடும் அன்போடும் ஏன் ஆன்மாக்களைக் குணப்படுத்தக் கூடாது? சிலர் உள்ளத்தில் நோயுற்றும் பலர் வலுவற்றும் உள்ளனர். இவர்கள் அனைவருமே துன்புறு கின்றனர். இவர்களுக்கு நாம் எத்தகைய பரிவு காட்ட வேண்டியுள்ளது."

## பிஞ்சுப் பட்டாணிகளும் தடித்த கிழங்குகளும்:

• தவறு புரிந்த ஒரு சகோதரி பண்பற்று நடந்து கொள்கையில், தெரேசாள் அதிக அன்போடும் மென்மையோடும் முன் கூட்டிய பரிவுடனும் பழகி, துன்புறும் புண்பட்ட இதயத்தை அமைதிப்படுத்த முயலுவாள். தவறுபுரிந்த பின் அவளிடம் திரும்பி வரும்போது அவள் காட்டும் கனிவு மிகப் பெரியது. அதன் காரணத்தை எனக்கொரு முறை எடுத்துக் காட்டினாள்: "நிறைவற்ற ஆன்மாக்கள்பால் இறைவன் எத்துணை இரக்கம் கொண்டுள்ளார். இயற்கையில் இதற்குச் சான்றுகள் காண்கிறேன்; இனிக்கும் பச்சைப் பட்டாணியை வாயில் போட்டதும் கரைந்து விடுகின்றது. அத்துணைக்கு அதன் தோல் மெல்லியதாக உள்ளது. இருப்பினும், வெயிலின் கொடுமையும் இரவின் குளுமையும் அவற்றைப் பாதிப்பதில்லை. இவை நிறைவுள்ள ஆன்மாக்களின் சின்னமாகும். மாறாக, தடித்த கிழங்குகளோ தடித்த தோலினால் பாதுகாக்கப் படுகின்றன. இவைகளோ குறைவுள்ள ஆன்மாக்களைக் குறிக்கின்றன. நாமும் இறைவனைப்போல் நடந்து, குறைவுள்ள ஆன்மாக்களுக்கு நம் கனிவையும் பரிவையும் வழங்க வேண்டும்".

## இயேசுவையும் மரியாளையும் சந்திக்கச் செல்வோம்.

என்னையே நான் நோக்கிக் கொண்டிருப்பதாக அவளுக்குத் தோன்றினால் அவள் என்னிடம் கூறுவாள்: "தன்னையே நோக்கிக் கொண்டிருத்தல் ஆன்மாவிற்கு வறட்சியைத் தரும். பிறரன்புச் செயல்களை நோக்கிப் பறந்து செல்ல வேண்டும்."

சிலமுறை தன் கருத்துக்கள் எங்களுக்குத் தெளிவாக விளங்கும் பொருட்டு, அவள் விளக்கம் தருவாள் " நம் உள்ளக் கருத்துக்கள் நமக்குத் தீமை பயக்குமெனில், விரைவில் அவைகளைக் களைந்து விட வேண்டும். நம்



Fr. JEYARAJU, OCD.
Cell: 9080974848

நட்பில் நாம் நிலைத்திருக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்துவதில்லை. ஆனால், நாம் அவற்றை விலக்கிக் கொள்ள வேண்டுமென்பதற்காக, நம்மையே வெறுக்கு மளவுக்குக் கைப்புணர்ச்சியை நம்மிடையே எழச் செய்வார். இச் சந்தர்ப்பங்களில் நம்மகத்தை விட்டுப் புறப்பட்டு, பிறரன்புச் செயல்களை நாடிப்போவதன் மூலம், இயேசு வையும் மரியாளையும் சந்திக்கச் செல்வதை விட வேறு வழி எதுவும் எனக்குத் தோன்றவில்லை."

## குழந்தை இயேசுவுக்கு இரவு விளக்கு தயாரித்தேன்

என் வேதனை ஒன்றை அவளிடம் எடுத்துக் கூறினேன். அதைத் தான் உணர்ந்து கொள்வதாக எடுத்துக்கூறி என்னை ஊக்குவிக்க தான் வாயிற்படி அலுவலில் இருந்த சமயம் தனக்கு நேர்ந்ததை என்னிடம் கூறினாள்: "ஒரு நாள் இரவு, பெரிய மௌனத்தின் போது, மடத்து வெளிச் சகோதரிகட்கு, இரவு விளக்கு தயாரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எதுவும் ஆயத்தமாயில்லாததால், எண்ணெய், திரி எல்லாம் தேடவேண்டியிருந்தது. கதவைத் தாளிட்டுக் கொண்டு கன்னியர் அனைவரும் தத்தம் சிற்றறையில் தங்கியிருந்தனர். என்னுள் பெரும் போராட்டம் எழுந்தது. மனிதர்களுக்கும் சூழலுக்கும் எதிராக உள்ளத்தில் முணுமுணுத்தேன். தாங்களே ஒழுங்கு செய்யக்கூடியவர்களாயிருந்தும், ஓய்வு நேரத்தில் என்னை இப்படி வேலை வாங்குவது பற்றி வெளிச்சகோதரிகள் மீது ஆத்திரப்பட்டேன். ஆனால் திடீரென்று என் உள்ளம் தெளிவுபெற்றது. நாசரேத்தில் திருக்குடும்பத்திற்குப் பணி புரிவதாகவும், இச்சிறு விளக்கைக் குழந்தை இயேசுவுக்கு ஆயத்தம் செய்வதாகவும் கற்பனை செய்து கொண்டேன். அப்போது எத்துணை ஆர்வத்துடன்



வேலையைத் தொடர்ந்தேன் எனில் என் நடையில் பளு குறைந்தது. உள்ளத்தில் கனிவு பெருகிற்று. எனக்கு வெற்றி தரும் இதே வழியை அன்றிலிருந்து நான் கையாண்டு வருகிறேன்."

## நோயாளிகளைப் பேணுதல்- பொறுமையும் தன்னலத் துறவும்.

கர்மேலுக்கு வந்ததிலிருந்து நோயாளிகளைக் கவனிக்கும் அலுவலைச்செய்து வந்தேன். பெரிய நோயாளிகள் யாரும் இல்லை எனினும் நலங்குன்றிய கன்னியர் பலர் இருந்தனர். அவர்களில் ஒருவர் மூளைச் சோர்வினால் பீடிக்கப்பட்டிருந்தாள். இத்தாயார், நோயாளிகளைக் கவனிக்கும் சகோதரியின் பொறுமையைச் சோதிக்கும் வகையில் சில தொல்லைகள் கொடுத்து வந்தார். நவ கன்னியர்களை வேண்டுமென்றே சோதிக்க வேண்டும் என்ற நோக்கங்கொண்டவர் இவர். இதனால் சில சமயங்களில், மடத்தின் மற்றொரு கோடியில் இருக்கும் என்னை மணியடித்துக் கூப்பிடுவார்.

வந்தவுடன் என்னை நோக்கி, "சிறிய சகோதரியே, உங்கள் உடன் சகோதரியின் நடையிலிருந்து வேறுபாடான உங்கள் நடையைக் கண்டு கொண்டேன்" எனக் கூறுவார்.

இவர்களது தொல்லை தாளாது, ஒரு முறை, கண்ணீரும் கம்பலையுமாய் தெரேசாள் சகோதரியை அணுகினேன். அவள் கனிவுடன் என்னை வரவேற்று, ஆறுதல் தந்து ஊக்கமூட்டினாள். தன் கைகளால் என்னை அணைத்துக் கொண்டு பெஞ்சியின்மீது என்னருகே அவள் அமர்ந் திருந்தது இன்னும் என் கண்களில் நிற்கிறது.

இருப்பினும், என் போர்க்களத்திற்கு நான் மீண்டும் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. பல முறைகளில், நோயாளி அறையின் சன்னல் பக்கமாகச் செல்லாது வேறு பக்கமாய்ச் சுற்றிக் கொண்டு போனேன். ஏனெனில், அந்தத் தாயார் என்னைக் கண்டு விட்டாலோ ஏதாவது தேவையற்ற உதவி செய்யுமாறு எனக்குச் சைகை காட்டுவார். சில சமயங்களில், அவர் கண்ணுக்குப்படாத வண்ணம், தலையை நிமிர்த்தாது, உள்ளத்தில் ஒரு வித வெறுப்புடன் விரைவாகச் சென்று விடுவேன்.

என் நிலையை அறிந்துள்ள தெரேசாள் சகோதரி உள்ளத்தில் என் செயலை மன்னித்த போதிலும் பின் வரும் சந்தர்ப்பங்களில் ஒன்றின்போது என்னிடம் கூறினாள்:

"உம்மைக் கூப்பிட வேண்டும் என்பதற்காகவே நீங்கள் நோயாளி விடுதிப் பக்கம் வேண்டுமென்றே செல்ல வேண்டும். உமக்கு நிறைய வேலை இருந்து நிற்க முடியாமற் போகுமானால், அன்போடு பதில் அளித்து மீண்டும் வருவதாக வாக்களித்து, உமக்கு அவர்கள் உதவி செய்ததாகவே எண்ணி மன நிறைவு கொள்ள வேண்டும். நோயாளிவிடுதியின் மணியோசை உமக்கு விண்ணில் எழும் இன்னிசையாக ஒலிக்க வேண்டும். உமக்கு, மணி அடிக்கிறார்களா? நல்லது; அதை ஆவலோடு விரும்ப வேண்டும். இன்னும் கூறின், உயரிய, புனித எண்ணங்களைப் பற்றிச் சிந்தித்தல், நூல்கள் இயற்றுதல், புனிதர்களின் வாழ்க்கைச் சரிதை எழுதுதல் இவையெல்லாம், ஓர் இறை யன்பு முயற்சிக்கும், இன்னும் நோயாளி விடுதி மணி யடித்து உமக்குத் தொல்லை தரும் போது அதற்குப் பதில் அளிப்பதற்கும் ஈடாகுமா? உம்மிடம் யாராவது ஓர் உதவி பெற விழையும் போதும் உமக்குப் பிடிக்காத நோயாளி களைக் கவனித்துக் கொள்ளும் போதும், உம்மை ஒரு சிறிய



அடிமையாக எண்ணிக் கொள்ளுங்கள். இதனால், அனைவருக்கும் ஆணையிட உரிமையுண்டு. அடிமை என்ற காரணத்தால் முறையிடுவதற்கு வழியில்லை."

-- உண்மை தான்; ஆனால் உமக்குத் தான் தெரியுமே, பெரும்பாலும் காரணமின்றி என்னை அழைக்கிறார்களே. அப்போது என்னுள் ஆத்திரம் பொங்குகிறது.

-- "இது உமக்குக் கடினம் தான் என்பதை நன்கு உணர்கிறேன். ஆனால் சோதனைக் களத்தில் உம்மை உற்று நோக்கிக் கொண்டிருக்கும் வானதூதர்களை நீர் காணக் கூடுமானால்..... முற்காலத்தில் தீரஞ்செறிந்த போர் வீரர் கட்குச் செய்தது போல், போரின் முடிவில் உமக்கு வெற்றி வாகைச் சூட்டி மலர் சொரியக் காத்திருக்கின்றனர். சிறிய வேதசாட்சிகளாக விரும்பினால், வெற்றிக் குருத்தோ லையைப் பெறுவது நம் கடமையல்லவா! இப்போராட் டங்கள் பலனற்றவை என்று எண்ண வேண்டாம், "வல்ல வனை விடப் பொறுமைசாலி உத்தமன். நகரங்களை முற்று கையிட்டவனைவிடத் தன் மனத்தை ஆள்பவன் உத்தமன்."

நான் இன்னும் உயிர் வாழ்வேனானால், நோயாளி களைக்கவனிக்கும் அலுவலே எனக்கு மிகவும் பிடித்ததா யிருக்கும். நான் அதைக் கேட்டுப் பெற மாட்டேன். ஏனெனில் இது ஆணவமாகுமோ என அஞ்சுகிறேன். ஆனால் அந்தப் பணி எனக்குத் தரப்பட்டால், என்னைப் பேறு பெற்றவளாக எண்ணிக்கொள்வேன். ஆ! இப்பணி புரிய என்னைக் கேட்டால் நான் மகிழ்ச்சி கொள்வேன். ஒரு வேளை இயல்புக்கு இது கடினமாகத் தோன்றலாம். ஆனால், "நோயுற்றிருந்தேன், என்னை பார்க்க வந்தீர்கள்"

என்ற நமது ஆண்டவரின் திருவாக்கை நினைவிற் கொண்டு நான் அதிக அன்போடு இப்பணியைப் புரிவேன் என நினைக்கிறேன்."

நோயாளிகளை மிக்க அன்புடன் பராமரிக்கவேண்டும். மற்ற வேலைகளைப் போல் அல்லாமல், இறைவனுக்கே உதவி புரிவது போன்று, மிக்க பொறுப்புடனும் மென்மையுணர்வுடனும் இப்பணியை ஆற்ற வேண்டும் என அவள் எனக்கு அறிவுரை கூறுவாள்.

இருப்பினும், ஒரு நாள் மாலை, கடின உழைப்பிற்குப் பின், ஓய்வுநேரத்திலோ, இரவு செபத்திற்குப் பின்னோ, களைப்புற்ற சகோதரிகட்கு ஏதாவது குடிக்கக் கொடுக்க எடுத்துச் செல்வது எனக்குக் கடினமாகத் தோன்றியது. இதனால் முறையிட்ட என்னை நோக்கி அவள் கூறினாள்: "இப்போது நீர் இங்கும் அங்கும் சிறு கோப்பைகளை எடுத்துச் செல்கிறீர். ஆனால் ஒரு நாள் விண்ணில் இயேசுவே உமக்குப் பணிபுரிய வந்து போவார்."

## உலக ஞானம்:

"இனிய குணத்தாரோடு இனியவளாகவும், பண்புள்ளோரோடு பண்புள்ளவளாகவும் பழக விரும்புவதாக நீர் கூறுகிறீர். யாராவது உம்மை எதிர்த்து விட்டாலோ உடனே பொங்கி எழுகிறீர். நற்செய்தியில் கூறப்படும் புறவினத்தாரைப் போன்று, இத்துறையில் நீர் நடந்து கொள்கிறீர். மாறாக" உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள்". நமக்கு நன்மை செய்வோருக்கு நல்லவராயிருத்தல் (அன்பு காட்டுதல்) வெறும் உலக ஞானமே. இதில் இறைவனுக்கென்று ஒன்றுமில்லை."



## இறுதிவேளையில்இருக்கும்போது :

என் அன்றாட அலுவல்களை வரிசைக் கிரமமாக ஒழுங்கு செய்ய விரும்புகிறவள் நான். யாராவது அதற்கு ஊறு விளைவித்தாலோ!... எதிர்பாராத நிகழ்ச்சி ஏதாவது குறுக்கிட்டு என் திட்டத்தைக் குலைத்துவிட்டாலோ, என் மன நிறைவின்மையைக் காட்டி விடுவேன்.

ஒரு நாள் என் அன்பு சிறிய சகோதரியின் இறுதி நோயின்போது, பிற்பகலில் வேலை ஒன்றை முடிக்கலாம் என்று முடிவு செய்திருந்தேன். ஆனால் எதிர்பாராத வகையில் வெளி மனிதரோடு பேசும் அறைக்குச் (parlour) செல்ல வேண்டியிருந்தது. "செல்லாமலிருந்தால் என் வேலையை முடித்திருப்பேனே, இவ்வாறு தடங்கல் ஏற்பட்டது பற்றி வருந்துகிறேன்" என அவளிடம் கூறினேன். அவள் என்னை உற்று நோக்கிக் கூறினாள்:

"நீர் இறக்கும் வேளையில் இருக்கும்போது இவ்வாறு தொந்தரை செய்யப்பட்டிருக்க எவ்வளவு ஆசிப்பீர்கள்"

## தொந்தரைக்கென நேரத்தை ஒதுக்கி வைக்கிறேன்:

யாருடைய தொல்லையுமின்றி அமைதியில் மாத ஒடுக்கம் செய்ய விரும்புகிறவள் நான். என் அலுவலின் நிமித்தம் அல்லது வேறு காரணத்தின் பொருட்டு எந்தத் தடங்கலும் ஏற்படாத ஞாயிற்றுக் கிழமையைத் தேர்ந்தெடுப்பது எனக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது. ஒரு முறை தெரேசாள் கூறினாள்:

"உங்கள் மன நிறைவிற்காக, அதிக ஓய்வு நேரம் கிடைப்பதற்காக ஒடுக்கத்திற்குப் போகிறீர்கள், அல்லவா? நானோ பற்றுறுதியை முன்னிட்டு, ஆண்டவருக்கு அதிகம் கொடுப்பதற்காகப் போகிறேன்.

அந்நாளில் எனக்கு நிறைய எழுதவேண்டியிருந்தாலும் தொந்தரவு செய்யப்படும் மனநிலையில் என்னை அமைத்துக் கொள்வேன். ஒரு சில ஓய்வுநேரங்களை தொந்தரவு செய்யப்படுவதற்காக என்று ஒதுக்கி வைப்பேன். ஆனால் அன்று அமைதியாக இருந்தால், நான் எதிர்பார்க்காத அருளை இறைவன் அளித்ததாக அவருக்கு நன்றி கூறுவேன். இவ்வாறு நான் எப்போதும் மகிழ்ச்சியாயிருக்கிறேன்."

இவ்வாறு, இரண்டாம் சக்றிஸ்தீனாக இருந்தபோது விடுமுறை நாட்களில் முதல் சக்றிஸ்தீன் ஏதாவது உதவி கேட்டு, தன்னை அழைக்கும் பொருட்டு, அவள் வேண்டுமென்றே அப்பக்கம் செல்லுவாள். ஆனால் உண்மையில் இவ்வாறு செய்தல், அவளுக்கு மிகக் கடினமாக இருந்தது. இதனால் அப்பக்கம் செல்லவேண்டாமென நான் அவளுக்குச் சாடை செய்தேன். செல்லாதிருக்க வழியும் தேடித் தந்தேன். ஆனால் எல்லாம் வீணே.

## தியாகம், மகிழ்ச்சி, தூய அன்பு

என் புனித சகோதரி இவ்வுலகில் வாழ்ந்த இறுதி நாட்களில், அவளை நீண்ட நேரம் கவனித்துக் கொள்ளும் பொருட்டு, recreationக்குத் தாமதமாகச் செல்ல வேண்டியிருந்தது. இன்னும் அத்துணை கடின நோய்வாய்ப் படாவிடினும் நலங் குன்றியிருந்த மற்ற சகோதரிகட்கு அதே ஆர்வத்தைக் காட்ட முடியாமலும் இருந்தது. இதைக் கண்ணுற்ற அவள் என்னிடம் கூறினாள்:



"உம்மிடமாக நான் இருந்திருந்தால், recreationக்குப் போகவும் மற்ற நோயாளி சகோதரிகளைக் கவனிக்கவும் என்னாலானதைச் செய்திருப்பேன். உமக்கு அருட் கொடை களைப் பெற்றுத் தருவதற்காக எல்லாச் சந்திப்பிலும் என்னை ஒறுப்பேன்; ஆயிரம் தியாகங்கள் செய்ய வழி தேடிக் கொள்வேன். எதிலும் தன்னையே என்றும் தேடக் கூடாது. தன்னைத் தேடிக் கொள்ளத் தொடங்கும்போது அன்பு செய்வதை நிறுத்தி விடுகிறோம். என் துறவற வாழ்வின் இறுதி நாட்களில் நான் மகிழ்ச்சி மிக்க வாழ்க்கை நடத்தினேன். ஏனெனில், என்னையே நான் எதிலும் தேடவில்லை. தன்னைத் துறந்துவிடும்போது இவ்வுல கிலேயே கைம்மாறு கிடைத்துவிடுகிறது. உண்மை அன்பை அடைய வழி யாது என்று அடிக்கடி கேட்கிறீர்களே, உம்மை மறப்பதும் எதிலும் உம்மைத் தேடாமலிருப்பதுமே இவ் வழியாகும்."

## சமாதானத் தூதர்

ஒரு சகோதரி என்னை மறுத்துப் பேசியதை அவளுக்கு உணர்த்தும் பொருட்டு கண்ணீர் சிந்தினேன். இருப்பினும் நான் வருந்திச் செய்யும் பணிகளில் எனக்கு எவ்விதப் பற்றும் இருக்கவில்லை. அதே நாளில், மற்றொரு சகோதரி யிடம் என் உரிமைகளை விட்டுக் கொடாது நீதிக்காகப் போராடினேன். இதையெல்லாம் அறிந்த தெரேசாள் கூறினாள்: "உண்மை தான், உள்ளத்தின் ஆழத்தில் அமைதி குலையா விடினும், மேற்பாகத்தில் சலசலப்பு ஏற்பட்ட தன்றோ? உம் உரிமைகளைப் பாதுகாத்தல், நீதியைத் தேடல் இவையெல்லாம் அயலாருக்கு நாம் இழைக்கும் பெருந் தீமைகள் அல்ல. இருப்பினும் உமது ஆன்மாவுக்கு எத்தகைய நட்டம்!

-- ஆ! அப்படியானால் எனன செய்வது?

-- தன் இயலாமையை உணர்ந்து இயேசுவின் மீது அன்பு கலந்த பார்வையைத் திருப்பும்போது எல்லாம் சரியாகி விடுகிறது. மற்றவர்களைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு உமக்கு இல்லை. இதனால் அவர்களுக்குப் போதிக்கத் தேட வேண்டாம். 'நீங்கள் அமைதியின் நடுவராக இருக்கக் கூடாது. இவ்வாறு இருக்க, இறைவனுக்கு மட்டுமே உரிமை யுண்டு. உமக்குரிய அலுவல், அமைதியின் தூதராயிருப்பதே.

## சாதகமாகத் தீர்மானித்தல்:

பிறரை நாம் எப்போதும் நல்ல முறையில் தீர்மானிக்க வேண்டும்; ஏனெனில், நம் கண்ணுக்கு அசட்டையாகத் தோன்றுவது பெரும்பாலும் இறைவன் பார்வையில் வீரத்தனமாக இருக்கும் என அவள் அடிக்கடி எனக்குக் கூறுவாள். உடலிலும் உள்ளத்திலும் நலத்துடன் விளங்கும் ஓர் ஆன்மா செய்யும் ஒரு வேலையை விட, ஒற்றைத் தலைவலியினாலோ, உள்ளத்திலோ துன்புறும் மற்றொரு ஆன்மா செய்யும் பாதிவேலை இறைவனுக்கு ஏற்புடையதாக இருக்கலாம் அல்லவா? எல்லாச் சந்தர்ப்பங்களிலும், நமது தீர்மானம் அயலாருக்குச் சாதகமாகவே அமைய வேண்டும். எப்போதும் நல்லதையே நோக்க வேண்டும்; எப்போதும் மன்னித்துவிட வேண்டும். இவ்வாறு செய்ய எந்த நியாய மான காரணமும் இல்லை யென்றாலும் இப்படி நமக்குள் கூறிக் கொள்ளலாமே:

"வெளித்தோற்றத்தில் இவர்கள் தவறு புரிந்ததாகத் தெரிகிறது. ஆனால் இதை அவர்கள் உணரவில்லை. நல்லறிவுடன் கூடிய நான், இதைக் காண்கிறேன் எனில், அவர்களுக்காக இரக்கப்பட வேண்டும், அவர்களிடம்



கண்டிப்பாய் இருப்பது பற்றி என்னைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்".

மற்றவர்களிடம் நாம் விரும்பாத மறதி, கவனக்குறைவு, களைப்பு போன்ற பலவீனங்கள் நம்மிடமும் ஏற்பட இறைவன் அனுமதிக்கிறார். நாம் செய்யும் அதே தவறுகளை மற்றவர்களிடம் நாம் மன்னிப்பது இயல்பு தானே" எனக்கூறுவாள்.

குறையுள்ளவர்கள் என கருதிய சகோதரிகளிடம் குற்றம் இருக்கவில்லை என்பதை அனுபவத்தின் மூலம் கண்டுணர்ந் தேன். கீழ்ப்படிதல் அல்லது முக்கியத் தேவைகள் தாம் அவர்கள் ஆற்றவேண்டிய கடமைப் பணிகளைச் செய்யத் தடையாயிருந்திருக்கிறது. இந்த அவமானத்தை அவர்கள் மௌனத் தோடு ஏற்றுக் கொண்டனர்.

## அழகற்ற பேரிக்காய் அளித்த பாடம்.

பேசும் நேரத்தின்போது, தோட்டத்தில் உலவிக் கொண்டிருக்கையில் பழமரமொன்றை எனக்குக் காட்டிக் கூறினாள்: "வெளித் தோற்றத்தில் அழ்கற்ற இந்தப் பேரிக்காய்களைப் பாருங்கள். இவை உமக்குப் பிடிக்காத சகோதரிகளின் உருவகமாய் உள்ளன. ஆனால் இலையுதிர் காலத்தில், இப்பழங்களின் அழகைக்குலைத்த அனைத் தையும் அகற்றிவிட்டு உமக்குப் பரிமாறும்போது முன்னர் அவற்றை வெறுத்ததை நினையாது ஆசையோடு உண் பீர்கள். இவ்வாறு தான், இறுதி நாளில், தம் குற்றங் குறைகளிலிருந்து விடுபட்ட உம் சகோதரிகள் பெரும் புனிதைகளாகத் தோன்றுவதைக் கண்டு வியப் பெய்துவீர்கள்."

## குருக்களுக்காகச்செபித்தல்:

திருச்சபைக்காகவும் குருக்களுக்காகவும் மேற்கொள்ளும் தியாக வாழ்வே அவளைக் கர்மேலுக்கு ஈர்த்தது. ஆண்டவரின் பணியாளர்களுடைய அர்ச்சிப்புக்காக தன் வாழ்வை அர்ப்பணிக்க அவள் விரும்பினாள். "குருக்களுக்காகச் செபித்தல் என்பது மொத்த வியாபாரம் செய்தல் போலாகும். ஏனெனில், தலையின் வழியாக மற்ற உறுப்புகளை அடையலாம்" என அவள் கூறுவாள். குருக்களின் அர்ச்சிப்பு, இவர்களின் வழியாகப் பாவிகளின் மனமாற்றம்: இவையே அவளது வாழ்வை இயக்கும் ஆவலாக விளங்கின. இவர்களுக்காக, சற்று நீளமான செபமொன்றைச் சொல்ல ஆயத்த மடத்தில் அவள் எமக்குக் கற்றுத் தந்தாள். நான் உலகில் இருந்தபோது அவள் எனக்கு எழுதின கடிதங்கள் அனைத்தும், எம்மிருவருக்கும் பொதுவான இந்த ஆவலையே வெளிப்படுத்தின.

# ஆன்ம தாகம்

சூன் 21 ஆம் நாளில் விழா கொண்டாடப்பட்ட எங்கள் மடத்துத் தலைவியாம் கொன்சகா மரி தாயாருக்கு தெரசாளின் உருவப்படத்தை அளிக்கும்பொருட்டு 1897 சூன் திங்களில் அவளைப் புகைப்படம் எடுத்தேன். "ஒரே ஓர் ஆன்மாவை மீட்க ஆயிரம் முறை உயிர் துறப்பேன்" என்னும் நமது புனித அன்னை தெரேசாளின் வாக்கியம் அடங்கிய சுருளைக் கையில் பிடித்த வண்ணம் புகைப் படத்தில் காட்சியளிக்க விரும்பினாள் தெரேசாள் சகோதரி.

எங்கள் உரோமைப் பயணத்தின்போது அவளுக்கு வயது பதினான்கே. மறைபோதகக் கன்னியர்களின்



வெளியீடுகளைப் புரட்டி வாசித்துக் கொண்டிருந்த அவள் விரைவில் தன் வாசகத்தை நிறுத்திவிட்டு என்னிடம் கூறினாள்: "தொடர்ந்து வாசிக்க நான் விரும்ப வில்லை. மறைபோதகராக, முன்னரே என்னுள் ஆவல் பற்றியெரிகின்றது. இந்த அப்போஸ்தலத்துவத்தின் காட்சிகளைக் காண்பதன் மூலம் அந்த ஆவலை இன்னும் தூண்டி விடுவேனானால் என்ன ஆவது? நான் கர்மேல் கன்னிகையாக விரும்புகிறேன்". தனது இந்தத் தீர்மானத்திற்கு அவள் விளக்கமும் கொடுத்தாள்: "கடினமாகவும், இன்னும் சலிப்பூட்டும் ஒரே வகையான வாழ்க்கையால் மிகுதியாகத் துன்புறவும், இதன் மூலமாக, மிகுதியான ஆன்மாக்களை மீட்கவுமே" நான் கர்மேல் வாழ்வைத் தெரிந்து கொண்டேன்.

கொலைஞன் பிரான்சினிக்காகத் தான் செய்த மன்றாட்டையும், தூக்கு மேடையின் கீழ் அவன் அடைந்த திடீர் மனமாற்றத்தின் மூலம் தன் செபம் ஏற்கப்பட்டதை அறிந்து அவள் அடைந்த மகிழ்ச்சியையும் குறித்து, தன் வாழ்க்கைச் சரிதையில் அவள் எழுதியுள்ளாள்.

இம்மனமாற்றத்திற்காகத் திருப்பலி செய்து வைக்கும் பொருட்டு நாணத்தோடு என்னிடம் தான் அவள் பணம் கொடுத்தாள். கூச்சமுள்ள இயல்புள்ள அவள் அப்பணத்தைத் தன் ஆன்ம குருவிடம் நேரில் கொடுக்கத் துணியவில்லை.

பூசையின் கருத்தை அவள் எனக்கு வெளிப்படுத்த வில்லை. ஆனால், நான் உய்த்துணர்ந்ததாக அவளிடம் கூறியபோது அவள் ஆறுதலடைந்தாள். பிறகு தன் அச்சத்தையும் நம்பிக்கையையும் என்னுடன் பகிர்ந்து கொண்டாள்.

இளம் பருவத்தில், சிலுவையில் அறையுண்ட இயேசுவின் குருதி சொட்டும் திருக்கரத்தின் படமொன்றைக் கண்டதன் மூலம் தான், மீட்பருடன் உடன் இரட்சகியாய் விளங்கும் தனது அழைத்தலைக் கண்டுணர்ந்தாள். அவ்வயத்திலிருந்து ஆன்ம தாகம் அவளைப் பற்றியெரிக்கத் தொடங்கியது.

கர்மேலில், அனைத்திலும் வெளிப்பட்ட இந்த ஆர்வம் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டேசென்றது. இறைவனை விட்டு விலகிய தொழிலாளி ஒருவன், மடத்தில் காலை முழுவதும் வேலை செய்து விட்டு, பகலில் மீண்டும் திரும்பி வருவதற்குள், வேலையின் போது அவன் அணியும் ஆடையின் உட்புறத் துணியில் புனித ஆசீர்வாதப்பரின் சுரூபமொன்றை அவள் மறைத்து வைத்ததை ஒரு நாள் நான் கண்டேன்.

அவள் உடல் முழுவதும் காசநோயால் ஆட்கொள்ளப் பட்டு கொடிய வேதனைப்படுகையில் நாங்கள் கண்ணீரோடு விண்ணை நோக்கி இரந்து மன்றாடினோம். ஆனால் அவள் கூறியது என்ன? "எனக்காகச் செய்யும் மன்றாட்டுகள் அனைத்தையும், என் வேதனையைக் குறைப்பதற்கு மாறாக, பாவிகளை மனந்திருப்பப் பயன்படுத்திக் கொள்ளுமாறு இறைவனிடம் கேட்கிறேன்".

"இவ்வளவு வேதனைப்படக் கூடும் என்று நான் என்றுமே, நினைத்தது கிடையாது. ஆன்மாக்களை மீட்க எனக்குள்ள ஆர்வமிக்க ஆவலினால் மட்டுமே இதை நான் விளக்க முடியும்" என்று அவள் கூறியது இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவளது இறுதிச்சொற்களில் இவையும் ஒன்று.



## சாவிற்குப்பின்:

தன் மரணத்திற்குப் பின், ரோசா மலர் மாரி பொழியப்போவதாகப் பல தடவைகளிலும் பல்வகைகளிலும் அவள் வாக்களித்துள்ளாள். திருச்சபைக்கு வேண்டுவதன் மூலமாகவும் தன் தனிப்பட்ட பணியைக் குருக்களிடம் தொடர்ந்து ஆற்றுவதன் மூலமாகவும் தான் இறந்தபின் நன்மை செய்ய தனக்குள்ள ஆவலையும் உறுதியையும் வெளிப்படுத்தினாள். நம்பிக்கையும் முழுக் கையளித்தலுமான தன் வழியை அவர்களுக்குப் போதிப்பதன் மூலம் இறைவனிடம் ஆன்மாக்களை அழைத்துச் செல்லப் போவதாக அவள் விளக்கம் கூறினாள்.

"அப்படியானால் விண்ணிலிருந்து கொண்டு மிகுதியான ஆன்மாக்களை மீட்பீர்களா"? என்ற என் வினாவிற்கு "ஆம் என நினைக்கிறேன். அவருக்கு ஆன்மாக்களைப் பெற்றுத்தர இத்துணையளவு ஆசிக்கும் போது இறக்க அவர் என்னை விட்டு விடுகிறாரே, இதுவே போதாதா சான்றுக்கு"?.

# 5

# சட்டத்தில் பிரமாணிக்கம்; கீழ்ப்படிதல், எளிமை, உணவிலும், கலந்து பேசி மகிழ்வதிலும், வெளிமனிதரோடு பேசும் அறையிலும் ஒறுத்தல் மனப்பான்மை; பற்றின்மை; துறவு - தபக் கருவிகள்.

## சட்டத்தில் பற்றுறுதி

சட்டத்தில் அவள் கொண்டிருந்த பற்றுறுதி, சட்ட திட்டங்களின் மீது அவள் காட்டிய மதிப்பின் அளவாகவே இருந்தது. "சீர்திருத்தம் செய்த நம் புனித பெற்றோர்கள் இத்துணை இன்னல்களினூடே நிறுவிய சட்டங்களைக் கடைப்பிடிக்க, நாம் மிகவும் பேறுபெற்றவர்கள்" என அவள் கூறுவாள். இதனால் குறிப்பிட்டுள்ள சட்ட திட்டங்களைப் பற்றி நாங்கள் ஏதாவது குறை கூறுவதை அவளால் தாங்க முடியாது.

"உண்மையான அவசியமின்றிப் பிறரின் உதவியைக் கேட்காதவாறு ஒவ்வொருவரும் தாங்களே தனியாகச் சமாளித்துக் கொள்ள முயல வேண்டும்" என எங்களுக்கு எடுத்துரைப்பாள்.



ஏதாவதொரு பொது வேலையைச் செய்யாதிருக்க அனுமதி வேண்டவோ சட்ட அனுசரணையில் விதிவிலக்கு ஒன்று கேட்கவோ விரும்புவோர்க்கு அவள் தரும் அறிவுரை இதுவே: " ஒவ்வொருவரும் என்னைப்போலவே செய்தால்?" என்று தனக்குள் கேட்டுக்கொள்ள வேண்டும்" இதற்கு விடையும் அவளே தருகின்றாள். "இதனால் அலங்கோலம் ஏற்படும். "ஏனெனில், பொதுகடமைகளிலிருந்து விலகிக் கொள்ள, தக்க காரணங்களையும் எப்போதும் போதிய தனிப்பட்ட வேலைகளையும் ஒவ்வொருவரும் தேடிக் கொள்ள" நேரிடும்." திருப்புகழ்மாலை, தியானம், ஒன்றாகக் கூடிப் பேசும் நேரம் ஆகிய பொதுமுயற்சிகளுக்கு முடிந்த வரை தவறாமல் பங்கெடுக்க வேண்டுமென்பதே அவளது போதனை. அவள் கூறுவாள்: " சிலர் பொது வேலையில் ஈடுபட்டுள்ளதாகச் சாக்குக் கூறி சட்டங்களில் குறிப் பிட்டுள்ள, இப்பொழுது முயற்சிகளின் நேரத்தைக் குறைத்து விடுவர். இஃது இறைவனின் நேரத்தைக் களவாடுதல் போலாகும்"

அவளே இதில் எங்களுக்கு முன்மாதிரிகையாய் விளங்கினாள். ஒரு புள்ளி முதலாய்ச் சேர்க்காமல், மணி அடித்தவுடனேயே, தொடங்கிய எழுத்தை முடிக்காமல் வேலையை அக்கணமே நிறுத்தி விடுவாள். மணி அடிக்கும் முறையில், ஒன்றாய்க் கூடிப் பேசும்போது, மடத்துச் சடங்கு நூலில் எழுதியுள்ளபடியே, குறித்த நேரத்திற்குக் கால் மணி நேர முன்னரே அவள் எழுந்து விடுவாள். சுவையான பேச்சாயினும் அதன் நடுவில் எழுந்து சென்று விடுவாள். இவ்வாறு தன்னைத் தொடர்ந்து ஒறுத்தாள்.

நள்ளிரவு புகழ்மாலைக்கோ மற்ற பொது முயற்சி களுக்கோ தவறாமல் இருக்கும் பொருட்டு, அவள் பேறுபலன் மிக்க புண்ணியச் செயல் பல புரிந்தாள்.

ஆயத்த நிலையிலோ நவகன்னிகையாகவோ இருந்த சமயத்திலும் தன் உடல் நலக்குறைவை வெளிப்படுத்த வேண்டும் என்று பெரியோர் உத்திரவிட்டாலன்றி, மற்றபடி வெளியிட மாட்டாள். ஏனெனில், தானே வலிய எதையும் கேளாது, தனக்கு அளிக்கப்படுவதில் மட்டும் ஆறுதலும் உதவியும் கண்டாள். மாறாக, வேதனையுறும்போது தன் வருத்தத்தை மறைத்து மனவ்லிமையுடன் விளங்கினாள்.

பல முறைகளில், திருப்புகழ்மாலை ஓத, அவள் எத்த கைய வயிற்றுப் புரட்டலுடன் திருக்கூடத்திற்குச் சென்றாள் எனில், மயக்கமாய் விழாது தன்னால் இருக்க முடியாது என அவளுக்குத் தோன்றியது. இருப்பினும், "நான் விழுந்தால் அதைப் பார்ப்பார்கள்" என்று தனக்குள் கூறிக்கொண்டே ப்லத்தையெல்லாம் ஒன்று திரட்டி அங்கு நிற்பாள். அடிக்கடி அவள் தனக்குள் கூறிக்கொண்ட இச்சிறு வாக்கியம் தனக்கு உதவி புரிந்ததாகவும் முக்கியமாக துறவற வாழ்வின் தொடக்கத்தில் பெரிதும் உதவி புரிந்ததாகவும் என்னிடம் கூறினாள்.

ஒருமுறை, பொதுமுயற்சி ஒன்றின் முடிவில் மணி அடித்த போது, நான் போதிய சுறுசுறுப்போடு எழாததால் என்னை நோக்கி அவள் கூறினாள்: "உம் விருப்பத்தை நாடி அன்று, ஆனால் உம் கடமையை நாடிச் செல்லுங்கள்".

## கீழ்ப்படிதல்

சிறிய தெரேசாளின் கீழ்ப்படிதல் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கினது.

"நாம் எளிதான வாழ்வைத் தேடி அமைத்துக் கொள்ளக் கூடாது. நாம் வேதசாட்சிகளாக விளங்க விரும்புவதால்,



அதற்குத் தேவையான கருவிகளைப் பயன்படுத்தி நம் துறவற வாழ்வை வேதசாட்சித் தனமாக மாற்றிக் கொள்ள வேண்டும்" இது அவள் எனக்குக் கூறிய அறிவுரை. இந்த அறிவுரையை அவள் நுணு நுணுக்கமாக, சிறிதும் தவறாது கடைப்பிடித்தாள். அவள் முன்னிலையில் தாங்கள் என்ன கூறுகிறோம் எனப் பெரியவர்கள் கவனம் செலுத்த வேண்டியிருந்தது; ஏனெனில் அவர்கள் தெரிவிக்கும் கருத்து எல்லாம் அவளுக்குக் கட்டளையாக மாறியது. அவள் அதை ஒரு நாள் அல்லது பதினைந்து நாட்கள் வரை கடைப் பிடிக்காது தொடர்ந்து கடைப்பிடித்து வந்தாள்.

இந்தக் கதவை மூடுதல், அவ்வழியாய்ப் போகாதிருத்தல், திருக்கூடத்தைக் கடந்து செல்லாதிருத்தல் போன்ற சிறு சிறு கட்டளைகளைத் தந்த மடத்துத் தலைவி, மரி கொன்சகா தாயார் சில நாட்களில் அவற்றை மறந்து போனாலும் தெரேசாள் ஒன்றையும் மறவாது இறுதி வரை கடைப்பிடிக்கக் , கண்டேன். பற்றுறுதியுள்ள இந்த ஆன்மாவிற்குத் தனது சொற்கள் அனைத்தும் தேவ வாக்காக மாற, இறைவனின் திருவுளமென்று கருதியே அவள் அவற்றைக் கடைப்பிடித்து வந்தாள் என்பதைத் தலைவி அறியாமலில்லை.

நவகன்னியர் இல்லத்தில் இருந்தபோது, வயிற்று வலி வரும் ஒவ்வொரு முறையும் தன்னிடம் கூறுமாறு கண்டிப்பாய்ப் பணித்திருந்தாள் அவளது தலைவி மரி தெசான்ழ் சகோதரி. ஆனால் அவளோ அன்றாடம் வயிற்று வலியால் துன்புற்றாள். இதனால் தினமும் இதைச் சொல்ல வேண்டுமென எண்ணி அவ்வாறே செய்தாள். ஆனால் தான் கொடுத்த கட்டளையை மறந்து போன அவளது தலைவி "இந்தப் பிள்ளை எப்போதும் முறையிடுகிறது" என்று அலுத்துக் கொண்டாள். இதிலும் தன்னை மன்னித்துக்

கொள்ளத் தேடாது தெரேசாள் பொறுமையுடன் இதை ஏற்றுக் கொண்டாள். இவ்வாறே, அவள் ஒவ்வொரு சகோதரிக்கும் கீழ்ப்படிந்தாள். அனைத்திலும் தன் சொந்த விருப்பத்தை ஒறுத்து மனதை அடக்கினாள். ஒரு நாள் வனவாசத்தில், கன்னியர்கள் நின்று கொண்டு பாடிக் கொண்டிருக்கையில், நோயின் களைப்பால் தெரேசாள் அமர்ந்து கொண்டிருந்தாள். ஆனால் ஒரு சகோதரி எழுந்து நிற்குமாறு சாடை செய்யவே, உடனே அன்பு கலந்த புன்னகையுடன் அவள் எழுந்து நின்றாள். "இத்தகைய குருட்டுத்தனமாய், ஏன் கீழ்ப்படிய வேண்டும்?" என கூட்டம் முடிந்தபின் அவளை வினவினேன். அவளோ, "இறைவனே, தம் திருவுளத்தை வெளிப்படுத்துவது போல் கருதி, விசுவாசப் புத்தியின் நிமித்தம், முக்கியமற்ற காரியங்களில் அனைவருக்கும் கீழ்ப்படியும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்" எனப்பதிலுரைத்தாள். ஒருமுறை, அநியாய மாய் என்னைக் கண்டித்த சகோதரி ஒருத்திக்கு வெடுக்கென்று பதில் கூறினேன். "இவ்வாறு செய்ய அவளுக்கு உரிமை இல்லை; இது அவளைச் சாராத காரியம்" எனப் பொங்கினேன். தெரேசாளோ, "உண்மை தான், ஆனால் உங்கள் தலைவர்கட்கு மட்டும் கீழ்ப்படியுங்கள்" என்று இயேசு சொல்லவில்லையே. ஆனால் "உன்னிடம் கேட்பவன் எவனுக்கும் கொடு. யாராவது உன்னை ஒரு கல் தொலை வரக்கட்டாயப்படுத்தினால், இரு கல் தொலை அவனோடு செல்" என்று தானே கூறினார். இறப்பதற்கு சில நாட்களுக்கு முன், என் முன்னிலையில் தெரேசாள் ஆக்னேஸ் தாயாரிடம் கூறினாள்: "உங்களுக்கு நான் ஒரு சிறு ஆலோசனை கூற விரும்புகிறேன். நோயாளிகளுக்குத் தேவையான அனைத்தையும் அவர்களிடம் வற்புறுத்திக் கேட்கவேண்டுமென தலைவியர், நோயாளிகளைக் கவனிப் போருக்கு அறிவுரை வழங்க வேண்டும். ஏனெனில்,



அன்னையே, இது மிகவும் தேவை." (தெரேசாள் இங்குக் குறிப்பிடுவது கடின நோயுற்றோரையே. ஏனெனில் சாதாரண நோயாளிகள் தம்மைக் கவனிப்போருக்குத் தொல்லை தரக்கூடாது என்ற நமது புனித அன்னை தெரேசாளின் அறிவுரையைத் தனதாக்கிக் கொண்டவள் சிறிய தெரேசாள்)

இந்த அலுவலில் ஈடுபட்டிருந்த எனக்கும் இதையே கூறினாள். ஆம், அவள் தன் சொந்த அனுபவத்தைக் கொண்டே இவ்வாறு கூறினாள். ஆனால் அவளது அறிவுரையின்படி நடக்க இப்போது தாமதமாகிவிட்டது. அவள் எத்தனையோ காரியங்களில் தியாகம் செய்தாள். இதை இறைவன் மட்டுமே அறிவார். அவளுக்கு ஆறுதல் அளிப்பதாக எண்ணி வேதனையையே தந்துவிட்டோம்.

அவளைக் கவனித்துக் கொண்ட சகோதரிக்குக் காது சிறிது மந்தம். தெரேசாளைக் காய்ச்சல் வருத்திய போது இவள் குளிரால் வாடுகிறாள் என்று எண்ணி அவள் தலையையும் சேர்த்து அச்சகோதரி கம்பளியால் போர்த்தி விட்டாள். தான் செய்வதையெல்லாம் தெரேசாள் ஏற்றுக் கொள்வதைக் கண்ட அவள் இன்னும் போர்வைகள் கொண்டு வந்து போர்த்தினாள். தெரேசாளோ அவள் விருப்பப்படி செய்ய விட்டு விட்டாள். நான் வந்து பார்த்தபோது அவளுக்கு வேர்த்துக் கொட்டியது.

சிரித்துக் கொண்டே அவள் நடந்ததை எனக்கு எடுத்துக் கூறினாள். அவள் வாயிலிருந்து எந்த முறைப்பாடும் வெளிவரவில்லை. தன்னைக் கவனிப்போருக்குக் கீழ்ப் படியும் மனப்பான்மையில் அனைத்தையும் ஏற்றுக் கொண்ட தாக அவள் கூறினாள்.

## உத்திரவின்றி எதையும் செய்யாதிருத்தல்:

அனுமதி கேட்டுச் செய்வதில் பற்றுறுதியாயிருக்குமாறு அவள் அடிக்கடி எங்களுக்கு அறிவுரை கூறுவாள். இவ்வாறு உத்தரவு கேட்க மறந்துவிட்டால், தன் விருப்பம் போல் செயல்படுவதை விட, தனக்கு முக்கியமானதைக் கூட விட்டுக் கொடுத்து விடுவாள். அவள் கூறுகிறாள்: "இவ் விஷயத்தில் நான் நுண்ணிய மனச்சான்று கொண்டிருந் தேன். தாயாரின் அனுமதியின்றி எதையாவது செய்ய வேண்டியிருப்பின் கலக்கமடைவேன். தரித்திரத்தை மீற அஞ்சி, சாதாரண நேரத்தில் பாடல்கள் இயற்றும் போதே அவற்றைக் காகிதத்தில் குறிக்க தாயாரிடம் அனுமதி கேட்க விரும்பவில்லை. இதனால் ஓய்வு நேரம் வரை காத் திருந்தேன். ஆனால் காலையில் இயற்றியதை இரவு 8 மணிக்கு நினைவுபடுத்திக் கொள்வது எனில் எளிதான செயலன்று".

"இவையெல்லாம் ஒன்றுமில்லாதவை தான்; இருப் பினும் உண்மையிலே வேதசாட்சியின் இயல்பாகும். ஆனால் துறவற வாழ்வை எளிதாகவோ வசதியாகவோ மாற்றக் கூடிய வகையில் பல சிறு செயல்களைச் செய்ய அனுமதி பெறுவதன் மூலம் சிறு தியாகங்களைக்குறைத்துக் கொள் வதில் விழிப்பாயிருக்க வேண்டும். தனக்காக எதையும் தேடிக் கொள்ளலாகாது."

## பழக்கங்களுக்கு ஏற்ப நடத்தல்:

அனைத்தையும் முடிந்த மட்டும் நிறைவான வகையில் செய்யுமாறு அவள் எமக்கு அறிவுரை வழங்கினாலும்,



பிறரைவிட மிகுதியாகச் செய்யத் தேடாது அனைத்திலும் மடத்துப் பழக்கங்களுக்கேற்ப ஒழுகுவதே நலமென்று கருதினாள். ஏனெனில், விவேகமற்ற ஆர்வம் தனக்கும் பிறர்க்கும் தீமை பயக்கலாம்.

"எடுத்துக் காட்டாக, பெரிய ஒடுக்கத்திலிருக்கும் போது பொது வேலைகளில் கலந்து கொள்வதில்லை. அப்படி யிருக்க, தளத்தில் துணி காய வைக்க வேண்டி யிருப்பின், அவ்வேலையைச் செய்யும் சகோதரிகளோடு நீங்களும் சேர்ந்து கொள்ள வேண்டாம். பிறரன்புச் செயலாயினும், பழக்கப்படி அதைச் செய்யாதிருப்பதே நன்று. ஏனெனில் ஒரு முறை உங்கள் ஆர்வம் மறைந்தபின், நீங்கள் ஏற்படுத்திக் கொண்ட கடமை, உங்கள் ஆன்மாவிற்குச் சலிப்புத்தரக் கூடும். பிறரும் உம் முன்மாதிரிகையை பின்பற்றக் கடமைப்பட்டிருப்பதாகக் கருதி, சலிப்பு அடைவர். அதைச் செய்யாது விட்டாலோ இறைவனுக்கு எதையோ மறுப்பதாக எண்ணி சலிப்போடு செய்வர்".

"ஒரு சகோதரியிடம், அவளுக்கு உரிமையில்லாத பணியில் அவசரத்திற்கு உதவி செய்யக் கேட்கும்போது, இன்னும் சிறந்த விதமாகச் செய்யத் தெரிந்திருந்தாலும், அவர்கள் பணித்தவாறே அவள் அவ்வேலையைச் செய்தல் நன்று. ஏனெனில், வேறுவிதமாகச் செய்யும்போது, வழக்க மாகச் செய்பவர்களுக்குத் தொல்லை ஏற்படலாம். குறிப்பிட்ட வகையாகச் செய்யும் காரணத்தை அவர்கள் மட்டுமே அறிவர். பிறர்க்கு இதைப் பற்றித் தெரியாது.

வாழ்க்கையில் ஒரே செயலைத் தொடர்ந்து செய்வதால் களைப்பு ஏற்படுகிறது. இதனால் இறுதி வரை விடா முயற்சியுடன் செய்யக் கூடியதை மட்டும் நடைமுறையில் ஏற்றுக் கொள்வதே நலம்" என அவள் கூறினாள்.

# எளிமை

தனி காகிதங்களில் நான் பெயர்த்து எழுதிய பாடல்களை தனக்குச் சற்றுத் தருமாறு ஒரு சகோதரி என்னிடம் கேட்டபோது, நான் அத்துணை நல்ல முகம் காட்டவில்லை. "பிறரைப் போல் கைச்சுவடியொன்றில் எழுதியிருந்தால் எவ்வளவு நலமாயிருக்கும்; இவ்வாறு அவை காணாமற் போகாது" என்று நினைத்துக் கொண்டேன்.

அப்போது தெரேசாள் சகோதரி என்னை உற்று நோக்கிக் கூறினாள்: "இழப்பது பற்றி நீங்கள் அகமகிழ வேண்டும். மகிழ்ச்சியுடன் அவற்றைக் கடனாகக் கொடுப்பது மட்டும் போதாது. மீண்டும் மீண்டும் உம்மிடம் கேட்குமாறு நடந்து கொள்ளவேண்டும். பாடல்களை இயற்றுவதன் மூலம் ஆன்மாக்களுக்கு நன்மை செய்ய இத்துணை ஆவல் கொள்ளும் நீங்கள், அப்போஸ்தல நோக்கத்தில், பிறர்க்கு அவற்றை வழங்குவதிலும் இன்பம் காண வேண்டும். கடனாகக் கொடுத்த பொருளை, தரித்திர மனப்பான்மையின் பொருட்டு, புனித ஞானப்பிரகாசியார் என்றுமே திரும்பக் கேட்டதில்லையாம்".

ஒரு முறை அவள் என்னிடம் கூறினாள்: "தையல் கூடையைக் கலைத்துவிட்டார்கள் என்றும் அது குறைகிறது இது குறைகிறது என்றும் குறைபட்டுக்கொள்கிறீர்களே; மாறாக, நீங்கள் இதனால் மகிழ்வெய்த வேண்டும். நான் ஏழை; இதனால் சிற்சில பொருள் குறைவது இயற்கை தான். எனக்குச் சொந்தமாயில்லாததைப் பிறர் எடுத்துக் கொண்டது நல்லது தான் என்று உமக்குள் கூறிக் கொள்ள வேண்டும்"



எனக்குப் பிடித்தமான ஊசி ஒன்றைப்பிறர் கேட்ட போது நான் அதற்காக வருந்தினேன். அப்போது தெரேசாள் என்னிடம் கூறினாள்: "நீங்கள் எத்துணை செல்வமிக்கவள். இப்படியானால் நீங்கள் மகிழ்ச்சியாயிருக்க முடியாது."

"எல்லாவற்றிலும் பலர் தாராளமாய் வழங்குவதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் தமக்குரியதைப் பிறர் எடுத்துக் கொள்ள விட்டு விடுபவர் மிகச் சிலரே. இது தான் கடினமானது. இருப்பினும் நற்செய்தி கூறுவது இது தான் "உன் உடைமைகளைப் பறிப்பவனிடமிருந்து திருப்பிக் கேட்காதே"

* * * *

"இப்படத்தை உம் நினைவாக எனக்கு விட்டுச் செல்ல வேண்டுமென நான் விரும்புகிறேன்" என அவள் நோயுற்றிருந்த சமயம் ஒரு முறை அவளிடம் நான் கூறினேன்.

-- ஆ, உமக்கு இன்னும் ஆசைகள் உள்ளனவே. நான் இறைவனோடு இருக்கும்போது, நான் கையாண்ட பொருட்களில் எதையும் உமக்கென கேட்காதீர்கள். உமக்குக் கொடுக்க விரும்புவதை மட்டும் ஏற்றுக் கொள்ளுங்கள். வேறு விதமாகச் செயல்படுதலானது உம்மை வெறுமையாக்காது. உமக்கு மகிழ்ச்சியைத் தருவதற்கு மாறாக அச்செயல் வேதனையைத் தான் வழங்கும். விண்ணகத்தில் மட்டுமே, நமக்குக்கெனக் கேட்கும் உரிமையுண்டு" என அவள் பதிலளித்தாள்.

என் அன்புச் சகோதரி இறந்த சில நாட்களுக்குப்பின், அவளுக்கு உரித்தான பொருள் ஒன்றைப் பெற்றுக் கொள்ள

முயலுமாறு எம் சகோதரிகளில் ஒருவர் எனக்கு அறிவுரை தந்தாள். நான் எவ்வாறு இதில் நடந்து கொள்ள வேண்டும் என்று தெரேசாளைக் கேட்க விரும்பி அவள் பதிலைப் பெற நற்செய்தியைத் திறந்தேன். அதில் நான் வாசித்தது: "பயணம் செல்ல இருந்த ஒருவன் தன் ஊழியரை அழைத்துத் தன்னுடைமையெல்லாம் அவர்களிடம் ஒப்படைத்தான்".

* * * *

இறையன்பிற்காக, பழைய, அழகற்ற பொருட்களையே தெரேசாள் தன்னுடைமையாகக் கொள்ள விரும்பினாள். இறையன்பிற்காக என்று கூறுகிறேன்; ஏனெனில், கலையறிவு கொண்ட அவள், இயற்கையாக, அழகிய, பழுதடையாப் பொருட்களையே விரும்பியிருப்பாள். ஒரு முறை, அவளது மணல் கடிகாரத்தில், போக்கவியலாக் கறையொன்றை ஏற்படுத்திவிட்டேன். கறையோடு கூடிய நிலையில் அதை ஏற்றுக்கொள்ள அவள் செய்த முயற்சி எத்தகையது! விரும்பாமலேயே அவளை இத்தியாகத்திற்கு உட்படுத்தி விட்டேன். இதை அவள் வெளிக் காட்டாமலிருக்க பெரு முயற்சி செய்தாள்.

அவளது ஆடைகள் அவளுக்குப் பொருத்தமாக உள்ளனவா அல்லது போதிய நீளமாயுள்ளனவா என்பது பற்றி அவள் எத்தகைய கவனமும் செலுத்தவில்லை. அவள், தன் உடையைப் பற்றி எவ்வித அக்கறையுங்கொள்ளாமல், அலட்சிய மனப்பான்மை காட்டி வந்தாள். ஆனால் எத்துணைக்கு அனைத்திலும் உண்மையான தரித்திரத்தை அணுகிச் சென்றாளோ, அத்துணைக்கும் மகிழ்ச்சியாயிருந்தாள். தன் காலணிகளையும் ஆடைகளையும் முடிந்த மட்டும் பழுதுபார்த்தாள்.



இதே தரித்திர மனப்பான்மையில் தான், பொன் ஓரத்தோடு கூடிய படமோ புத்தகமோ இருப்பின், அதைக் கவனமாகச் சுரண்டி விடுவாள்.

அவளது தையற் கூடையின் கட்டு, விடத் தொடங்கியதால், விரைவில் கிழியாத பழைய வெல்வெட் துணி கொண்டு அக்கூடைக்கு ஓரங்கட்டி ஒழுங்கு செய்தாள் ஒரு சகோதரி. அதிக வேலை இருந்தபோதிலும், தெரேசாள் முதலில் இதைப் பிரித்து வெல்வெட்டைத் திருப்பி வைத்துத் தைத்தாள். பின்புறம் அழகற்றதாகவும் எளிய தோற்றமுடையதாகவும் இருந்ததால் தான் இவ்வாறு செய்தாள்.

எழுதும் பொருட்கள் அடங்கிய அவளது சிறுபெட்டி, எளிய மரக்கொட்டை சாயத்தினால் பூசப்பட்டிருந்தது. ஒரு நாள் நவகன்னிகை ஒருத்தி அதில் வார்னிஷ் போன்ற எண்ணெயைப் பூசிய போது, உடனே தெரேசாள் பெட்டியைத் தேய்த்து கழுவச் செய்தாள். அவள் மடத்திற்கு வரும் போது அவளது சிற்றறையின் மரப்பொருட்கள் எண்ணெய் பூசப்பட்டிருந்த காரணத்திற்காக மட்டுமே அவற்றை அந்நிலையில் ஏற்றுக்கொண்டாள். இருப்பினும் இது அவளுக்குப் பிடிக்கவில்லை. அவளை மட்டும் சார்ந்ததாயிருப்பின், இரக்கமின்றி அவற்றையும் தேய்த்துக் கழுவியிருப்பாள்.

தெரேசாள் தனது தீர்த்தப் புட்டியையும் எழுதுவதற்கு வேண்டிய பொருட்கள் அடங்கிய சிறு பெட்டியையும் மடத்தில் சேர்ந்த எனக்குக் கொடுத்து விட்டாள். பழைய பொருட்களைச் சேர்த்து வைத்துள்ள இடத்திற்குச் சென்று பயன்படாதவற்றைத் தனக்கென எடுத்துக் கொண்டாள்.

அனைத்திலும் முன்மாதிரிகையாய் விளங்கின தெரேசாள் அவசியமிக்கதை மட்டுமே வைத்துக் கொண்டு,

வசதியை நினைவூட்டும் யாவற்றையும் கவனமுடன் தள்ளிவிட்டாள்.

அவள் குழந்தைப் பருவத்தில் கையாண்ட சிறுகத்தரிக் கோல் ஒன்றையே மடத்திலும் பயன்படுத்தி வந்தாள். அவளது வேலைக்கு இது ஏற்றதாக இல்லை.

அவள் தன் துறவற வாழ்வில், பல ஆண்டுகளாகப் பயன்படுத்தி வந்தது கெட்டுபோன விளக்கையே. ஒவ்வொரு முறையும் ஊசியினால் குத்தி இழுத்துத் தான் நாடாத் திரியைத் தூக்கி விட வேண்டும். ஆனால் அவள் அதை எத்துணை நல்ல மனதோடு செய்தாள் எனில், இச்சிரமம் அவளுக்கு இயல்பாகவே மாறிவிட்டது போல் தோன்றியது. இதனால் மற்ற விளக்குகளை விட அவள் இதையே பெரிதும் விரும்புகிறாள் எனத் தவறாகக் கருதும்படி நேர்ந்து விட்டது.

* * * *

தன் தேவைக்கு ஓவிய அறையிலுள்ள பேனாக் கத்தியை எடுத்துப் பயன்படுத்தியபின், அதை அவ்விடத்தில் மீண்டும் வைக்க நேரங் கிடைக்காத போதெல்லாம், இரவு படுக்குமுன், தன் சிற்றறையின் கதவுக்கருகில் அதை வெளியில் வைத்து விடுவாள். இக்கத்தி தன் உபயோகத்திற்குரிய பொருட்களைச் சார்ந்ததன்று என்று காட்டவே இவ்வாறு செய்தாள்.

* * * *

வெந்து போன அவளது தொண்டைக்கு ஆவி சிகிச்சை செய்ய, புட்டி ஒன்று தேவைப்பட்டது. இதற்கெனப் பல நல்ல புட்டிகள் இருந்தும், குப்பையில் தூக்கி எறியக் கூடிய புட்டி ஒன்றையே அவள் தேர்ந்தெடுத்தாள். ஒரு நாள், அதைத் தவறி உடைத்து விடவே, அதைத் தாயாரிடம் சொல்ல



வேண்டிய தேவையில்லை என நான் தடுத்தும், அவள் தன் தவறைக் குற்ற விளக்கக் கூட்டத்தில் எடுத்துக் கூறினாள்.

* * * *

தன் வரலாற்றை எழுத, எம் சகோதரி லெயோனி மூலம், மட்ட ரக காகிதத்தாலான இரண்டு காசு குறிப்பேடு (note-book) ஒன்று வாங்கி வைத்துக் கொண்டாள். தொடங்கும்போது, ஒரு குறிப்பேடு போதுமாயிருக்கும் என்று எண்ணியவள் மற்றொன்று தேவைப்பட்டதைக் கண்டு பெரிதும் வியந்தாள்.

நோய்வாய்ப்பட்டிருந்த சமயம், கொன்சகா தாயாருக்கு எழுதிய பகுதியை, நெருக்கி எழுதாது, சற்று இடைவெளி விட்டு, கட்டம் போட்ட தாளில் எழுத அவளை வற்புறுத்த வேண்டியிருந்தது.

பாடல்கள் இயற்றிய போதெல்லாம், அவற்றை யாருமே விரும்பாத துண்டுத் தாள்களில் எழுதி வைத்தாள். இதனால் அவளது குறிப்புகள் வாசிக்க வியலாத நிலையில் இருந்தன.

* * * *

தெரேசாளின் அர்ப்பணத்தின்போது அவளது சகோதரி ஆக்னேஸ் தாயார், அவளுக்குத் தனது சிறிய பாடுபட்ட சுரூபத்தைத் தந்து விட்டு, அவளது கனமான சுரூபம் அவளைக் காயப்படுத்தலாம் என்ற கருத்தில் அதைப் பெற்றுக் கொண்டாள். பெரிய பாடுபட்ட சுரூபம் கிடைக்கும் என்று எண்ணி ஏங்கிய தெரேசாளுக்கு, இது பெரும் தியாகமாகவே இருந்தது. ஒரு முறை இதை என்னிடம் வெளியிட்டாள். இருப்பினும் ஒன்றும் கேளாது சிறிய தையே வாழ்நாளெல்லாம் வைத்திருந்தாள். இறக்கும்போது

அவள் கைகளில் பிடித்திருந்ததும் இச் சிலுவையே. இன்று கண்ணாடிப் பேழையில் உள்ள மெழுகு திருஉருவத்தில் காணப்படுவதும் இச்சிலுவையே.

* * * *

## உணவிலும், கலந்து பேசி மகிழ்வதிலும், வெளி மனிதரோடு பேசும் அறையிலும் ஒறுத்தல் மனப்பான்மை

உடல்நலனுக்குத் தீங்கு பயக்காத ஒறுத்தல்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களை ஆவலுடன் வரவேற்று அவற்றை அவள் எப்போதும் கடைப்பிடித்து வந்தாள். இவை மிகச்சிறிய ஒறுத்தல் முயற்சிகள் தான். ஆனால், மாபெரும் படைப்புகளைப் போலவே, மிகச் சிறிய படைப்புக்களிலும் இறைவன் தம் வல்லமையை வெளிப் படுத்தியுள்ளாரே. பல் வகையான மிகச் சிறிய செயல்களில்தான் தெரேசாள் தன் மனவலிமையை வெளிப்படுத்தியுள்ளதாகத் தோன்றுகிறது.

குழந்தைப்பருவமுதலே உணவின் மீது இயல்பான வெறுப்புக் கொண்டிருந்ததாக, என் அன்புச் சிறிய சகோதரி ஒரு முறை என்னிடம் இந்நோக்கத்திற்காகவே ஒருவரை யொருவர் அழைத்துக் கொள்ளுதலையும், கூட்டங்களுக்கு எற்பாடு செய்தலையும் அவளால் புரிந்து கொள்ள முடிய வில்லை என்று கூறினாள்.

"ஒருவரின் வருகையில் மகிழ்ச்சி கொண்டாட விரும் பினால், உடனே அவரை விருந்திற்கு அழைக்கின்றனர். என்ன வேடிக்கை இது! இவ்வாறு செய்வது பற்றி நாணமுற்று



மறைந்தல்லவா கொள்ளவேண்டும். ஆ! நமதாண்டவரும் புனித கன்னித்தாயும் உண்ணாமலிருந்திருந்தால், இவ்வாறு செய்வதில் நான் என்றுமே ஆறுதல் கொண்டிருக்க மாட்டேன்".

ஆனால், வாழ்வின் இறுதியில், அவள் கடின நோய் வாய்ப்பட்டிருந்த 'வேளை, உணவைப் பற்றிய சிறிய ஆசைகள் அவளுக்கு எழுந்தன.

"இது எனக்கு மிகவும் அவமானமாக உள்ளது. இருப்பினும் இந்தப் பலவீனம் எனக்கு ஏற்படவேண்டுமென இறைவன் விரும்புவதால் இதை நான் ஏற்றுக்கொள்கிறேன்" என வருத்தந் தோய்ந்த முகத்துடன் என்னிடம் கூறினாள்.

### பந்தியில் தூய கருத்து:

உணவருந்துதலை எவ்வாறு புனிதப்படுத்துவது என்று கேட்ட எனக்கு, அவள் அளித்த விடை இதுவே : "தன்னிலேயே இச்செயல் எவ்வளவு இழிந்ததாயினும் நமதாண்டவரோடு இணைந்து இதைச் செய்ய வேண்டும். பெரும்பாலும் பந்தியில் தான் இனிமை மிக்க அன்பு ஆவல்கள் எனக்கு எழுகின்றன. சில தடவைகளில், என்னையே கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. என் இடத்தில், என் உணவுப் பொருட்கள் முன், நமதாண்டவர் இருந் திருந்தால், அவற்றை உண்டிருப்பார் என்பது உறுதி. அவருக்கு அளிக்கப்பட்டதை அவர் ஏற்றுக் கொண்டிருப் பார். இன்னும் நான் உண்ணும் உணவுப் பொருட்களையே. இவ்வுலகில் வாழ்ந்த காலை, அவரும் சுவைத்து உண்டிருப் பார் என்பது உறுதி. கன்னித்தாய் அவருக்கு "சூப்" தயாரித்துத் தந்திருப்பாள். அவரும் உரொட்டி, பழம்,மரக்கறி, மீன் முதலியவற்றை உண்டிருப்பார்".

இத்தகைய எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்ட அவளது உள்ளத்தில் அன்பெனும் நறுமணம் வீசியது.

*   *   *   *

வேறு தபமுயற்சிகள் அவளுக்கு விலக்கப் பட்டிருந்த தால் அவள் கைக்கொண்ட ஒறுத்தல்கள் பின் வருமாறு:

கத்தி அல்லது கரண்டியின் பிடி போதிய அளவு துடைக்கப்படாமல் சற்று குழகுழப்பாக இருந்து, கையில் பிடித்துக் கொண்டபோது, அவளது இயல்புக்கு முற்றும் பிடிக்காத இந்த ஒறுத்தலை, தொடர்ந்து உண்டு முடிக்கும் வரை, அக்கரண்டியை அப்படியே பயன்படுத்தினாள்.

ஒருமுறை, தபக்கால இறுதி வாரங்களில் நமதாண்டவரின் பாடுகளைப்பற்றி, பந்தியில் வாசித்தனர். வாசகத்தைக் கேட்டுக் கொண்டே உணவருந்துவது அவளுக்கு மிக்க அருவருப்பாக இருந்ததாக என்னிடம் கூறினாள். அவளுக்கு விருப்பமில்லா இச்செயலை ஏதோ மறைவில் செய்வது போல் கட்டாயமாக செய்துமுடித்தாள். ஆனால் வாசகி ஒரு கணம் நிறுத்தும் வரை அல்லது சரிதையின் உருக்கம் சற்றுக் குறையும் வரை அவள் குடிக்கவேயில்லை. பிறகு மடமட வென்று குடித்து விட்டாள். "ஏனெனில், வாசகத்தின் போது எப்படியும் சாப்பிட்டுத் தானாக வேண்டும். ஆனால் குடிப்பதைத் தவிர்க்கலாமே. இந்த ஆறுதலாவது உள்ளதே" என அவள் கூறினாள்.

அவளது இந்த முன்மாதிரிகைச் செயலை நானும் கடைப்பிடிக்க வேண்டுமென்ற காரணத்தினாலன்று, ஆனால் நமதாண்டவருடைய பாடுகளின் சரிதையால் அவள் எத்துணை மனமுருகினாள் என்பதை எனக்கு



வெளிப்படுத்தவே மேற்கூறிய நிகழ்ச்சியை அவள் என்னிடம் தெரிவித்தாள்.

பந்தியில், சிறுபிள்ளைத் தனமான சில பழக்கங்களைக் கைக்கொண்ட சிறிய தெரேசாள் அவற்றைச் சாதாரண முறையில் எமக்கு வெளியிட்டாள்:

"நாசரேத்தூரில், திருக்குடும்பம் வாழ்ந்த இல்லத்தில் நானும் இருப்பதாக கற்பனை செய்து கொள்வேன். பசுங் கலவை, குளிர்ந்த மீன், பழரசம் அல்லது காரமான சுவையுடைய உணவுப் பொருட்கள் ஏதாவது எனக்குப் பரிமாறப்படும்போது அவற்றை நல்ல தந்தை சூசையப் பருக்குக் கொடுத்து விடுவேன். நல்ல சூடான பதார்த்தங்கள், கனிந்த பழங்கள் இவையெல்லாம் கன்னித் தாய்க்கும் விழா நாட்களில் வரும் உணவுப் பொருட்கள், முக்கியமாக கஞ்சி, பொங்கல், இனிப்புப் பொருட்கள் இவற்றையெல்லாம் குழந்தை இயேசுவுக்கும் கொடுத்து விடுவேன். இறுதியாக பிடிக்காத உணவு வரும்போது: "சின்ன பெண்ணே, இவையெல்லாம் இன்று உனக்குத் தான்" என்று எனக்குள் மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்வேன்"

தான் செய்யும் ஒறுத்தல்களை, அவள் கவர்ச்சியான வெளித் தோற்றத்தால் மறைத்து விடுவாள். இருப்பினும் நோன்பு நாளொன்றில் எங்கள் மடத்துத் தலைவி அவளுக்குத் தனிப்பட்ட உணவு ஒன்று தந்திருந்தார்கள்.

அவளுக்கு மிகவும் பிடித்தமான இச்சுவையில், கசப்புப் பொருள் ஒன்றைக் கலந்து அவள் உண்பதை ஒரு நவ கன்னிகை கண்டாள்.

மற்றொரு முறை, கசப்புமிக்க மருந்தொன்றை அவள் மெதுவாக நிறுத்திக் குடிப்பதைக் கண்ணுற்ற நான்

"விரைவாகக் குடியுங்கள், ஒரே வாயில் ஊற்றிக் கொள்ளுங்கள்" எனக் கூறினேன். ஆனால் அவளோ, "மாட்டேன், என்னைச் சற்று ஒறுக்கும் பொருட்டு ஏற்படக்கூடிய சிறு சந்தர்ப்பங்களை, நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமா? பெரிய ஒறுத்தல்கள் தான் எனக்கு விலக்கப்பட்டுள்ளனவே" என விடையளித்தாள் .

## கூடிப்பேசி மகிழும் நேரத்தை (recreation) எவ்வாறு புனிதப்படுத்துவது

**தெரேசாள் கூறுவாள்:**

"மற்ற நேரங்களை விட recreation இல் தான் புண்ணியத்தைக் கடைப்பிடிக்க உமக்கு அதிக வாய்ப்பு உண்டு. இதனால் பெரும் நன்மை பெற விரும்பினால், உம்மை மகிழ்வித்துக் கொள்ளும் எண்ணத்தோடு அங்குச் செல்லாது, மாறாக, பிறரை மகிழ்விக்கும் கருத்தோடு செல்லுங்கள். அங்கு உம்மையே துறந்துவிடப் பழகிக் கொள்ளுங்கள்"

"எடுத்துக்காட்டாக, உமக்குச் சுவையானதாகத் தோன்றும் கதையொன்றை நீங்கள் ஒரு சகோதரிக்குக் கூறிக் கொண்டிருக்கும் வேளையில், அவள் அதைத் தடுத்து, வேறு செய்திகளைப் பற்றிப்பேசினால் அக்கறையோடு அவளுக்குச் செவிமடுத்துக் கேளுங்கள். அவள் கூறுவது உமக்குச் சற்றும் சுவையற்றதாகத் தோன்றினாலும், பரவாயில்லை. உமது முதற்பேச்சை மீண்டும் தொடர முயலவேண்டாம். இவ்வாறு செய்வதால், பெரு மன அமைதியுடனும், புண்ணியப் பயிற்சியில் புதிய மன வலிமையுடனும் நீங்கள் பேசும் அறையிலிருந்து (recreation) வெளி வருவீர்கள். ஏனெனில், அங்கு, உமக்கு மன நிறைவு அளிக்க வன்று, பிறர்க்கு மகிழ்வூட்டவே விரும்பியிருந்தீர்கள். அனைத்திலும் தன்னை ஒறுப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை அறிந்திருந்தால்"...

-- "நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்; இவ்வாறு தானே நீங்கள் என்றும் செய்கிறீர்கள்?" இது என் கேள்வி.

-- "ஆம், என்னை நான் மறந்தேன், எதிலும் என்னைத் தேடாதிருக்க முயன்றேன்." இது அவள் அளித்த விடை. அவளது இச்சான்று எத்துணை உண்மையானது! ஆம், அவள் நிறைவான தன்மறுப்பை எத்துணை எளிதாகக் கடைப் பிடித்தாள் எனில் இது அவளது இயல்பாகவே மாறி விட்டதாகத் தோன்றியது. இருப்பினும், இறையருளுக்குத் தாராளச் சிந்தையோடு ஒத்துழைத்ததன் விளைவாகவே இப்புண்ணியத்தை அவள் அடைந்தாள்.

ஒன்றாய்க் கூடிப் பேசும்போது, சில முறைகளில், உயரிய உண்மை ஒன்றைக் கூற நா எவ்வளவு துடிக்கிறது என்பதை அவளிடம் எடுத்துக்கூறினேன். தனக்கும் இதே சோதனை ஏற்பட்டதாக அவள் எனக்கு அறிவித்தாள். ஆர்வமான இயல்பு கொண்ட அவள், இவ்வாறு பேசத் துடித்ததில் எத்தகைய வியப்புமில்லை. ஆனால், தன்னை வெளிப் படுத்தாது மறைத்துக் கொள்ளும் கலையில், அவள் என்றும் வெற்றியே கண்டாள்.

* * * *

## வெளி மனிதரோடு பேசும் அறையில் தன்னலமறுப்பு

பேசும் அறையில், தன்னை வினவினபோது மட்டுமே பேசின அவள் பிறர் பேசுவதை மௌனமாய்க் கேட்டுக்

கொண்டிருந்தாள். அவள் எத்துணை அடக்கமாய் இருந்தாள் எனில், எங்கள் குடும்பத்திலேயே அவளைப் பெரிதும் பொருட்படுத்தவில்லை. "சிறு வயதிலேயே மடம் புகுந்குவிட்ட காரணத்தால் அவளது கல்வி பாதிக்கப் பட்டது என்றும், வாழ்நாள் முழுவதும் இதன் விளைவை அவள் உணர்வாள்" என்றும் கூறினர்.

"நான் இவ்வுலகை விட்டுப் பிரிந்தபின், உங்களுக்குள் குடும்ப நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்வதிலும், பேசும் அறையில் நிகழும் செய்திகளை, அனுமதியின்றிப் ஒருவர்க் கொருவர் பரிமாறிக் கொள்வதிலும், நீங்கள் விழிப் பாயிருங்கள். தேவையான செய்திகளில் உரையாடல் நிகழ்த்த மட்டும், நீங்கள் தாயார் அவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்று தன் மூன்று சகோதரிகளான எம்மிடம் அவள் கூறினாள்.

பேசும் அறையில் தனக்கு ஏதாவது மகிழ்ச்சி கிடைக்கும் என்பதை முன்னறிந்தாலோ அவள் அதை விட்டுத் தப்பிச் செல்ல எப்போதும் வழி தேடிக்கொள்வாள். மாறாக, பிறர்க்கு நன்மை செய்ய வேண்டியதாயின் அங்கு இன்னும் சிறிது நேரம் தாமதிக்குமாறு யாரும் அவளைக் கேட்டுக் கொள்ளத் தேவையிராது.

## பற்றின்மை

தெரேசாள் சகோதரி நோயுற்றிருந்த சமயம், தனக்குச் சிகிச்சை கிடைக்குமா இல்லையா என்பது பற்றி கவலை கொள்ளாது, கீழ்ப்படிதலை முன்னிட்டே தன் நோயைத்



மடத்துத் தலைவியிடம் தெரிவித்தாள். அவளுக்கு ஏதாவது குறைந்தபோது தன் பொறுமையில் இறைவன் உறுதி கொண்டுள்ளார் என நினைத்துக் கொள்வாள். இந்நினைவு அவளுக்குப் பெருமையையும் மகிழ்வையும் தந்தது.

"நீங்கள் ஏதாவது வேலையை மேற்கொள்ளும் போது அதை நிறைவான உள்ளத்தோடு என்றும் செய்யவேண்டும். உம் சகோதரிகள் உமக்கு ஆலோசனை வழங்கவும், இன்னும் உம்மைப் போன்ற கலைநய உணர்வு கொண்டிராத சகோதரிகள், நீங்கள் இல்லாதபோது அவ்வேலையை வேறு விதமாகத் திருத்திச் செய்யவும் இதனால் உமது பல மணி நேர முயற்சியை வீணாக்கச் செய்யவும் விட்டு விடுங்கள். இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட உம் கைவேலை தன் மதிப்பை இழக்குமானால் அதன் பொருட்டு நீங்கள் மகிழ்ச்சி கொள்ளவேண்டும். ஏனெனில் இறைவனின் திருவுளத்தை நிறைவேற்றுதலை விட, நிறைவான செயலைச் செய்யும் நோக்கமே மிகுந்திருக்குமாறு உழைக்கக் கூடாது"

(வேலையின் பயனை நோக்காது ஆன்மீக வாழ்வில் முன்னேற்றம் காண்பதையே கருத்தில் கொள்ளவேண்டிய நவகன்னிகை ஒருத்திக்கு இவ்வறிவுரைகள் அளிக்கப் பட்டுள்ளன. எல்லா ஆன்மாக்களும் இதை அப்படியே கடைப்பிடிக்கவேண்டியதில்லை. ஒழுங்காக வேலையைச் செய்யாத மற்றொரு நவகன்னிகைக்கு இறைவனின் அன்பை முன்னிட்டு அனைத்தையும் மிக்க கவனத்துடன் செய்ய முயலும்படி அவளே அறிவுரை கூறியுள்ளாள்.)

# சுயமனது

நோயுற்றிருந்த அவளுக்குச் சற்று ஆறுதல் அளிப்பதற்காக விரைவில் நானே ஓர் ஏற்பாடு செய்தேன். இது திறமை மிக்கதாக அவளுக்குத் தோன்றியதால் அவள் என்னை வியப்புடன் நோக்கினாள்; என் திறமையையும் பிறரன்போடு நான் விரைவில் செய்து முடித்ததையும் புகழ்ந்து பேசின அவள் தொடர்ந்து கூறினாள்:

"இதே செயலைச் செய்ய பிறர் உமக்குப் பணித்திருந்தால், அல்லது உமது அலுவலின் முதல் சகோதரிக்கு இவ்வாறு செய்ய எண்ணம் உதித்திருந்தால், நீங்கள் இச்செயலை இத்துணை ஆர்வத்துடன் செய்திருப்பீர்களா?"

இக்கருத்தை விளக்கின அவள், "தனது இயல்பான உந்துதலினால், ஏற்படும் செயல்களை மனித இயல்பு எத்துணை எளிதாகச் செய்து விடுகிறது; மாறாக, பிறர் கருத்துப்படி செய்ய வேண்டியிருப்பின், இப்படிச் 'செய்தால் என்ன?' என்ற பிரச்சினைகள் எழுந்த வண்ணமாகவே இருக்கும் . நமது சொந்த முயற்சியினால் பிறர்க்கு நாம் பெற்றுத் தந்த ஆறுதல்களை, நல்ல கண் கொண்டு நோக்குகிறோம். ஆனால், அதில் நமக்குப் பங்கு இல்லாதிருந்தால் நம் உள்ளத்தை ஆயிரம் சோதனைகள் அலைக்கழிக்கும். நாம் தலையிடாததால் அச்செயலைப் பற்றி நாம் ஏதாவது குறை கூறிக்கொண்டு தானிருப்போம்." என்று அவள் எனக்கு எடுத்துக் காட்டினாள்.

## குடும்பப் பாசத்தையும் தியாகம் செய்தல்:

மடத்துச் சகோதரிகள் அனைவரையும் நிழற்படம் எடுத்த போது அவளது பற்றின்மைக்கு ஒரு புதிய எடுத்துக்காட்டு கிடைத்தது.



படம் எடுக்கும் கருவியை ஒழுங்கு செய்யவும் கன்னியர்களைச் சரியான முறையில் நிற்கச் செய்யவும் பொறுப்பேற்ற நான் குறித்த நேரத்தில் என் இடத்தில் நிற்க வேண்டியிருந்தது. ஆனால் ஆயத்தக் கன்னியரிடையே எனக்கு இடம் கிடைக்கவில்லை. ஏனெனில் இவர்களில் ஒவ்வொருவரும் தம் தலைவிக்கு மிக்க அண்மையிலிருக்குமாறு அவளைச் சூழ்ந்து கொண்டனர். என் அன்புச் சிறிய சகோதரியும் இவ்வாறு செய்ய விட்டு விட்டாள். இருப்பினும், நாங்கள் இருவரும் ஒருவர்க்கருகில் ஒருவர் நிற்கும் மகிழ்ச்சியை அவர்கள் எமக்கு அளிக்காதது பற்றி அவள் வருந்தாமலில்லை. இது அவளுக்கு வேதனையைத் தந்ததாக என்னிடம் வெளியிட்டாள்.

இருப்பினும், ஒருமுறை, இவ்வாறு செய்ய அவள் விட்டுக் கொடுக்கவில்லை. கன்னியர் துணி துவைக்கும் புகைப்படத்தின் போது சற்று விலகி நின்று எனக்குத் தன்னருகில் இடம் தருமாறு மார்த்தாள் சகோதரியிடம் அவள் கேட்டாள்.

உண்மையில், அவளது இதயத்தைப்போன்று பாசமிகு இதயத்தைக் காண்பது அரிது. ஆனால் தன் சகோதரிகளாகிய எங்களுக்கு மிக நெருக்கமான உறவுமுறையில் மட்டுமே தன் பாசத்தை முழுதும் வெளிப்படுத்தினாள்.

நிறைவாழ்வை முன்னிட்டு சில புனிதர்கள் தம் பெற்றோரை விட்டுத் தூர விலகிச் சென்றனர் என்றும் சிலர் உறவை மாற்றியமைத்துக் கொண்டனர் என்றும் வாசித்த தெரேசாள், இறைவனின் இல்லத்தில் இல்லிடங்கள் பல இருப்பது பற்றி அகமகிழ்ந்து, தனது இல்லிடம் பெரிய புனிதர்களிடையே இல்லாது, தம் குடும்பத்தை மிகுதியாக அன்பு செய்த சிறிய புனிதர்களிடையே இருக்கும் என்று கூறினாள்.

இருப்பினும், ஹனோய் கர்மேலுக்கு அவள் செல்வதாக இருந்தபோது. இவ்வாறு போக விரும்புவதன் காரணம் யாது என நான் அவளை வினவியபோது, அவள் அளித்த விடை இதுவே: "அங்குப் பயனுள்ளவளாக இருப்பதற்கு அன்று, உள்ளத்தில் பிரிவின் துயரைத் தாங்கவே அங்குச் செல்ல விரும்புகிறேன்".

# பற்றின்மை

## உலகோடு உறவாடாமை:

உலகமென்னும் சிறையில் அடைபட்டிருந்த வேளை, அதன் சூழலுக்கேற்ப நான் வாழ நேர்ந்தபோது, என் சிறிய சகோதரி தெரேசாள், இதனால் பெரும் வேதனை யுற்றாள். குறிப்பாக, ஒரு நாள் மாலை நடனமொன்றில் நான் பங்கெடுக்க வேண்டியிருந்தபோது அவள் அடைந்த துன்பம் பெரிது.

என்றுமே அழாத அளவுக்கு அன்று தான் அழுததாக அவள் என்னிடம் கூறினாள். எனக்கு அறிவுரை வழங்க விரும்பி என்னைப் பேசும் அறைக்கு வரச் செய்தாள். ஆனால் அவள் கூறிய அறிவுரை எனக்கு மிகையாகவே தோன்றியது. ஏனெனில், பிறர் கேலிக்கு ஆளாகக் கூடாது அல்லவா? ஆனால் அவளோ ஆத்திரத்தோடு கூறினாள்:

"செலீன், எபிரேய மூவிளைஞர்களும் எவ்வாறு நடந்து கொண்டனர் என்பதைச் சிந்தித்துப்பார். பொற்சிலைக்குப் பணிவதை விட தீச்சூளையில் எறியப்பட விரும்பினார்களன்றோ? இயேசுவின் பத்தினியாகிய நீயோ உலகோடு உறவாடவும், ஆபத்துக்குரிய இன்பங்களுக்கு உன்னைக் கையளித்து, உலக சிலையை ஆராதிக்கவும் விரும்புகிறாய்.



ஆண்டவர் இடமாக நான் உனக்குக் கூறுவதை நினைவுப் படுத்திக் கொள். அவரது ஊழியர்கள் கொண்டிருந்த பற்றுறுதிக்கு, அவர் எவ்வாறு கைம்மாறு அளித்தார் என்பதை நோக்கி அவர்களைக் கண்டு பாவிக்க முயலுவாய்"

நடனமாட மாட்டேன் என்று உறுதி செய்து கொண்ட நான், அதை நிறைவேற்ற வழியறியாது என் சட்டைப் பையில் பெரிய பாடுபட்ட சிலுவையை எடுத்து வைத்துக் கொண்டு ஆர்வத்தோடு செபித்தேன்.

அன்று மாலை நடனமும் முடியும் வேளையிலிருந்தது. முதலிலிருந்தே, தம்மோடு ஆட பலர் வற்புறுத்திக் கேட்டும் நான் இணங்காததால், அவர்களின் கோபத்திற்கு ஆளானேன். ஆனால் எப்படியோ ஓர் இளைஞனோடு ஆட சம்மதித்துவிட்டேன். ஆனால், நடனத்தில் ஓர் அடி முதலாய் எடுத்துவைக்க என்னால் முடியாமற் போயிற்று. உண்மையிலே விந்தை தான் இது. இசை தொடங்கிய ஒவ்வொரு முறையும், பாவம், அவ்விளைஞர் ஆட முயன்றார்; நானும் உண்மையில் என்னால் இயன்றதைச் செய்தேன். ஆனால் எல்லாம் வீணே, மரியாதையாக என்னோடு உலவுவதுபோல் நடந்து விட்டு, நாண மிகுதியால் எங்கேயோ சென்று மறைந்துவிட்டார். நானோ சிறிதும் கவலையின்றி, அங்கு அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பெண்களிடம் மகிழ்ச்சியுடன் திரும்பிச் சென்று நிகழ்ந்ததை எடுத்துக் கூறி மனமாரச் சிரித்தேன்.

## தன் விருப்பப்படி செய்யாததன் மூலம், தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுதல்:

மடத்திற்கு வந்து சில மாதங்களே ஆன எனக்கு, துறவற வாழ்வு என் இயல்பிற்குக் கடினமாகத் தோன்றியது. அவ்வமயம் தெரேசாள் சகோதரி எனக்கு ஊக்கமூட்டினாள்:

"உம் விருப்பப்படிச் செய்ய இயலாதது குறித்து முறையிடுவது நியாயமன்று. அன்றாட வாழ்வின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், நீங்கள் உம் விருப்பத்தைச் செய்யவில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் இந்த வாழ்வைத் தேர்ந்து கொண்டது நீங்கள் அல்லவா? இதனால் உம் விருப்பப்படி செய்யாததன் மூலம் உம் விருப்பத்தையல்லவா நிறைவேற்றிக் கொண்டிருக்கிறீர்கள். ஏனெனில், கர்மேலுக்கு வரும்போது நீங்கள் எதை ஏற்றுக் கொள்ளப் போகிறீர்கள் என்று உமக்கு நன்கு தெரிந்திருந்தது தானே?

வற்புறுத்தலினால் நான் இங்கு ஒரு நிமிடம் கூட இருக்கமாட்டேன் என்று உம்மிடம் நேர்மையாகக் கூறுகிறேன். இத்தகைய வாழ்விற்கு என்னை வற்புறுத்தியிருந்தால் என்னால் அப்படி வாழ்ந்திருக்க முடியாது. ஆனால் நானன்றோ அதை விரும்பித் தேர்ந்து கொண்டேன். இதனால் எனக்குத் தொல்லை தரும் அனைத்தையும் நான் விரும்புகிறேன். ஆம், என் விருப்பத்திற்கு எதிரானது அனைத்தையும் நானே விரும்புகிறேன். ஏனெனில், என் அர்ப்பண நாளன்று, 'நேரிய உள்ளத்தோடும் முழு மனத்தோடும் நான் கர்மேல் கன்னிகையாக விழைகிறேன்' என்று உரத்த குரலில் கூறினேன் அல்லவா?"

1895 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் நவகன்னியர்களுடன் தோட்டத்தில் இருந்த சமயம், சிறிய வெண்மலரொன்று பூத்திருப்பதைக் கண்டேன். அதைப் பறிக்க விரைந்து சென்ற என்னைத் தெரேசாள் தடுத்து நிறுத்தி,

"இவ்வாறு செய்ய அனுமதியில்லை" என்றாள்.

ஒரு மலர் முதலாய்க் கொய்யவியலாத நிலையிலிருப்பதை எண்ணிக் கண்ணீர் சொரிந்தேன். அன்று ஞாயிற்றுக்



கிழமை. சிற்றறைக்குத் திரும்பிய நான் என்னையே தேற்றிக் கொள்ளும் பொருட்டு, பாடலொன்றை இயற்ற விரும்பினேன். நான் இயற்ற விரும்பிய பாடலின் மையப்பொருள் இதுவே: நான் விரும்பும் அனைத்தையும் இயேசுவில் கண்டடைந்தேன். ஆனால், "என் அரசரே நான் கொய்யும் மலர் நீரே" என்ற அடியை மட்டுமே என்னால் இயற்ற முடிந்தது.

என் வேதனையைத் தெரேசாளிடம் எடுத்துக் கூறின போது அவள் மறுப்பொன்றும் கூறவில்லை. ஆனால், சிலநாட்களுக்குப் பின், "செலீனின் பாடல்" என்ற தலைப்போடு கூடிய கவிதையொன்றை என்னிடம் தந்தாள். இதுவே, "நான் விரும்பியது" என்ற தலைப்பில் பின்னர் வெளியிடப்பட்டது.

இப்பாடலின் ஒவ்வொரு வரியிலும், அவளது நம்பிக்கையும், படைப்புப் பொருட்கள் மீதுள்ள பற்றின்மையும் பிரதிபலிக்கின்றன.

## அவளது துறவு மன இயல்பிற்கு எடுத்துக்காட்டுகள்

தெரேசாள் சகோதரியைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள மடலொன்றை எங்கள் தாயார் ஒன்றாய்க் கூடிப் பேசும்போது வாசித்துக் காட்டினார்கள். அன்று தெரேசாள் அங்கு இல்லை. இதனால் அதைத் தனக்குத் தெரிவிக்குமாறு என்னிடம் கேட்டாள். நானும் அனுமதியுடன் கடிதத்தை அவளுக்குத் தந்தேன். சில நாட்களுக்குப் பின்னர், கடிதம் எனக்குத் தேவைப்பட்டபோது அவள் அதை என்னிடம் திருப்பித் தந்து விட்டாள். செய்திகள் சுவையாக இருந்தனவா என நான் வினவியபோது, அதை வாசியாததின்

உண்மையை அவள் கூற வேண்டியிருந்தது. அச்செய்தியை அறிந்துகொள்ளும் பொருட்டு மீண்டும் மடலை அவளிடம் கொடுத்தேன். ஆனால் பயன்?. அவள் அதைத் திறக்க வேயில்லை. இவ்வாறு. அவள் அனைத்திலும் தன் தவறில்லா ஆசைகளை அடக்கினாள். குறிப்பாக, இந்நிகழ்ச்சியில், செய்தியை அறிந்து கொள்ளக் கேட்டது பற்றி தன்னையே தண்டித்துக்கொண்டாள்.

அவள் என்றுமே செய்திகளைப் பற்றி விசாரித்த தில்லை. சிறு குழுவாகக் கூடியுள்ள சகோதரிகட்குத் தாயார் செய்திகள் கூறுவதாகத் தோன்றினால், அவள் அப்பக்கம் போகமாட்டாள்.

* * * *

1894 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் நாள் நான் கார்மேல் மடம் புகுந்தபோது, தனது நெடுநாளைய ஆசை நிறைவேறுதலைக் கண்டு தெரேசாள் சகோதரி உள்ளம் பூரித்துப் போனாள்; ஏனெனில் அவளே எனக்குப் போதித்து, தனது 'சிறிய வழி'யில் என்னை வழி நடத்திச் செல்லப் போகிறாள். இருப்பினும், நான் அடைப்பு வாயிலை மிதித்த போதே அவள் தன்னை ஒறுக்கத் தொடங்கி விட்டாள். மற்ற கன்னியரைப் போல் என்னைத் தழுவி முத்தமிட்ட அவள் உடனே ஓடி விட முற்பட்டாள். ஆனால் எங்கள் ஆக்னேசு தாயார் எனக்குக் குறிக்கப்பட்ட சிற்றறையில் எனக்காக் காத்திருக்குமாறு அவளுக்குச் சைகை காட்டினாள். எனது வழிகாட்டி, நவகன்னியர் தலைவியின் துணைவி என்ற முறையில் இவ்வாறு செய்ய அவளுக்கு உரிமையிருந்தும், அழைப்பு கிடைத்த பின்னரே இவ்வாறு செய்தாள்.

* * * *



இவ்வாறே, சற்பிரசாதமரி சகோதரி (அவளது மாமன் மகள், மரி கெரின்) மடம் புகுந்தபோதும், அவளை வரவேற்க கன்னியர் அனைவரும் மடத்து வாயிலில் ஒன்று கூடினர். இளைய சகோதரிகளின் அணியிலிருந்த தெரேசாள் சகோதரி சற்று விலகி நின்று கொண்டிருந்தாள். அவ்வமயம் ஒரு சகோதரி, "சற்று முன்னே போங்கள், கதவைத் திறக்கும் போது நீங்கள் உம் குடும்பத்தைக் காணலாம்" என்று கூறினாள். ஆனால் தெரேசாள் முன்னே போகவில்லை. பேசும் அறைகளில் (parlour) அவ்வமயம் கட்டிட வேலை நடந்து கொண்டிருந்ததால், ஓர் ஆண்டளவாக எம் குடும்பத் தினரை நாங்கள் பார்க்கவேயில்லை. அச்சமயத்தில் அவர்களைச் சந்திக்க அவள் மட்டும் தவறிவிட்டதைப் பற்றி நான் குறை கூறினபோது, தன்னை ஒறுக்கவே இவ்வாறு செய்தாள் என்றும், இத்தியாகம் தனக்கு மிக்க கடினமாக இருந்தது என்றும் அவள் கூறினாள்.

செபதியானத்தின் போதும், மற்ற சந்தர்ப்பங்களிலும் சில சமயங்களில் திருக் கூடத்திலுள்ள கடிகாரத்தில் மணி பார்க்க ஆசை எழுந்தபோதெல்லாம் அதை ஒறுத்து மணி அடிக்கும் வரை பொறுமையுடன் காத்திருப்பாள். "நான் அவசரப்படுகிறேன், உண்மைதான்: ஆனால் ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் உள்ளன என்று அறிந்து கொள்வதால் எனக்கு ஒன்றும் இலாபம் வரப்போவதில்லையே" என்று தனக்குள் கூறிக் கொள்வாள்.

வாயிற்படி அலுவலில் அவளுக்குத் தலைவியாக இருந்தவள் மிதமிஞ்சிய முறையில் அவளைக் கவனித்துக் கொண்டபோது, வானதூதருக்குரிய பொறுமையுடனும், ஒறுத்தல் மனப்பான்மையுடனும் அவற்றைச் சகித்து வந் தாள். குளிரால் வெடித்துப்போன தெரேசாளின் கைகளுக்குச் சிகிச்சையளித்த இச்சகோதரி மிகவும்

மெதுவாகச் செயல் புரிபவள். வயது முதிர்ந்த இவளுக்குச் சற்று புத்திக் கோளாறும் கூட இவள் தெரேசாளின் விரல்கள் ஒவ்வொன்றையும் பல பொடித் துணிகளால் கட்டுப் போடுவாள். ஒரு நாள் இறுதி விரல் மட்டுமே எஞ்சி நிற்க மற்ற அனைத்து விரல்களும் கட்டுக்குள் அடங்கிவிட்டன. ஆனால் விரைவில் அதுவும் மற்றதைப் போல் துணிக்குள் புதைந்து விட்டது. இதைக் கண்ட நான் வியந்து நிற்க தெரேசாளோ சிரித்தாள்.

அவள் நோயுற்றிருந்த சமயம், திரு முழுக்காட்டு இனிப்புகள் (dragées) நிறைந்த பெட்டி யொன்றை எங்களிடம் கொண்டு வந்தனர். அதன் மேற்பாகம் கவர்ச்சியாக இருந்தது. அதைப் பற்றிப் பெருமையாக அவள் எதிரே பேசினோம். அவளுக்குக் காட்ட மறந்து போய் பெட்டியை, அவளது படுக்கைக்கு அண்மையிலிருந்த மேசை மேல் வைத்து விட்டோம். அவளும் அதைக் கேட்டு வாங்கிப் பார்க்க விரும்பவில்லை.

## தியாகங்கள்:

துணைச்சகோதரியான தன் ஆயத்த மடத்துத் தோழிக்கு அறவாழ்வில் ஊக்கமூட்டும் பொருட்டு, புனித வாழ்வில் முன்னேற்றம் காணச் செய்யும் அன்றாட வாழ்வின் செயல்களை, அர்ப்பணிக்கும் முறையொன்றைத் தெரேசாள் தனக்கும் தேவை என்பது போல் காட்டி அவளை வழிநடத்த வேண்டியிருந்தது.

நாடோறும் குழந்தை இயேசுவுக்கு ஒரு தனிப்பட்ட காணிக்கை அளிக்கப்பட்டது. மலராகவோ, கனியாகவோ, ஆடைகளாகவோ, நாடோறும் மாறும் பல்வகை இசைக் கருவிகளினால் அளிக்கும் இன்னிசையாகவோ அது



வழங்கப்பட்டது. எளிமையை (simplicity) நாடும் அவளது உள்ளத்திற்கு இம்முறை சற்றும் ஒவ்வாதது எனினும், அவள் தன் தோழிக்காக எத்துணை நன்மனதுடன் அதை ஏற்றுக்கொண்டாள் எனில், இத்தூண்டுதல்கள் தெரேசாளுக்குத் தேவை என அவளது தோழி உறுதியாக நம்புமாறு ஆகிவிட்டது.

நான் மடம் புகுந்த புதிதில், ஒரு நாள் தோட்டத்தில் திராட்சைக் கொடியின் பக்கம் சென்ற போது, அதில் தொங்கின சுருள்களைக் கொய்து, தெரேசாளுக்குக் கொடுத்தேன். ஏனெனில், சிறு வயதில் அவற்றைச் சுவைப்பதென்றால் எங்களுக்குத் தனி இன்பம். ஆனால் குழந்தைப்பருவ நினைவுகளைத் தூண்டிவிடும் இந்த இன்பத்தைத் தான், கர்மேலில் துறந்து விட்டதாகக் கூறி அதை ஏற்க அவள் மறுத்து விட்டாள். நான் கட்டாயப் படுத்திப் பார்த்தேன். ஆனால் ஒரு திருவிழா நாளன்று கொடுத்தால் வாங்கிக் கொள்வாள் என்ற நம்பிக்கையில் அந்நாளன்று மீண்டும் வற்புறுத்தினேன். என் முயற்சி யனைத்தும் வீணாயிற்று. "அவரது அரசில் மட்டுமே திராட்சைக் கொடிச் சுருள்களைச் சுவைப்பேன் என்று என் சின்ன இயேசுவுக்கு நான் வாக்களித்து விட்டேன்" என்று அவள் என்னிடம் கூறினாள்.

## ஒறுத்தலிலும் பரந்த நோக்கம்

புதிதாக மடத்தில் சேர்ந்த ஒரு கன்னிகைக்கு, நன்மை செய்யக் கூடியது என்ற காரணத்தால், பராக்கை அகற்றத் தேடாத அவளது பரந்த நோக்கைப் புரிந்து கொள்ள, எனக்கு வாய்ப்புக் கிட்டியது: நான் மடம் புகுந்த புதிதில், என் சிற்றறை சன்னலிலிருந்து தொலைவில் இரு வீடுகளுக்

கிடையே இருந்த இருப்புப் பாதையை எனக்குக் காண்பித்து "புகை வண்டி செல்வதை நீங்கள் பார்த்து மகிழலாம்" என்று கூறினாள்.

தவறு ஏதுமில்லா இந்த இன்பத்தை விலக்கும் புலனடக்கத்தைக் குறித்து அவள் எதுவும் கூறவில்லை. ஆனால், புதிதாக எழும்பின கட்டிடம் ஒன்று இருப்புப் பாதையை மறைத்துவிட இறைவன் திருவுளங் கொண்டார்.

தன்னை ஒறுப்பதில் தெரேசாள் சகோதரி நூதன செயல்களை விரும்பித் தேடவில்லை. இன்னும் அனுமதிக்கப்பட்ட இன்பங்களிலும் மிக்க கண்டிப்பாய் நடந்து கொள்ளவுமில்லை. அனைத்திலும் போல் இதிலும் அவள் சாதாரணமாக நடந்து கொண்டாள். ஆண்டவரது செயல்களில் அவரைப் போற்றிப் புகழ அவள் தவறவில்லை. பழங்களை, (சிறப்பாக) வெல்வெட் தோலுடைய பிச் (peach) பழத்தைத் தொடுவதென்றால் அவளுக்கு விருப்பம். இவ்வாறே, மலர்களின் பல்வகை மணங்களை நுகர்ந்து மகிழ்வாள்.

ஆனால், இச்செயல்களில் இயல்பான நாட்டம் ஏற்படுவதை உணர்ந்தாளானால், உடனே அதைத் தடுத்து நிறுத்தி விடுவாள். இவ்வாறு அவள் பற்றுறுதியுடன் ஒழுகினதால் தான், தன் வாழ்நாளிலேயே ஒருமுறை பயணத்தின்போது கொடுத்த Eau De Cologne புட்டியின் மணத்தை ஒரு கணப் பொழுது விரும்பி நுகர்ந்ததாக, சாவின் வேளையில் தன்னை நொந்து கொண்டாள்.



# தபக் கருவிகள்

மடம் புகுமுன், தபக் கருவிகள் மூலம் தன் உடலை ஒறுக்க அவள் விரும்பவில்லை. ஆனால், மடத்தில் சட்டம் வலியுறுத்தும் சாட்டையடித்தவத்திற்கு (discipline) அவள் முற்றிலும் பிரமாணிக்கமாயிருந்தாள். இன்னும் மடத்து வழக்கிலிருந்த வேறு தபக் கருவிகளையும் அனுமதி கிடைத்த அளவில் அணிந்து வந்தாள் இத்தகைய பொருட்களை அணிந்திருக்கும் வேளையில் உடலில் வலி ஏற்படுத்தும் செய்கைகளை நாம் இயல்பாகவே விலக்கத் தேடுவோம் என்பது என் பட்டறிவால் கண்ட உண்மை. இதனால் சாட்டையடித்தவ முயற்சி செய்யும் போது, நோகாத வண்ணம் உடலை விறைத்துக் கொள்ளச் செய்வது பற்றி அவளிடம் எடுத்துரைத்த போது வியப்புடன் அவள் கூறியது இதுவே:

"நான் இவ்வாறு செய்யமாட்டேன். அரை குறையாகச் செய்வதென்றால் எதையும் செய்யத் தேவையில்லை என்பதே என் கருத்து. எனக்கு வலி உண்டாகத் தான் அடித்துக் கொள்கிறேன். இன்னும் மிகுதியான வலி ஏற்பட வேண்டுமென்பதே என் விருப்பம்".

சில சமயங்களில், கண்ணீர் பெருக்கெடுத்தாலும், புன்னகை புரிய முயன்றதாக அவள் என்னிடம் வெளியிட்டாள். ஏனெனில், ஆன்மாக்களைத் தன் அன்பருக்கு மீட்டுத்தர அவரோடு இணைந்து துன்புறுவதில் மகிழ்ச்சி கொள்ளும் அவள், தன் உள்ளத்து உணர்வை முகம் எடுத்துக் காட்ட வேண்டுமென்பதற்காகவே இப்புன்னகை புரிய முயன்றாள் என்று என்னிடம் கூறி இருக்கிறாள்.

இருப்பினும், இரத்தம் பீறிடும் அளவிற்குத் தப முயற்சிகளை மேற்கொண்ட கன்னியர்கள், அத்துணை நிறைவுள்ளவர்களாக இல்லை என்பதையும், அளவு மீறிய உடல் தபத்தால் சுயமனம், ஊட்டம் பெறுகிறது என்பதையும் அவள் கண்டுணர்ந்தாள்.

அன்போடு ஒப்பிடுகையில் இந்த உடல் தபங்கள் எல்லாம், ஒன்றுமேயில்லை என்று எமக்கு எடுத்துக் கூறினாள்.

நவகன்னியர் இல்லத்தில் இருந்த போது, அவளது உத்தரியத்தை ஒழுங்கு செய்து குத்துவதாகக் கூறி அறியாமலேயே அவள் தோளில் ஊசியை நன்கு ஏற்றி விட்டாள் ஒரு சகோதரி. இந்த வேதனையை தெரேசாள் பலமணி நேரங்கள் வரை மகிழ்ச்சியுடன் பொறுத்துக் கொண்டாள். அவளது வாழ்வின் இறுதி மாதங்களில் தான் இச் செய்தி எனக்கு தெரிந்தது.

* * *



# 6

## வேதனையில் மனவலிமை; தன்னடக்கம்; இறைவனின் கருவிகள்; புனிதமும் மாட்சிமையும்; சாவின் மீதுள்ள ஆவல்; விண்ணகப்பரிசு.

## வேதனையில் மனவலிமை:

இறைவனின் திருவுளத்திற்கு முற்றிலும் இயைந்த மனஇயல்பு அவளது முகத்தில் நிழலாடியது. அன்போடு கலந்த மகிழ்ச்சியோடு எப்போதும் அவள் காணப்பட்டாள். அவளோடு நெருங்கிப் பழகியிராவிடில், ஆறுதல் நிரம்பிய இனிய வழியில் அவள் நடந்து செல்வதாகவே நினைக்கத் தோன்றும்.

### விசுவாசத்திற்கு எதிரான சோதனைகள்:

18 திங்களாக ஆன்ம விண்ணகம் இருண்டிருக்க, விசுவாசத்திற்கு எதிராகப் பெருஞ் சோதனைப் புயலால் துன்புற்றபோதும் அதை யாரிடமும் அவள் கூறவில்லை. Godefroy - Madelaine சுவாமிகளிடம் இது பற்றி மனந் திறந்து பேசினதாக என்னிடம் மட்டும் அவள் கூறினாள். விசுவாச மந்திரத்தைப் பெயர்த்தெழுதி இதயத்தில் வைத்துக்

கொள்ளுமாறு இக்குருவானவர் கூறிய அறிவுரையின்படி உடனே செய்ததோடு இச்செபத்தைத் தன் குருதியினாலேயே எழுதினாள்.

தன் வேதனையனைத்தையும் என்னிடம் கொட்டி ஆறுதல் பெற ஆசித்தாள் என்பதை நானறிவேன். ஆனால் தன் ஐயப்பாடுகள் எங்கு எனக்கும் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சி, தனியாகவே அவற்றைத் தாங்கிக் கொள்ள விரும்பினாள். அவளது உள்ளப் போராட்டத்தைப் பற்றி நான் விசாரித்தபோது, ஆழ்ந்த பார்வையொன்றை என்மீது செலுத்தவதோடு நிறுத்திக் கொண்ட அவள் கூறுவாள்: "எனக்கு ஏற்படும் சோதனைகளை 5 நிமிடங்கள் நீங்கள் அனுபவிக்கக் கூடுமானால்"...!

சில வேளைகளில், தன் வேதனைக்குரிய இரகசியத்தை வெளிப்படுத்துவது போல் காணப்படுவாள். இதை முற்றிலும் சாராத உரையாடலின் போது, திடீரென, வேதனை கலந்த தொனியில் "விண்ணகம் என்று ஒன்று உள்ளதா? அதைப்பற்றி என்னிடம் பேசும்" எனக் கேட்பாள். விண்ணைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் பல்வகை அழகிய கருத்துக்களை எடுத்துக் கூற நான் முயன்றேன். மனந்திறந்து அவளோடு பேச விரும்பினாலும் அந்தோ! என் சொற்கள் பயனற்றுப் போயின. என் பேச்சில் இடையிடையே ஆ என்ற வருத்தங் கலந்த வியப்பொலி அவளிடமிருந்து எழும். என் சொற்கள் அவளது வேதனையை மிகுதியாக்கியதால், பெரும்பாலும் உரையாடலின் பொருளை மாற்ற வேண்டியிருந்தது. இத்தகைய சோதனையில் அவள் அல்லலுறுவதைக் காண நான் பெரிதும் வருந்தினேன்.



என் முயற்சிகள் பயன் தராததைக் கண்ணுற்ற என் அன்புச் சிறிய 'தெரேசாள் தனக்காகச் செபிக்குமாறு என்னிடம் கேட்டாள். இதற்குப் பின், வெளியில் ஒன்றுமே தெரியவில்லை. அடிக்கடி விசுவாச முயற்சிகள் செய்ததன் மூலமாகவும், கவிதைகள் இயற்றியதன் மூலமாகவும் தன் சோதனைகளை வென்றாள். அவளது கவிதைகள் அன்பினால் பற்றியெரியும் ஆன்மாவின் எதிரொலியாகும்.

## இனிய கனவும் உண்மையான மன வலிமையும்

நம் தந்தை புனித சிலுவை அருளப்பரைப் போன்று எதிலும் பற்றுக்கொள்ளாமல் அவள் வாழ்ந்தாள். நடைமுறையில் புனிதரது கடினமான கொள்கைகளைச் சுவைக்கத் தெரியாத நான், துறவறப் பயிற்சி என் அகந்தையை அழித்ததன் மூலம் என் ஆன்மாவில் குவித்திருந்த இடிபாடுகளை வியப்புடன் கண்ணோக்கி ஆர்வம் பொங்கும் உணர்ச்சிகளை நினைத்து ஏங்கினேன். "உலகிலிருந்த வேளை, என் இதயத்தில் ஆர்வம் பொங்கி வழிந்ததை உணர்ந்தேன்; செயலாக்க முடையவளாய் விளங்கினேன். அப்போது, இறைமாட்சிமைக்காக உலகின் கோடி எல்லை வரைக்கும் சென்றிருப்பேன். கொடிய விலங்குகட்கும் அஞ்சியிருக்க மாட்டேன். ஆனால் இப்பொழுதோ, இத்தகைய ஆர்வ உணர்ச்சிகள் எல்லாம் அணைந்துபோய், வலிமையற்றவளாக உணர்கின்றேனே" என்று அவளிடம் முறையிட்டேன்.

### இதற்கு அவள் அளித்த விடை இதுவே:

"இதெல்லாம் இளமையைச் சார்ந்தது. உண்மையான மனவலிமை கற்பனையில் காணும் ஆபத்து அனைத்தையும்

கடந்து, ஆன்ம வேட்டைக்குச் செல்லத் தூண்டும் ஒரு கண ஆர்வத்தில் அடங்குவதன்று. நாம் காணும் இன்பக் கனவிற்கு இத்தகைய கற்பனை ஆபத்துகள் பொலிவூட்ட மட்டுமே உதவும் ஆனால் இதய வேதனையில் இதை விரும்புவதிலும், அதே சமயத்தில் கெத்சமனித் தோட்டத்தில் நமதாண்டவரைப் போன்று அதற்கு அஞ்சுவதிலும் தான் உண்மையான மன வலிமை அடங்கும்".

## உலக சிலுவைகளும் துறவற வாழ்வின் சிலுவைகளும்:

அவள் என்னிடம் ஒருமுறை கூறினாள்: துறவறத்தில் நமக்குத் துன்பங்கள் இல்லை, அப்படியிருப்பினும் அவை சிறு துன்பங்களே. ஆனால் உலகில் காணப்படும் துன்பங்களையே சிலுவை என்று அழைக்கலாம் என்று உலகம் கருதுகின்றது. உலகில் மிகப் பெரிய பாரமான சிலுவைகள் உண்டு என்பது உண்மையே. ஆனால் துறவற வாழ்வின் துன்பங்கள் நாடோறும் நிகழும் குண்டூசிக் குத்துதல்களாகும். இங்குப் போராட்டம் வேறொரு தளத்தில் நடைபெறுகிறது. தனக்குத் தானே போரிட்டுத் தன்னையே அழிக்க வேண்டும் . இதில் தான் உண்மை வெற்றி அடங்கும்.

பெற்றோர், பிள்ளைகளைத் துறந்து வியத்தகு வீரத்தோடும், மனவலிமையோடும் உலகை விட்டு மடம் புகுந்த எத்தனை ஆன்மாக்கள், துறவற வாழ்வின் துன்பங்களைத் தாங்க வியலாது மனவலிமை குன்றிப் போயின. நானே இங்குக் காண்பது யாதெனில், புறத்தில் வலிமைமிக்கவராகத் தோன்றுபவர்களைச் சிறிய செயல்களில் எளிதாக வென்று விடலாம். ஆம், தன்னையே வெல்வது தான் வெற்றியனைத்திலும் மிகப் பெரிய வெற்றி!



-- ஆ! சிறிய செயல்களில் தன் மறுப்பைக் கடைப்பிடிப்பது எத்துணை கடினமானது; என்னால் இது முடியவேயில்லை. நல்ல தீர்மானங்கள் எடுத்து நான் செய்ய வேண்டியதைத் தெளிவாகக் கண்டாலும், முதல் எடுப்பிலேயே அது என்னை ஆட்கொள்ள விட்டு விடுகிறேன். என்னையும் மீறிப் போய் விடுகின்றது.

-- "உம் இதயத்தை முதலிலேயே சாந்தப்படுத்திக் கொள்ளாததால், எளிதில் நிலை தவறிவிடுகிறீர்கள். யார் மீதாவது உமக்கு ஆத்திரம் வருமாயின், அவ்வமயம் உள்ளத்து அமைதியைக் கண்டடைய வழியாதெனில், அவர்களுக்காக இறைவனிடம் செபிப்பதும், இவ்வாறு உமக்குத் துன்பம் தருவதற்கு அவர்களுக்குக் கைம்மாறு வழங்கக் கேட்பதுமாகும். சில முறைகளில், எத்துணை தான் முயற்சி செய்யினும், ஒரு சில பலவீனங்களை இறைவன் வேண்டுமென்றே, சில ஆன்மாக்களில் விட்டு வைக்கிறார். ஏனெனில், தாங்கள் அறத்தில் உயர்வதைத் தாமும் பிறரும் அறிவதால் அவர்களுக்குத் தீமை ஏற்படும், என்ற காரணத்தால் தான் இறைவன் இவ்வாறு செய்கிறார்"

செயல் அப்போஸ்தலத்துவம் ஏதுமின்றி அமைந்துள்ளது எங்கள் அடைபட்ட வாழ்வு. உழைப்பின் பலனை என்றுமே காணாது, ஊக்குதல் ஏதுமின்றி, எத்தகைய காலப்போக்கிற்கும் வழியின்றி உழைப்பது இயல்பிற்கு மிகவும் கடினம். தன்னை வெல்லும் பொருட்டு தன்னையே நன்கு பண்படுத்திக் கொள்வதே அனைத்திலும் மிகக் கடினமான உழைப்பாகும் என்பது அவளது கருத்து.

## உன் செயல்கள் காணப்படுவதில்லை

துறவற வாழ்வில் சந்திக்கும் சிலுவைகளுக்கு இதோ ஓர் எடுத்துக் காட்டு:

நோயாளிகளின் அறையில் சில உதவிகள் செய்வதுடன், கன்னியர்களின் ஆடைகளைத் தயார் செய்யும் அலுவலும் என் ஆயத்த நிலையின் போது எனக்கு அளிக்கப்பட்டது. ஆனால் தொடக்கத்திலேயே, இந்த வேலைக்குப் பதில் வேறு பல வேலைகளை எனக்குக் கொடுத்தார்கள்.

குருக்களின் ஆயத்த உடையொன்றில் வண்ண ஓவியம் தீட்ட வேண்டியிருந்தது. புனித ஆக்னேஸ் திருநாளன்று கொண்டாடப்படும் எங்கள் அன்னையின் விழாவை முன்னிட்டு சகோதரிகள் கொண்டு வந்த வேறு சில பொருட்களுக்கும் வண்ணந் தீட்ட வேண்டியிருந்தது. ஆடை தயாரிக்கும் அலுவலில் எனக்கு மேலாக இருந்த சகோதரி தான் இவற்றையெல்லாம் செய்யுமாறு எனக்குப் பணித்தவள். தைப்பதே எனக்கு விருப்பமாயிருந்தும் நான் அவள் பேச்சிற்குப் பணிந்தே இவ்வேலைகளை ஏற்றுக் கொண்டேன். ஆனால், சகோதரிகளின் உடை தைக்கும் வேலை இதனால் பாதிக்கப்பட்டதைக் கண்ணுற்ற அச் சகோதரி என்னைப் பற்றி முறையிட்டாள். இதனால் பெரும் வருத்தமுற்ற நான் தெரேசாளிடம் இதை வெளியிட்டேன்.

கிறிஸ்துமஸ் இரவன்று, கன்னிமரியின் பெயரால் எனக்கு அளிக்கப்பட்ட பாடலொன்றை என் காலணியில் கண்டேன். அப்போது என்பெயர் திருமுகத்தின் மேரி சகோதரி. அப்பாடலின் ஓர் அடியை இவண் தருகிறேன்.

"மரியே, அன்றாட அலுவலைப்பற்றிக் கவலை
கொள்ளாதே,
இவ்வுலக வாழ்வில் உனது ஒரே அலுவல்
அன்பாக மட்டுமே இருக்க வேண்டும்.



உன் செயல்கள் அறியப்படவில்லை என
யாராவது உன்னிடம் கூறினால்
நான் மிகுதியாக அன்பு செய்கிறேன்
இங்கு இதுவே என் அலுவல்
என நீ கூறக்கூடிய அளவுக்கு உன்னை நீ, தயார் செய்து கொள்ளவேண்டும்."

நான் கேட்காமலேயே என் அன்புச் சிறிய சகோதரி இதை இயற்றியிருந்தாள். எனக்கு ஊக்கமூட்டி ஆறுதல் அளிக்கவே இவ்வாறு செய்திருக்கிறாள் என நான் ஊகித்துக் கொண்டேன். இம்முயற்சியில் முழு வெற்றியும் கண்டாள்.

## வேதனையைப் பற்றி

**அவள் கூறினாள்:**

"துன்புற மிகுதியான ஆற்றலும் இன்புற மிகக் குறைவான ஆற்றலுமே எனக்கு உள்ளன. மகிழ்ச்சியை என்னால் தாங்க இயலவில்லை. அது என் பசியைப் போக்கிவிடுகின்றது. ஆனால் துன்புறும் நாட்களிலோ, எல்லோருக்கும் நேர்மாறாக, நான் மிகுதியாகச் சாப்பிட்டேன்"

மறைசாட்சியாக இறக்க விரும்பினாலும், தெரேசாள் வேதனையை வேதனைக் காக விரும்பவில்லை. தம் மானிட இயல்பில் துன்பத்தைக் கண்டு அஞ்சினாலும், நம்மீதுள்ள அன்பை எண்பிக்க, இரத்த ஞானஸ்நானம் பெற விரும்பின நமதாண்டவரைப் போன்று, இயேசுவுக்குத் தன் அன்பை எடுத்துக் காட்ட, துன்பம் ஒரு வழி என்ற காரணத்திற்காகத் தான் அவள் அதை விரும்பினாள்.

அவருக்காக மிகுதியாகத் துன்புற தனக்குள்ள ஆவலை அவரிடம் வெளிப்படுத்தும் போதெல்லாம், இறை திருவுளத்தின் படி நிகழ தன் மன்றாட்டைக் கையளித்து விடுவாள். இன்னும் வாழ்வின் இறுதியிலும், இறைவனின் விருப்பத்திற்கு முற்றிலும் கையளித்து விடும் இம்மன வலிமை அவளிடம் எத்துணைக்கு ஓங்கியிருந்ததெனில் அவள் பின் வருமாறு கூறலானாள்:

"வேதனையையோ சாவையோ நான் விரும்பவில்லை. இருப்பினும் இரண்டையும் நான் அதிகமாக விரும்புகிறேன். இன்று என்னை வழி நடத்துவதெல்லாம் கையளித்தலே. என் ஆன்மாவில், இறைவனின் திருவுளம் முற்றிலும் நிறை வேறுதலையன்றி வேறு எதையும் ஆர்வத்துடன் கேட்க எனக்குத் தெரியவில்லை."

## ஆறுதல் தேடாமை:

தெரேசாள் தன் உள்ளத்தை எத்துணைக்கு ஒறுத்தாள் எனில் இறைவனிடம் எத்தகைய சிறிய ஆறுதலையும் அவள் என்றுமே கேட்டதேயில்லை. இது பற்றி அவள் எனக்கு அளித்த பாடம் இதோ! என் துறவற வாழ்வின் தொடக்கத்தில் நான் போராட வேண்டியிருந்தது. இதில் ஏற்பட்ட தோல்விகள் பல. வெற்றியோ மிகச் சொற்பமே. இதனால் அவதைரியம் என்னை ஆட்கொண்டது. என் அருமைச்சகோதரி எனக்குக் கூறிய ஞானமிகு அறிவுரைகள் உள்ளத்தில் ஆழப் பதிந்திருந்தாலும், அவைகளை எவ்வளவு மிகுதியாக சுவைத்தேனோ அவ்வளவிற்கும் அவற்றைக் கடைபிடிக்க இயலாதது பற்றி மிகவும் வருந்தினேன். "இதற்கு மேல் என்னால் எதுவும் செய்யமுடியாது. விண்ணில் குறைவாகப் பெற்றாலும் பரவாயில்லை; என்னால் முன் னேற முடியாது" என எனக்குள் கூறிக் கொண்டேன். என்ன



செய்வதென்று அறியாது தடுமாறிய நான் எனக்குச் சிறு ஆறுதலையோ கனவையோ அருளுமாறு கன்னித் தாயிடம் இரந்து மன்றாடினேன். என் வேண்டுதலும் ஏற்கப்பட்டது. கனவில், நடுத்தோட்டத்தில் பெரிதும் அழுது கொண்டு நிற்கிறேன். வேதனையால் நொறுங்குண்ட உள்ளத்தோடு கண்களை உயர்த்துகிறேன். அகன்று விரிந்த வானம்; அதில் பல மேகங்கள். அவற்றிற்கிடையே ஒன்றோடொன்று இணைந்துள்ள பல மலர் வளையங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. மேகங்கள் விலக விலக எண்ணிக்கையும் பெருகு கின்றது. நான் மூச்சு வாங்க நின்று கொண்டிருக்கிறேன். என் கண்ணீர் வற்றி விடுகின்றது. தொடு வானம் இரத்தம் போன்று மிகவும் சிவந்திருக்கின்றது; இச் செம்மை பரவிக் கொண்டே செல்கின்றது.

அப்போது என் உள்ளத்தில் தோன்றியது இதுவே: இனி நான் எனக்காக உழைக்காது இறைவனுக்கு மகிழ்ச்சி யளிக்கவும், அவருக்கு, ஆன்மாக்களை மீட்டுத் தரவுமே உழைக்க வேண்டும். ஆம் பாவிகளுக்கு விண்ணகத்தைப் பெற்றுத் தர வேண்டும். தாயொருத்தி வேதனையில் பிள்ளையை ஈன்றெடுப்பது போன்று, நிறைய ஆன் மாக்களை ஈன்றெடுக்க நானும் மிகுதியாகத் துன்புற வேண்டும்.

என் பணியின் மேன்மையைக் கண்டுவிட்ட என் உள்ளம் மலர்ந்தது. ஊக்கமூட்டும் இக்கனவை என் அன்பு சிறிய தலைவியிடம் மகிழ்ச்சி பொங்க எடுத்துரைத்தேன். அதற்கு உடனே அவள் கூறியதாவது:

"ஆ, ஆறுதல் கேட்பது, இச்செயலை நான் என்றுமே செய்திருக்கமாட்டேன். என்னைப் போல் இருக்க விரும்பு கிறீர்களே, நான் அவரிடம் என்ன கூறுகிறேன் என்று

உமக்குத் தெரியுமல்லவா?. "ஆண்டவரே, நான் உம்மை எழுப்பி விடுவேனோ என அஞ்ச வேண்டாம். விண்ணரசிற்காக நான் அமைதியாகக் காத்திருப்பேன்"

"துன்பமென்னும் இரவில் இறைவனுக்குப் பணிபுரிவது எத்துணை இனிமையானது. விசுவாசத்தில் வாழ நமக்கு இவ்வுலக வாழ்வு மட்டுமே உள்ளது"

## அவர் நிச்சயமாக உறங்கிக் கொண்டிருக்கிறார்.

இறுதி நோயின்போது ஆறுதல் பாதை எதையும் அவள் கடந்து செல்லவில்லை. ஒரு நாள் திவ்விய நன்மை உட்கொண்ட பின் என்னை நோக்கி அவள் கூறினாள்: "இரு சிறு குழந்தைகளை ஒன்றாய் வைத்தது போல் உள்ளது என் நிலை. அவர்களிருவரும் தமக்குள் பேசிக் கொள்வதில்லை. இருப்பினும், நானாவது இயேசுவிடம் ஏதாவது சொல்வேன். ஆனால் அவரோ பதில் கூறுவதில்லை. நிச்சயமாக அவர் உறங்கிக் கொண்டு தான் இருக்கிறார்"

## முறையிடாமை:

துணிகளைத் துவைத்துக் கொண்டே, பொது வேலையுடன் கூட மற்றவர் அறியாத வேலை ஒன்றையும் சேர்த்துச் செய்ததால் பிறரைவிட மிகவும் களைப்புற்றிருப்பதாக நான் முறை யிட்டேன். இதற்கு அவள் அளித்த விடை என்ன என்று தெரியுமா?

"தீரமுள்ள போர்வீரன் ஒருவன், தன் வேதனைகளைப் பற்றி முறையிடவே மாட்டான். படுகாயங்களையும் கீறல் எனக் கூறிக்கொள்வான். பிறரின் மிகச் சிறிய வலியையும்



பெரிதாகக் கருதி அவர்கட்கு உதவுபுரிவதில் விழிப்பாயிருப்பான். நானும் உம்மை இத்தகைய தீரமிக்க போர் வீரனாகத் தான் என்றும் காண விழைகிறேன்". எத்துணைக்கு என் களைப்பைப் பிறர் அறியவில்லையோ அத்துணைக்கும் அதை நான் உணர்வதாக நானே ஏற்றுக் கொள்ளும்படி அவள் செய்துவிட்டாள். பிறகு இதற்கு அவள் விளக்கம் தரலானாள்:

"நமக்கு ஏன் போதிய மனவலிமை இல்லை தெரியுமா? பிறர், நம் நிலைமையைக் கண்டு இரங்காததால் தான். ஒரு சகோதரியிடம் "நீர் களைப்புற்றுள்ளீர்; போய் ஓய்வெடுத்துக்கொள்ளும்" எனக் கூறினால், உடனே அச் சகோதரி தன் களைப்பை அவ்வளவாகப் பாராட்ட மாட்டாள். நம் உடல் வருத்தத்தைப் பிறர் அறிந்து கொள்ள வேண்டுமென நாம் விரும்புகிறோம். புனிதை மார்கரீத் மரியம்மாளுக்கு இரண்டு விரல் சுற்றுகள் இருந்தும் ஒன்றினால் மட்டுமே அவள் வேதனைப்பட்டதாகக் கூறியுள்ளாள். ஆனால் இராண்டாவது விரல் சுற்றை மறைக்க முடியாமற் போனதால் அது சகோதரிகளின் இரக்கத்திற்கு ஆளாயிற்று."

"உம்மைக்கண்டு இரங்கினால் உமக்கு ஆறுதல் ஏற்படுகிறது இல்லையா? ஆனால் அவ்வாறு செய்ய வில்லையா? பரவாயில்லை, அதற்கும் அக்களிப்புக் கொள்ளுங்கள். உம்மிடமாக நான் இருந்திருந்தால் இதையே விரும்பியிருப்பேன்; மகிழ்ச்சியும் அடைந்திருப்பேன். உம் வேதனையின் அளவாக அனுதாபம் பெறல், இல்லையா, முழுதும் மறக்கப்படல் நல்லது. இன்னும் மிகுதியாக மறக்கப்பட முயலுங்கள். பிறர் துன்பத்தையும், உம்மை விட, அவர்கள் பிறரின் அனுதாபத்தையும் ஆறுதலையும் பெற வேண்டியதன் காரணத்தையும் எடுத்துக்காட்டுங்கள்.

## ஞாயிற்றுக்கிழமைகளும் விழாநாட்களும்

எதிர்பாராத அலுவல்களினால், ஞாயிற்றுக்கிழமைகளிலும் விழாநாட்களிலும் கிடைக்கும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியாமற் போய்விடுகிறது என்று அவளிடம் எடுத்துக்கூறியதற்கு அவள் இவ்வாறு விடை பகர்ந்தாள்: "எனது ஞாயிற்றுக்கிழமைகளும் விழா நாட்களும் எவை என்று உமக்குத் தெரியுமா? நான மிகுதியாகத் தொல்லைப்படும் நாட்களே அவை"

## சுயக் கட்டுப்பாடு

தெரேசாள் சகோதரி அனைத்தையும் உண்மையோடு தீர்ப்பிடுவாள். உணர்ச்சி வசப்படமாட்டாள். அவளிடம் சென்றால் நிதானமும் ஞானமும் கலந்த அறிவுரை பெறுவது உறுதி. அவள் நடத்தையில் எத்தகைய படபடப்பும் கிடையாது. வியப்புக்குரிய தன்னடக்கமுள்ளவள் அவள்.

உணர்ச்சிப் பெருக்கில் இருக்கும் வேளையில் சோதனையையோ வேதனையையோ என்றுமே எடுத்துக் கூறலாகாதென எமக்கு அறிவுரை வழங்குவாள். இருப்பினும் பொறுத்துக் கூறப்போதிய மனவலிமை எம்மிடம் இல்லாத போது எமக்குச் செவிமடுப்பாள். ஆனாலும் அவள் கூறுவது இதுதான்:

"எதை முன்னிட்டு முறையிடுகிறீர்களோ அது நீங்க வேண்டும் என்ற காரணத்திற்காகத் தாயாரிடம் கூட உங்கள் தொல்லையை எடுத்துக் கூற வேண்டாம். ஆனால் கடமையை முன்னிட்டு, சுதந்தர உள்ளத்தோடு மனம் திறந்து பேசுங்கள். ஆவேசத்தின் சிறு பொறியாவது உம் உள்ளத்தில் இருந்து விடுபட்ட நிலை இன்னும் ஏற்படவில்லை என்பதை



உணர்வீரானால், உம் உள்ளம் அமைதி பெறும்வரை காத்திருப்பதும், மௌனமாயிருப்பதுமே சாலச்சிறந்ததாகும்; இல்லையேல் பேச்சினால் காரியம் கெட்டுத்தான் போகும்!

* * * *

எதுவுமே அவளை உணர்ச்சிவசத்திலாழ்த்தவோ அதிர்ச்சியூட்டவோ இயலவில்லை. இயற்கையின் விபரீதங்களும் வேதகலாபனையின் மிரட்டல்களும் அவள் உள்ளத்தை உயர்த்தவே செய்தன. எல்லாச் சூழ்நிலையிலும் அமைதியும் அடக்கமும் அவளது வதனத்தில் குடி கொண்டிருந்தன. இதே அமைதிநிலையைத் தன் நவகன்னியரிடம் அவள் காண விரும்பினாள். கவலையின் அறிகுறியாக, நாங்கள் நெற்றி சுருக்குதலை அவள் அனுமதிக்கமாட்டாள்.

* * * *

எங்கள் தாயார் திருவிழாவின்போது ஜான்தார்க்காக நடித்த தெரேசாள் சகோதரி இறுதிக் கட்டத்தில் விவேகமற்ற தயாரிப்பு முறையால், தீப்பற்றியெரிந்திருக்க வேண்டியது. அவள் காலடியில் பற்றியெரியும் தீயை அணைக்கும் வேளையில் அந்த இடத்திலேயே அசையாதிருக்குமாறு எங்கள் தாயார் பணித்ததால், ஆபத்தின் நடுவிலும் தன் உயிரை இறைவனுக்குக் கையளித்துவிட்டு அமைதியுடன் நின்றதாக அவள் பின்னர் எங்களுக்குக் கூறினாள்.

* * * *

ஆபத்து ஏதாவது ஏற்படுங்கால், அதன் விளைவுகளை அவள் ஆழ்ந்த அமைதியுடன் ஒழுங்கு செய்து விடுவாள்.

நான் மடம் புகுந்த சின்னாட்களுக்குப்பின், என் கவனக்குறைவினால் சிற்றறையின் வெண்சுவரிலும் பலகைத் தரையிலும், ஒரு கூடு மசியையும் கொட்டிவிட நேர்ந்தது. அதிர்ச்சியுற்ற நான் அவளிடம் ஓடிச் சென்று "ஓடி வாருங்கள்" எனக் கூப்பிட்டேன். எனக்கு உதவி செய்ய அவள் பறந்து வரவேண்டுமென்று நான் விரும்பினேன். ஆனால் என்றும் தன்னடக்கமாயுள்ள அவளோ தன் நிதானத்தை இழக்காமலிருக்கப் பெரிதும் முயன்றாள். என் நிலை பரிதாபத்திற் குரியதாக இருந்தது உண்மையே. மேலும் என் ஆயத்தக் கன்னியரின் குல்லாவிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த பட்டு முக்காடு வேறு, இப்பரிதாபத்தைப் பெருக்கிக் காட்டிற்று. புன்னகைத்த வாறே என்னை நோக்கிய அவள் "வருத்தப்படாதீர்கள், உடனே ஒழுங்கு செய்து விடுவோம். நீர் எடுத்துக் கூறும். அப்பெரிய மைக்கறையை உம் முக்காடே எனக்குப் பெரிதாக விவரித்துக் காட்டுகிறது. ஆனால் விரைவில் அக்கறை மறைந்துவிடும்" எனச் சாந்தத்தோடு கூறினாள். தேவையான கருவிகள் அனைத்தையும் அமைதியுடன் எடுத்துக் கொண்டு அவள் பரபரப்பின்றி அக்கறையை அகற்றிச் சீர் செய்து விட்டாள். வாழ்வில் ஏற்படக்கூடிய இத்தகைய நிகழ்ச்சி களில் மனந்தளராது தடுத்து நிறுத்திய அவளது அமைதியைக் கண்டு, நான் வியப்புற்றேன், இருப்பினும் ஏதாவது ஒரு பொருளை உடைக்க நேர்ந்தால் தரித்திரத்தில் தவறி விட்டால் அவள் பெரிதும் வருந்துவாள்.

அவளது வாழ்வின் இறுதியாண்டில் அதாவது 1897 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் நாள் பந்தி விசாரிக்கும்போது, பரிமாறும் பலகையின் நுனியால் உணவுப் பொருட்கள்



கொடுத்து வாங்கும் வாயிலின் கண்ணாடியொன்றை உடைத்துவிட்டாள். நோயின் பிடியில் சிக்கி பலவீன முற்றிருந்த அவள், தன் வேதனையை விரைவில் கட்டுப்படுத்த இயலாமல் அழுவதை நான் கண்டேன். அனைவரும் உண்டு முடித்த பின்னர், கண்ணாடித் துண்டுகளைப் பொறுக்குவதில் அவளுக்கு உதவி செய்த நான் ஆறுதல் கூறினேன்.

"என் அன்புக்குரிய சகோதரர் தெயோவான் வெனார்ட் இறைவனுக்காகத் தன் குருதி சிந்தி உயிர் நீத்த இந்நினைவு நாளில் ஏதாவது ஒரு துன்பம் ஏற்று அவரது மகிமைக்காக அளிக்கவேண்டுமென இறைவனிடம் இறைஞ்சினேன். அதற்குத் தான் இத்துன்பம். ஏழ்மைக்கு எதிரான தவறு என்ற காரணத்தால், நானே இதைத் தேர்ந்து கொள்ளவில்லை. இருப்பினும் இது அறியாமல் செய்த தவறு தான். இனிய மணங்கமழும் பலியாக இதை இறைவனுக்கு அளிக்கின்றேன்".

## கடவுளின் கருவிகள்

என் அன்புமிக்க சிறிய தெரேசாள் என் வாழ்வின் முன்மாதிரிகையாய் விளங்கினதால் அவளைக் கண்டு பாவிக்கப் பேராவல் கொண்டிருந்தேன். இதை அவளிடம் பன்முறை எடுத்துக் கூறியுள்ளேன். என் அச்சத்தை அவளுக்கு வெளிப்படுத்தும் போதெல்லாம், அவள் தக்க விடையளித்து மின்னுவதையெல்லாம் பொன்னென மதிக்கும் என் ஆன்மாவிற்கு உண்மை நிலையை உணர்த்தி விடுவாள்.

"பார்த்தீர்களா, இறைவன் உம்மீது தனிப்பட்ட அன்பு கொண்டுள்ளார். ஏனெனில், உம்மை உயர்த்தி, மனிதர்களிடமிருந்து அன்பையும் மதிப்பையும் நீர் பெறுமாறு செய்கின்றார். இங்குள்ள அனைவரும் உம்மை விரும்பித் தேடுவதையும் அன்பு செய்வதையும் இல்லை என நீங்கள் மறுக்க முடியாது" - இது நான் அவளிடம் கூறுவது.

**இதற்கு அவள் பகரும் விடை:**

"இதனால் எனக்கு ஒன்றும் கிடைப்பதில்லையே. இறைவனின் எண்ணத்தில் நான் எவ்வாறு உள்ளேனோ அது தான் என் உண்மை நிலை. என்னை அவர் முன்னால் வைத்து சில நவகன்னியர்களுக்கு அவரது கருத்தை விளங்க வைப்பவளாக இருக்க அனுமதிப்பதால் என்னை மிகுதியாக அவர் அன்பு செய்கிறார் என்று கூறுகிறீர்களே; நான் இதற்கு மாறாக நினைக்கிறேன். அவர்களது சிறிய பணிப் பெண்ணாக அவர் என்னை வைத்துள்ளார். புண்ணியத்தின் புறக் கவர்ச்சியை அவர் எனக்குத் தந்துள்ளார் எனில் அது எனக்காக அன்று; உங்களுக்காகவே."

"என்னை ஒரு சிறிய பால் கிண்ணத்திற்கு இணையிட்டுக் கொள்கிறேன். பூனைக் குட்டிகள் எல்லாம் அதில் பால் பருக வருகின்றன. மிகுதியாகப் பெற்றுக் கொள்ள சில முறைகளில் அவற்றுள் போட்டியும் எழுகின்றது. ஆனால் அதோ அங்கே சின்ன இயேசு கவனமாகப் பார்த்துக் கொண்டிருக்கிறார். என்ன கூறுகிறார் தெரியுமா? "என் சின்ன கிண்ணத்தில் நீங்கள் குடிப்பதை நான் பெரிதும் விரும்புகிறேன். ஆனால் கிண்ணம் சாய்ந்து விடாமலிருக்க நான் கவனித்துக் கொள்வேன்". உண்மையில் அவர் விழிப்பாயிருக்கிறார். கிண்ணம் தரையில் கிடப்பதால் அதை உடைப்பது கடினம் தான். மடத்துத் தலைவிகளும் பிறருக்கென அருட்கொடைகளால் நிரப்பப்பட்டவர்கள்தான். ஆனால் அவர்கள் மேசை மீது இருப்பதால் ஆபத்தும் அங்கு மிகுதியாக உள்ளது. பகிமை எப்போதும் ஆபத்துக்குரியது. உங்களுக்குத் தேவையானபோதெல்லாம் தமது சிறிய கிண்ணத்தில் இயேசு பாலை ஊற்றிக் கொண்டேயிருக்கிறார். உங்களைவிட எனக்காகத் தான் ஊற்றுகிறார் என நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் பயன் பெறுவது நான் அன்று; நீங்கள்தான்"

-- "உண்மை தான்; ஆனால் தம் நம்பிக்கையை உம்மில் வைக்கிறார் என்பதற்கு இது ஓர் அடையாளமன்றோ? பிறர்க்குப் பணிபுரியும் அலுவலில் இருந்துகொண்டே மாட்சிமைக்குரிய பதவியையும் வகிக்கிறீர். இறைவனின் நம்பிக்கையைப் பெற்றவர் நீர்"

-- ஆ! நீங்கள் கூறுவது இன்னதென்று உமக்குத் தெரியவில்லை. மனித இயல்பில் கூறுமிடத்து, இறைவன் தமக்கென மட்டும் வைத்துக் கொள்பவரே மிகவும் பேறுபெற்றவராவர். எடுத்துக் காட்டாக, அவரிடம் இரு தூபக் கலசங்கள் உள்ளன. ஒன்றைத் தமக்கென வைத்துக் கொண்டு மற்றொன்றை மக்கள் முன்னிலையில் நறுமணம் எழுப்பப் பயன்படுத்துகிறார் என்று வைத்துக் கொள்வோம். இரண்டில் எது பேறு மிக்கது? அவரிடம் அழகிய கூடைகள் உள்ளன. அவற்றுள் சில கடையினுள் வைக்கப்பட்டுள்ளன. வேறு சில வீதியில் செல்வோரைக் கவரும் பொருட்டு காட்சிக்காக வெளியில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு அழகு ஊட்டும் பொருட்டு நீல, ரோஸ் வண்ண நாடாக்கள் (ribbons) கட்டி வைக்கிறார். இதனால் வெளிக் கூடைகளின் மதிப்பு தன்னிலேயே உயர்ந்து விடப்போவதில்லை. கடையின் அலமாரிக்குள் இருக்கும் கூடைகளும் இவற்றைப் போன்று அழகாய்த் தான் உள்ளன. இன்னும் இவற்றை விட அழகு மிக்கதாகவும் இருக்கலாம். ஏனெனில் வெளியில்

வைக்கப்பட்டவைகள் என்றும் புத்தம்புதியதாகவே இருப்பதற்கு அவரது அருளின் புதுமை தேவை. ஆனால் நீரோ இதற்காகத் தான் ஏங்குகிறீர்.

-- ஆ, நான் இதை இதற்காகவே விரும்பவில்லை. ஆனால் உம்மிடம் உள்ளதால் தான் விரும்புகிறேன்.

-- சரி, எனக்குத் தனிப்பட்ட அருட் கொடைகள் அருளப்பட்டிருந்தாலும், நீர் அவற்றை விரும்பக்கூடாதே. ஏனெனில் அது அற்ப பாவமாகும். *

* குறிப்பு: வெளிப்பாடுகளைப் பெற விரும்புவதனால் ஆன்மா அற்ப பாவத்தையேனும் கட்டிக் கொள்கிறது (புனித சிலுவை அருளப்பர்) இதைக்கேட்ட நான் வருத்தந் தோய்ந்த முகத்துடன் அவளுக்குப் பின்வருமாறு பதிலுரைத்தேன்:

"இவ்வாறு செய்யாமலிருப்பது எனக்குக் கடினம் தான். இது, சிறுபிள்ளைத் தனம் என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இதற்குச் சான்று யாதெனில், தனிப்பட்ட அருட் கொடைகளை நான் பெற்று, நீர் பெறாவிடில் அவற்றைப் பெற நான் விரும்பியிருக்க மாட்டேன்; ஏனெனில் இறைவன், உம்மை வழி நடத்திச் செல்லும் பாதையில், எனக்கு அத்துணை நம்பிக்கை உண்டு"

## இதற்கு அவள் கூறினாள்

"இறைவன் ஓர் ஆன்மாவைக் கருவியாகக் கொள்வதால் மட்டும் அது புனிதமெய்திவிடுவதில்லை. ஓர் ஓவியன் பலவகைத் தூரிகைகளைப் பயன்படுத்துவது போன்று தான் இதுவும். ஒரு தூரிகையை விட்டு விட்டு ஏன் மற்றொன்றைக் கையாளுகின்றான்? இதனால் தூரிகை தன் பயனில் குறைந்து விடுவதில்லை. ஒன்றைவிட மற்றொன்று சிறந்ததாகவும்



இருக்கலாம். எப்படியோ, தலைவரின் பணிக்குப் பயன் படுவதால் அது மகிமையில் உயர்ந்து விடுவதில்லை."

-- அப்படியானால் எதுதான் பயன்படுகிறது?

-- "இந்த உண்மையை ஏற்றுக்கொண்டு, செய்வதையெல்லாம் தன் சொந்தத்திறனால் ஆற்றுவதாகக் கருதாமல், எதையும் பெரிதாகக் கருதாமல், அனைத்தையும் ஆண்டவர் பால் திருப்பி விட வேண்டும்: இதுவே பயன் தரக்கூடியது"

"ஒரு சிறு தீப்பொறியைக் கொண்டு பெருந்தீயையே மூட்டி விடலாம் அல்லவா? அவ்வாறே, தமது அரசைப் பரப்ப இறைவன் தாம் விரும்பும் யாரையேனும் பயன் படுத்திக் கொள்கிறார். ஒரு சாதாரண நூல், அல்லது மறைத்தொடர்பற்ற இலௌகீக நூல் கூட, இதற்குப் பயன்படலாம். நாம் கருவிகளாகப் பயன்படும் போது இதில் என்றுமே அகந்தை கொள்ளலாகாது. இறைவனுக்கு யாருமே தேவையில்லை"

அவள் இவ்வளவு கூறியும் நான் விடவில்லை.

"உம் வழியாகத் தான் எனக்கு ஒளி வருகிறது. ஆனால் உம்மிடமோ இறைவன் நேராகப் பேசுகிறார்" என, நூறாம் முறையாக அவளிடம் சொல்லி முடித்தேன்.

-- "இது அவர்தம் தனிப்பட்ட அன்பிற்குச் சான்றாகாது. மாறாக, நான் உமக்குக் கூறியது போல் நமதாண்டவர் என்னை உமது பணிப்பெண்ணாக வைத்துள்ளார். உம் பொருட்டே பலவகையான செய்திகளை எனக்குக் கூறுகிறார். இச்சந்தர்ப்பங்களில் என் தாழ்ந்த நிலையைத் தான், நான் உணர வேண்டும். கடவுள், நூல்கள் வழியாக, பொருட்கள் வழியாக நம்மிடம் பேசுவது உண்மையே. பெரும்பாலும் பருப்பொருட்களையே அவர் பயன்படுத்திக் கொள்கிறார். இவையெல்லாம் நமக்குப் பணிபுரியவே உள்ளன.

இவ்வாறு தான், சில புனிதர்களால் நமக்கு வருவதும். அவர்களுடைய சொந்த மாட்சிமையை விட நமது நலனை முன்னிட்டே, கடவுள் அவர்களை உயர்த்துகிறார். அவர்களும் நமது பணியாளர்களே. ஆம், உண்மையில், "எல்லாம் நமக்குச் சொந்தம், எல்லாம் நமக்காகவே உள்ளன" (புனித சிலுவை அருளப்பர்)

# புனிதமும் மாட்சிமையும்

"சில புனிதர்கள், நம் அண்மையில் உள்ளதால் அவர்களை நாம் அறிந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் தான் மிக உயர்ந்தவர்கள் என, எதுவும் எண்பிப்பதில்லையே. விண்மீன்களை அவற்றின் தொலைவு கொண்டு கணக்கிடுகின்றோம். ஆனால் அவற்றின் உண்மையான அழகை இறைவன் மட்டுமே அறிவார். நமக்கு மிகச் சிறியதாய்த் தோன்றுவதும் இன்னும் கண்ணுக்கே புலப்படாதிருப்பதுமான சில விண்மீன்கள் "பெரியவை" என்று நாம் அழைக்கும் விண்மீன்களைவிட இணையற்ற வகையில் அழகு மிக்கவையாய் இருக்கலாம்."

"இவ்வுலகில், நாம் அறியமாட்டோம். ஆன்மாக்கள் உயர உயர தம்மைச் சூழ்ந்துள்ளோரின் மதிப்பை இழந்து விடுகின்றன. எவ்வாறு விண்ணில் உயர்ந்து கொண்டே செல்லும் புகைக் கூண்டு உருவில் குறைவதாகவே தோன்றுகின்றதோ, அவ்வாறே உயரிய புனிதத்தனமும் சிலவேளைகளில் வெறுப்பிற்கு உள்ளாகலாம். இதை அறிந்துள்ள நாம் ஒருவருக்கொருவர் தரும் மகிமையைத் தேடிக் கொள்வோமா?"



"புனிதப் பட்டம் பெற்ற புனிதர்கள் மிக உயர்ந்தவர்கள் என்று எதுவும் நமக்கு உறுதியாகக் கூறுவதில்லை. அவர்களுக்காக வன்று, தமது மாட்சிமைக்காகவும், நமது நலனுக்காகவும் தான் கடவுள் அவர்களை எடுப்பாக வைக்கிறார்." "ஊழியூழிக்காலம் புனிதர்கள் தமக்குள் பரிமாறிக் கொள்ளும் அன்பு, அவர்களது மேன்மையின், மாட்சிமையின் அளவைச் சார்ந்ததன்று. ஆனால் அவர்களுக்கிடையே தனிப்பரிவு (அன்பு) இருக்கும். மிக உயரிய புனிதர்களைவிட, மிகச் சிறிய ஆன்மாக்களை நாம் மிகுதியாக அன்பு செய்வோம் என நான் ஒருமுறை வாசித்தேன். இக்கருத்து என்னை மிகவும் கவர்ந்தது. புனிதப் பட்டம் பெற்ற புனிதர்கள் மிகுதியாக அன்பு செய்யப்படுகின்றனர் என்று நினைக்கிறீர்களா? ஆ, இவ்வுலகில் தன்னலமின்றி அன்பு செய்கின்றவர் யார்? "தமக்காகவே அன்பு செய்யப்படும் புனிதரும் உளரோ? ஒரு புனிதரைப் போற்றுகின்றனர்; அவர்தம் வரலாற்றை எழுத்தில் வடிக்கின்றனர்; ஆடம்பர மிகு விழா நடத்துகின்றனர். ஆலயத்தில் தான் என்ன சிறப்பு! தொங்கவிடும் திரைகளைச் சுற்றி மக்கள் ஆர்ப்பரிக்கின்றனர்; ஒழுங்காக அமையாவிடில் ஆத்திரமடைகின்றனர்; தம் விருப்பத்திற்கு மாறாக எதுவுமே நிகழாவிடில் அக்களிப்புக் கொள்கின்றனர்; சத்தமும் கூச்சலும் ஒரே ஆர்ப்பாட்டம். பிறகு கின்னரம் (ஆர்கன்), மறையுரை இவற்றைப்பற்றிய பேச்சு எழுகிறது. ஆனால் புனிதரைப் பற்றியோ? ஆ, இத்தகைய அரைகுறையான மகிமை பெறுவதை விட, மறைந்திருக்கவே விரும்பு கிறேன். எனக்குத் தகுதியான புகழைக் கடவுளிடமிருந்து மட்டுமே எதிர்பார்க்கிறேன்."

"புனிதர்களைப் புனிதர்களாகப் பிறர் பாவிப்பதால், அவர்கள் புனிதர்களாகி விடுவதில்லை. அவர்களது வாழ்க்கைச் சரிதையை எழுதி விடுவதால் அவர்கள்

உயர்ந்தவர்களாவதில்லை. ஒரு நூலினால் ஏற்படும் நன்மைக்கு, அறியப்படாத வேறு ஒரு புனிதர் காரணமாயிருக்கலாம் என்பதை யார் அறிவார்? ஒரு வேளை இந்நூலை எழுத அவர் தூண்டியிருக்கலாம்; வழி காட்டியிருக்கலாம்; அல்லது அந்நூலைச் சுவைத்து வாசிக்க ஆன்மாக்களை ஆயத்தம் செய்திருக்கலாம். ஆழ்ந்து சிந்திக்கும்போது தான் நாம் இவற்றை அறிந்து கொள்வோம். இன்று நான் இந்நிலையில் இருப்பதற்கு, ஒரு வேளை சிறிய ஆன்மா ஒன்றின் ஆவலே காரணமாயிருக்கலாம் என நான் சில முறைகளில் எண்ணுவதுண்டு."

"இதனால், இறைவனுக்கு மட்டுமே மகிமை. அவருக்கு மாட்சிமை ஏற்பட வேண்டும். இஃது ஒன்றே நாம் ஆசிக்க வேண்டியது. நம்மைப் போலவே பிறர் மூலமாயும் இஃது ஏற்படும் போது நாம் மகிழ்ச்சி கொள்ளல் வேண்டும். நம் எண்ணத்திற்கேற்ற வகையில், புனிதர்களை எடை போடுவது, எத்தகைய மனமயக்கம்! எத்தனை, புனித கர்மேல் கன்னியர்களின் வாழ்க்கை வரலாறு நன் முறையில் எழுதப்படாததால் அவர்கள் பிறரின் நன்மதிப்பைப் பெற வாய்ப்பில்லாமற் போய் விட்டது! மாறாக, சாதாரணப் புண்ணிய வாழ்வு நடத்தினோர் எத்தனைப் பேர் தம் தலைவியின் எழுத்துத் திறனால் கவர்ச்சிமிக்கவராகக் காட்சியளித்தனர்!"

"இவ்வாறு, ஒரு மயிரிழையில் கிடைக்கும் மகிமையை உண்மையில் என்னால் விரும்ப முடியாது. இது குலுக்குச் சீட்டு. புனிதர்களைப் பற்றி நாம் எழுதினதற்குத் தம் கருத்தைத் தெரிவிக்க, அவர்கள் நம்மிடம் வருவார்களானால், நமக்கு எத்துணை வியப்பு காத்திருக்கும். அவர்களைப் பற்றி நாம் தீட்டிய வருணனையில் தம்மைக் கண்டுகொள்ளவில்லை எனப் பெரும்பாலும் அவர்கள் குறை



கூறுவார்கள் என்பது திண்ணம்... இவ்வுலகில் நம்மை முற்றிலும் அறிந்தவர் யார்? நம்மை முழுவதும் அன்பு செய்கிறவர் தான் யார்? நானோ, விண்ணில் மட்டுமே அன்பு செய்யப்பட விழைகிறேன். அங்கு என்னை எல்லாரும், ஏன் இவ்வுலகில் குறைவாக அன்பு செய்தவர்கள் கூட அன்பு செய்வார்கள் என்ற எண்ணம் என்னை மகிழ்வு கொள்ளச் செய்கின்றது. இவ்வுலகில் புனிதர்களுக்குச் செலுத்தப்படும் அன்பு அவர்கட்காக அன்று; நமக்காகத் தான். ஏனெனில் நாம் தான் அதன் நன்மையை, பயனைப் பெற்றுக் கொள்கிறோம்."

"இவ்வுலகில் எல்லாமே போற்றற்குரியது. புனிதர்களின் சரிதையை வாசிக்கையில், உடல் சோதனையையே அறியாதிருந்ததற்காக ஒரு புனிதரைப் போற்றுகிறோம். ஆனால் இதே சோதனைகளை வென்றதற்காக மற்றொரு புனிதரை வாழ்த்துகிறோம். மாட்சிமை எங்கே தான் உள்ளது? எது தான் உண்மை? ஏனெனில், எப்பக்கம் திரும்பினாலும் எல்லாம் புகழ்ச்சிக் குரியதாகவே உள்ளது!.."

"மானிட மகிமை ஒன்றுமேயில்லை. ஆனால் கலைஞர்களோ, இதையடைய தமக்குள் போட்டியிடுகின்றனர். இவர்களுக்கு இருப்பவர்களெல்லாம் ஒரு சில ரசிகர்களே. மற்றவர்கள் இவர்களது பணியை அறியாததால் இதைக் கவனிப்பதேயில்லை. இருப்பினும், இக்கலைஞர்கள் தங்கள் மதியீனத்தில் இச்சிறு எண்ணிக்கையில் மன நிறைவு கொள்ளுகின்றனர். தூய்மைக்கு அளிக்கப்படும் புறமாட்சிமையும் இது போன்றதுதான். புனிதரைக் கண்டு வியந்து அன்பு செய்யும், அவரது சரிதையை வாசிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை என்றும் மிகச் சிறியதாகவே இருக்கும்."

"அனைத்தும் பொறாமையின் விளைவால் தோன்றுபவையே. குழந்தைப் பருவத்திலேயே இதன் வித்தைக் கண்டு

கொள்ளலாம். ஒரே செவிலித்தாயைக் கொண்டிருந்த இரு குழந்தைகளின் கதையை, புனித அகுஸ்தினார் சித்தரிக்கிறார்; தன் சிறிய சகோதரன், பால் குடிக்கும் முறை வந்ததும், மற்றவன் ஆத்திரத்தில் அலறி தரையில் கிடந்து புரளுவான். இருப்பினும், அவனால் ஒரு சொட்டு பால் முதலாய் மிகுதியாக அருந்த முடியாது.

"நான் மகிமையை என்றுமே தேடியதில்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். வெறுக்கப்படுதலே என் உள்ளத்தைக் கவர்ந்தது; ஆனால் அதிலும் மகிமையடங்கியிருப்பதைக் கண்ட நான் மறக்கப்படுதலையே ஆவலோடு தேடினேன்" இருப்பினும், என்னைப் போன்று, அழகுள்ளதை, மேலானதை, நிறைவானதை ஆவலுடன் விரும்பியதாகவும், பிறரைப் புகழும் போது அவர்களைவிடக் குறைவுள்ளவர்களாகத் தன்னைக் கருதுவதால் ஏற்படும் ஒருவித ஏக்கத்தை, வருத்தத்தைத் தானும் உணர்ந்ததாகவும் அவள் என்னிடம் கூறினாள்.

இந்த உணர்வை எதிர்த்து அவள் எவ்வாறு போராடினாள் என்று வினவிய எனக்கு அவள் தாழ்மையுடன் கூறிய பதில் இதுவே:

"இதை நான் சகித்துக் கொண்டேன்; என் தாழ்நிலையை, அன்பு செய்வதில் கருத்தூன்றினேன்... அப்போது அது எனக்கு இனிமையாக மாறி விட்டது".

## சாவின் மீது ஆவல்

தன் வாழ்வு குறுகியது என்ற உள்ளுணர்வு என்றும் தெரேசாள் சகோதரிக்கு இருந்து வந்தது. அழியக்கூடிய



அனைத்தின் மீதும் அவளுக்கு வெறுப்பை மூட்டியது இதுவே.

இறையன்பு தன்னுள் ஒரே நிலையில் உள்ளதா என்று அவள் அறிய விரும்பும் போது, சாவு தனக்கு அத்துணை கவர்ச்சியைத் தருகிறதா என்று தனக்குள் கேட்டுக் கொள்வாள். வளமிக்க நாட்கள், ஆழ்ந்த மகிழ்ச்சி போன்றவைகள் சாவின் மீதுள்ள ஆவலைக் குறைத்து விடுவதால், இவை அவளுக்குப் பாரமாகவே இருந்தன.

"சாவைக் கண்டு நான் ஏன் அஞ்ச வேண்டும்? என்றும் நான் கடவுளுக்காகத் தானே உழைத்தேன்" என்று அவள் என்னிடம் பகர்ந்தாள்.

"நீர் இந்தத் திருநாளில் ஒரு வேளை இறக்கக் கூடும்"

என்று அவளிடம் கூறியதற்கு, அவள் அளித்த விடை:

"ஒரு திருநாள் பார்த்து நான் இறக்க வேண்டிய தேவையில்லை. நான் இறக்கும் நாளே எனக்கு திருநாள் அனைத்திலும் மிகச்சிறந்த பெருநாளாக இருக்கும்"

## விண்ணகக் கைம்மாறு

நாம் ஒருவர்மீது ஒருவர் பொறாமை கொள்ளாதவாறு இறைவன் யாவற்றையும் ஒழுங்கு செய்வார் எனப் பன்முறை, அவள் என்னிடம் கூறினது விண்ணகத்தின் கலப்பற்ற பேரின்பத்தில் நான் உறுதி கொள்ளும் பொருட்டே.

இந்த உண்மையை எமக்கு விளக்கும் பொருட்டு தன்னருகில் நடைபெறும் மிகச் சிறிய நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தினாள்.

"பொலிவிழந்த பூக்களை அழகுபடுத்தி, மிகச் சிறியதையும் எடுப்பாக வைத்து நான் செயற்கைப் பூக்களைச் சீர் செய்து கொண்டிருந்தேன். இறுதியில், நான் உருவாக்கின மலர்க்கொத்தில், என்னிடம் முதலில் தந்த பூக்களைக் கண்டு கொள்ள முடியவில்லை. இறைவன் செயலுக்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டு என்று அவள் விளக்கினாள். நம்மிடமுள்ள குறைகள் அனைத்தையும் அகற்றி இவ்வாறு தான் அவர் நம்மை எடுப்பாக வைப்பார். மிகப் பெரிய புனிதர், மிகச் சிறிய புனிதரால் எடுப்பாகக் காணப்படுவார். மிகச் சிறிய புனிதரும் பெரிய புனிதரின் மகிமை ஒளியால் பெரியவராகத் தோற்றமளிப்பார்.

நாள் முழுவதும் உழைத்தவர்களைப் போன்றே ஊதியம் பெற்ற இறுதி நேர வேலையாட்களின் உவமை அவளைப் பெரிதும் கவர்ந்தது."

"பார்த்தீர்களா, நம்மாலான முயற்சிகளைச் செய்து, இறைவனது இரக்கத்தால் அனைத்தையும் பெறுவதாக நம்பி, அவரில் நம்பிக்கை கொள்வோமானால், பெரும் புனிதர்கள் பெறும் அளவாகவே, நாமும் பெற்றுக் கொள்வோம்" என்று கூறுவாள்.

என் தோழியருள் ஒருத்தி எனக்குத் தந்த பொம்மை ஒன்றை நான், தாயார் திருவிழாவிற்கு அவர்களுக்குத் தந்து விட்டேன். மற்ற சகோதரிகள் கொண்டு வந்த சிறந்த பொருட்களைவிட என் எளிய அன்பளிப்பு அவர்களுக்கு மிக்க மகிழ்ச்சியை அளித்தது. இது பற்றி என் அன்புச் சிறிய சகோதரி கூறியதாவது:

"புனிதர்களும் இவ்வாறு தான் நம்மிடம் நடந்து கொள்வர். அவர்கள் நம் மூத்த சகோதரர்கள். நமக்கு



அவர்கள் வழங்கும் அன்பளிப்புக்களால் நாம் செல்வந்தர் களாவோம்.

விலையுயர்ந்த பொருட்களைத் தயாரித்த சகோதரிகள், வியத்தகு நூல்களையும் செயல்களையும் தீட்டிச் சென்ற புனிதர்களை எனக்கு நினைவூட்டுகின்றனர். இருப்பினும் ‥ நு சிறிய பொம்மையே கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது.
யும் உமக்கு அளிக்கப்பட்ட சிறு விளையாட்டுக் கருவி
உம்முடையது ஒன்றுமில்லை"

## புனிதையின் இறுதி நோய்

இறையடியாள் இவ்வுலகில் கழித்த இறுதியாண்டுகள், அவளது வாழ்வின் எதிரொலியாக விளங்கின. இறை வனுக்குத் தன்னைக் கையளித்தற்கும், பொறுமைக்கும், தாழ்ச்சிக்கும் எதிராக அவள் ஒரு கணமும் நடந்து கொண்டதில்லை. அவளது வதனத்தில் சொல்லரிய அமைதி குடிகொண்டிருந்தது. குறிக்கோள் ஒன்றை நாடிநின்ற அவளது ஆசைகள் அனைத்தும் நிறைவேறும் இறுதி நிலையை அவளது ஆன்மா அடைந்து விட்டது போன்று தோன்றியது. நமதாண்டவர் இறுதி மூச்சை விடுமுன் திருவாய் மலர்ந்தருளியது போல், "எல்லாம் நல்லதே, எல்லாம் முடிந்துவிட்டது, அன்பு மட்டுமே முக்கியம்" என்று இறப்பதற்கு முன்னாள் அவள் ஆழ்ந்த தொனியில் கூறினாள்.

இறுதி மாதங்களில் அவள் அனுபவித்த உடல் வேதனைகள் மிகக் கொடியவை. ஏனெனில், நெஞ்சு நோயுடன் குடற்காசமும் இணைந்து விட்டது. இதனால் உட்பாகம் அழுகத் தொடங்கி விட்டது. மிகவும் இளைத் திருந்ததால் புண்கள் ஏற்பட்டன. இவற்றைக் குணப்படுத்த நாங்கள் இயலாதவர்களாய் இருந்தோம்.

நோயாளிகளைக் கவனிக்கும் சகோதரிக்கு நான் துணையாக இருந்தால் அவளைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. நோயுற்றிருந்த சமயம், அவள் அருகிலேயே நான் இருந்தேன். அவளது அறைக்கு அண்மையிலுள்ள சிற்றறையில் படுத்துக் கொள்வேன். செபத்திற்கும் மற்ற நோயாளிகளைக் கவனிப் பதற்கும் மட்டுமே அவளை விட்டுப் பிரிவேன். அந் நேரங்களில், ஆக்னேஸ் தாயார் எனக்குப் பதிலாக அவள் அருகிலிருந்து, அவள் கூறுவது அனைத்தையும் துண்டுத் தாள்களில் குறித்து வைத்தார்கள். இதனால் தான் அன்று நடந்த நிகழ்ச்சிகள், முதல் நாள் போலவே இன்றும் தெளிவாக உள்ளன.

## உடல் வேதனையில் மனவலிமை

1896 ஆம் ஆண்டு பெரிய வெள்ளியன்று முதன் முறையாக இரத்த வாந்தி எடுத்த பின் தபக்காலத்தை அதன் கடுமையிலேயே முடிக்க அனுமதி கிடைத்தது பற்றி தெரேசாள் சகோதரி மிக மகிழ்வெய்தினாள். அவள் எல்லாப் பொது முயற்சிகளிலும் பங்கெடுப்பதைக் கண்ட நான் அவளுக்கு ஏற்பட்டிருந்த நோயைப் பற்றிச் சிறிதும் கவலைகொள்ளவில்லை. அந்த ஆண்டில் உண்ணா நோன் பினால் அவள் மிகவும் வருந்தினாள் என்பதை நான் அறிந் தேன். ஆனால், வழக்கம் போல் அவள் முறையிடவில்லை. நாடோறும் செப நேரத்தில் தான் அவளுக்குக் காய்ச்சல் கடுமையாக இருந்தது. இருப்பினும், செபம் ஓதுவதில் அவளுக்கு ஏற்பட்ட மாபெரும் களைப்பைப் போக்க, அவள் எந்த ஆறுதலும் தேடிக்கொள்ளவில்லை. துணி துவைப்பதும் உலர வைப்பதும் போன்ற சில வேலைகளைச் செய்யும் போது அவள் மிகுதியாக வேதனையுற்றதை நான் அறியா மலிருக்க வேண்டுமென்பதில் அவள் கவனமாயிருந்தாள்.



வேதனை • தரும் சிகிச்சை முறையைச் சகித்துக் கொள் வதில் அவளுக்குத் தான் எத்துணை மனவலிமை.

அவளது முதுகில் 500 முறை சுட்டதை நானே எண்ணி னேன். மருத்துவர் சாதாரண குறிப்புகளைப் பற்றித் தாயாரிடம் பேசிக்கொண்டே சுடும்போது, வானதூதர் போன்ற அவள் மேசை மீது சாய்ந்து நின்று கொண்டிருந் தாள். அவ்வமயம் மறைசாட்சிகளை நினைத்துக் கொண்ட தாகவும், தன் வேதனைகளை ஆன்மாக்களுக்கு ஒப்புக் கொடுத்ததாகவும் அவள் பின்னர் என்னிடம் கூறினாள். சிகிச்சை முடிந்தபின். அனுதாபச் சொல் ஒன்றையும் எதிர்பாராது நேரே தன் சிற்றறைக்குச் சென்று, எளிய படுக்கையின் ஓரத்தில் நடுங்கிக் கொண்டே அமர்ந்தாள். அங்குத் தான், சிகிச்சையினால் ஏற்பட்ட வேதனையைத் தனியே சகித்துக் கொண்டிருந்தாள்.

பெரிய நோயாளியாக அவள் இன்னும் கருதப் படாமையால், அன்று மாலை அவளுக்கு பஞ்சு மெத்தை முதலாய் கொடுக்கப்படவில்லை. இதனால் என் போர் வையை நான்காக மடித்து அவளது படுக்கைக்குக் கீழ் புகுத்தினேன். பாவம், என் சிறிய சகோதரி அதை நன்றி யோடு ஏற்றுக் கொண்டாள். இருப்பினும், நோயாளி களுக்கு சிகிச்சையளிக்கும் பழைய முறையைத் தாக்கி, ஒரு குறை சொல் முதலாய் அவள் நாவில் எழவில்லை.

கொடிய வேதனைகளின் நடுவிலும் அவளிடம் ஆழ்ந்த அமைதியும் மகிழ்ச்சியும் குடிகொண்டிருந்தன என்பது உண்மையே. பிறர் நினைக்கும் அளவிற்கு அவள் அத்துணை துன்புறவில்லை என்று நினைத்து உள்ளத்தில் நான் வியப் படைந்தேன். அவள் வேதனைப்படும் சமயத்தில், அவளைக் காண விரும்பினேன். சிறிது நேரங்கழித்து அவள் வான

தூதருக்குரிய புன்னகை புரிவதைக் கண்ட நான் அதன் காரணத்தை வினவினேன். அவள் கூறினாள்:

"பக்கவாட்டத்தில் அதிக வேதனை ஏற்பட்டுள்ளது. துன்பத்திற்கு எப்போதும் இத்தகைய நல்வரவேற்பு அளிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டேன்.

## வீரத்தனமான மகிழ்ச்சி

எங்கள் புனித சிறிய சகோதரி, வாழ்வின் இறுதிவரை குழந்தையைப் போன்று பிறரைக் கவரும் வகையில் நடந்துகொண்டாள். இதனால் இவளோடு பழகுவது மிகவும் இனிமையாக இருந்தது. அனைவரும் அவளைக் காணவும் அவள் கூறுவதைக் கேட்கவும் விரும்பினர்.

அவளது அன்பு ததும்பும் மகிழ்ச்சியும், வேதனையோடு வளருவதாகத் தோன்றியது. இவ்வாறு அவள் தனது தனிப்பட்ட மனவலிமையையும், எங்கள் மீதுள்ள இனிமை மிக்க பிறரன்பையும் வெளிப்படுத்தினாள்.

எங்கள் குழந்தைப் பருவத்தை நினைவுபடுத்தும் சில குட்டிப் பெயர்களைப் பயன்படுத்தி, என்னை மகிழ்விப்பதற்காகவும் சில சமயங்களில் எனக்கு அறிவுரை வழங்குவதற்காகவும் சிறு வேடிக்கைகள் செய்வாள்.

இதனால்தான், வாழ்வின் வேதனைமிக்க நேரங்களில் அவளை, இத்துணை எளியவளாய்க் காட்டும் இச்சொற்களை, இங்கு எடுத்துக் கூற நான் தயங்கவில்லை.

**குழந்தைப் பருவக் கதை:**

எம் சிறுவயதில் எம்மை மிகவும் மகிழ்வித்த சிறு கதைகளில் ஒன்று மிஸ் லில்லி என்னும் சிறுமியும் மிஸ்டர்



தொத்தோ (Toto) என்னும் அவளது தம்பியும் வரும் கதை. நான் மூத்தவளானதால் எனக்கு லில்லி பாகத்தை அளித்துவிட்டு, தொத்தோ பாகத்தைத் தெரேசாள் தனக்கு எடுத்துக் கொண்டாள். பலமுறைகளில், எனக்கு உற்சாகமூட்ட, தனித்து இருக்கும்போது இதைப் பற்றிக் குறிப்பிடுவாள்.

களைத்திருந்த போது, காலை மணி கேட்காமல் போய்விடுமோ என்றஞ்சிய அவள் என்னிடம் எழுப்புமாறு கேட்டுக் கொண்டு பின்வருமாறு கூறினாள்:

"மிஸ்டர் தொத்தோவுக்கு மணி சத்தம் கேட்டதா என்று நாளைக் காலையில் வந்து பார்க்கிறீர்களா?"

அல்லது

"பாவம், எல்லாராலும் அவமானப்படுத்தப்பட்டும், ஆனால் இயேசுவாலும் மிஸ்டர் தொத்தொவாலும் மட்டும் அன்பு செய்யப்படும் மிஸ் லில்லி, நாளைக் காலையில் மிஸ்டர் ToTo வை எழுப்ப மறக்காதீர்கள்"

* (குறிப்பு: புனித தெரேசாள் கையாண்ட வேறு சில சொற்கள் நம் தமிழாக்கத்திற்கு ஏற்றதாக இல்லாததால அவற்றைக் கூறாமல் விட்டு விடுகிறோம்)

## படத்தைக்குறித்து :

அனைத்திலும் என் சுயமனதை அகற்ற அவள் வழிவகைகளைச் தேடினாள். எங்கள் இருவரையும், ஒரு படத்தில் காணும் இரு குழந்தைகளுக்கு ஒப்பிட்டுக் காட்டுவாள். காவல்தூதர் விழிப்புடன் வழி நடத்த, இரு குழந்தைகளும் கவலையின்றி ஒரு பாதாளத்தின் ஓரத்தில்

சென்று கொண்டிருக்கின்றனர். சிறுவன் சாதாரண உடையணிந்து தான் பிடித்திருக்கும் தன் சிறிய சகோதரியின் கரத்தைத் தவிர வேறு எத்தகையச் தடையுமின்றிச் செல்கிறான். ஆனால் சிறுமியோ, பெரிய மலர்க் கொத்து ஒன்றைச் சுமந்துகொண்டு, இன்னும் கைக்கெட்டிய பூக்கள் அனைத்தையும் பறிக்கத் தேடுகிறாள்.

இதுபற்றி தெரேசாள் சகோதரி பின்வரும் கதையை எனக்குக் கூறினாள்.

ஒரு முறை, அநியாயம் விளைவிக்கும் திரண்ட செல்வத்தையுடைய ஒரு மிஸ் இருந்தாள். அவள் செல்வத்தை மிகவும் மதித்து வந்தாள். அவளுக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவனிடம் ஒன்றுமே இல்லாதிருந்தும் வளமாக வாழ்ந்து வந்தான். நோய்வாய்ப்பட்ட இச்சிறுவன் தன் சகோதரியிடம், "மிஸ், உமக்கு அச்சத்தையே மூட்டும் உம் செல்வங்கள் அனைத்தையும், நீர் விரும்பினால், தீயில் எறிந்து விடலாம். உம் 'மிஸ்' பட்டத்தையும் உதறிவிட்டு என் பணிப்பெண்ணாக மாறி விடும். நாளையைப் பற்றிக் கவலை கொள்ளாது, என்னைப் போன்று ஏழையாக நீர் வாழ்ந்தால், நான் விரைவில் செல்ல வேண்டிய மகிழ்ச்சி மிக்க நாட்டிற்குப் போனதும் உம்மையும் அழைத்துச் செல்லத் திரும்பி வருவேன்." எனறு கூறினான். தன் தம்பி கூறுவது நியாயம் தான் என்று உணர்ந்து கொண்ட 'மிஸ்'ஸும் அவனைப் போன்று ஏழையானாள்; அவனது பணிப் பெண்ணாக மாறினாள். அழியக்கூடிய செல்வத்தை அவள் தீயிலிட்டு எரித்துவிட்ட நாள் தொடங்கி அவள் என்றுமே அதை நினைத்து வருந்தினது கிடையாது.

அவளது தம்பியும் தான் கொடுத்த வாக்கை நிறைவேற்றினான். இறைவன் அரசராகவும் கன்னித் தாய்



அரசியாகவும் ஆட்சி புரியும் மகிழ்ச்சி மிகு நாட்டிற்குச் சென்றவுடனேயே, அவளை அழைத்துச் செல்ல அங்கிருந்து வந்தான். இருவரும் அங்கு என்றென்றைக்கும் இறைவனின் மடியில் வாழப் போகிறார்கள். அவர்கள் தேர்ந்து கொண்ட இடம் இதுவே.

## பற்றின்மையைப் போதிக்கும் சாவு :

சாவின் நினைவு எம் அன்பு மிகு சிறிய சகோதரிக்கு அச்சத்தைத் தரவில்லை. மாறாக, பயனுள்ள பாடங்களைப் பெற்றுக்கொள்ள அவளுக்கு அரிய வாய்ப்பாக விளங்கியது. அவற்றால் நாங்களும் பயனடையச் செய்தாள். ஒரு நாள் இதுபற்றி, என்னிடம் கூறினாள்: "நான் இறந்துவிட்டால், பிணமாகிவிட்டால், மௌனம் காப்பேன். எந்த அறிவுரையும் கூறமாட்டேன். என்னை இடமோ வலமோ வைத்தாலும் நான் உதவி ஒன்றும் புரியமாட்டேன். இப்பக்கத்தில் அவள் நன்றாகு இருக்கிறாள் எனக் கூறுவர். என் அண்மையில் தீ வைத்தாலுங் கூட நான் ஒன்றும் கூறப் போவதில்லை. நம்மைக் கலங்கச் செய்யும் சிறிய செயல்கள் பல வற்றிலிருந்து விடுபடவும், நாம் விட்டு விட வேண்டிய அனைத்தையும் துறக்கவும் இந் நினைவு நமக்குத் துணை புரிகின்றது

## சாவிற்கு அமைதி கலந்த மகிழ்ச்சியான வரவேற்பு:

தெரேசாள் சகோதரி சாவை எண்ணி அகமகிழ்ந்தாள். மறைவில் அவளுக்குத் தெரியாமல் செய்ய விரும்பின மரண ஏற்பாடுகளை அவள் இன்பத்தோடு கவனித்தாள்.

இவ்வாறு, மரணப் படுக்கையை அலங்கரிக்கக் கொண்டு வந்த செயற்கை லீலி மலர்கள் அடங்கிய மரப்பெட்டியைக் காண அவள் ஆவல் கொண்டாள். "இது எனக்குத் தான்" என மகிழ்ச்சி பொங்க கூறினாள். அவளால் நம்பவே முடியாத அளவிற்கு அவளது மகிழ்ச்சி, அத்துணை பெரியதாக இருந்தது.

இறுதி நாட்களில் ஒரு மாலை அவள் இரவைக் கடப்பாளோ என்று அஞ்சியதால், அடுத்த அறையில் மந்திரித்த தேன்வத்தியும், தீர்த்தக்கலசமும் குப்பியும் ஆயத்தம் செய்து வைக்கப்பட்டன. ஐயங்கொண்ட தெரேசாள், அப்பொருட்களைத் தான் காணக் கூடிய முறையில் வைக்குமாறு கேட்டுக்கொண்டாள். மனநிறைவோடு அடிக்கடி அவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தவள் அன்பாக எம்மிடம் கூறினாள்:

"பார்த்தீர்களா, 'கள்வர்' வந்து என்னைக் கவர்ந்து செல்லும்போது, இந்த வத்தியை என் கையில் பிடிக்கக் கொடுக்கவேண்டும்; ஆனால் அந்த வத்தித் தாங்கியைக் கொடுக்கக் கடாது. அது மிக விகாரமாக இருக்கிறது".

தன் சாவிற்குப்பின் நிகழப் போவதை அவள் எமக்கு எடுத்துரைத்தாள். தன் அடக்கச் சடங்குகளின் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மகிழ்ச்சியோடு வருணித்தாள். அழ விரும்பிய எம்மைச் சிரிக்க வைக்கும் முறையில், அதை விவரித்தாள். நாங்கள் அவளுக்கு உற்சாகமூட்டவில்லை; ஆனால் அவள் தான் எமக்கு உற்சாகமூட்டினாள்.

## கல்லறையைப் பற்றிக் கவலையில்லை:

வீண் கவலைகளை அவள் பொருட்படுத்தவில்லை. அவள் இறப்பதற்கு முன், லிசியே பொது கல்லறைத்



தோட்டத்தில் எம் இறந்த சகோதரிகளுக்குப் புதிய இடம் ஒன்று வாங்கப் போவதுபற்றி அவள் முன்னிலையில் வாதம் ஏற்பட்டது. அப்போது அவள் வேடிக்கையாக என்னிடம் கூறினாள்:

"என் இடத்தைப்பற்றி எனக்குக் கவலையில்லை. எங்கு இருந்தால் தான் என்ன? எத்தனையோ மறைபோதகர்கள் மனிதரைத் தின்பவரின் வயிற்றில் உள்ளனர். கொடிய விலங்குகளின் உடலில் தானே பல மறைசாட்சிகளின் கல்லறைகள் அமைந்துள்ளன"?

# தெரேசாள் தன் இறுதி நாட்களில் என்னுடன் நிகழ்த்திய உரையாடல்களின் ஒரு சில பகுதிகள்.

மே திங்கள்:

தன் வாழ்வின் இறுதி நாட்களில், குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி, ஒரு முறை, நள்ளிரவுப் புகழ் மாலையின் வாசகமொன்றை எனக்குச் சுட்டிக்காட்டி கண்களில் நீர் வழிய என்னிடம் கூறினாள்: "புனித அருளப்பர் எழுதியுள்ளதைப் பார்த்தீர்களா?" என் அன்புக் குழந்தைகளே, நீங்கள் பாவம் செய்யாதிருக்க வேண்டுமென்றே இதை உங்களுக்கு எழுதுகிறேன். ஆனால் ஒருவன் பாவஞ்செய்ய நேர்ந்தாலும், பரம தந்தையிடம் பரிந்து பேசுபவர் ஒருவர் நமக்கு இருக்கிறார். அவரே இயேசு கிறிஸ்து" (1 அரு 2:1).

ஜுலை 12 :

தன் பாவங்களுக்காகக் கழுவாய் செய்யும் பொருட்டு அவள் இறக்க ஒரு மணி நேரத்திற்கு முன் அச்சம் அவளுக்கு ஏற்படலாம் என ஒரு சகோதரி அவளிடம் கூறினாள். தெரேசாளோ

"என்ன, என் பாவங்களுக்கு ஈடுசெய்ய மரணத்தைப் பற்றி அச்சமா? சாக்கடை நீருக்குடைய சக்தி கூட அதற்குக் கிடையாதே. ஆனால் எனக்கு அச்சம் ஏற்படுமானால், அவற்றைப் பாவிகளுக்காக இறைவனுக்கு ஒப்புக் கொடுப்பேன். இது பிறரன்புச் செயலாயிருப்பதால் இந்த வேதனை





பிறர்க்கு நீரை விடச்சக்தி வாய்ந்ததாக மாறும். என்னைத் தூய்மைபடுத்துவது ஒன்றே ஒன்று தான். அது தான் தெய்வீக அன்புத் தீயாகும்". எனக் கூறினாள்.

**ஜுலை 18:**

விண்ணகப் பேரின்பத்தைப் பற்றிய பகுதி ஒன்றை, நான் நோயுற்றிருந்த தெரேசாளுக்கு வாசித்துக் கொண்டிருந்தேன். அவள் என் வாசகத்தை மறித்து "இதுவன்று என்னைக் கவர்வது" என்றாள்.

- "பின் எதுவாம்?" என்று நான் கேட்டேன்.

- "ஆ, என்னை கவர்வது அன்பே. ஆம், அன்பு செய்தல், அன்பைப் பெறுதல், அன்பருக்கு அன்பைப் பெற்றுத்தர உலகிற்குத் திரும்பி வருதல்"

**ஜுலை - ஆகஸ்ட்**

"மற்றவர் தவறாகக் கூறும்போது அல்லது உண்மை அறியாத சகோதரி ஒருவர் அதில் நமக்கு அறிவுரை கூற விரும்பும்போது, அவர்கள் நல்ல கருத்தோடு தான் இவ்வாறு செய்கிறார்கள் என்று எண்ணிக் கொள்ள வேண்டும். மிகுந்த சாந்தத்தோடு அவர்களுக்குப் பதில் கூறி, உண்மையைப் பாதிக்காத அளவில் இயன்ற வரை, அவர்கள் கூறுவதை ஆமோதிப்பது போல் நடந்து கொள்ள வேண்டும்.

உம் கருத்திற்கு அனைவரும் இசைந்து போகவேண்டுமென்று நீர் விரும்புவது தவறாகும். நாம் தாம் சிறு குழந்தைகளாக இருக்க விரும்புகின்றோமே,... சிறு பிள்ளைகளுக்குச் சிறந்தது எது என்று தெரியாது. அவர்களுக்கு அனைத்துமே நன்றாகத் தான் தோன்றும். இதனால் அவர்களைக் கண்டு பாவிப்போம்.

"நியாயமானதைச் செய்வதில் பேறுபலன் கிடையாது. இது பொது வழிதான். அனைவரும் இவ்வழியில் தான் நடக்க விரும்புகின்றனர்."

"புனித அல்போன்சு லிகோரியார் கூறுகின்றார்: "சகிக்க முடியாதவர்களைச் சகித்துக் கொள்வதில் தான் பிறரன்பு அடங்கும்"

"எவ்வளவிற்கு முன்னேறுகிறீர்களோ அவ்வளவிற்கும் போராட்டம் குறைவாகவே இருக்கும்; அதாவது அவற்றை எளிதில் வென்று விடுவீர்கள். ஏனெனில், அனைத்திலும் நல்ல பக்கத்தையே காண்பீர்கள். அப்போது உமது ஆன்மா படைப்புக்களை விட்டு உயர்ந்து நிற்கும். என்னைப் பற்றிப் பிறர் கூறக் கூடியதெல்லாம், என் ஆன்மாவை இலேசாகக் கூடத் தொடுவதில்லை என்பதை என்னால் நம்ப முடியவில்லை. ஏனெனில், மனிதர்களின் தீர்மானம் எத்துணை நிலையற்றது என்பதை நன்கு அறிந்து கொண்டேன்"

## ஆகஸ்ட்

### ஆகஸ்ட் 2:

"இவ்வுலகில் எல்லாம் கடந்துபோகின்றன. சிறிய தெரேசாளும் தான்... ஆனால் அவள் திரும்பி வருவாள்"...

### ஆகஸ்ட் 3:

நீர் மிகச் சிறியவள், இதை நினைவுபடுத்திக் கொள்ளும். மிகச் சிறியவருக்குச் சிறந்த எண்ணங்கள் தோன்றுவதில்லை.



### ஆகஸ்ட் 4:

உரையாடிக் கொண்டிருந்த நான் அவளது மரணத்தைப் பற்றிய நினைவு வந்ததும் வருத்தத்துடன் கூறினேன்: "அவளின்றி என்னால் வாழ முடியாதே"

அதற்கு அவள் வேடிக்கையாக

"அப்படியானால், உமக்கு இரண்டு இறக்கைகள் கொண்டு வருகிறேன்" எனப் பதில் கூறினாள்.

### ஆகஸ்ட் 5:

"திரிகையில் இரு பெண்கள் மாவரைப்பர். ஒருத்தி எடுக்கப்படுவாள்; மற்றவள் விடப்படுவாள்" என்ற நற்செய்திப் பகுதியைப் பற்றி அவள் கூறியது:

"நாம் இருவரும் சேர்ந்து நமது சிறு வியாபாரத்தை நடத்துகிறோம். நீர் தன்னந்தனியே கோதுமையை அரைக்க முடியாது எனக் காணும்போது, உம்மை அழைத்துச் செல்ல வருவேன்"..." விழிப்பாயிருங்கள்; ஏனெனில் எப்போது உங்கள் ஆண்டவர் வருவார் என்று உங்களுக்குத் தெரியாது"

"என்னை விட்டு பிரியப்போகிறீர்களா" என்று வருத்தத்துடன் கேட்டேன்.

- "ஆ, இல்லை, நகரவே மாட்டேன்" என்றாள் அவள். என் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கினேன்: "விண்ணில் நான் உம்மருகில் இருப்பேன் என நான் நம்பிக்கை கொள்ளலாமா? எனக்கு இது இயலாத செயலாகவே தோன்றுகிறது. சறுக்கு மர உச்சிக்கு ஏறி

விட்டவனைப் பிடிக்க, நொண்டிக்கைப் பையனைப் போட்டிக்கு அனுப்பின கதையாக இருக்கிறது"

- "அப்படியா, சரி அங்கே ஒரு பெரிய இராட்சதன் இருந்து கொண்டு நொண்டிக்கை பையனை அப்படியே அலாக்காகத் தூக்கிப்பிடித்து அவன் விரும்பும் பொருளைப் பெற்றுத் தந்தால் என்ன செய்வீர்கள்?... இவ்வாறு தான் கடவுள் உம்மையும் நடத்துவார். ஆனால் இதைப் பற்றி நீர் கவனித்துக் கொள்ளக் கூடாது. ஆனால் நீர் இறைவனிடம் கூற வேண்டியது யாதெனில்:

"நான் நம்பிக்கையோடு எதிர்பார்ப்பதைப் பெற்றுக் கொள்ள, என்றுமே தகுதியற்றவள் என அறிவேன். ஆனால் பிச்சைக்காரச் சிறுமியாக உம்மிடம் கையேந்தி நிற்கிறேன். நீர் என் விண்ணப்பத்தை முற்றிலும் ஏற்றுக் கொள்வீர் என்பது உறுதி. ஏனெனில் நீர் நன்மை நிறைந்தவர்".

**ஆகஸ்ட் 8 :**

அவள் இறந்த பின்னும், நான் உயிர் வாழ்வேன் என்ற எண்ணம் என்னைப் பெரிதும் வாட்டியது. வேதனையில் நான் அவளிடம் கூறினேன்:

"நீங்கள் சென்றுவிட்டபிறகு உமது சிறிய சரிதையை எழுதுவார்கள். நானோ அதற்கு முன் சென்று விட விரும்புகிறேன்.... இதை நம்புகிறீரா?

- ம், ம் நம்புகிறேன், ஆனால் பொறுமையை இழக்கக் கூடாது... என்னைப் பாருங்கள், நான் எவ்வளவு நல்ல பிள்ளையாக இருக்கிறேன், நீங்களும் இவ்வாறே இருக்க வேண்டும்.



**ஆகஸ்ட் 16 :**

விடியற்காலையில் எழுந்த நான், தெரேசாவின் முகம் வேதனையினாலும் அச்சத்தினாலும் வெளுத்துப் போயிருப்பதைக் கண்டேன். அவ்வமயம் அவள் என்னிடம் கூறினாள்:

"அலகை என்னைச் சுற்றிக் கொண்டு வருகிறான். நான் அவனைக் காணவில்லை, ஆனால் உணர்கிறேன்... என்னைக் கொடிய வேதனைக்கு உள்ளாக்குகிறான்; மிகச் சிறிய ஆறுதலும் கொள்ளாதவாறு இரும்புக்கரத்தால் என்னைப் பிடித்திருக்கிறான். எனக்கு அவநம்பிக்கை ஏற்படவேண்டுமென்று என் வேதனையை அதிகரிக்கச் செய்கின்றான்.

..."என்னால் செபிக்க முடியவில்லை. கன்னித் தாயை நோக்கவும், இயேசுவே என்று கூறவும் மட்டும் தான் என்னால் முடிகிறது."

..."இரவின் பயங்கரத்தினின்று எம்மை விடுவியும்" என்ற இரவுப் புகழ் மாலையின் செபம் எத்துணை தேவையாயுள்ளது...

"என்னவோ போன்று இருக்கிறது"—

உடனே நான் மந்திரித்த மெழுகு திரியைக் கொளுத்தி வைத்தேன். சிறிது நேரத்தில் அவளுக்கு அமைதி கிடைத்தது.

**ஆகஸ்ட் 24 :**

மூச்சடைப்பு எத்துணை கடுமையாக இருந்ததெனில் சுவாசிக்கத் தன்னையே கருவியாக்கிக் கொண்டு, "நான் வேதனைப்படுகிறேன்" "நான் வேதனைப்படுகிறேன்" என்று

அவள் மீண்டும் பெருமுச்சுடன் சொன்னாள்: "ஆ! மரண வேளையில் உள்ளோர்க்கு எவ்வளவு மிகுதியாகச் செபிக்க வேண்டும்! இதை அனைவரும் அறிந்திருந்தால்...." நோயுற்றிருந்தபோது தெரேசாள் சகோதரி எம்மிடம் கூறினாள்:

"என் சிறிய சகோதரிகளே, இறக்கும் போது என் இறுதிப் பார்வை உம்மில் ஒருவர்க்கு இருந்து மற்றவர்க்கு இல்லாது போகுமானால் நீங்கள் வருத்தமடையக் கூடாது. அவ்வமயம் என்ன செய்வேன் என்று எனக்குத் தெரியாது. இறைவன் விரும்புவதையே செய்வேன். ஆனால் அவர் என்னைத் தேர்ந்தெடுக்க விட்டால் என் இறுதிப் பார்வை நமது தாயாருக்கே (மரி கொன்சாகா தாயார்) இருக்கும். ஏனென்றில் அவர்கள் என் தலைவி."

1897 ஆம் ஆண்டு செப்டம்பர் 30 ஆம் நாள் வியாழன். மாலை மணி 7-20 . குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி கண்களை மூடி தன் இறுதி மூச்சை விட்டாள்.

அவள் இறந்தவுடன் என் இதயம் வேதனையால் பிளந்து விடுவது போலிருந்தது. நோயாளி அறையை விட்டு விரைவாக வெளியேறினேன். என் கபடற்ற தன்மையில் நான் அவளை வானில் காணப் போவதாக எண்ணிக் கொண்டேன். ஆனால் வானிலோ மேகங்கள் சூழ்ந்திருந்தன. மழை பொழிந்து கொண்டிருந்தது. அப்போது தாழ்வாரத்துத் தூண் ஒன்றின் மேல் சாய்ந்து கொண்டே "வானில் விண்மீன்கள் இருக்கக் கூடாதா" என்று தேம்பி அழுதுகொண்டே கூறினேன். இச் சொற்களைக் கூறி முடிப்பதற்குள் வானம் வெளுத்தது; தாரகைகள் வானில் மின்னின; மேகங்கள் ஓடி மறைந்தன. எங்கள் அன்புச் சிறிய சகோதரியின் மரணவேதனையின் போதெல்லாம் மடத்துச் சிற்றாலயத்தில் வேண்டிக் கொண்டிருந்து குடையுடன் வீடு திரும்பிய என் மாமாவும் அத்தையும் (கெரின் தம்பதிகள்) இத் திடீர் மாற்றத்தைக் கண்டு வியப்பெய்தினர். இதன் பொருள் என்னவாயிருக்கும் என்று ஒருவரையொருவர் வினவிக் கொண்டனர்.

## மடத்தில் பாதுகாக்கப்பட்டு வரும் புனித தெரேசாளின் இறுதிக் கண்ணீர்

என் அன்புத் தெரேசாள் உயிர் நீத்துவிட்டாள். சகோதரிகள் அனைவரும் அவளைப் பார்த்துவிட்டுத் தத்தம் இடம் சென்றுவிட்டனர். அவள் அருகில் தனியே நின்று கொண்டிருந்த நான் அவளது இமையில் கண்ணீர் ஒன்று ஒளிர்வதைக் கண்டேன். அதைப் பெற்றுப் பாதுகாக்க விரும்பினேன்.

மெல்லிய துணி எதுவும் என்னிடம் இல்லாததால் அங்கிருந்த தடித்த வெண்ணிறக் கைக்குட்டையை விரைவில் எடுத்து அதன் சிறிய நுனியில், இறுதிப் போராட்டத்தில் அவள் உதிர்த்த விலையில்லாக் கண்ணீர் முத்தைத் துடைத்து எடுத்தேன். எவரும் அறிந்து கொள்ளா வண்ணம் கைக்குட்டையை நீளத்தில் கிழித்து மடித்துத் தைத்துவிட்டேன்.

என் அன்பு மிகு சகோதரியின் இறுதிக் கண்ணீரினால் நனைந்த இடம் அடையாளமாய் நன்கு தெரியும் அத்துண்டுத் துணியைப் பாதுகாத்து வைத்திருந்தேன். பின் அதைக் கண்ணீர் வடிவில் வெட்டி சுற்றிலும் வைரங்களால் அலங்கரித்து, பித்தளையினாலான வானதூதர் ஒருவர் ஏந்தி நிற்கும் புனித பண்டப் பேழையில் பதித்தோம்.

## விண்ணகப் பேரின்பத்தின் சுடர்

இறையடியாள் இறந்தபின் அவளது வதனத்தில் விண்ணகப் பேரின்பச் சுடர் வீசியது. பரலோகப் புன்னகை தவழ்ந்த அவளது முகத்தில் நான் கண்ட விந்தை யாதெனில், தாழ்ந்து இறுக மூடியிருந்த அவளது இமைகளிலிருந்து உயிரும் மகிழ்ச்சியும் ததும்பும் சுடர் ஒன்று ஒளிர்ந்தது. இதனால் அவள் இறந்ததாகவே தோன்றவில்லை. இதற்குப் பின் எந்தச் சகோதரியிடமும் நான் இத்தகைய ஒளிச்சுடரைக் காணவில்லை.

அவளது உடல் 1897 ஆம் ஆண்டு அக்டோபர் 4ஆம் நாள், கர்மேல் மடம் புதிதாக வாங்கின பொதுக் கல்லறையின் முதலிடத்தில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

குழந்தை இயேசுவின் தெரேசாள் சகோதரி

**1873-1897**

என்னும் குறிப்பு அடங்கிய மரச் சிலுவை ஒன்று கல்லறையின் மீது நாட்டப்பட்டது .

"இறைவா, உம் அன்பு தீயைத் தொலைவில் கொண்டு செல்ல விரும்புகிறேன் என்பதை நினைவு கூர்ந்தருளும்" என்ற வாக்கியத்தை சிலுவைக்கு வண்ணம் பூசிய இயேசுவின் ஆக்னேஸ் தாயார் அதில் எழுதி வைத்தார். ஆனால் வண்ணம் தாயுமுன்னே சிலுவையைத் தூக்கிச் சென்ற வேலையாள், அறியாமல் அதை அழித்து விடவே, இதை விண்ணிலிருந்து வந்த அறிகுறி எனக்கொண்டு, கலைந்த குறிப்பை மாற்றி,



## 'உலகில் நன்மை செய்வதிலேயே என் விண்ணக வாழ்வைக் கழிப்பேன்'

என்று எழுதி வைத்தார். விவேகத்தை முன்னிட்டுத் தான் ஆக்னேஸ் தாயார், முதலில் இந்த வாக்கியத்தை எழுதத் துணியவில்லை.

மிஷன் அச்சகம்,

புதுவை.